| | பக்கங்கள் |
| --- | --- |
| 6. **மானியக் கோரிக்கைள், 1997-98, விவாதமும், வாக்கெடுப்பும்**--தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 24-தொழில்கள் | 52-135 |
| (ஆ) கோரிக்கை எண் 54-தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 52, 55, 57, 107-130, 132 |
| *திரு. ச. அழகிரி | 57-66 |
| டாக்டர் காஞ்சனா கமலநாதன் | 66-73 |
| *திரு. கே. சுப்பராயன் | 73-79 |
| *திரு. செ. மதிவாணன் | 80-82 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 82-89 |
| *திரு. ம. அப்துல் லத்தீப் | 89-97 |
| *திருமதி ஆன் டி' மான்டி | 97-99 |
| திரு. டி. மணி | 99-103 |
| டாக்டர் எம். மோசஸ் | 103-107 |
| 9. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 135-136 |

216655



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர்--செல்வி எம். பாத்திமா பீவி**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள்துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன் மற்றும் கடவுச் சீட்டு.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை, முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம், மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

53-120—1a

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** *வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.*

7. **பொதுப்பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத்திட்டம், செயற் திட்டப் பணிகள்.*

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்**: **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** *போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.*

9. **தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** *தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு.*

10. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கே. என். நேரு:** *உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.*

11. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** *பால், பாற்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு.*

12. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** *தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃபீ).*



13. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** *சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், நிறுமப் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட).*

14. **வணிக வரிகள் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** *வணிக வரிகள்.*

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** *கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.*

16. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:** *பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.*

17. **வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** *வனம், சின்கோனா, கால்நடை பராமரிப்பு.*

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** *வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.*

19. **ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத்தாள் சட்டம், சத்துணவு.*

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம்.

21. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன்:** இந்து சமய அறநிலையத் துறை.

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :** சமூக நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, அரசு அச்சகம்.

26. மீன்வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மீன் வளம் மற்றும் மீன் வளக் கழகம், மகளிர் மற்றும் குழந்தைகள் நலன், இரவலர் காப்பு இல்லம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare and Passports.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service, Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:** Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:** Revenue, Board of Revenue, District Revenue, Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani:** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugham:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways and Madras Metropolitan Development Authority.

9. **Minister for Tamil Official Language and Tamil Culture** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language and Tamil Culture.

10. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

11. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.

12. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

13. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

14. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru V. Thangapandian:** Commercial Taxes.



15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Animal Husbandry** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Animal Husbandry.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act.

21. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Hindu Religious and Charitable Endowments.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S. P. Sarkuna Pandian:** Social Welfare, Orphanages and Correctional Administration and Integrated Child Development Service Scheme.

| | | |
|---|---|---|
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi and Printing** | .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan, Stationery and Printing and Government Press. |
| **26. Minister for Fisheries** | .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation, Women's and Children's Welfare and Beggars Home. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்
2. திரு. இரா. ஆவுடையப்பன்
3. டாக்டர் வை. இராமசாமி
4. திரு. செ. இராமலிங்கம்
5. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்
6. திரு. கே. சுப்பராயன்

**செயலாளர்**

திரு. செ.சு. ஜானகிராமன்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 3. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. டி. சுந்தரராஜுலு, எம். ஏ. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 6. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வே. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புச் செயலாளர் |
| 12. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 13. | திரு. எம். ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 14. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 15. | திரு. க. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம். | .. | சார்புச் செயலாளர் |

| | | | |
|---|---|---|---|
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கே. ரவீந்திரன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 31. | திரு. ம. பிலிப், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 32. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 34. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | உதவி விவாதப் பதிப்பாளர் |
| 35. | திரு. ம. ஸ்ரீனிவாசலு, பி.காம்., பி.எல். | | உதவி விவாதப் பதிப்பாளர் |
| 36. | திரு. எஸ். அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் செல்வராசு, திரு. ப. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. லி. | .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 14. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ. அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

| | | | |
|---|---|---|---|
| 21. | ஆல்பன், டாக்டர் வே. | .. | திருவட்டாறு |
| 22. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. | அம்பாசமுத்திரம் |
| 23. | ஆறுமுகம், திரு. வீரபாண்டி எஸ். | .. | வீரபாண்டி |
| 24. | ஆறுமுகம், திரு. டி.பி. | .. | திருச்செங்கோடு |
| 25. | ஆற்காடு வீராசாமி, திரு. நா. | .. | அண்ணாநகர் |
| 26. | ஆனந்தன், திரு. பால. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 27. | இரகுமான்கான், திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 28. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. | மேலூர் |
| 29. | இராசமாணிக்கம், திரு. பி. | .. | ஒரத்தநாடு |
| 30. | இராசன், திரு. வி. பி. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 31. | இராமசாமி, திரு. கே. ஆர். | .. | திருவாடனை |
| 32. | இராமசாமி, டாக்டர் வை. | .. | பண்ருட்டி |
| 33. | இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். | .. | கம்பம் |
| 34. | இராமச்சந்திரன், திரு. சி. இரா. | .. | தொண்டாமுத்தூர் |
| 35. | இராமச்சந்திரன், திரு. மா. | .. | திருவோணம் |
| 36. | இராமலிங்கம், திரு. ஏ. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 37. | இராமலிங்கம், திரு. செ. | .. | திருவிடைமருதூர் |
| 38. | இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். | .. | பள்ளிப்பட்டு |
| 39. | இராமஜெயம், திரு. ந.பூ. | .. | மயிலாப்பூர் |
| 40. | இராஜரெட்டி, திரு. ச. | .. | தளி |
| 41. | இராஜேந்தர், திரு. டி. | .. | பூங்காநகர் |
| 42. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. | ஆண்டிமடம் |



| | | | |
|---|---|---|---|
| 43. | இளங்கோ, திரு. கோ. | .. | அவினாசி (செ.வ.) |
| 44. | ஈஸ்வரன், திரு. ரா. | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 45. | உதயசூரியன், திரு. தா. | .. | சங்கராபுரம் |
| 46. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. | தஞ்சாவூர் |
| 47. | கணேசன், திரு. இ. | .. | எடப்பாடி |
| 48. | கணேசன், திரு. கே. சி. | .. | ஜெயங்கொண்டம் |
| 49. | கருணாநிதி, கலைஞர் மு. | .. | சேப்பாக்கம் |
| 50. | கருப்பண்ண உடையார், திரு. ந. | .. | பாபநாசம் |
| 51. | கருப்பசாமி, திரு. சொ. | .. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 52. | கருப்புசாமி, திரு. டி. | .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 53. | கல்யாணம், திரு. குத்தாலம் பி. | .. | குத்தாலம் |
| 54. | கன்னையன், திரு. க. | .. | தொட்டியம் |
| 55. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. | கிருஷ்ணகிரி |
| 56. | காந்தி, திரு. ஆர். | .. | இராணிப்பேட்டை |
| 57. | கிட்டு, திரு. சைதை கா. | .. | சைதாப்பேட்டை |
| 58. | கிருட்டிணன், திரு. பசும்பொன் தா. | .. | சிவகங்கை |
| 59. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 60. | கிருஷ்ணன், திரு. எஸ். வி. | .. | நாங்குநேரி |
| 61. | கிருஷ்ணன், திரு. சீ. வெ. | .. | வேடசந்தூர் |
| 62. | குண்டன், திரு. டி. | .. | உதகமண்டலம் |
| 63. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. | கிள்ளியூர் |
| 64. | கோதண்டம், திரு. ஏ. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 65. | கோபால், திரு. பா. | .. | மேட்டூர் |

66. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு

67. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

68. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

69. கோவிந்தன், திரு. வி. .. பேரணாம்பட்டு (செ.வ.)

70. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

71. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்

72. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்

73. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு

74. சந்தானம், திரு. எல். .. சோழவந்தான்

75. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

76. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு

77. சமயநல்லூர் செல்வராசு, திரு. எஸ்... சமயநல்லூர் (செ.வ.)

78. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்

79. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)

80. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

81. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

82. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)

83. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

84. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்

85. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

86. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி

87. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி



88. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி

89. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்

90. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்

91. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்

92. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்

93. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

94. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)

95. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி

96. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்

97. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்

98. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்

99. சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. .. திருவள்ளூர்

100. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு

101. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி

102. சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி

103. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி

104. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி

105. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)

106. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராயநகர்

107. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை

108. செல்வராஜ், திரு. டி. .. உடுமலைப்பேட்டை

109. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

110. சேகரன், திரு. ஆர். ஆர். .. ஓமலூர்
111. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
117. தங்கபாண்டியன், திரு. வே. .. அருப்புக்கோட்டை
118. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
119. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
120. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
121. தங்கவேல், திரு. என். .. குன்னூர் (செ.வ.)
122. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
123. தமிழரசன், திரு. குழந்தை. .. விருதாசலம்
124. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
125. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
126. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
127. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
128. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
129. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
130. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
131. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
132. திருஞானசம்பந்தம், திரு. வி. .. பேராவூரணி
133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி



134. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
135. துரை, திரு. க. .. திருவெறும்பூர்
136. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
137. துரைமுருகன், திரு. .. காட்பாடி
138. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
139. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
140. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
141. நடராஜன், திரு. டி. .. செஞ்சி
142. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
143. நன்னன், திரு. கொ. வி. .. செங்கம் (செ.வ.)
144. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
145. நாஞ்சில் மனோகரன், திரு. கி. .. திருவல்லிக்கேணி
146. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
147. நேரு, திரு. கே. என். .. லால்குடி
148. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
152. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
153. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
154. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
155. பாண்டுரங்கன், திரு. என். .. பெரணமல்லூர்
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்

157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி

158. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

159. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

160. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்

161 புரட்சிமணி, திரு. எஸ். .. மங்களூர் (செ.வ.)

162. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)

163. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

164. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி

165. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு

166. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை

167. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)

168. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்

169. பொங்கலூர் நா. பழனிச்சாமி, திரு. .. சிங்காநல்லூர்

170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்

171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்

172. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)

173. மகேந்திரன், திரு. ஆர். .. நாட்ராம்பள்ளி

174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

175. மணி, திரு. நெல்லிக்குப்பம் அ. .. நெல்லிக்குப்பம்

176. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்

177. மணி, திரு. டி. .. விளவங்கோடு

178. மணி, திரு. ஜி. கே. .. பெண்ணாகரம்



179. மணிக்கண்ணன், திரு. ஆ.ஜெ. .. திருநாவலூர்

180. மணிநாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்

181. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்

182. மணிவர்மா, திரு. கே. .. தண்டராம்பட்டு

183. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்

184. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

185. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி

186. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்

187. மாரி அய்யா, திரு. .. புதுக்கோட்டை

188. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)

189. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி

190. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை

191. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)

192. முத்துராமலிங்கம், திரு. எம். .. திருமங்கலம்

193. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்

194. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்

195. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்

196. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்

197. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்

198. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்

199. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

200. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்

201. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

202. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

203. ரவி அருணன், திரு. கு. .. தென்காசி

204. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்

205. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்

206. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)

207. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்

208. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்

209. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி

210. ராசேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்

211. ராஜ்குமார் மன்றாடியார்,
திரு. என். எஸ். .. காங்கேயம்

212. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் (கிழக்கு)

213. வல்லரசு, திரு. பி. என். .. உசிலம்பட்டி

214. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்

215. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்

216. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்

217. வீரப்பன், திரு. கோ.க. .. கபிலர்மலை

218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்

219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி

220. வெங்கடாசலம், திரு. ஜி. எல். .. பாலக்கோடு

221. வெங்கடேசன், திரு. ச. க. .. மதுராந்தகம்

222. வெங்கடேசன், திரு. பே.வே.ஸ்ரீ. .. காவேரிப்பட்டினம்

223. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப்
பாளையம்



224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)

225. வேணு, திரு. கே. .. கும்மிடிப்பூண்டி

226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்

227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்

228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு

229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)

230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி

231. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்

232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்

233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி

234. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு

235. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமைப் பெற்றவர்**

வெங்கடபதி, திரு. கே.வி. .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 10, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு 2028**

**1997 ஏப்ரல் 23, புதன்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு.* **பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பொருள்கருவி காலம் வினையிடனோடு ஐந்தும்*
*இருள்தீர எண்ணிச் செயல்."*

ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு முன்பு, அதற்குத் தேவையான பொருள், ஏற்ற கருவி, காலம், மேற்கொள்ளப் போகும் செயல்முறை, உகந்த இடம் ஆகிய ஐந்தையும் குறையில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 621,* திரு. வி. கோவிந்தன், *மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**621.** —

### நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்

*** 4044. — திரு. வி. கோவிந்தன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், கொல்லக்குப்பம் கிராம நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அத்தகைய செயற்குறிப்பு தற்பொழுது அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.

**திரு. வி. கோவிந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், கொல்லக் குப்பம் நடுநிலைப் பள்ளியில், தாழ்த்தப்பட்ட மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், பல கிராமங்களிலிருந்து வந்து படிக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. அவர்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் போக வேண்டுமென்றால் வாணியம்பாடி, வடச்சேரி ஆகிய பகுதிகளுக்குப் போகின்ற நிலை ஏற்படுகிறது. அதனாலேயே படிப்பை இடையிலேயே நிறுத்திவிடக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதி மாணவர்களின் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொல்லக் குப்பம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நியாயங்களோடு கேட்கப்படுகிற பள்ளிகள் ஏராளமாக இருக்கின்றன. இந்தப் பள்ளியிலே 8--வது வகுப்பு படிக்கிற மாணவர்கள் 47 பேர்; இந்த 47 பேரிலிருந்து 35 பேர் மேல் வகுப்புக்குச் செல்லக்கூடும். 100 பேர் 120 பேர் படிக்கக்கூடிய பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. அந்த வரிசையில் வைத்து கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 622, திரு. என். பாண்டுரங்கன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**622. —**

**குண்ணகம்பூண்டியில் நூலகம் திறத்தல்**

***6138—திரு. என். பாண்டுரங்கன்**:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், குண்ணகம்பூண்டி கிராமத்தில் கிளை நூலகம் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில், குண்ணகம் பூண்டி கிராமத்தில் ஊர்ப்புற நூலகம் திறப்பதற்கு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

(ஆ) ஊர்ப்புற நூலகம் திறப்பதற்குத் தேவைப்படும் குறைந்தபட்ச அத்தியாவசிய வசதிகளை குண்ணகம்பூண்டி கிராம மக்கள் செய்து கொடுப்பதற்கு அந்தக் கிராம மக்களை நேரடியாக சந்தித்து, அவர்களுக்கு இதற்கான உதவிகளைச் செய்யும்படி திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்ட நூலக அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். கிராம மக்கள் அந்த அடிப்படை வசதிகளை முழுமையாகச் செய்து கொடுத்ததும் நூலகம் திறக்கப்படும்.

**திரு. என். பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீமைப்புதூர், குண்ணகம்பூண்டி ஆகிய பகுதிகளில் இருக்கிற, ஊராட்சி மன்றத் தலைவர்கள் தீர்மானம்கூட போட்டிருக்கிறார்கள். அதற்குத் தேவைப்படுகிற 5 சென்ட் நிலத்தைக்கூட ஒதுக்கத் தயாராக இருக்கிறார்கள். எனவே அரசு விரைவிலே அந்த இடத்திலே நூலகத்தைத் திறக்க முன்வருமா என்று அறிய விரும்புவதோடு பல்வேறு இடங்களில் நூலகர் பதவிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக, பெரணமல்லூரில்கூட நூலகர் பதவிப் பணியிடம் ஏறக்குறைய 15 வருடமாக நிரப்பப்படாமல் இருக்கிறது. எனவே, அந்தப் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத் தலைவர் ஒரு தற்காலிக கட்டடம் வழங்கியிருந்தாலும், நிலம் வழங்குவதாக இருந்தாலும், ஒரு நூலகம் திறப்பதற்கு 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்; 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும் ; அந்த நூலகத்திற்குத் தேவையான தளவாடங்கள் 2,000 ரூபாய் அளவுக்கு வழங்கப்பட வேண்டும். இவற்றைச்

[1997 ஏப்ரல் 23

செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. பொதுவாகவே நூலகத் துறையில் ஏற்கெனவே விதிமுறைகள் செய்யப்படாமல் சில மேல்நிலைப் பணிகளுக்கு பதவி உயர்வு வழங்குகிற முறையில் நிரப்பப்படுகிற வாய்ப்பு இல்லாமல் இருந்தது. அதுபற்றி அரசு கவனித்து வருகிறது.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வை. சிவபுண்ணியம்

**திரு. வை. சிவபுண்ணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே இப்படி நூலகங்கள் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி இங்கே நமது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு அப்படி எத்தனை எண்ணிக்கையின் அடிப்படையிலே கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது ? அப்படிப்பட்ட கருத்துருக்கள் வந்து இருப்பதிலே, அதிலும் ஏதோ விதிமுறைகள் சொல்லப்பட்டு—குறைப்பதோ கூட்டுவதோ அப்படிப்பட்ட காரியம் இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1996-வது ஆண்டில் 625 கிராமங்களில் மொத்தமாக ஊர்ப்புற நூலகங்கள் திறப்பதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அந்த 625 கிராமங்களில் இன்னும் அவை திறக்கப்பட்டு நிறைவேறவில்லை. அதற்குக் காரணம், பொதுமக்களுடைய ஒத்துழைப்பு, தேவையான மற்ற வசதிகளைத் தருகிறபோதுதான் அந்தக் கிராமங்களிலே நூலகங்களை ஏற்படுத்த முடியும். நேரடியாக ஒரு நூலகத்தை ஏற்படுத்துவதற்கு அரசுக்கு வாய்ப்பு வசதி இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அச்சுத் துறையிலே பல நவீன முறைகள் எல்லாம் வந்துவிட்டன. கம்போஸ் செய்து அச்சிடுவது என்ற அந்தப் பழமையான முறை ஏறக்குறைய மாறி, இப்போது லேசர் பிரின்ட் என்ற வகையிலே, ஆப்-செட் என்று சொல்லப்படுகிற நகல் அச்சு முறை விரைவாக செயலாக்கப்பட்டு வருகிறது. அந்த நிலையிலே நூலகத்திற்கு வாங்கப்படும் நூல்களின் எண்ணிக்கை உயர்த்தப்படுமா ? அதேபோல பாரம் கணக்கிலே, அதாவது 16 பக்கங்களுக்கு இன்ன விலை என்று நிர்ணயித்து வாங்குகின்ற பழக்கத்தை விட்டுவிட்டு, நூலின் தரத்தையொட்டி விலை நிர்ணயிக்கப்படுமா என்பதை அறிய



1997 ஏப்ரல் 23]

விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நூல்களின் தரத்தைத் தீர்மானிக்கிறவர்களுடைய தரத்தை யார் தீர்மானிப்பது ? அதாவது நூலின் தரத்தைத் தீர்மானிப்பது என்பது எளிதல்ல. பக்கங்கள், அச்சுக்கூலி இவைகளை அடிப்படையாக வைத்துத்தான் தீர்மானிக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் துவக்கப்படுகிற கிளை நூலகக் கட்டிடங்களுக்கு பெயர்கள் வைப்பதற்கு என்ன விதிமுறைகள் கையாளப்படுகின்றன ? இதிலே எங்களுடைய மாவட்டத்தில் மொழிப்போர் தியாகியாகவும், இந்த சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்த அண்ணன் தென்னரசு அவர்களுடைய குடும்பத்தார் கட்டிடம் கட்டுவதற்கு இடம் வைத்து இருக்கிறார்கள். கட்டிடம் கட்டப்பட்டு இருக்கிறது. அதற்கு அவருடைய பெயர் வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, மொழிப்போர் தியாகி என்ற அடிப்படையில் இந்த பெயர் வைப்பதற்கு விதி விலக்குகள் அளிக்கப்பட்டு அண்ணன் தென்னரசு அவர்களுடைய பெயர் வைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடமும் கட்டிடமும் வழங்குகிறவர்கள் யார் பெயரை வைக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அதை வைப்பதற்கு அரசுக்குத் தடை இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. துரைசாமி.

**திரு. பா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் தொடங்கப்பட்ட பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட நூலகமும், அதேபோன்று குன்னம் தாலுகாவுக்கு ஒரு கிளை நூலகமும் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அது குறித்து உரிய காலத்தில் பரிசீலிக்கப்படும்.

[1997 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன் :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசாங்கங்கள் கல்வித் துறையில் செலுத்துகின்ற கவனத்தை நூலகத் துறையில் செலுத்துவது இல்லை என்ற குறைபாடு இருக்கிறது. மேலும், உள்ளாட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றிற்கு லைப்ரரி செஸ்ஸை ஒழுங்காகத் தரவில்லை என்ற குறைபாடும் இருக்கிறது. இதையெல்லாம் போக்குகின்ற விதத்தில் நூலகத் துறைக்கு தனிக் கவனம் செலுத்தப்பட்டு, நல்ல நூலகங்களை படிக்கின்ற மாணவர்களுக்குப் பயன்படுகின்ற விதத்தில் அமைக்க ஒரு புதிய திட்டம் உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.நூலகத் துறை தனி இயக்குநர் நிர்வாகத்திலேதான் நடைபெறுகிறது. கல்வித் துறையைக் கவனிக்கிற அதே அமைச்சர்தான் நூலகத் துறையையும் கவனிக்கிறார். எனவே, குறைபாடு இருந்தால் அது ஒருவேளை கவனிக்க முடியாத அளவுக்கு பொருளாதார, நிதி வசதி குறைவாக இருப்பது காரணமாக இருக்கலாம். இரண்டாவது, உள்ளாட்சித் துறையில் பல்வேறு அமைப்புகள்—நகராட்சி மன்றம், மாநகராட்சி மன்றம் ஆகியவற்றிற்கு மாவட்ட வருவாய் அலுவலர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய செஸ் இன்னும் முழு அளவுக்கு கிடைக்காதது காரணமாகவும், தொடர்ந்து கட்டிடங்கள் கட்டுவதிலே சுணக்கம் இருக்கிறது. அந்த நிதி பெறுவதற்கு உரிய வழியில் அமைச்சரவையில் கலந்து ஆலோசிக்கப்படுகிறது. அந்த ஆலோசனை முடிந்து நிதி கிடைத்தால் பெருமளவுக்கு பல கடமைகள் நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

முற்பகல் 9-40

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகத் துறைக்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை என்ற ஒரு குறைபாடு இருக்கிறது. ஆகவே புதிய நூல்களை நூலகங்களுக்கு வாங்கித் தருவதில் அரசுக்கு சிரமம் இருப்பதாகத் தெரியவருகிறது. கல்வித் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற தொகையில் குறைந்தது 5-லிருந்து 10 சதவீதம் இதற்கு ஒதுக்கி, போதிய



1997 ஏப்ரல் 23]

புதிய நூல்களை வாங்கி, அந்த நூலகங்களுக்குத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகத் துறைக்குக் கிடைக்கவேண்டிய நிதி ஏறத்தாழ 25 கோடி ரூபாய் அளவுக்கு செஸ் வரியாக வரவேண்டியது, இப்போது கிடைக்காமல் இருக்கிறது. அந்த வரி கிடைக்குமானால் தகுந்த அளவுக்குச் செயலாற்ற முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகள் அல்லது ஊராட்சிகள்தான் நூலக செஸ் வரியை வசூலித்துக் கொடுக்கவேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றன. அதனால்தான் இப்போது 25 கோடி ரூபாய் அளவுக்கு வசூலாகாமல் நிற்கின்ற சூழ்நிலை உள்ளது. இந்த செஸ் வரியை வருவாய்த்துறையினர் மூலமாக வசூலித்தால் நூலகங்களுக்கு உரிய காலத்திலேயே வருவாய் ஒழுங்காக வந்து சேர வாய்ப்பு இருக்கிறது. ஆகவே தற்போதுள்ள வசூல் முறையை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஸ் என்பது போடப்படுகின்ற ஒரு வரியோடு இணைத்துப் போட்டு, அந்தப் பங்கை சேர்த்து வாங்குவது. ஆகவே வரி போடுகின்ற அமைப்புகள்தான் இந்த செஸ் வரியையும் போட்டு வாங்கமுடியும். அதன் மொத்தப் பொறுப்பு வருவாய்த்துறைக்கு இருக்கிறது. மாவட்ட ஆட்சியர்தான் அந்த வரி வசூலை முறையாக நடத்திடச் செய்து அந்தப் பங்கைப் பெற்றுத் தருகிறவர். ஆகவே இதில் எந்த மாற்றமும் இப்போது தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அ. மாரிமுத்து.

**திரு. அ. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானூரில் தலைமையிடத்தில் ஒரு நூல் நிலையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதை இந்த நிதி ஆண்டில் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் கட்டி முடிக்கப்பட்டு இருக்குமானால்,

அது விரைந்து செயல்படுவதற்கு, அரசு, நூலகத் துறை இயக்குநருக்கு அறிவுறுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 623, திரு. இரா. பெர்னார்டு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**623. —**

**குளச்சல் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்துதல்**

***914—திரு. இரா. பெர்னார்டு :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, குளச்சலிலுள்ள அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான நடவடிக்கை எப்போது மேற்கொள்ளப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**திரு. இரா. பெர்னார்டு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் குளச்சல் நகரம் வேகமாக வளர்ந்து வருகிற நகராக இருக்கிறது. துறைமுகம் அமையவிருக்கிறது. நேசமணி போக்குவரத்துக் கழகப் பணிமனை விரைவில் திறக்கப்பட இருக்கிறது. சிறு தொழில்கள் பெருகி வருகின்றன. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு துணை மின் நிலையத்தையும் அமைக்க ஒப்புதல் தந்திருக்கிறார்கள். அங்கே தற்போது இயங்கிவரும் மருத்துவமனை மக்களுக்கு முழுமையாக அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாத நிலையில் இருப்பதால், அந்த மருத்துவமனை விரிவாக்கப்படவேண்டும். அப்படி விரிவாக்கப்பட்டால், அந்தப் பகுதியில் உள்ள கடலோர மக்களுக்கும், தொழிலாளர் வர்க்கத்திற்கும் பெரிதும் பயன்படும். அங்கே புறநோயாளிகள் அதிகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். இவற்றைக் கருத்தில்கொண்டு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து குளச்சல் அரசு மருத்துவமனையை விரிவாக்கம் செய்ய ஒப்புதல் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் அரசு மருத்துவமனையில் 32 படுக்கைகள் இருக்கின்றன. அந்தப் படுக்கைகளுக்கே போதுமான உள் நோயாளிகள் வரவில்லை. வெளிநோயாளிகள் ஒரு நாளைக்கு 297 பேர் வருகிறார்கள். பொதுவாக ஒரு நாளைக்கு 500-க்கும் அதிகமான வெளி நோயாளிகள் வந்தால்தான் அந்த அரசு மருத்துவமனையை அரசு மேம்படுத்தும். குளச்சலைப் பொறுத்தவரையில் நோயற்ற வாழ்வு வாழ்பவர்களாக அந்தப் பகுதி மக்கள் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 624, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**624.**

**கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனைக்கு கூடுதல் வசதிகள்**

***8632—திரு. வை. சிவபுண்ணியம் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர்-ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அனைத்து வசதிகளும் செய்துதர அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர்-ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனையில் உள்ள வசதிகள், தற்போது சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்குப் போதுமானதாக உள்ளது.

**திரு. வை. சிவபுண்ணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் அதிர்ச்சி ஊட்டுவதாக இருக்கிறது. காரணம், அந்தத் துறை அதிகாரிகள் தவறான தகவலை அமைச்சருக்குத் தந்திருப்பார்களோ என்று அஞ்சுகிறேன். தினசரி 500 புற நோயாளிகள் வருகிற பகுதி அது. முஸ்லிம் சிறுபான்மை

[1997 ஏப்ரல் 23

மக்கள் பெரும்பான்மையாக வந்து சிகிச்சை பெறுகிற மருத்துவமனை அது. அங்கே இரண்டு டாக்டர்கள் மட்டுமே பணியாற்றுகிறார்கள். ஒரு நர்ஸ் மட்டுமே இருக்கிறார். 12 படுக்கைகள் மட்டுமே உள்ளன. ஆனால் அதற்கேற்றப்படி எந்தவிதமான கட்டிட வசதியோ, மற்ற அடிப்படை வசதிகளோ அங்கே இல்லை. ஆகவே இக்கருத்தை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனையில் எல்லாவிதமான வசதிகளையும் செய்துகொடுத்து நல்லவிதமாகச் செயற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்ததைப் போல அங்கே 12 படுக்கைகள் இருக்கின்றன. ஆனால் சராசரியாக உள் நோயாளிகளாக 9 பேர்தான் வருகிறார்கள். வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் நாளைக்கோ அல்லது நாளை மறுநாளோ அந்த மருத்துவமனையில் போய்ப் பார்த்தால் தெரியும். ஒரு நாளைக்கு புற நோயாளிகள் 317 பேர்கள் சராசரியாக வருகிறார்கள். எனவே புற நோயாளிகளுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற காரணத்தால் அதை மேம்படுத்த அரசு தயாராக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எத்தனை மருத்துவமனைகளை மேம்படுத்த அரசு திட்டமிட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 இடங்களிலேயுள்ள அரசு மருத்துவமனைகளை மேம்படுத்துவதற்கான திட்டம் தீட்டப்பட்டு, ஏற்கனவே மக்கள் நல்வாழ்வுத் துறை மானியத்தின்போது அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ்.எஸ். பொன்முடி.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வசதிகளில்லாத அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தனியார் துறையினர் அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கின்ற நேரத்தில், அவர்கள் செலவு செய்யும் தொகைகளுக்கு மத்திய அரசிடமிருந்து வருமான வரி விலக்கை அரசு பெற்றுத் தருமா என அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 23]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இந்த அவையிலே அறிவித்திருக்கின்றேன். அதாவது, தனியார்கள் ஆரம்பசுகாதார நிலையங்களையோ அல்லது மருத்துவமனைகளையோ நடத்துவதற்கு முன் வருவார்களேயானால் அவர்களுக்கு வருமான வரி விலக்கு அளிப்பதற்கு ஏற்கனவே நம்முடைய சட்டத்திலே இடம் இருக்கிறது. தற்போது, பூந்தமல்லி அரசு மருத்துவமனையை, இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியினர் தத்து எடுப்பதற்காக ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போல மேலும் சில தனியார் ஆலை அதிபர்கள் அரசு மருத்துவமனைகளையோ அல்லது ஆரம்ப சுகாதார நிலையங்களையோ தாங்கள் எடுத்து நடத்தத் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதிகளிலுள்ள மருத்துவமனைகளான பெரியார் நகர் பொது மருத்துவமனை, அண்ணா நகர் பொது மருத்துவமனை, கே.கே. நகர் பொது மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளைப் பல கோடி ரூபாய் செலவழித்துக் கட்டினார்கள். சென்னையிலே, பொது மருத்துவமனையிலே இருக்கின்ற மக்களுடைய நெருக்கடியைச் சமாளிப்பதற்காகச் சென்னையை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதிகளிலே இதுபோன்ற மருத்துவமனைகளைக் கட்டினார்கள். ஆனால், அம்மருத்துவமனைகளிலே அனைத்து வசதிகளும் இருந்தும் போதுமான மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால் அந்த மருத்துவமனைகள் முழுமையாகச் செயல்படாமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே அந்த மருத்துவமனைகளை ஒட்டியுள்ள காவல் நிலையங்களை அந்த மருத்துவமனைகளிலே இணைத்து 24 மணி நேரமும் இயங்கும்படி அங்கே ஓ.பி. ஓப்பன் செய்தோமானால் அம்மருத்துவமனைகள் நன்றாகச் செயல்படும். இதைச் செயல்படுத்துவதற்கு துறையினுடைய அமைச்சர் அவர்கள் முறைப்படி நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தினுடைய வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டுதான் கழக ஆட்சிக்காலத்திலே புறநகர் மருத்துவமனைகள் ஆரம்பிக்கப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள் தெரிவித்த பெரியார் நகர் புறநகர் மருத்துவமனையிலே போதுமான டாக்டர்கள் அடுத்த மாதத்திற்குள்ளாக நியமிக்கப்படுவார்கள். அதுமட்டுமல்ல, அவர்கள் குறிப்பிட்டதைப்போல புறநகர் மருத்துவமனைகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிறது. அண்ணா நகரிலுள்ள புறநகர் மருத்துவமனையை எல்லா வசதிகளும் கொண்ட மருத்துவமனையாக இந்த ஆண்டு ஆக்கவேண்டுமென்று நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். அடுத்த ஆண்டு பெரியார் நகர் புறநகர் மருத்துவமனையை எல்லா வசதிகளும் கொண்ட, எல்லா இலாக்காகளையும் கொண்ட மருத்துவமனையாக உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரா. சேதுநாதன்.

**திரு. ரா. சேதுநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் மாலை நேரத்தில் 7 மணி முதல் 9 மணி வரை மருத்துவர்கள் சரியாக இருப்பதில்லை. இந்த நேரத்திலே அவர்கள் தங்களுடைய கிளினிக்குகளிலே இருந்துகொண்டு வருமானத்தைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்திலே வருகின்ற நோயாளிகள் மருத்துவ வசதி பெற முடியாத நிலை இருக்கிறது. அதுமட்டுமல்ல, விபத்துக்களிலோ, சண்டைகளிலோ அடிபட்டு வருகின்ற நோயாளிகளுக்கு சிகிச்சைச் சான்று, மருத்துவச் சான்று, காயம்பட்ட சான்று ஆகியவைகள் கேட்கின்றபோது ரூ.200 முதல் 250 வரை கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். எனவே, எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று அரசு சொல்கிறதோ அந்தத் தொகை குறித்து ஒரு பலகையிலே எழுதி அங்கே வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில், ஒரு ஸ்குவாட் அமைத்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு நிறுத்துங்கள். அவ்வளவுதான் நீங்கள் கேட்கலாம்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அரசு மருத்துவமனையாக இருந்தாலும் இரவு நேரத்திலே கண்டிப்பாகக் குறைந்தபட்சம் இரண்டு டாக்டர்கள் இருக்க வேண்டும் என்பது விதி. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற பகுதிகளிலே மருத்துவர்கள் 7 மணியிலேயிருந்து 9 மணி வரையிலும் இல்லையென்று தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றி அரசு அறிக்கை பெற்று தேவையான





நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கும். 'விபத்திலே அடிபட்டு வந்தால் அவர்களுக்குச் சான்றுகள் வழங்குவதற்காகக் கட்டணம் 250 ரூபாய் வாங்குகிறார்கள், அது எவ்வளவு வாங்கலாம் என்று அரசாங்கம் தெரிவித்து போர்டு எழுதி வைக்கலாம் ' என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். யாராக இருந்தாலும், ஒரு ரூபாய்கூட கட்டணம் வாங்கக் கூடாது. அப்படிக் கட்டணம் வாங்கக் கூடிய மருத்துவர்களின் பெயர்களை மாண்புமிகு உறுப்பினர் எழுதி கொடுப்பார்களேயானால், அம்மருத்துவர்கள் நிச்சயமாகக் கடுமையான நடவடிக்கைகளுக்கு ஆளாக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பெ. ஆசையன்.

**திரு. பெ. ஆசையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 32 படுக்கை வசதிகளைக் கொண்டிருக்கிற தாலுக்கா அளவிலான அரசு மருத்துவமனைகளில் சமையல் பணிக்கு ஒருவர் கூட அமர்த்தப்படாமல் இருக்கிற காரணத்தால் உள் நோயாளிகளை எடுக்க முடியாமல் இருக்கிறது. எனவே உள் நோயாளிகளை எடுப்பதற்கு வசதியாக சமையலர் பணியிடங்கள் நிரப்பப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 32 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையில் கட்டாயமாக சமையல் செய்வதற்கு ஒரு பணியாளர் நியமிக்கப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி மருத்துவமனையில் பணியாளர் இல்லாமல் இருக்குமானால் எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ் மூலமாக பணியாளரை எடுக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தாலுகா தலைநகரிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னால் 32 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனைக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னரும் இன்னும் திறக்கப்படாமல் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தபோது, தற்போது ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து அங்கேயுள்ள அதிகாரிகளை வைத்துக்கொண்டு

உடனடியாக திறந்து விடுங்கள் என்று கூறியதாக என்னுடைய கவனத்திற்கு வந்தது. ஆனால் 32 படுக்கைகளையும் திறந்து வைத்தால் ஏற்கனவே ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து ஒரு மருத்துவரோ, அங்கேயிருக்கிற செவிலியர்களோ மற்ற பணியாளர்களோ கவனிக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, உடனடியாக எல்லா மருத்துவர்கள், செவிலியர்கள் மற்ற பணியாளர்களையும் உடனடியாக நியமித்து, விரைவில் 3 ஆண்டுகளாக திறக்கப்படாமல் இருக்கிற மருத்துவமனையை திறந்து, அந்தப் பகுதி மக்கள் பயன்படுகிற அளவில் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவ்வளவுதான், போதும். துணைக் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டுகளாக திறக்கப்படாமல் இருக்கிற அந்த மருத்துவமனையை அடுத்த மாதத்திற்குள்ளாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தலைமையிலேயே திறப்பதற்கான ஏற்பாட்டை மக்கள் நல்வாழ்வுத் துறை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. டி. மணி.

**திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் பணிபுரிகிற மருத்துவர்கள் அதன் அருகில் இருக்கிற தனியார் மருந்தகங்களில் வேலைசெய்வதன் காரணமாக அரசு மருத்துவமனையில் வருகிற நோயாளிகளை சரிவர கவனிக்காமல், குறிப்பிட்ட நேரத்தில் இந்தப் பகுதியில் தனியார் மருத்துவமனைக்கு நீங்கள் வருவீர்களானால் அதற்கான சிகிச்சை அளிக்கப்படும் என்று பரிந்துரை செய்யப்பட்டு வருவதன் அடிப்படையில்தான், அரசு மருத்துவமனையில் நோயாளிகளுடைய வருகை குறைவுக்கு காரணமாக அது அமைகிறது. ஆகவே, அதற்காக தனியார் மருத்துவமனையில் சென்று பணிபுரிகிற அந்த நேரத்தை அல்லது அந்த வேலையை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திலே பணியாற்றக்கூடிய டாக்டர்கள் பிரைவேட் பிராக்டீஸ் செய்வதைத் தடுக்க முடியுமா என்று தான் மாண்புமிகு உறுப்பினர் கேட்பதாக நினைக்கிறேன். அவர்களுடைய





பணி நேரம் தவிர மீதி நேரத்தில் அவர்கள் தனியாக பிராக்டீஸ் செய்வதிலே எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் பணி நேரத்தில் நிச்சயமாக அவர்கள் தனியாக பிராக்டீஸ் செய்யக்கூடாது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் 'பிரைவேட் பிராக்டீஸ்'-ஐ `Ban' செய்வதற்கான எந்த முடிவும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்களுடைய இரண்டாவது வினாவினை அவருடைய கட்சித் தலைவர் திரு. பழனிசாமி அவர்கள் கேட்பார்கள்.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிற போது 500 நோயாளிகள் வருகிற அரசு மருத்துவமனைகள் அபிவிருத்தி செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அரசு மருத்துவமனைகளில் அனைத்து வசதிகளும் நோயாளிகளுக்கு செய்து கொடுக்காத காரணத்தால்தான் நோயாளிகள் வருகை குறைந்திருக்கிறது. ஆகவே, நோயாளிகள் நம்முடைய அரசு மருத்துவமனைகளைத் தேடி வருகிற விதத்தில் அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க அரசு முன் வருமா? அடுத்து, ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், முத்துப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் 500-க்கு மேற்பட்ட நோயாளிகள் வருகிற நிலை இருப்பதால், அந்த அரசு மருத்துவமனையை புனரமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசாங்கத்தினுடைய கொள்கை முடிவை ஏற்கெனவே சொன்னேன். புற நோயாளிகளுடைய எண்ணிக்கை 500-க்கும் மேல் எங்கே இருந்தாலும் அந்த மருத்துவமனையை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன முத்துப்பேட்டை மருத்துவமனையைப் பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. அங்கே புற நோயாளிகளுடைய எண்ணிக்கை 500-க்கு மேலும், 32 படுக்கைகளும் இருக்குமானால், அந்த படுக்கைகளுக்குப் போதுமான நோயாளிகளும் இருப்பார்களானால், அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 625, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 23

**625—**

**நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கிராமங்களை வேறு மாவட்டத்தில் இணைத்தல்**

***5556—திரு. கே. தங்கமணி :**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மானாமதுரை தொகுதியுடன் இணைந்துள்ள நரிக்குடி ஊராட்சி ஒன்றிய நிருவாகத்தில் உள்ள 14 பஞ்சாயத்துக்குட்பட்ட கிராமங்களை காமராசர் மாவட்டத்திலோ அல்லது பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலோ இணைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில்: நரிக்குடி ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தில் உள்ள 14 பஞ்சாயத்திற்கு உட்பட்ட கிராமங்கள் காமராசர் மாவட்டத்தில் அமைந்துள்ளன. அவற்றை பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் இணைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கே. தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதிக்குட்பட்ட நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 14 பஞ்சாயத்துக்குட்பட்ட சுமார் 70 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சட்டமன்றம் என்று வருகிறபோது பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கும், நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களைப் பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றபோது இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், ஊராட்சி ஒன்றியம் என்று வருகின்றபோது காமராசர் மாவட்டத்திற்கும் ஆக 3 மாவட்டங்களுக்குச் சென்று அலைய வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. எனவே, நேரடியாக ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு வாக்களிக்க முடியாத நிலையில் இருக்கக்கூடிய அந்தப் பகுதி மக்கள், மக்கள் பிரதிநிதிகளைத் தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் போது மூன்று மாவட்டங்களுக்கும் அலைய வேண்டியிருக்கிறக் காரணத்தால் மிகப்பெரிய சிரமங்களும், கஷ்டங்களும் அவர்களுக்கு ஏற்படுகின்றன. எனவே, ஊராட்சி ஒன்றியம் இருக்கக் கூடிய அந்தப் பகுதியிலேயே சட்டமன்றத் தொகுதியையும் இணைக்கக்கூடிய அளவிற்கு நடவடிக்கைகளை எடுக்க அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 23]

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம் திறம்படச் செயல்படவும், பின்தங்கிய பகுதிகளிலுள்ள பொதுமக்களின் குறைகளைத் தீர்க்கவும், பின் தங்கிய பகுதிகளை மேம்படுத்தவும், சமூக நலத்திட்டங்களைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்தவும், மாவட்டங்கள் கோட்டங்கள் மற்றும் வட்டங்கள் ஆகியவைகள் சீரமைக்கப்படுகின்றன. அவ்வாறு சீரமைக்கப்படும்போது, சட்டமன்றத் தொகுதிகளின் அடிப்படையிலோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களின் அடிப்படையிலோ சீரமைப்பதில்லை. ஒரு வட்டத்தின் அடிப்படைப் பிரிவுகளான வருவாய் கிராமங்கள் மற்றும் குறு வட்டங்கள் ஆகியவைகள் சீரமைக்கப்படும்போது, கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மேலும் காமராசர் மாவட்டம், நரிக்குடி ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திலுள்ள 14 பஞ்சாயத்துக்களுக்குட்பட்ட கிராமங்களை வேறு மாவட்டத்தில் இணைப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 626, திரு. டி. மணி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**626—**

**கன்னியாகுமரியில் குடிநீர் வசதி**

***1297—திரு. டி. மணி :**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சுற்றுலாப் பகுதியான கன்னியாகுமரியில் குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த வினாவைப் பொறுத்தவரையில் கொடுக்கப்பட்டுள்ள விடையில் சற்று அதிகமான விவரங்கள் தங்களுக்கு அளிக்கப்பட்டிருந்தாலும்கூட, காலத்தை அனுசரித்து சுருக்கமாகக் குறிப்பிடுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகராட்சிக்கு இரண்டாவது குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூபாய் 17 கோடியே 6 இலட்சம் செலவில் நிறுவுவதற்காகவும், அதன் பராமரிப்புச் செலவுக்கென ரூபாய் 28 இலட்சத்து 4 ஆயிரத்தில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அரசு ஆணை

[1997 ஏப்ரல் 23

எண் 61, நாள் 8-3-1996-ல் வெளியிடப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இக்குடிநீர்த் திட்டம், நாகர்கோவில் நகராட்சி மட்டுமின்றி கன்னியாகுமரி நகரியம் மற்றும் சுசீந்திரம் பேரூராட்சி ஆகியவைகளும் பயன்பெறும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சுற்றுலாத் தலமான கன்னியாகுமரிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லையென்பது அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. ஒரு தனித் திட்டத்தின் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுப்பதன் மூலமாகத்தான் கன்னியாகுமரிக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுடைய குறைகளைப் போக்க முடியும். கன்னியாகுமரிக்கு அருகாமையிலுள்ள அச்சன்குளம் போன்ற பகுதிகளில் நிலத்தடி நீர் நிறையக் கிடைக்கின்றது. அதனை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு நடத்தி, கன்னியாகுமரி சுற்றுலாத் தலத்திற்கு ஒரு தனித திட்டத்தை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் நான் இரண்டாவது திட்டம் என்றுதான் குறிப்பிட்டு இருக்கிறேன். இது ஒரு தனித் திட்டம்தான். இந்தத் தனித் திட்டம் ஏற்கெனவே நாகர்கோவில், கன்னியாகுமரி, சுசீந்திரம் ஆகிய பகுதிகளின் மக்கள் தொகை மற்றும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை ஆகிய அடிப்படைகளில் தயாரிக்கப்பட்டு ஏறத்தாழ எல்லா பூர்வாங்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படும் நிலையில் இருக்கிறது. இந்தத் திட்டத்தின் அடிப்படையில் எந்தெந்தப் பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றனவோ அவை தவிர்த்து புதிதாகச் சேர்க்கப்பட வேண்டிய சூழ்நிலை வருமானால், அதை வேண்டுமானால் தனித் திட்டமாகப் பிறகு பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் மற்றும் கன்னியாகுமரி பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்காக, பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கான ஒரு திட்டத்தைப் போட்டிருந்தார்கள். அந்தப் பகுதியில் இருந்து தண்ணீர் எடுக்கப்படும் என்று சொன்னால் விவசாயம் பாதிக்கப்படும் என்று ஏற்கெனவே எனக்கு அங்குள்ள மக்கள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, பேச்சிப்பாறை அணைத் தண்ணீரை, விவசாயத்தைத் தவிர வேறு எதற்கும் எடுக்கக்கூடாது என்ற கோரிக்கை இருக்கிற காரணத்தால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டு, புதிதாக ஏதாவது திட்டம் அறிவிக்கப்பட இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 23]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகின்ற பகுதியாகிய கன்னியாகுமரி நகருக்கும் மற்ற பகுதிகளுக்கும் உரிய வினா. ஆனால் தனிப்பட்ட முறையில் இந்தத் திட்டத்தையும் தாண்டி, அங்கு திட்டம் தேவைப்படுமானால் அதுபற்றி பிறகு ஆலோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுபோன்ற தண்ணீர்ப் பிரச்சினை அதிகமாக பல இடங்களில் இருக்கிறது. குறிப்பாக பத்மநாபபுரம் தொகுதியில் தற்போது தண்ணீர் பிரச்சினையைப் போக்கக்கூடிய வகையில் அரசு எந்தெந்த திட்டத்தை மேற்கொண்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கேள்வியில் பல கேள்விகளை இணைப்பது தவறு. ஏற்கெனவே பத்மநாபபுரம் தொகுதி பற்றிய ஒரு கேள்விக்கு நான் இங்கே பதில் அளித்திருக்கின்றேன். உறுப்பினர் அதை மீண்டும் உறுதிப்படுத்துவதற்காக கேட்கிறாரா அல்லது விவரம் தெரிவதற்காக கேட்கிறாரா என்று எனக்குப் புரியவில்லை. இன்னொரு கேள்வி தனிக் கேள்வியாகக் கேட்டாலும், அல்லது தனக்கு விவரம் தெரிய வேண்டுமென்று என்னிடத்தில் நேரில் கேட்டாலும் தக்க பதிலைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *627*, திரு. ச. இராஜரெட்டி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 23

**627—**

**தேன்கனிக்கோட்டையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்**

***4483—திரு. ச. இராஜரெட்டி :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணியை உடனடியாகத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை குடிநீர்த் திட்டம் துரிதப்படுத்தப்பட்ட நகரக் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.114 இலட்சம் செலவில் அரசு ஆணை ஒன்று இடப்பட்டிருக்கிறது. அதனுடைய அடிப்படையில் குடிநீர் வழங்கும் துறையால், நாள் 3-11-95-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டும் இருக்கிறது. அதற்குப் பிறகு, தற்போது அந்தத் திட்டத்தை துரிதப்படுத்துவதற்காக ஒரு நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்கு மீண்டும் 24 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் செலவில் மாருதி கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன் மூலம் இந்த ஒப்பந்தம் செய்வதற்கு நம்முடைய மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கிறது.

**THIRU S. RAJAREDDY** : Hon'ble Speaker Sir. It is true that the allotment of funds have been made for carrying out this work. But the work is progressing very slowly. Though the delivery line work has been completed, the work in supply line is yet to be started. May I know from the Hon'ble Minister, whether he would see that the work is speeded up and completed early ?

**மாண்புமிகு திரு. கோ.சி மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே எல்லாத் திட்டங்களும் விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்றுதான் போடப்படுகிறது. ஆனால் இடையிலே ஏற்படுகிற சில காலதாமதங்கள் இயற்கையானவையே தவிர, செயற்கையானவை அல்ல. ஆகையினால் மீண்டும் இந்தத் திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். ஏறத்தாழ 9 பணிகள் இதில் உள்ளடங்கி இருக்கின்றன. அதாவது, நீரேற்றும் குழாய் அமைத்தல், திறந்தவெளிக் கிணறு அமைத்தல், மின் ஏற்றிகள் உருவாக்குதல்,



1997 ஏப்ரல் 23]

கட்டுப்பாட்டு அறை, நீரேற்றும் அறை, இணைப்புக் குழாய் மற்றும் நீரேற்றும் குழாய் பதிக்கும் அறைகள் அமைத்தல் ஆகியவைகளைத் தனித்தனியாகவே அமைக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் அவரவர்களுடைய பணிகளை அவரவர்கள் செய்து உரிய காலத்தில் முடிக்க வேண்டுமென்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் விரைவாக இந்தத் திட்டத்தை நடத்துவதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 628, திரு. ந. கருப்பண்ண உடையார். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**628. —**

**பாபநாசம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவங்குதல்**

***2837—திரு. ந. கருப்பண்ண உடையார் :**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவங்க அரசிடம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 629, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**629—**

**DENMARK ASSISTANCE FOR WASTE LAND DEVELOPMENT**

*** 6240—THIRU B. VENKATASAMY :** Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

a) Is there any proposal to implement Denmark Assistance Scheme in Dharmapuri and Salem Districts to develop the waste and degraded land ; and

[1997 ஏப்ரல் 23

b) If so. when it will be implemented ?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

முற்பகல் 10-05

**THIRU B. VENKATASAMY :** Hon. Speaker Sir, the Denmark Government has given a lot of amount for improving waste and degraded lands in Tamil Nadu. There are lot of waste lands in Dharmapuri and Salem. May I request the Hon. Minister to see that the dry land development is taken up in Dharmapuri and Salem Districts ?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டென்மார்க் அரசு 'டானிடா' திட்டம் என்ற பெயரால் நிதி உதவியை நம்முடைய தமிழகத்திற்கு வழங்குகிறது. இந்தத் திட்டம் திருநெல்வேலி-கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார், காமராசர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய இந்த 4 மாவட்டங்களில்தான் நடைபெறுகிறது. சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களிலே நடைபெறுவதற்கான வாய்ப்பு இல்லை. தந்திருக்கின்ற நிதி உதவியின் அடிப்படையிலே இந்த 4 மாவட்டங்களிலும் மிகச் சிறப்பாக இந்தத் திட்டம் நடைபெறுகிறது. மற்றொன்று, டானிடா நிதி உதவியுடன், தமிழகத்திலே சென்னையைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் ஒன்று நடைபெற்று வருகிறது இந்தப் பயிற்சித் திட்டமும் சிறப்பாக நடைபெறுகிறது ஆனால் வேஸ்ட் லேண்ட் என்ற அந்தத் திட்டம் அங்கே நடைபெறுவதற்கான வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டானிடா திட்டத்தின் மூலம் தரிசு நிலங்களையும் மற்றும் பயனற்ற நிலங்களையும் மேம்படுத்துகின்ற முறையில் அரசு செயல்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படி அந்த அமைப்பு மூலம் செயல்படுத்தும்போது நம்முடைய மாநில



1997 ஏப்ரல் 23]

அரசினுடைய பங்கு என்ன என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்று அரிப்பிலிருந்து நிலத்தைப் பாதுகாக்க, வறட்சிக்கு இலக்கான அந்தப் பகுதியில் பலன் தரக்கூடிய மரச் செடிகளை வளர்த்து, விவசாயத்திலே விவசாயிகளுக்கு நல்ல முன்னேற்றத்தை காண்பதற்கு இந்தத் திட்டம் டானிடா திட்ட நிதி உதவியுடன் நடைபெறுகிறது, நான் ஆரம்பத்திலே சொன்ன திருநெல்வேலி-கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார், பசும்பொன், மற்றும் காமராசர் ஆகிய இந்த 4 மாவட்டங்களிலேதான் நடைபெறுகிறது. இதிலே அவர்கள் 50 சதவீதமும், நாம் 50 சதவீதமும் நிதி உதவி செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றியந்தோறும் மாதிரி விவசாயப் பண்ணைகள் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே, ஒன்றிய வாரியாக உள்ள தரிசு நிலங்களைக் கணக்கெடுத்து, அந்த ஒன்றியங்களிலே மாதிரி விவசாயப் பண்ணைகள் மூலம், பழம், பூ, காய்கறி மற்றும் மூலிகைகளைப் பயிரிடுவதற்கு விளக்கம் தருகின்ற வகையிலேயும், விதைகளையும் கன்றுகளையும் பெறுகின்ற வகையிலேயும், மாதிரி விவசாயப் பண்ணைகளை அத்தகைய தரிசு நிலங்களிலே ஒன்றியந்தோறும் அமைத்து, இந்த ஆண்டிலேயே செயல்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டில், வேளாண்மை மானியக் கோரிக்கையின்போது அறிவித்த அறிவிப்பு, ஒவ்வொரு ஒன்றியத்திலேயும், 50 ஹெக்டேர்களை, அதாவது 100 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களைத் தேர்வு செய்து - அது தரிசு நிலம் என்று அல்ல, நல்ல விவசாயம் செய்து கொண்டிருக்கக்கூடிய நிலங்களாக இருப்பினும்-அந்த ஒன்றியத்திலே ஒரு பகுதியிலே 50 ஹெக்டேர் நிலங்களைத் தேர்ந்தெடுத்து - வேளாண்மைத் தொழில் நுட்பங்களான மண் வளம், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய நீர்வளம் போன்ற தொழில் நுட்பங்கள்

மற்றும் எந்தப் பயிர் செய்தால் விவசாயிகளுக்கு லாபம் தரக்கூடிய வகையில் இருக்கும்; அதேபோன்று அரசாங்கம் கொடுக்கிற இன்புட்ஸ், என்னென்ன உதவிகளை நாம் செய்கிறோம் என்ற அந்த விளக்கத்தை விவசாயிகளுக்குத் தந்து, விவசாயிகளோடு வேளாண்மைத் துறையும் இணைந்து, அவர்களை ஊக்கப்படுத்தி, இதிலே நல்ல ஈடுபாடு கொள்ளச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் 1997-98-ஆம் ஆண்டிலேயே இது நடைபெறவேண்டும் என்று ஆணையிடப்பட்டு இப்போது எந்தெந்த ஒன்றியத்தில், எந்தப் பகுதியிலே 50 ஹெக்டேர் நிலங்களைத் தேர்ந்தெடுக்கப்போகிறார்கள் என்ற விவரத்தை உடனடியாக அரசுக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்று எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், அதேபோல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்களுக்கும் அரசு மூலம் தாக்கீது அனுப்பப்பட்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

முற்பகல் 10-10

THIRU B. VENKATASAMY: Honourable Speaker Sir, the Honourable Minister has stated that DANIDA project has been earmarked for four districts and that it has been doing very well. May I request the Honourable Minister to reconsider and extend this Waste land and degraded Land Improvement Scheme to Dharmapuri and Salem districts also? Will these two districts also be included in the scheme, Sir?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டானிடா திட்டம் தருமபுரி மாவட்டத்திலே, அல்லது சேலம் மாவட்டத்திலே விரிவாக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. ஆனால் இஸ்ரேல் நாட்டினுடைய தகால் திட்டத்தை, இப்போது நம்முடைய மாநில அரசாங்கம், ஒப்பந்த அடிப்படையில் நல்ல தொழில் நுட்பங்களை வழங்குவதற்காக, தருமபுரி மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம், காமராசர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் போன்ற இந்த 4 மாவட்டங்களிலே அமல்படுத்த அரசாங்கம் முன் வந்து இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 630, திரு. எல். மூக்கையா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.





**630—**

### சோத்துப்பாறை அணைத்திட்டம்

***1083—திரு. எல். மூக்கையா:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளத்திற்கு மேற்கில் வராக நதியின் குறுக்கே கட்டப் பட்டுவரும் சோத்துப்பாறை அணை திட்டப் பணியை விரைவில் முடிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அணை கட்டி முடிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன் பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சோத்துப்பாறை அணையை மார்ச் திங்கள் 2000-ஆம் ஆண்டில் கட்டி முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளத்திற்கு மேற்கே வராக நதியின் குறுக்கே 1983ஆம் ஆண்டு சோத்துப்பாறை அணையைக் கட்டும் பணி தொடங்கப்பட்டது. கடந்த 13 ஆண்டுகளில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு அணைதான் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. 1989-90-ஆம் ஆண்டு கழக ஆட்சியின்போது நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக அந்த இடத்திற்கு வந்து அணையைப் பார்வையிட்டதால்தான், அதிகாரிகளை விரைவுபடுத்தியதால்தான் மூன்றில் ஒரு பங்கு அணை கட்டி முடிக்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டு காலத்தில் எந்த அமைச்சரும் அங்கு வரவில்லை, அந்த அணையைப் பார்வையிடவில்லை, கட்டுமானப் பணியும் கிடப்பில் போடப்பட்டது. இப்போது மீண்டும் நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இரண்டாவது முறையாக சோத்துப்பாறை அணையைப் பார்வையிட்டார்கள். அப்போது நான் 'டீ' கொடுத்ததற்குக் கூட இந்த அணை கட்டி முடிக்கப்படும் வரை இந்த இடத்தில் 'டீ' குடிக்க மாட்டேன் என்று சொன்னார்கள். அது எல்லாப் பத்திரிகையிலும் கட்டம் கட்டி செய்தியாகக்கூட வந்திருக்கிறது. எனவே அணைத்திட்டத்தை விரைவாக

கி.பி.2000-ஆம் ஆண்டுக்கு முன்பு கழக ஆட்சியிலே கட்டி முடித்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை வைத்து திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையால் கட்டுமானப் பணி செய்யப்படும் அணைகளில் இதுதான் மிகவும் சோகமான அணை. காரணம், 1982-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டம் கி.பி.2000-2001-ல்தான் முடிக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆக கிட்டத்தட்ட இதற்கு 20 வருட காலம் ஆகிறது. தாஜ்மகாலையே 22 வருடத்தில் கட்டி முடித்திருக்கிறார்கள். இதற்குப் பல காரணங்கள் உண்டு. இடத்தைத் தேர்வு செய்வதில் பிரச்சினை, அரசியல் பிரச்சினை, டெண்டர்கள் பைனலைஸ் ஆவதிலே தகராறு ஆகியவை இருந்தன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல 1989-ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சி வந்த பிறகு இத்திட்டத்தை வேகப்படுத்தினோம். பிறகு எங்கள் ஆட்சி கலைக்கப்பட்டது. இப்போது மீண்டும் கலைஞர் ஆட்சி வந்திருக்கிறது. கலைஞர் அவர்களுடைய ஆணையை ஏற்றுத்தான் அந்தப் பகுதியைப் பார்வையிட்டேன். வேகமாக முடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் 27 கோடி ரூபாய்க்கு இப்போது டெண்டர் வைத்திருக்கிறோம், மே மாதம் 16-ஆம் தேதிதான் இதற்குக் கடைசி நாள். அந்த அணை கட்டப்பட வேண்டும் என்பதற்காகத்தான் 27 கோடி ரூபாயை தமிழக முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே இப்பணி நிற்காது, நிச்சயமாக கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 631, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**631—**

### ஆரணியாற்று அணைத் திட்டம்

***3387—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோளிங்கர் ஸ்ரீநரசிம்மசுவாமி மலைகளுக்கு இடையே ஆரணியாற்று அணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.



**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் ஸ்ரீநரசிம்மசுவாமி மலைகளுக்கு அருகாமையில் இருக்கின்ற மலைகள் எல்லாம் மிக உயரமாக அமைந்திருக்கின்றன. அந்த மலைகளுக்கு இடையே இருக்கக்கூடிய நீர்ப்பிடிப்பு பகுதி இயற்கையாகவே ஒரு அணையைக் கட்டுவதற்கு ஏதுவான பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியிலே ஆரணியாற்று அணை என்ற பெயரிலே ஒரு அணை கட்டுகின்ற திட்டம் ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு முன்பு விரிவாக ஆராயப்பட்டு தீட்டப்பட்டது. அந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது. அந்தப் பகுதிக்கு மிக அருகாமையில் வசிக்கின்ற நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு அதனுடைய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10.15*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல அதை ஆராய்ந்த பிறகுதான் அணை இல்லை என்ற முடிவிற்கு அரசு வந்தது. இரண்டு மலைகளுக்கு இடையே தண்ணீர் ஓடுவது பெரிய ஆற்றுப் போக்கு அல்ல. சோளிங்கர் ஏரியிலே கலிங்கலிலேயிருந்து ஓடிப் போகிறபோது அந்தத் தண்ணீர் ஒரு ஓடையாகி இரண்டு மலைகளுக்கு இடையில் ஓடி வந்து ஆரணியாற்றில் கலக்கிறது. ஆகையினால் ஆரணியாறு அங்கு ஓடவில்லை. ஓடைதான் ஓடுகிறது. எனவே மாண்புமிகு உறுப்பினருடைய திருப்திக்கு வேண்டுமானால் நான் ஒருநாள் வந்து பார்க்கிறேன். வந்தாலும் இதே நிலைதான் இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 632, திரு. இரா. மூக்கப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**632—**

### வெள்ளாற்றில் பாலம் கட்டுதல்

***2975—திரு. இரா. மூக்கப்பன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னசேலம், கூகையூர் வெள்ளாற்றில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இந்தத் தரைமட்டப் பாலம் அமைக்க தோராயமாக ரூ.105 லட்சம் செலவாகும் என்ற காரணத்தினால் சமீப காலங்களில் அதை மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. இரா. மூக்கப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திருச்சி, பெரம்பலூர் பகுதிகளுக்கு எல்லாம் செல்வதற்கு தலைவாசல் வழியாகச் செல்ல வேண்டியுள்ளது. சின்னசேலம், கூகையூர் வெள்ளாற்றில் ஒரு பாலம் கட்டினால் எல்லோரும் பயனடைவார்கள். எங்கள் பகுதியிலேயிருந்து பள்ளி மாணவ, மாணவியர் எல்லாம் திருச்சி, பெரம்பலூர் பகுதியிலேதான் அதிகம் படிக்கின்றார்கள். அதைப்போலவே விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் அவர்களிடம் விளைந்த கரும்புகளை சர்க்கரை ஆலைகளுக்கு எடுத்துச்செல்வதிலேகூட கிட்டத்தட்ட 15 கிலோமீட்டர் சுற்றி எடுத்துச் செல்லவேண்டிய சூழ்நிலை உள்ளது. இந்தப் பாலம் கட்டினால் திருச்சிக்கு கிட்டத்தட்ட நேரடியாக 15, 20 கிலோமீட்டர் தூரம் குறைவாக ஆகும். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலங்களில் அரசு நிதிநிலையைப் பொறுத்து அதைப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 633, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**633—**

### ஏற்காட்டிற்கு சாலை அமைத்தல்

***4630—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட எல்லையான தொப்பூரிலிருந்து கானயாம் பட்டி, டேனிஷ்பேட்டை வழியாக ஏற்காட்டிற்கு சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1981-82-லே இந்தச் சாலைக்கான அனுமதி வழங்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, அந்த ஒப்பந்தக்காரர் செய்த முறைகேட்டின் காரணமாக இந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டதாக அறிகிறேன். இந்தச் சாலை செயல்படத் துவங்கினால் ஏற்காடு செல்ல சுமார் 30 கிலோமீட்டர் தூரம் மிச்சமாகும். ஆகவே மீண்டும் அரசு இதனைப் பரிசீலித்து இந்தச் சாலையை துவங்குவதற்கு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலையானது கிட்டத்தட்ட 6 பகுதிகளைக் கொண்டிருக்கிறது. இதிலே 15 கிலோமீட்டர் சாலை போடவேண்டுமென்று சொன்னால், வனத்துறையிடமிருந்து அனுமதி பெறவேண்டிய நிலைமையும் இருக்கிறது. வனத்துறையிடமிருந்து அனுமதி பெறுவது என்பதில், அந்த அளவிற்கு 15 கிலோ மீட்டர் தூரம் சாலை போடவேண்டுமென்று சொன்னால், அவ்வளவு எளிதான காரியம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். வனத்துறை அனுமதி அளிக்குமானால் வருங்காலங்களில் இதை எடுத்துக்கொள்வது பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 634, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**634—**

### பண்டகசாலைகளில் கொள்முதல் கொள்கையை மாற்றுதல்

***5459—திரு. கே. சுப்பராயன் :**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 23

(அ) கூட்டுறவுத் துறையில் உள்ள மொத்த விற்பனைப் பண்டக சாலைகளின் கொள்முதல் கொள்கையை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதுள்ள கொள்முதல் முறையில் மாற்றம் செய்யும் அவசியம் எழவில்லை. இருப்பினும் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் நிருவாகக்குழு உறுப்பினர்கள் பதவி ஏற்ற பிறகு அவர்களின் கருத்திற்கேற்ப மாற்றம் தேவைப்படின் கொள்முதல் கொள்கை மாற்றியமைக்கப்படும்.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டாங்கல்லைக் கட்டிக்கொண்டு கிணற்றில் குதித்தால் கரையேறு வதற்கு வழியே இல்லை. நம்முடைய கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையிலும், குறிப்பாக மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் ரூ.60 கோடி நட்டத்திலே போய்க்கொண்டிருக்கின்றன என்று சொல்லிக் கொண்டிருக்கிற நிலையில், அந்த நட்டத்தை ஏற்படுத்துகிற மிக முக்கிய அம்சமான கொள்முதல் பாலிசி மாற்றப்படுவது குறித்து அரசு பரிசீலிக்க இயலாத நிலை இருப்பது வேதனைக்குரியதாகும். எனவே உண்மையிலேயே ரூ.60 கோடி நட்டத்தை ஈடுகட்டி இலாபகரமாக மாற்றவேண்டுமானால், கொள்முதல் விலையில் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். அரசு அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்த மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் சொல்வதற்கு கொஞ்சம் அதிக நேரம் பிடிக்கும். தயவுசெய்து அதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலத்தில் மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் ஏற்பட்ட பல்வேறு முறைகேடுகள் களையப் பட்டிருக்கின்றன. 29 சங்கங்களிலும் கிட்டத்தட்ட ரூ.60 கோடி நட்டம் ஏற்பட்டதற்குக் காரணம், அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்கள் தொடர்ந்து தேவையற்ற பொருட்களை எல்லாம் கொள்முதல் செய்து, விற்பனையாகாத பொருட்களை கொள்முதல் செய்து, கமிஷன் வந்தால் போதும் என்று எவ்வளவு கோடிக்கு வேண்டுமானாலும் கொள்முதல் செய்து, இப்படி மொத்தமாக அத்தனை மொத்த விற்பனை பண்டக சாலைகளையும் நட்டத்திலே கொண்டுவந்துவிட்ட காரணத்தினால், தொடர்ந்து இதையெல்லாம் இலாபமாக இயக்கமுடியவில்லை. நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, இன்றைக்கு பல்வேறு சீர்திருத்தங்கள் இதிலே செய்யப்பட்டிருக்கின்றன. கொள்முதல் கொள்கையைத்தான் மாற்றவில்லையே தவிர, அதிகாரிகள் மாற்றப்பட்டு, நேர்மையான அதிகாரிகள் அங்கே நியமிக்கப்பட்டு, இன்றைக்கு முறைப்படி கொள்முதல்கள் செய்யப்படுகின்றன. உதாரணத் திற்கு ஒன்றைச் சொல்லவேண்டுமென்றால், 49 இடங்களில் ஜவுளித் தொழிலில் உற்பத்தியாளர்களிடம் கொள்முதல் செய்யப்பட்டுக் கொண் டிருந்ததை, தரமான ஜவுளி உற்பத்தியாளர்கள் 19 பேர்களிடமிருந்துதான் கொள்முதல் செய்யப்படவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நாட்டிலே உற்பத்தி செய்யப்படுகின்ற, ஐ.எஸ்.ஐ. முத்திரை பதித்த பொருட்கள் கொள்முதல் செய்யப்படவேண்டுமென்று இன்றைக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.



முற்பகல் 10-20

இவை அத்தனையையும்விட, கூடுதல் பதிவாளர் தலைமையிலே மொத்த விற்பனை பண்டகசாலை நான்காகப் பிரிக்கப்பட்டு, சுற்று முறையிலே அதிலே இருக்கிற அதிகாரிகள் எல்லாம் அமர்ந்து பேசி, தரமான பொருட்களைத்தான் கொள்முதல் செய்ய வேண்டுமென்று இன்றைக்கு நிர்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. மொத்த விற்பனை பண்டகசாலையில் இருக்கின்ற தரப் பரிசோதனைக் கூடங்கள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டு இருந்ததை மீண்டும் புதுப்பித்து, தரப்படுகின்ற பொருட்கள் தரமாக இருக்கின்றதா என்பதையெல்லாம் பரிசோதித்துதான், கொள்முதல் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது ஓரளவிற்கு வெற்றிகரமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான கேள்வி, அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இதுவரைக்கும் முக்கியம் இல்லாத கேள்வியே கேட்டது கிடையாது.

[1997 ஏப்ரல் 23

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். அதாவது, கடந்த கால ஆட்சியில் முறைகேடுகள் நடைபெற்றன என்பதைப்பற்றி விரிவாகச் சொன்னவர், அந்த அரசு கடைப்பிடித்த கொள்முதல் பாலிசி மாற்றப்படாமல், அதிகாரிகள் மாற்றப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலிருந்து என்ன புரிகிறது என்றால் கொள்ளை அடித்த அதிகாரிகள் மாற்றப்பட்டு விடப்பட்டார்கள். இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலே கடைப்பிடிக்கப்படுகின்ற இந்த கொள்முதல் பாலிசி என்பது கமிஷன் பேசிஸில்தான் அமைக்கப்பட்டு இருக்கின்றது. தயவுசெய்து நான் மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவது, நடப்பாண்டில் கொள்முதல் பாலிசி மாற்றப்படவில்லை என்றால் கூட்டுறவுத் துறை முற்றாக அழிந்து போகும். எனவே, அது அழியாமல் காப்பாற்றப்படுவதற்காக மீண்டும் அரசு மறுபரிசீலனை செய்து கொள்முதல் பாலிசியை மாற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த விற்பனை பண்டகசாலை என்றைக்கு துவங்கப் பட்டதோ, அன்றைய காலத்திலிருந்து இந்தக் கொள்முதல் முறை ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. அந்த முறையை எடுத்துக்கொண்டு கையாள்கின்ற அரசு நேர்மையான அரசாக இருந்தால், அது இலாபமாக இருக்கிறது; நேர்மையற்ற அரசாக இருந்தால் அங்கு நஷ்டம் ஏற்படுகிறது. இதுதான் நிலைமை. கடந்த காலத்திலே மொத்த விற்பனை பண்டகசாலைக்கு கொள்முதல் செய்து தரவேண்டிய இணையம், முந்திரி கொள்முதல் செய்து மிகப் பெரிய அளவிலே நஷ்டம் ஏற்பட்ட காரணத்தினால், இன்றைக்கு இணையத்தால் சிறப்பாகச் செயல்பட முடியவில்லை. அதனால் கூடுதல் பதிவாளர் தலைமையிலே, அந்தப் பகுதியில் இருக்கின்ற அந்தந்த விற்பனை பண்டகசாலையினுடைய ஸ்பெஷல் ஆபீசருடன் கூட்டாக இணைந்து, எந்த வியாபாரிகளுடன் பேசினால், தரமான பொருட்கள் கிடைக்குமோ, அவற்றைத்தான் இன்றைக்கு கொள்முதல் செய்து கொண்டிருக்கிறார்கள். அதில்கூட, அரசு அதே நிலையை எடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. இன்றைக்கு தேர்தல் நடைபெற்றிருக்கிறது. அப்படி தேர்தல் நடைபெற்று, தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்களேயானால், அவர்கள் எல்லாம் அமர்ந்து பேசி, ஒரு புதிய முடிவை எடுக்கக்கூட, இந்த அரசு தயாராக இருக்கிறது.



1997 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 635, திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**635—**

**பகுதி நேரக் கடைகள் அமைத்தல்.**

***6124— திரு. இ. புகழேந்தி :**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாய விலைக் கடைகளைப் பிரித்து பகுதி நேரக் கடைகளாக அமைப்பதற்கான நிபந்தனைகளைத் தளர்த்திட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். புதிய நியாய விலைக் கடைகளைத் திருத்தி அமைக்கவும், புதிய கடைகளைத் திறக்கவும் முன்பிருந்த நிபந்தனைகளைத் தளர்த்தி திருத்தியமைக்கப்பட்ட விதிமுறைகள் வகுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நிலையை அறிகின்ற அரசு என்பதால் விதிகள் தளர்த்தப்பட்ட நிலைக்கு மகிழ்ச்சி கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், தொகுதி மக்களுடைய நிலையையும், தொகுதியின் சூழலையும் அறிந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், நியாயவிலைக் கடைகள், பகுதி நேரக் கடைகள் குறித்து தருகின்ற பரிந்துரைகளை தாமதப்படுத்தாமல் உடனடியாக விரைவாகச் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைமைக்கு அறிவுறுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய முறையிலே எவ்வாறெல்லாம் கடை திறக்கப்பட வேண்டுமென்று அரசாங்க ஆணை இன்றைக்கு வெளியிடப் பட்டிருக்கிறது. அது ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் தரப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லும்போது, ஆயிரம் புதிய நியாயவிலைக் கடைகள் தமிழகம் எங்கும் திறக்கப்படும் என்று தெரிவித்து, நிதிநிலை அறிக்கை கூட்டம் முடிவதற்குள்ளாகவே இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட கடைகள் தமிழகம் எங்கும் இன்று திறக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தி எங்களுக்கு வந்திருக்கிறது.

[1997 ஏப்ரல் 23

உதாரணத்திற்கு, நமது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியிலே நேற்றைக்கு முன்தினம், அவர்களே நேரிடையாகச் சென்று 25 இடங்களிலே புதிய பகுதி நேர கடைகளைத் திறந்து வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு பகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தருகின்ற பரிந்துரை, 800 கார்டுகள் வரையுள்ள இடங்களில் ஒரு நியாயவிலைக் கடையும், 800 கார்டுகளுக்கு கூடுதலாக, 500 கார்டுகள் உள்ள இடத்தில் ஒரு புதிய நியாயவிலைக் கடையும் திறப்பதற்கு அரசு ஆணையிட்டு இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு கடையிலே 1200 கார்டுகள் இருக்கின்றன என்றால், 800 கார்டுகளுக்கு ஒரு நியாயவிலைக் கடையும், கூடுதலாக உள்ள 400 கார்டுகளுக்கு ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையும், அதே நேரத்தில் 1,300 கார்டுகள் இருந்தால் 800 கார்டுகள் போக கூடுதலாக உள்ள 500 கார்டுகளைப் பிரித்து அதற்கு ஒரு புதிய நியாயவிலைக் கடையைத் திறக்க அரசு அனுமதி அளித்திருக்கிறது. நேற்றுகூட மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இதிலே சந்தேகம் கேட்டார்கள். நமது தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் கேட்டதற்கிணங்க அங்கிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவரை உடனடியாக அழைத்துப் பேசி அங்கெல்லாம் கடைகளைத் திறக்க வேண்டுமென்று இன்றைக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தெந்தப் பகுதியிலே கடைகள் திறக்க வேண்டும் என்று விரும்பினாலும் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகினால் விரைவில் அந்தக் கடைகளைத் திறக்க சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 636, திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**636—**

### 'தாய்கோ' வங்கி மூலம் கடன் வழங்குதல்

***3416—திரு. செ. இராமலிங்கம் :**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 23]

(அ) *1995-96-ஆம்* ஆண்டில் பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 'தாய்கோ' வங்கி மூலம் வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

(ஆ) என்னென்ன தொழில்களுக்கு இந்த நிதி உதவி வழங்கப் படுகிறது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) *1995-96-ஆம்* ஆண்டில் பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் "தாய்கோ வங்கி" மூலம் ரூ. 318.10 இலட்சம் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இக்கடன் உதவி கீழ்க்கண்ட தொழில்களுக்கு கொடுக்கப் படுகின்றன:—

1. ஆட்டோ
2. ஜெராக்ஸ்
3. மோட்டார் வாகன ஊர்தி (ஆட்டோ நீங்கலாக)
4. கம்ப்யூட்டர் சம்பந்தமானவை
5. தச்சு வேலை
6. துணி வியாபாரம்
7. பாய் நெசவு
8. பொறியியல் பிரிவு
9. சிறு வியாபாரம்
10. டயர் மாட்டு வண்டி
11. சிறுதொழில் பிரிவு

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கடன் உதவி பெறுவதற்கு என்னென்ன தகுதிகள் தேவை? தாழ்த்தப்பட்டவர்களுக்கு தாட்கோ மூலம் மானிய உதவி வழங்கப்படுவதுபோல் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் மானிய உதவி வழங்கப்படுமா? மீதம் உள்ள கடனுக்கு வட்டி விகிதம் எவ்வளவு என அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 23

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் உதவி பெற்றிட தகுதிகள் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையினர் பிரிவினைச் சார்ந்த தனி நபர்கள் தகுதி உடையவர்கள் ஆவார்கள். குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ.22,000-க்குள் இருக்க வேண்டும். கடனுதவி கோரி விண்ணப்பம் செய்பவர்கள் 50 வயதிற்குள் இருக்க வேண்டும். ஒரு குடும்பத்திற்கு ஒரு நபருக்கு மட்டுமே கடன் உதவி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இக்கழகத்தால் மானியம் வழங்குவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வட்டி விகிதம் ஆண்டு வருமானம் ரூ.11,000-க்குள் இருப்பின் 7 விழுக்காடு. ஆண்டு வருமானம் ரூ.11,001 முதல் 22,000 வரை இருக்கின்ற நபர்களுக்கு 10 விழுக்காடு. ஆட்டோ தவிர ஏனைய வாகனங்களுக்கு 12 விழுக்காடு, தவணை தவறிய கடனுக்கு அபராத வட்டி 3 விழுக்காடு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 637, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**637.—**

**கால்நடை கிளை மருத்துவமனைகள் அமைத்தல்**

***6803**—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பவானி தொகுதிக்குட்பட்ட அம்மாபேட்டை ஒன்றியம், சித்தாற்றிலும், பவானி ஒன்றியத்திக்குட்பட்ட பருவாச்சி, வைரமங்களம், பெரியபுலியூர், ஜம்மை, ஓ.என். பாளையம் ஆகிய பகுதிகளில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பவானி தொகுதிக்குட்பட்ட சித்தாறு, பருவாச்சி, வைரமங்களம், பெரியபுலியூர், ஜம்மை, ஓ.என். பாளையம் ஆகிய ஊர்களில் கால்நடை கிளை நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.



1997 ஏப்ரல் 23]

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி தொகுதியிலே அமைந்துள்ள சித்தாற்றில் 2 ஆண்டுகளுக்கு முன்பாகவே பொது மக்களாலே இலவசமாக இடம் கொடுக்கப்பட்டு, இலவசமாகவே கட்டிடம் கட்டி கொடுக்கப்பட்டு கால்நடை மருந்தகம் ஒன்று வேண்டும் என்று அரசிடம் வேண்டிக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் பவானி தொகுதியிலேயே ஆப்பக்குடி கால்நடை கிளை நிலையம் கால்நடை மருந்தகமாக தங்கள் மூலமாக உயர்த்தப்பட்டு இருக்கக்கூடிய இந்தக் காலக்கட்டத்தில் ஆப்பக்குடியில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய கால்நடை கிளை நிலையத்தை சித்தாற்றிலும், மற்றும் அத்தியாவசியமான, தேவையான ஜம்மை, பெரியபுலியூர் மற்றும் பல இடங்களில் இலவசமாக கட்டிடம் கொடுத்தும் மற்ற தேவைகளையும் பொதுமக்களாலே நிவர்த்தி செய்தும் இருக்கிற நிலையில் மருத்துவர்களையும், மருந்துகளையும் அரசு மூலமாக கொடுத்து பகுதி நேர கால்நடை கிளை நிலையங்களை அங்கெல்லாம் அமைத்துக் கொடுக்க வேண்டும்; அமைத்துக் கொடுப்பீர்களா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் துறையின் மானியக் கோரிக்கையின் போது அறிவித்தப்படி கால்நடை கிளை நிலையங்களின் அருகில் உள்ள பார்வைக் கிளை நிலையங்களாக சிலயிடங்களில் அமைப்பது பற்றி பரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 638, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்

**638. —**

**கால்நடை மேம்பாட்டிற்கு வல்லுநர் குழு அமைத்தல்**

***6831**— திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

கால்நடைப் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டிற்காக வல்லுநர் குழு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1997 ஏப்ரல் 23

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கால்நடைப் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டிற்காக புதிதாக வல்லுநர் குழு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 639, திரு.ஆர். சிவானந்தம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**639—**

### ஆரணி தொகுதியில் தொழிற்பேட்டை துவங்குதல்

***4197— திரு. ஆர். சிவானந்தம் :**

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை துவங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில்துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆரணி தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை தொடங்கும் திட்டம், எதுவும் தற்போது சிட்கோவிடம் இல்லை.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி—ஆற்காடு ரோடு, ஆரணி—செய்யார் ரோடு, ஆரணி—விழுப்புரம் ரோடு ஆகிய நெடுஞ்சாலைகளில் அரசுக்குச் சொந்தமான சுமார் 100 ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அதற்கு மேலும் வேண்டுமானாலும் தரிசான நிலங்கள் ஆக்கிரமிப்புச் செய்ய வசதியாக இருக்கின்றன. எனவே, தொழில் கல்வி, மற்றும் பட்டப் படிப்புப் படித்த இளைர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையில் மீண்டும் அரசு மறு பரிசீலனை செய்யுமா என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.



1997 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 640, திரு. சி.டி. தண்டபாணி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**640—**

### திருத்தலங்களை சுற்றுலாத் தலங்களாக்குதல்

***5166—திரு. சி.டி. தண்டபாணி :**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள பழனி, மருதமலை போன்ற திருத்தலங்களை சுற்றுலாத் தலங்களாக அறிவிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ : தமிழகத்திலுள்ள பழனி மற்றும் மருதமலை போன்ற திருத்தலங்கள் ஏற்கெனவே மிகவும் புகழ் பெற்ற திருத்தலங்களாகும். சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் இடமாக உள்ளது. எனவே, பழனி மற்றும் மருதமலை முதலிய இடங்களைப் புதிதாக அறிவிக்க தேவையில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை சுற்றுலாத் தலங்களுக்கு அழைத்துச் செல்ல, யாருமே வாங்க முன்வராத நிலையிலுள்ள முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் வாங்கிய விமானத்தை சுற்றுலாத் துறை பயன்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கலந்து பேசி முடிவு தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவைக்கு மிக அருகில் உள்ள கோவை குற்றாலம், வைதேகி நீர் வீழ்ச்சி ஆகியவைகளை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 23

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இதுபற்றி உடனடியாக அறிவிக்க முடியாத காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய காங்கேயம் தொகுதியில் பிரசித்த பெற்ற முருகக் கடவுளின் புண்ணிய ஸ்தலங்களான சென்னிமலை, சிவன்மலை, வட்டமலை, ஊதியோர் மலை, அழகு மலை ஆகிய 5 ஸ்தலங்கள் 20 கிலோ மீட்டர் சுற்றளவில் அமைந்திருக்கின்றன. இந்தத் திருத்தலங்களை சுற்றுலாத் தலங்களாக அறிவித்து அவைகளை இணைத்து திருவிழா நாட்களில் சிறப்பு சுற்றுலாப் பேருந்து வசதிகளைச் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் மூலமாக எந்த இடத்தையும் சுற்றுலாத் தலம் என்று அறிவிப்பது கிடையாது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று சுற்றுலாத் துறை அலுவலர்களை அந்த இடத்திற்கு அனுப்பி தேவைகளின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் பயன்படுத்திய விமானம் சுற்றி சுற்றி இந்தச் சபையில் வந்து கொண்டேயிருக்கிறது. முன்னதாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக அந்த விமானத்தை விற்று மருத்துவமனைகளுக்கு ஊர்திகள் வாங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அது நடைபெறாமல் மீண்டும் வேறு நிதி ஒதுக்கி வாங்கப்பட்டு விட்டது. திரும்பவும் இப்போது சுற்றுலாத் துறையில் அது வந்து நிற்கிறது. இப்படி எல்லா துறைகளுக்கும் வந்து போகிற அந்த விமானத்தைப் பற்றி ஏதாவது விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விமானத்தை விற்பதற்கு அகில இந்திய அளவிலே மட்டுமல்லாமல் அகில உலக அளவிலேகூட ஒப்பந்தம்



1997 ஏப்ரல் 23]

கோரப்பட்டிருக்கின்றது. இன்னும் அந்த ஒப்பந்தத்தை ஏற்று யாரும் அதை வாங்குவதற்கு முன்வரவில்லை. இருந்தாலும் அந்த விமானத்தை விற்கின்ற முயற்சி இனி விமான வேகத்தில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுகிய கால வினா எண் 3, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**குறுகிய கால வினா 3**

**பழுதடைந்த தொடக்கப்பள்ளியின் கட்டிடத்தைச் செப்பனிடுதல்**

***9339 திரு. ஜி. நிஜாமுதீன் :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் ஒன்றியத்திலுள்ள கருவேலங்கடை கிராம ஆதி திராவிட நல தொடக்கப்பள்ளியின் பழுதடைந்து இடிந்துவிழும் நிலையிலுள்ள பிரதான கட்டிடத்தை செப்பனிட அரசு முன்வருமா?

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ள, கருவேலங்கடை ஆதிதிராவிட நலத் தொடக்கப் பள்ளிக்கட்டிடம் கோடை விடுமுறையான மே மாதத்தில் ரூபாய் 20 ஆயிரம் செலவில் நல்லமுறையில் செப்பனிட்டு, பழுது பார்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. நிஜாமுதீன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிக்கட்டிடம் பல முறை பழுது பார்க்கப்பட்டும், மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதை மீண்டும் பழுது பார்ப்பதால் அந்தச் செலவு வீணாகுமேயொழிய அது பலன் தராமல் இருக்கும். ஆகவே, அதைப் புதுப்பித்துக் கட்டித் தர அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 23

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய மேல் கூரை நகர்ந்துள்ளது. சுவர் நன்றாக இருக்கிறது. ஆகவே, கட்டிடம் பழுது பார்ப்பதற்கும் மிகவும் கெட்டியாகக் கட்டிக் கொடுப்பதற்கும் ரூ. 20 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

*ஈரோட்டில் பதுக்கப்பட்ட இலவச வேட்டி-சேலைகள், குழந்தைகள் சீருடைகள் காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டமை*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. பெரியார் மாவட்டம் ஈரோட்டில் ஜவுளிக் கடைகளில் நடைபெற்ற சோதனையின் போது இலவச வேட்டி, சேலைகள் மற்றும் குழந்தைச் சீருடைகளைக் காவல் துறையினர் கைப்பற்றியது குறித்து உறுப்பினர்கள் திருவாளர்கள் ப. ரங்கநாதன், சி. ஞானசேகரன், நா. பெரியசாமி, இ. கணேசன், டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். முதலிலே திரு. சி. ஞானசேகரன். சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வேட்டி சேலை என்பதற்காக அரசு பல கோடி ரூபாய்களை வழங்கி, ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி சேலை பொங்கல் அன்று கொடுக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், பொங்கலன்று, அதைக் கொடுக்க முடியாமல் போன காரணத்தினாலே, தமிழ்ப் புத்தாண்டிலாவது கொடுக்க வேண்டுமென்று அரசு முழுமுயற்சி எடுத்து, இந்த இலவச வேட்டி சேலைகள் எல்லாம் கைத்தறித் துறை மூலமாகக் கொள்முதல் செய்ய, அதாவது சங்கங்களிலே தயாரித்துக் கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்படி கொள்முதல் செய்யப்பட்ட இலவச வேட்டி சேலைகள், கைத்தறித் துறை அமைச்சர் சார்ந்திருக்கக்கூடிய மாவட்டத்தில், அதனுடைய தலைநகராம்



1997 ஏப்ரல் 23]

ஈரோட்டிலேயே 50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இலவச வேட்டி சேலைகள் 10 குடோன்களிலே பதுக்கி வைக்கப்பட்டிருப்பது என்பது ஒரு அதிர்ச்சியான செய்தியாகும்.

இப்படி அதிகமாக ஈரோட்டிலேயே கொண்டு போய் வியாபாரிகள் அதைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த அரசாங்கத்திலேகூட அது கடந்த காலப் புடவையா என்று சில கருத்துக்களைச் சொல்கிறார்கள். இந்த ஆண்டு தயாரித்த புடவைகளும், அதேபோல வேட்டிகளும்கூட அங்கே பதுக்கி வைக்கப்பட்டு, பொது மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு அது கிடைக்காமல் செய்யக்கூடிய அளவிற்கு அதிகாரிகள் யார் இதிலே முனைப்போடு செயல் பட்டார்கள்? எப்படி, எந்தெந்த இடத்திலே, எந்தெந்த மாவட்டத்திலே இருந்து இந்த இலவச வேட்டி சேலைகள் சுருட்டப்பட்டன? அப்படிச் சுருட்டிக் கொண்டுபோய், ஈரோட்டிலே கொண்டு போய்ப் பதுக்கி வைப்பதற்கான காரணம் என்ன? இதையெல்லாம் முழுமையாக அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

காரணம், இலவச வேட்டி சேலை எண்ணிக்கை போதவில்லை. கடந்த கால ஆட்சியிலே கொடுக்கப்பட்ட அளவைக்கூட இந்த ஆட்சியிலே எட்ட முடியாமல் இருக்கிறது. இதன் காரணமாக எங்களுடைய மாவட்டத்தில்கூட பல இடங்களிலே சாலை மறியல் நடந்திருக்கிறது. அந்த இலவச வேட்டி சேலையைக் கொடுக்கும்போது ஒரு ஜோடி கொடுக்க வேண்டும். இலவச வேட்டியும் கொடுக்க வேண்டும், சேலையும் கொடுக்க வேண்டும் ஒரு குடும்பத்திற்கு என்று கொடுக்கும்போது ஒரு வேட்டி கொடுத்தால் சேலை இல்லை; சேலை கொடுத்தால் வேட்டி இல்லை என்ற அளவிற்குப் பகிர்ந்து கொடுக்கூடிய ஒரு நிலை இப்பொழுது தமிழகத்திலே, எங்களுடைய மாவட்டத்தில் இருக்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், அரசு ஒரு நல்ல எண்ணத்தோடு இப்படி முழு முயற்சி எடுத்துக் கொடுக்கிறபொழுது, இன்னும்கூட கொள்ளை அடிக்கிற கூட்டம் உள்ளேயே இருந்து கொண்டு, 50 இலட்சம் ரூபாய் இலவச வேட்டி சேலைகளைச் சுருட்டி, ஈரோட்டிலே, தலைநகரத்திலே 10 குடோன்களிலே மறைத்து வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் இதிலே அதிகாரிகளுடைய போக்கே மாறவில்லை. அந்தத் துணிகள் கைத்தறித் துறையிலே இருந்து போனதா அல்லது அது ரெவின்யூ டிபார்ட்மெண்ட் வந்த பின்னால் ரெவின்யூ

டிபார்மென்ட் அதிகாரிகள் இதைக் கையாடினார்களா அல்லது கைத்தறித் துறையைச் சார்ந்த அதிகாரிகளே இதைக் கையாடல் செய்தார்களா? எப்படி ஈரோட்டிலே ரூ. 50 இலட்சம் மதிப்புள்ள புடவைகளும், சேலைகளும் குவிந்தன என்பதற்கு மாண்புமிகு முதல்வரவர்களும், அமைச்சரவர்களும் இங்கே தகுந்த விளக்கத்தை அளித்து, இன்னும் தமிழகத்தில் யார் யாருக்கெல்லாம் இலவச வேட்டி சேலை போக வில்லையோ அவர்களுக்கெல்லாம் கைப்பற்றிய அந்தச் சேலைகளை உடனடியாக விடுவித்து இலவச வேட்டி சேலைகளை மக்களுக்குக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த *19*-ஆம் தேதியன்று ஈரோட்டில் சுமார் *40* இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இலவச வேட்டி-சேலைகள் கைப்பற்றிய செய்தியை மிகுந்த அதிர்ச்சியோடு பார்க்க நேரிட்டது. நம்முடைய அரசு அமைகின்ற நேரத்திலே எள்ளின் முனையளவிலும் ஊழலற்ற அரசை அமைக்க வேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கத்தோடு அமைந்ததை தமிழக மக்கள் பெரும்பாலும் இன்னும் பெரு மகிழ்ச்சியோடு, நம்பிக்கையோடு இருக்கிறார்கள். இந்த அரசுக்கு எதிராக சூது நிறைந்தவர்கள் தொடர்ந்து இப்படிப்பட்ட செயல்பாட்டில் ஈடுபட்டு வருவதைத்தான் இந்த ஈரோட்டு நிகழ்ச்சி காட்டுகிறது. இந்த ஆண்டு இலவச வேஷ்டி-சேலைகள் வழங்கிய இடத்திலேயெல்லாம் அரசுக்கு நல்ல பெயர் இருக்கிறது. சென்ற ஆண்டைக் காட்டிலும் நல்ல தரமான துணி, நீளக்குறைவு, அகலக்குறைவு இல்லாத துணி மக்கள் பாராட்டும்படி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஈரோட்டில் இப்படி குவிந்த நிலையில் துணிகள் கைப்பற்றப் பட்டிருக்கின்ற சூழ்நிலையில், பல்வேறு இடங்களில் பொது மக்களுக்கு இனி இலவச வேட்டி-சேலை கிடைக்காதோ என்ற அச்சத்தில் சாலை மறியல் ஆங்காங்கே நடைபெற்று இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் ஒரு கருத்தை, இந்தியன் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகத் தெரிவிக்க விரும்புவது, இந்த இலவச வேட்டி-சேலைகளை, கடுமையாகச் செயல்படக்கூடிய அரசு உள்ள இந்தக் காலத்தில், அங்கு கொண்டு வந்து பதுக்குவதற்கு யாரெல்லாம் துணை இருந்திருக்கிறார்கள் என்பதைத் தீவிரமாக விசாரிக்க வேண்டும். தென் மாவட்டங்களில், குறிப்பாக, தென்காசி,





மதுரை போன்ற இடங்களிலேயிருந்து அந்த இலவச வேட்டி-சேலைகள் கடத்தி வரப்பட்டதாகச் செய்திகள் இருக்கின்றன. அந்தச் செய்திகள் குறித்தும் விசாரித்து இதற்கு அரசியல்வாதிகளோ, அதிகாரிகளோ யாரெல்லாம் காரணமாக இருக்கிறார்களோ, அவர்களுக்கு ஈவிரக்கமின்றி தண்டனை வழங்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். அதுதான் இன்றைய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய உயர்ந்த குறிக்கோளை அடைவதற்கு சிறந்த வழியாக அமையும் என்பதை வலியுறுத்தி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு சீரிய முறையிலே, நல்ல செம்மையான ஆட்சியை வழங்க வேண்டுமென்று தமிழக முதல்வர் மிகத் தெளிவான முறையில் நல்ல பல நடவடிக்கைகளை எடுத்திருந்தபோதிலும், இதுபோல, அவமானச் சின்னங்கள் தமிழ்நாட்டிலே பல நடைபெறுகின்றன என்பதனை மட்டும் உங்கள் மூலமாக முதலமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஈரோடு மணிக்கூண்டு, டவுன் மற்றும் மரப்பாலம் பகுதிகளிலே *9* கோடவுன்களில் சுமார் *50* இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள், இலவச சேலைகள் *7,800*, *4,600* வேஷ்டிகள், பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்க வேண்டிய *10,300* மீட்டர் நீளமுள்ள நீல நிறத் துணிகள் மற்றும் சீருடைகள் *4800* ஆகியவை அங்கே கடத்தப்பட்டு சுமார் *50* இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. அதுவும், பழைய துணிகளும், இப்போது நம்முடைய ஆட்சி வந்த பிறகு தயாரிக்கப்பட்ட புதிய துணிகளும் இருப்பதாக பத்திரிகை வாயிலாக அறிகிறோம். தயவுசெய்து, தென் மாவட்டங்களிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட துணிகளாக இவை இருந்தாலும், வேறு எந்தப் பகுதிகளிலிருந்து கடத்தி வந்த துணிகளாக இருந்தாலும், நம்முடைய அரசும், நம்முடைய முதல்வர் அவர்களும் கடுமையான நடவடிக்கை எடுத்து இதுபோன்ற கொள்ளைகளைத் தடுக்க வேண்டும். அதுபோல, இங்கே பேசிய அருமை நண்பர் பெரியசாமி குறிப்பிட்டது போல, தற்போது கொடுக்கப் பட்டுள்ள துணிகள் நீளத்திலும், அகலத்திலும் சரியாக இருக்கிறது. ஆனால், சென்றமுறை கொடுத்ததைவிட *40* சதவீதத் துணிகள் குறைவாகத்தான் கொடுத்திருக்கிறார்கள். மீதி *60* சதவீதம் கொடுக்கப்பட வில்லை. அதனால் என்னுடைய தொகுதியிலும் பஸ் மறியல் நடந்திருக்கிறது. இதுபோல, திருட்டுகளைத் தவிர்த்து சென்ற ஆண்டு கொடுத்ததைவிட இந்த ஆண்டு கணக்கிட்டு அத்தனை ஏழைகளுக்கும்

[ திரு. இ. கணேசன் ] [1997 ஏப்ரல் 23

இலவச வேட்டி சேலைகளை வழங்க வேண்டும், திருட்டைத் தடுக்க வேண்டும் என்று உங்கள் மூலமாக இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டில் பல இலட்சம் மதிப்புள்ள இலவச வேட்டி-சேலைகள் தனியாருக்குச் சொந்தமான 9 கோடவுன்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததை 19-4-97-ல் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஏழை எளிய விவசாயத் தொழிலாளி மக்களுக்காக வழங்கப்பட்ட அந்தச் சேலைகள், எப்படி அந்தத் தனியார் கோடவுனுக்குச் சென்றது? எப்போது சென்றது ?. இன்னும் எந்தெந்தப் பகுதிகளிலே இதுபோன்று பதுக்கப்பட்டிருக்கின்றன என்ற சந்தேகங்கள் எல்லாம் எழுகின்றன. இதிலே என்னுடைய கேள்வி என்னவென்றால், வழக்கமாக பொங்கல் நாளிலே கொடுக்கக்கூடிய இந்த இலவச வேட்டி-சேலைகளை கடந்த ஆட்சியில்தான் காலந்தாழ்த்திக் கொடுத்தார்கள் என்றால், இப்போதும்கூட ஒரு கணவன், மனைவிக்கு ஜோடியாகக கொடுக்க வேண்டிய வேட்டி-சேலைகளை, அந்த வீட்டிற்கு, ஒன்று, சேலையாகக் கொடுக்கிறார்கள், அல்லது வேட்டியாகக் கொடுக்கிறார்கள் என்பதுதான். எனவே, இதுபோன்ற முறைகேடுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, அதிகாரிகள், கீழ்மட்டத்திலே இருக்கக்கூடியவர்கள், இலவச வேட்டி-சேலைகளைத் திருடுவதைத் தொழிலாகவே கொண்டிருக்கிறார்கள். எனவே, ஏழை, எளிய மக்களுக்காகக் கொடுக்கப்படும் இலவச வேட்டி-சேலைகளை யாவது முறையாக அவர்களைச் சென்று அடையும் பொருட்டு, எதிர்காலத்திலே இதுபோன்ற தவறுகள் நடக்காத வண்ணம், இம்முறைகேடுகளை உடனடியாகத் தடுத்து நிறுத்திட நடவடிக்கைகள் எடுக்க நான் வற்புறுத்தி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வேட்டி-சேலைகள் பதுக்கப்பட்டது குறித்த சிறப்பு கவன ஈர்ப்புப் பிரச்சினையில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. ஞானசேகரன் அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. பெரியசாமி அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. கணேசன் அவர்களும்,



1997 ஏப்ரல் 23] [ கலைஞர் மு. கருணாநிதி ]

தேவேந்திரகுல சங்கத்தின் சார்பாக டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள். அவர்கள் முதலில் இந்த அரசைப் பாராட்டிவிட்டு, இந்த நிகழ்ச்சியைப்பற்றி வர்ணிப்பார்கள் என்று நான் கருதினேன், நம்பினேன். ஆனால், அவர்கள் பேச்சு வேறுவிதமாக அமைந்துள்ளது. ஏனென்றால், கடந்த கால ஆட்சியில் இப்படிப்பட்ட பதுக்கல், கடத்தல், திருட்டு, மோசடி இவைகள் நடைபெற்றபோது, அதைக் கண்டும் காணாமல் இருந்தது மாத்திரமல்ல, துணையாகவும் இருந்தார்கள் ஆட்சியாளர்கள் என்பது நாட்டுக்கும், நமது அவையிலே உள்ள உறுப்பினர்களுக்கும் நன்கு தெரியும். ஆனால், அதற்கு மாறாக பதுக்கப்பட்ட பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு, வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்டு நாட்டுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த விவரத்தை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

தமிழகத்திலேயே ஈரோடு நகரம் துணி வியாபாரத்திற்குப் பெயர் பெற்ற நகரமாகும். வாரந்தோறும் ஈரோட்டில் துணிமணிகள் சந்தையே நடைபெறுகிறது. பெரியார் மாவட்டத்தில் இலவச வேட்டி சேலைகள் வழங்கும் பணி 14-4-1997 அன்று முதல் தொடங்கிய காரணத்தால், இலவசமாக வழங்குவதற்காக அளிக்கப்பட்ட துணிமணிகளில் ஏதாவது ஊழல் நடைபெற்று, அவை சந்தையில் வியாபாரத்திற்காகக் கொண்டு வரப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கும்படி மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் ஈரோட்டிலேயுள்ள வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு அறிவுரை கூறியிருக்கிறார்கள். மேலும், 18-4-1997 அன்று மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சந்தேகத்திற்குரிய ஒருசில நபர்களின் பெயர்களை குறிப்பிட்டு, தவறுகள் ஏதாவது நடைபெறுகிறதா என்று கண்காணிக்கும்படியும் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரித்தபோது, ஈரோடு வட்டாட்சியர், ஒருசில வியாபாரிகளிடம் ஏழைகளுக்காக வழங்கப்பட்ட இலவச வேட்டி-சேலைகள் வழங்கப்படாமல் விற்பனைக்காக வைத்திருப்பதாகத் தகவல் கிடைத்திருப்பதாகக் கூறினார். அதைத் தொடர்ந்து உள்ளூர் காவல்துறையின் உதவியோடு சந்தேகத்திற்குரிய இடங்களைச் சோதனையிடுவது என்று முடிவு எடுத்தார்கள். மாவட்ட வருவாய் அலுவலர், ஈரோடு, கோட்டாட்சியர், ஈரோடு, வட்டாட்சியர், ஈரோடு, காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர், ஈரோடு மற்றும் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர், ஈரோடு ஆகியோர் ஒரு குழுவாகக் கூடி, எந்தெந்த இடங்களில் திடீர் சோதனையிடுவது என்று

திட்டம் வகுத்தார்கள். இத்திட்டம் குறித்து மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களோடும் கலந்து ஒப்புதல் பெற்றார்கள். இதன்படி 19-4-1997 அன்று மாலை 2½ மணி முதல், முதல் கட்டமாக ஐந்து இடங்களிலே சோதனையிட்டு அங்கே ஏழைகளுக்கு வழங்குவதற்காக வழங்கப்பட்ட இலவச வேட்டி-சேலைகள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டார்கள். அங்கிருந்து 11 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிமணிகள் கைப்பற்றப்பட்டன. இந்த ஐந்து கடைகளைத் தவிர, மேலும் இரண்டு கடைகளிலும், சோதனை நடைபெற்றுள்ளது. அந்த இடங்களுக்கு உரியவர்களான கைத்தாமலை என்பவரின் மகன் ராஜாராம் மோகன், அனீபா என்பவரின் மகன் அப்துல்கரீம் மற்றும் ராஜேந்திரன், கந்தசாமி என்பவரின் மகன் சின்னத்தம்பி, நாச்சிமுத்து என்பவரின் மகன் சந்திரசேகரன், முருகன் பிரஸ் கோடவுன் உரிமையாளர் ஆறுமுகம், பாப்பாலம் கோடவுன் உரிமையாளர் வைத்தீஸ்வரன் ஆகிய 7 பேர்களில் தற்போது 4 பேர் கைது செய்யப்பட்டு, குற்ற எண் 717/97-ல், இந்திய தண்டனைச் சட்டப் பிரவு 409, 379, 411 416 மற்றும் 120-பி ஆகியவைகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 19-4-97 மற்றும் 20-4-97 ஆகிய தேதிகளில் நடைபெற்ற சோதனைகளின்போது கைப்பற்றப்பட்ட துணிகள் என்ற வகையில், பழைய சேலைகள் 2,662. இவை ஏற்கெனவே பதுக்கப்பட்டவை. புதிய சேலைகள் 5,519, வேட்டிகள் பழையவை 486, புதியவை 4,128. பாவாடைகள் 1991 முதல் 1995 வரை 4,553. காக்கித் துணி பழையது 4,270 மீட்டர் புதியது 5,666 மீட்டர். நீலம் துணி பழையது 471 மீட்டர், அதுமட்டுமல்லாமல் சில பழைய துணிகள் 10,367 மீட்டர். இந்தச் சோதனைகளைத் தொடர்ந்து 21-4-97 அன்று ஈரோட்டில் உள்ள பல லாரிக் கிடங்குகள் சோதனையிடப்பட்டு 47 பண்டல்கள் பிடிக்கப்பட்டன. இந்த இலவச வேட்டி-சேலைகளெல்லாம் பல்வேறு ஊர்களிலிருந்து, குறிப்பாக கீழப்பாவூர், தென்காசி, சேத்தியாதோப்பு, திருக்கோவிலூர், பாளையங்கோட்டை, அரக்கோணம், மதுரை-திருவண்ணாமலை, பொள்ளாச்சி, தருமபுரி மற்றும் உத்தமபாளையம் ஆகிய ஊர்களிலிருந்து ஈரோட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

முற்பகல் 10-50

இந்தச் சம்பவம் குறித்து தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏற்கெனவே, கைது செய்யப்பட்டவர்களுடைய விவரங்களையும் நான் அறிவித்திருக்கிறேன். இதுபோன்ற பதுக்கல், திருட்டு செய்கின்றவர்கள் அதிலும் ஏழை எளிய மக்களுக்காகப் பெறப்படுகின்ற இலவச வேட்டி-சேலைகள், மற்றும் அவர்களுக்காக வழங்கப்படுகின்ற



அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்கள் ஆகிய இவைகளைப் பதுக்குகின்றவர்கள், கள்ளத்தனமாக விற்றுக் காசு சம்பாதிக்க எண்ணுகின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சமூக விரோதிகள் என்கிற கண்ணோட்டத்தோடு கண்டறிந்து, அவர்கள் மீது இந்த அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியை இந்த அவைக்குத் தெரிவித்து, இப்பொழுது ஈரோட்டில் நடைபெற்றிருக்கிற இந்தக் கொள்ளையைக்கூட அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது, தொடர் நடவடிக்கை நிச்சயமாக உண்டு, விரைவில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொண்டு, இந்த அளவில் அமைகிறேன்.

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளியூரிலே இருக்கின்ற டாக்டர் லட்சுமணன் என்பவருடைய மகள் சாந்தி துர்கா என்பவருக்கும், சென்னையிலே இருக்கின்ற தொழிலதிபர் ஜெயின்ராஜ் என்பவருக்கும் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. கடந்த 17-4-1997 அன்று பிற்பகல் 12-30 மணியளவில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த விஷயம் பற்றி என்னுடைய அறையிலே பேசியிருக்கிறீர்கள் . இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மானியக் கோரிக்கைகள் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவிருக்கின்றன. எனவே, மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்தை ஈர்க்க முடியாது. நீங்கள் என்னுடைய அறையிலே சொன்னது என்னவென்றால், வள்ளியூரிலோ அல்லது சென்னையிலோ வழக்குப் பதிவு செய்ய மறுக்கிறார்கள் என்பதுதான். நிச்சயமாக வழக்கு பதிவு செய்யப்படும், உட்காருங்கள்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சுப. தங்கவேலன், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர்.

[1997 ஏப்ரல் 23

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பொது நிறுவனங்கள் குழுவின் 17 முதல் 20 வரையிலான அறிக்கைகளை, குழுவின் சார்பாக இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ஜி. பழனிசாமி, பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுத் தலைவர்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் 13 முதல் 16 வரையிலான அறிக்கைகளை இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) நீக்கறவுச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) நீக்கறவுச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



1997 ஏப்ரல் 23]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு சித்த மருத்துவ முறை (மேம்படுத்துதல் மற்றும் மருத்துவத் தொழிலாற்றுநர்கள் பதிவு செய்து கொள்ளுதல்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு சித்த மருத்துவ முறை (மேம்படுத்துதல் மற்றும் மருத்துவத் தொழிலாற்றுநர்கள் பதிவு செய்துகொள்ளுதல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு சித்த மருத்துவ முறை (மேம்படுத்துதல் மற்றும் மருத்துவத் தொழிலாற்றுநர்கள் பதிவு செய்துகொள்ளுதல்) சட்டமுனவடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[1997 ஏப்ரல் 23

# 6. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

## (அ) கோரிக்கை எண் 24—தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். கோரிக்கை எண் 24-தொழில்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில்கள் பற்றிய 24-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.17,15,93,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2255, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வடஆற்காடு-அம்பேதகர் மாவட்டம், வாணியம்பாடி தாலுக்காவில் வெள்ளக்குட்டை, முல்லை, ஆலங்காயம் பகுதிகளில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை துவங்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 17,15,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2257, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்தில் வேளாண்மை தொழிலை அடிப்படையாகக் கொண்ட தொழில்களைத் துவங்க வேண்டியதன் அவசியத்தைக் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,15,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



1997 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2253, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருப்பூர் சாயத் தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்யும் மாற்று ஏற்பாடு குறித்து திருப்பூர் கோட்டாட்சித் தலைவர் தலைமையில் அமைந்துள்ள குழு ஆய்வு செய்து அரசிற்கு அளித்துள்ள அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை விரைந்து நிறைவேற்ற வேண்டியது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,15,93,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1065, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடியில் ஒரு தொழிற் பேட்டை அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,15,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 318, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பெருந்துறை தொழில் வளர்ச்சி மையத்தில் சில தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,15,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[1997 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2248, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியப் பகுதியில் கரும்பு அதிகம் பயிரிடப்படுவதால் அப்பகுதியில் சர்க்கரை ஆலை ஒன்றை கூட்டுறவு அல்லது தனியார் துறையினர் மூலம் அமைத்து அப்பகுதியின் மிகவும் பிற்பட்ட தன்மையினை மேம்படுத்த வேண்டியதன் இன்றியமை யாமை குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"தொழில்கள் பற்றிய 24-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,15,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2269, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மேட்டூரில் செல்லும் கிழக்குக்கரை கால்வாயை ஒட்டிய 18,000 ஏக்கர் நிலத்தில் காவேரி நீர் பாய்வதால் அங்கு சர்க்கரை ஆலை ஒன்று புதிதாக துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,15,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2266, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,15,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2251, திரு. டி. மணி.



1997 ஏப்ரல் 23]

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,15,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

### (ஆ) கோரிக்கை எண் 54—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 54- தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.43,40,82,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2763, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் காட்பாடியில் உள்ள அரசு வெடிமருந்து தொழிற்சாலையை இலாபகரமாக இயக்க சிறப்பு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,40,82,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2766, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''கொள்கை பற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,40,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2765, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''கொள்கை பற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,40,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2770, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாரத்தில் ஒரு டெக்ஸ்டைல் மில் அரசு மூலதனத்தில் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,40,82,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2772, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''விவசாயம் பொய்த்துவிட்ட நாகை தொகுதியில் தொழில் தகவல் மையம் மற்றும் தொழில் முனைவர் ஊக்க மையம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



''தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,40,82,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தொழில்கள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சேற்றப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதில் உரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்பது பேர் இதிலே பேச இருக்கிறார்கள். காலத்தின் அருமை கருதி, அவர்களின் பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, திரு. அழகிரி அவர்களைப் பேச்சைத் தொடங்கி வைக்குமாறு அழைக்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கையில் தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாக என்னுடையக் கருத்துக்களைச் சொல்வதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மானியக் கோரிக்கை சென்ற வாரமே பேரவையிலே முன் மொழியப்பட வேண்டிய ஒரு மானியக் கோரிக்கையாக இருந்தது. ஆனால் இந்தியாவினுடைய பிரதம அமைச்சரை தேர்ந்தெடுக்கக்கூடிய பெரிய பொறுப்பு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருந்த காரணத்தால், இந்த மானியக் கோரிக்கை பல்வேறு நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டு, இன்றைக்குப் பேரவையிலே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்

@137-172 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

அவர்கள் எனக்கு அப்போதே பணித்திருந்தார்கள். அன்றைக்கே இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்குமே யானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சரி, நாங்களும் சரி மிகவும் சந்தோஷமான ஒரு நிலையிலே பேசியிருக்கக்கூடிய வாய்ப்பு இருந்திருக்கும்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

*முற்பகல் 11-00*

ஆனால் இன்றைய சூழ்நிலையில், மிகுந்த கனத்த இதயத்தோடு இந்த மானியக் கோரிக்கையிலே பங்கெடுத்துக் கொள்ள வேண்டியதொரு நிலையிலே நாம் இருக்கிறோம் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவருக்கு பிரதம மந்திரி பதவி கிடைக்கவில்லையே என்பதற்காக இந்த கனத்த இதயம் நமக்கு ஏற்படவில்லை. மாறாக, ஒரு தமிழருக்குக் கிடைத்திருக்க வேண்டிய ஒரு வாய்ப்பு கிடைக்கவில்லையே என்கின்ற கனத்த இதயத்தோடுதான் எங்களுடைய கருத்துக்களை நாங்கள் சொல்ல வேண்டிய நிலையிலே இருக்கிறோம்.

தமிழகத்திற்கென்று சில உயர்ந்த குணநலன்கள் இருந்திருக்கின்றன. கோப்பெருஞ் சோழனுக்காகப் பிசிராந்தையார் வடக்கிருந்து உயிர் நீத்திருந்தார். அதைப்போல, அதியமானுக்காக ஔவை நெல்லிக்கனி கொடுத்திருந்தார். கொடிக்காக பாரி தன்னுடைய தேரை ஈந்திருந்தார். தன்னுடைய மகனையே தேர்க்காலில் பலி கொடுத்து நீதியை நிலைநாட்டியிருந்தார் மனு நீதிச் சோழன். இதேபோல, ஏராளமான சிறப்பு அம்சங்கள் தமிழகத்திலே இருந்திருக்கின்றன. அதைப்போன்ற சூழ்நிலையிலே, இன்றைக்கு அந்தப் பெருமைகளையெல்லாம் நிலை நாட்டக்கூடிய நிலையிலே நாம் இருக்க முடியவில்லை என்பதுதான் நமக்குச் சிரமத்தைக் கொடுத்திருக்கின்றது.

டில்லி மாநகரத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சாணக்கியபுரியிலே இருக்கின்ற பல்வேறு மாநிலங்களுடைய விருந்தினர் மாளிகைகளிலே, தங்களுடைய தள்ளாத காலத்திலே, முதுமையான காலத்திலேகூட, அங்குள்ள உயர்ந்த படிகளிலேயெல்லாம் ஏறிச் சென்று, ஒரு தமிழர் பிரதமராக வர வேண்டும் என்பதற்காக மிகுந்த சிரமத்தை எடுத்துக் கொண்டார்கள். நாங்கள் அதனைக் கண்கூடாகப் பார்த்தோம். ஆனாலும்கூட, டில்லி என்பது ஒரு தந்திர



பூமி. பாரதக் கதையிலே வருகின்ற இந்திரப் பிரஸ்தம்தான், இன்றைக்கு டில்லி. அந்தத் தந்திர பூமியிலே நாம் ஏமாற்றப்பட்டோம் என்பதுதான் நமக்கு இருக்கின்ற சிரமம்; நமக்கு இருக்கின்ற மனச்சங்கடம் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே நாம் கருத்துக்களை அறிபவர்களாக இருந்தோமேயொழிய, கருத்துக்களை உருவாக்கக்கூடியவர்களாக இருக்க முடியவில்லை என்பதனை நாம் மனதிலே எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த நிலைமைகளைத்தான் நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்காகக் கையாளப்பட்ட கருத்தறிகின்ற முறைகள், உண்மையான முறையிலே நடத்தப்படவில்லை என்பதுதான் நமக்கு இருக்கின்ற சங்கடம். எனவே, நாம் இழந்த பெருமைகளையெல்லாம் மீண்டும் பெறமுடியுமா; அவைகளை அடைய முடியுமா; அப்படி அடையமுடியாமல் போனதற்குக் காரணங்கள் என்ன; எதிர்காலத்தில் அவைகளை நாம் வெற்றிகரமாக வழிநடத்த முடியுமா என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதுபோன்ற காரணங்களினால்தான் இன்றைக்கு நாங்கள் கனத்த இதயத்தோடு இந்த அவையிலே பேசுகின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. எங்களுக்கு இருக்கின்ற அதே சிரமங்கள், அதே சங்கடங்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இருக்கின்றது. அவர்கள் அந்தச் சிரமங்களை எங்களோடு பகிர்ந்து கொண்டார்கள். எனவே, இந்தச் சூழ்நிலை தமிழகத்தினுடைய உயர்ந்த நிலைமையை மாற்றியிருக்கின்றது. தமிழகத்திற்கு வரவேண்டிய பெருமைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதனை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டாவதாக, இந்தத் தொழில் துறை மானியத்திலே பல்வேறு கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்ற விருப்பம் எனக்கு இருக்கின்றது. உதாரணமாக, இந்தப் புதிய அரசாங்கம் ஏற்பட்டதற்குப் பிறகு, ஒளிவு மறைவற்றதொரு செயல்பாடு தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றது. அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. இந்த ஒளிவு மறைவற்ற செயல்பாட்டின் காரணமாக வெளிநாட்டு மூலதனங்கள், உள்நாட்டுத் தொழிலதிபர்களுடைய வருகை, புதிய மூலதனங்கள் ஆகியவற்றைக் கொண்டு வர வேண்டுமென்கின்ற எண்ணம் மேலோங்கியிருக்கின்றது என்பதனை நான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால், அதேநேரத்தில், தொழில் துறையில் ஒரு மாபெரும் மாற்றம் வந்திருக்கிறதா என்று சொன்னால், இந்த ஓராண்டுக் காலத்திலே வரவில்லை என்பதைத்தான் உங்களுடைய

நினைவிற்கு நான் கொண்டு வர ஆசைப்படுகிறேன். ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை இன்னும் திறக்கப்படவில்லை. தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்திலேயிருக்கின்ற வடலூரிலுள்ள சேசசாயி தொழிற்சாலை இன்னும் திறக்கப்படாமலேயே இருக்கின்றது. நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திலே 'ஜீரோ யூனிட்' என்று சொல்லக்கூடிய ஒரு யூனிட், சென்ற ஆட்சிக் காலத்தின்போதே துவக்கப்படுவதாக இருந்தது. இதுவரை துவக்கப்படவில்லை.

முற்பகல் 11-05

அதேபோல, சிவகங்கையிலே, 'கிராஃபைட்' தொழிற்சாலை இன்னும் திறக்கப்படவில்லை. அரியூர், சாரம் கூட்டுறவு நூற்பாலைகள் இன்னும் திறக்கப்படவில்லை.

அதேபோல், பள்ளிப்பாளையம், திருப்பூர், கோயம்புத்தூர் போன்ற இடங்களிலே, நீதிமன்ற ஆணைகளினால் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகள் திறக்கப்படுவதற்கான வழிவகைகள் இன்னும் காணப்படவில்லை. திரிசூலத்திலே, கருங்கல் உடைக்கும் தொழிற்சாலைகளில் 20 ஆயிரம் பேர் பணியாற்றுகிறார்கள். அந்தத் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, இப்படிப்பார்க்கிறபோது, ஒருபுறத்திலே புதிய தொழிற்கொள்கை மூலமாகத் தொழிற்சாலைகளைத் திறந்து வருகிறோம்; மறுபுறத்திலே தொழிற்சாலைகள், ஏதாவது காரணங்களினால் மூடப்பட்டு வருகின்றன. எனவே, இந்த விகிதாச்சாரத்தை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதற்கான ஒரு புதிய மாற்றுக் கொள்கையைத் தமிழ்நாடு அரசாங்கம் கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுற்றுச் சூழலுக்குக் கெடுதலாக இருக்கின்ற தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. ஆனால், நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, ஒரு தொழிற்சாலையைத் திறப்பதற்கு முன்பு, சுற்றுச் சூழல் துறையினுடைய எல்லாவிதமான ஒப்புதல்களையும் பெற்றுத்தான் அந்தத் தொழிற்சாலையைத் திறக்கிறார்களா; தொழிற்சாலை திறக்கப்படுகிறபோது, சுற்றுச் சூழல் துறை என்ன செய்கிறது; அந்தத் தொழிற்சாலை திறந்து, 10 ஆண்டுகள், 20 ஆண்டுகள் ஆனபிறகு, சுற்றுச் சூழலுக்குக் கெடுதலாக இருக்கிறது என்று தொழிற்சாலைகளை மூடினால், சுற்றுச் சூழல் அமைச்சகம் இதுவரை என்ன செய்து வந்தது; ஏன் அதன்மீது சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை



என்பதையெல்லாம் அரசாங்கம் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல், புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு, மின்சாரம் ஒரு அடிப்படையான வசதி. சென்ற தொழிற்துறை மானியத்தின் போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நிலக்கரியின் மூலமாகவோ, பழுப்பு நிலக்கரியின் மூலமாகவோ, மின்சார நிலையங்களை அமைப்பதற்குக் காலக்கெடு அதிகமாகும்; எனவே, எரி எண்ணெயின் மூலமாக, 100 மெகாவாட் திறன் கொண்ட 20 மின் நிலையங்கள் திறக்கப்படுமென்று சொன்னார்கள். ஆனால், இன்றைய தொழில் துறை மானியத்திலேயும், அதே செய்திதான் வந்திருக்கிறது. 10 மாத காலம் உருண்டோடி விட்டது. சென்ற கூட்டத் தொடரிலே என்ன சொன்னோமோ, அதையே நாம் திரும்பவும் சொல்லியிருக்கிறோம். ஒரு ஆட்சிக்கு, ஐந்தாண்டுக் காலம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஓராண்டுக் காலத்திலே, டெண்டர் கோருகிற நடைமுறையே, ஓராண்டுக் காலம் ஆகிறது என்று சொன்னால், அதன் பிறகு, எப்போது அந்த மின்சார நிலையத்தை நிறுவி, எப்போது மின்சாரத்தை உற்பத்தி செய்து, அதன் பிறகு வெளிநாடுகளிலிருந்து, வெளி மாநிலங்களிலிருந்து எப்போது தொழிலதிபர்கள் வந்து, தொழிற்சாலை திறக்கப்படும் என்பதனை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, விரைந்து செயலாற்றுகிற ஒரு நடைமுறையை நாம் பின்பற்ற வேணடுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பத்து மாத காலம் என்பது, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளோடு ஒப்பிடுகிறபோது, இது அதிகபட்ச காலமாகும். இதற்குள்ளாக மின்சார நிலையங்களை நிறுவுகின்ற நிலைக்கு நாம் சென்றிருக்க வேண்டும். எனவே, புதிய மின்சார நிலையங்களை அல்லது புதிய தொழில் துறைகளைத் துவங்குவதற்குத் தனியாக ஒரு இலாகாவை நிறுவி, அதன்மூலமாக புதிய தொழிற்சாலைகள், புதிய மின் நிலையங்கள் வருவதற்கான நடைமுறை சாத்தியங்களை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கு நம்முடைய அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'இன்ஃப்ராஸ்ட்ரக்சர்' என்று சொல்லக்கூடிய, அடிப்படை கட்டுமான வசதிகள், தமிழகத்திலே மிகவும் குறைவாக இருக்கின்றன. தமிழகத்திலே இருக்கிற சாலை வசதிகளைப்போல, மோசமான சாலை வசதி, இந்தியாவிலே வேறெங்கும் இல்லை. மராட்டிய மாநிலத்தை எடுத்துக்

கொள்வேமேயானால், தொழிற்துறையிலே, அவர்கள் முன்னேறியிருப்பதற்கு, இரண்டு முக்கிய காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, இடையூறற்ற மின்சார வசதி; இரண்டாவது, நல்ல சாலை வசதி. ஆனால், அந்த இரண்டு வசதிகளும், தமிழகத்திலே குறைவாக இருக்கின்றன. எனவே, அவற்றை மேம்படுத்த, மாநில அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்; விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல், தனியார் முதலீடுகள். நாம் விரும்புகிற அளவுக்கு, பாராட்டுகிற அளவுக்கு, வரவேற்கிற அளவுக்குத் தனியார் முதலீடுகள், தமிழகத்தை நோக்கி வரவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். இன்றைக்கு வந்திருக்கிற ஒன்றிரண்டு கார் தொழிற்சாலைகளைத் தவிர, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தனியார் முதலீடுகள் வராததற்கு என்ன காரணம் என்பதை நாம் ஆராய்ந்து பார்த்து, தனியார் முதலீடுகளைக் கொண்டு வருவதற்கு, ஒரு தனிக் குழு, சிறந்த அமைச்சர்களுடைய தலைமையிலே, ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி ஏற்படுத்தினால் அதனுடைய பலன் நல்ல பலனாக இருக்கும் என்பதனை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

*முற்பகல் 11-10*

அதேபோல, இரண்டு தினங்களுக்கு முன்பு, பத்திரிகையிலே ஒரு செய்தி. தமிழகத்தினுடைய ஏற்றுமதி குறைவாக இருக்கிறது, இறக்குமதி அதிகமாக இருக்கிறது என்று சொல்லி 'தினமணி' பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. ஒரு நாட்டினுடைய ஏற்றுமதி அதிகமாக இருந்தால்தான் அந்த நாடு பொருளாதாரத் துறையிலே வளமாக இருக்கிறது என்று சொல்லமுடியும். இந்தியாவினுடைய சராசரி ஏற்றுமதியைப் பார்க்கிறபோது தமிழகத்தினுடைய ஏற்றுமதி குறைவாக இருக்கிறது என்று அந்தப் புள்ளிவிவரம் காட்டுகிறது.

அதேபோல, நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட, நாம் ஒன்றைச் சொல்லியிருக்கிறோம். ஏற்றுமதி என்று வருகிறபோது, புகளூர் காகிதத் தொழிற்சாலை 1995-96 ஆம் ஆண்டு 21.62 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்திருக்கிறது. ஆனால் அதன் பிறகு, 1996-97 ஆம் ஆண்டில் 11.82 கோடி ரூபாய்க்குத் தான் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. சற்றேறக்குறைய 10 கோடி ரூபாய்க்கான ஏற்றுமதி குறைந்திருக்கிறது. அதற்கான காரணம் என்ன என்பதை அரசாங்கம் உணர்ந்து பார்க்க



வேண்டும். ஏற்றுமதியை அதிகரிக்காமல் எந்த ஒரு அரசாங்கமும் தொழில் துறையில் முன்னேறியிருப்பதாகச் சொன்னால் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்காது என்பதனை நான் நினைவுப் படுத்த விரும்புகிறேன்.

அதேபோல, தொழில் துறை: முதலமைச்சரைப் பொறுத்தவரையில் திறந்த மனதோடு இருந்தால் போதாது, அரசாங்கத்தைப் பொறுத்தவரை வெளிப்படையாக இருந்தால் போதாது. அதிலே பணியாற்றுகின்ற அதிகாரிகளும் அதேபோல் இருக்க வேண்டும். எனக்குக் கிடைத்திருக்கிற ஒரு தகவல் சரியாக இருக்குமானால் 'டாமின்' நிறுவனம் 1985 முதல் 1989-ஆம் ஆண்டு வரை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய 12 கோடி ரூபாய் வரியைச் செலுத்தாமல் இருந்திருக்கிறது. செலுத்தாமல் இருப்பது ஒரு குறைபாடு அல்ல. செலுத்தாமல் இருந்ததற்கு அவர்கள் சொல்லியிருக்கிற காரணங்கள்தான் விசித்திரமாக இருக்கின்றன. கிரானைட் கற்களை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்கிற அந்த நிறுவனம் அந்த 5 ஆண்டு காலம் வெட்டியெடுத்தக் கிரானைட் கற்களைக் கருப்புக் கற்கள் என்று சொல்வதற்குப் பதிலாக கருங்கல் ஜல்லி என்று சொல்லி, வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கூறி, வரி விலக்கு அளிக்கக்கூடிய அனுமதியைப் பெறாமலேயே வரியைச் செலுத்தாமல் இருந்திருக்கிறார்கள். 12 கோடி ரூபாய்க்கு வரியே அவர்கள் கட்டவில்லை என்று சொன்னால், அவர்கள் வெட்டியெடுத்த கற்களினுடைய மதிப்பு என்ன? எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புடைய கற்களை அவர்கள் வெட்டியெடுத்திருக்கிறார்கள். வெட்டியெடுத்த கிரானைட் கற்களை அவர்கள் கிரானைட் என்று சொல்லாமல கருங்கல் ஜல்லி என்று சொல்லியிருக்கிறார்கள். கருங்கல் ஜல்லி என்று சொன்னால் வெட்டியெடுத்த கிரானைட கற்களை என்ன செய்தார்கள் என்பதுதான் கேள்வி. கருங்கல் ஜல்லி என்று அவைகளைக் கொண்டுபோய் குப்பையிலேக் கொட்டிவிட்டார்களா அல்லது கிரானைட்டாக ஏற்றுமதி செய்து விட்டார்களா என்பதனை அரசாங்கம் இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல, மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய நிதி நிறுவனங்கள் அது 'சிப்காட்'- ஆக இருந்தாலும் சரி, 'டிட்கோ'-வாக இருந்தாலும் சரி, வேறு எந்த நிதி நிறுவனமாக இருந்தாலும் சரி புரந்த மனதோடு நடந்துகொள்வதில்லை. சிறுதொழில் செய்பவர்களை, மத்தியத் தொழில் செய்பவர்களை அவர்கள் வரவேற்பதாக இல்லை.

மாறாக ஒரு ஷைலக் மனப்பான்மையோடு நடந்து கொள்கிற சூழ்நிலை இருக்கிறது. அந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். அவர்கள் நட்பு ரீதியாக இருக்க வேண்டும். நட்பு ரீதியாக இருந்தால்தான் நிறைய தொழில் புரிவோர்கள் வந்து தொழில்களைச் செய்ய முடியும்.

உதாரணமாக 'கொரமண்டல் பாலி பேக்' என்று கடலூரிலே ஒரு நிறுவனம் இருக்கிறது. அவர்கள் 40 இலட்ச ரூபாய் கடன் வாங்கியிருக்கிறார்கள். 50 இலட்ச ரூபாய் திருப்பிக் கட்டியிருக்கிறார்கள். ஆனால் அந்த நிறுவனத்தை ஏலத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று நிதி நிறுவனங்கள் சொல்கின்றன. இரண்டு ஆண்டு காலம் அங்கே வேலைநிறுத்தம் நடைபெற்றது. இரண்டு ஆண்டு காலம் பல்வேறு பிரச்சினைகளினால் அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டிருந்தது. அவர்களுக்கு நலிவுற்றத் தொழில்களுக்கான சலுகைகளைக் கொடுத்து அந்த நிறுவனத்தை மீண்டும் தூக்கி நிறுத்த அரசாங்கம் முன்வர வேண்டுமே ஒழிய, நிறுவனத்தை ஏலத்திற்குக் கொண்டு வந்து யாராவது ஒரு செல்வந்தருக்கு அதனைக் கொண்டுபோய்க் கொடுப்பதனால் என்ன நன்மை இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) நான் ஏதோ ஒரு குறிப்பிட்டத் தொழிற் சாலைக்காகப் பேசுவதாக எண்ண வேண்டாம். இன்றைக்குச் சிறு தொழில் செய்பவர்கள் எல்லோருக்கும் இருக்கிற பிரச்சினை அது.

*முற்பகல் 11-15*

பெரிய தொழிற்சாலைகள் நடத்துவோர் சிறந்த நிர்வாகத் திறனைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஒரு சிறு தொழில் ஆரம்பிப்பவர்களுக்கு அந்த நிர்வாகத் திறன் கிடைப்பதில்லை. இரண்டாண்டு காலம், மூன்றாண்டு காலம் போராடிய பிறகுதான் நிர்வாகத் திறனையே அவர்களால் வளர்த்துக்கொள்ள முடிகிறது. இடையிலே ஏற்படுகின்ற நஷ்டங்கள், மின்சாரம் கிடைக்காததால் ஏற்படுகின்ற நஷ்டங்கள், தொழிலாளர்கள் அமைதி இன்மையால் ஏற்படுகின்ற பிரச்சினைகள், இவைகளை எல்லாம் அவர்கள் சரி செய்து வெற்றி பெறுவதற்குள்ளாக மிகப் பெரிய இழப்புக்கு அந்த நிறுவனங்கள் ஆளாகின்றன. எனவே, அரசாங்கத்தினுடைய நிதி நிறுவனங்கள் நலிவுற்ற தொழிற்சாலைகள் மேலும் சிறப்பாகச் செயல்படுவதற்கான ஒரு சாத்தியக்கூறினைக் கொண்டுவந்து அவர்களை கை தூக்கி விடுவதற்கு முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



அதேபோல திரிசூலம். திருசூலத்திலே 20 ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அந்த 20 ஆயிரம் தொழிலாளர்களுக்கும் நீதிமன்றத்தின் உத்தரவைச் சொல்லி அரசாங்கம் கை விரித்து விடக்கூடாது. நீதிமன்றம் சொல்லி இருப்பது நியாயமான காரணமாக இருந்தாலும்கூட அவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் உதவி செய்வதற்கு, மாற்று வழிகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும். அதைப்பற்றி சிந்திக்க வேண்டும். அந்த மாற்று நடைமுறைகளின் மூலமாக தொழிலாளர்களுடைய வாழ்க்கையிலே ஒரு வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை தமிழ்நாடு அரசாங்கம் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, சிவகாசியிலே ஒரு பெரிய பிரச்சினை தோன்றியிருக்கிறது. அது குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை ஆகும். குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை ஏற்றுக் கொள்ளக்கூடிய பிரச்சினை அல்ல. மனிதாபிமான ரீதியில் அந்தப் பிரச்சினை முடித்து வைக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும். குழந்தைத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்பதிலே மாறுபட்ட இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால் இன்றைக்கு சிவகாசியிலே நடைபெறுவது என்னவென்றால் தொழில் துறையைச் சார்ந்த அதிகாரிகள், தொழிலாளர் நலத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் 'இந்தப் பையனுக்கு இவ்வளவுதான் வயது' என்று நிருவாகம் ஒரு வயதைச் சொன்னால், 'இல்லை இல்லை' இந்த வயது இல்லை, இவனுக்கு 13 வயதுதான் ஆகிறது, 10 ஆயிரம் ரூபாய் ஒரு பையனுக்கு என்று கொடுத்தால் நாங்கள் அவனுக்கு 18 வயது என்று எழுதுவோம், இல்லை என்றால் 13 வயது என்று சொல்லி நிர்வாகத்தை மூடுவோம் என்று சொல்லுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே இந்த விஷயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். குழந்தைத் தொழிலாளர்களை வைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் சொல்லவில்லை. நிச்சயமாக அது முடிக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினைதான். ஆனால், அதேநேரத்தில் குழந்தைத் தொழிலாளியா, இல்லையா என்பதை எப்படி நிர்ணயிப்பது என்பதற்கு அரசாங்கம் ஒரு வழிமுறையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

இதுபோன்ற சூழ்நிலைகளைப் பார்க்கிறபோது, தொழில் வளர்ச்சி என்பது ஒரு தேசத்தினுடைய வளத்தைக் காட்டுகின்ற அமைப்பாக விளங்குகிறது. எனவே, அந்தத் தொழில் வளர்ச்சி சிறப்பாக நடைபெற

வேண்டுமென்றால் மின்சார வசதியும், கட்டுமான வசதிகளும், வெளிநாட்டு மூலதனங்களும் தமிழகத்திற்குள்ளே வந்தால்தான் தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் வெற்றி பெறமுடியும். ஆனால் மின்சாரப் பற்றாக்குறையும் இருக்கிறது, வெளிநாட்டு மூலதனங்களும் குறைவாக இருக்கின்றன, புதிய தொழிற்சாலைகளினுடைய வருகையும் குறைவாக இருக்கிறது. எனவே இவைகளைச் சரி செய்வதற்கான ஒரு நிலைமையைத் தமிழக அரசாங்கம் தனமுனைப்போடு முன்னிலைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தொழில் துறை மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்காக நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன் (குறுக்கீடு) என்ன, பாயின்ட் ஆப் ஆர்டரா? (குறுக்கீடு) அவர் பேசியதிலே பாயின்ட் ஆப் ஆர்டரா? நீங்கள் பேசும்போது சொல்லுங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி உட்காருங்கள்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும், வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?''
''.........................................அவரெல்லாம் இந்த நேரம்
எலியாக முயலாக இருக்கின் றாரகள்!
ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோன்
புலிவேஷம் போடுகின்றான்! பொதுமக் கட்குக்
புல்லளவு மதிப்பேனும் தருகின் றானா?''

என்று மிகுந்த ஆதங்கத்தோடு தமிழ்க் கவிஞன் ஒருவன் வாயிலாக பாரதிதாசன் அவர்கள் கவிதை வரிகளை எழுதிச் சென்றிருக்கிறார்கள்.



முற்பகல் 11-20

அரசுக்குச் சொந்தமான நிலத்தை அடிமாட்டு விலைக்குத் தன பெயரிலே வாங்குவதைத் தொழிலாகக் கொண்டிருந்தவர்கள், அரசு தீட்டும் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை எல்லாம் தன் வீட்டு கஜானாவுக்கு திருப்பி விடுவதையே தொழிலாகக் கொண்டிருந்தவர்கள், சென்னையிலே இருந்து மாமல்லபுரம் வரை பங்களாக்களை வாங்கிக் குவித்து அழகு பார்ப்பதையே தங்களுடைய தொழிலாகக் கொண்டிருந்தவர்கள், 60 இலட்ச ரூபாய் செலவிலே ஒரு சொகுசு பஸ் வாங்கினார்கள். அதனுடைய அடியிலே பாலிஷ் செய்யப்பட்ட கிரானைட் கற்களை அடுக்கி வைத்து, தங்களுடைய பாதங்கள் அதன் மேல் பட வேண்டும் என்பதற்காக, மக்களுடைய வரிப் பணத்தை, கால் அடியிலே போட்டு மிதித்து, வாழவதையே தொழிலாகக் கொண்டிருந்தவர்கள், கிலோ கணக்கில் தங்கத்தையும், வைரம், வைடூரியம் போன்ற நகைகளையும் வாங்கிக் குவித்து, அவைகள் எல்லாம், மைசூர் மகாராஜா தந்த நகைகள் என்று கரடி விட்டுக்கொண்டு இருப்பதையே தங்களுடைய வாழ்க்கையினுடைய தொழிலாகக் கொண்டிருந்தவர்கள், மாமாங்கக் குளங்களிலே, மனித உயிர்களை மலிவாக நினைத்து, நூற்றுக் கணக்கிலே பலி வாங்குவதைத் தொழிலாகக் கொண்டிருந்தவர்கள், கடந்த ஐந்து ஆண்டுக் கால அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில், தமிழ்நாட்டினுடைய தொழில் வளத்தை முழுவதுமாக மறந்து, தொழில் துறையில் பின்தங்கிய மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்று இதனை மாற்றிவிட்டு, புரட்சியைப் பேரில் மட்டும் சேர்த்துக் கொண்டவர்கள், புல்லுக்குக் கொடுக்கின்ற மதிப்பைக்கூட பொது மக்களுக்குத் தராதவர்கள் என்பதனை, நாம் அனைவரும் கண்கூடாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த நிலையில், தமிழகத்திலே அல்லல்பட்ட மக்கள், ஏழை மக்கள், விட்ட கண்ணீர் கடந்த ஆட்சியாளர்களின் செயலுக்கு எதிரான படையாக மாறிய காரணத்தினால், அரசியலிலே ஆதவன், அறிவுப் பெருஞ்சுடர், ஓயாமல் தினம் உழைக்கும் உதயசூரியன், உழைப்பாளி, தொழிலாளி, தொகைத் தொகையாக வினை முடிக்கும் வினைத்தொகை, டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி ஏற்பட்டு, 10 மாதங்களில் 8 பெரிய தொழிற்சாலைகள் என்று உருவாக்கப்பட்டு, மீண்டும் தமிழகம் தொழில் துறையிலே பீடு நடைபோடத் தொடங்கியுள்ளது என்பதை அனைவருமாக, வெள்ளிடைமலையாக அறிந்த ஒரு உண்மையான நிலையில், இந்த மானியத்தின் மீது

நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்து கொண்டு சில கருத்துக்களைப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஓர் உண்மையை இந்தப் பேரவைக்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், நான் ஒரு 'பயாலஜி சையன்ஸ் ஸ்டூடண்ட்' then a Medical Doctor. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் காட்டுகின்ற அபரிமிதமான ஆர்வம், விரைவு ஆகியவற்றைக் கண்டு, எனக்கு ஒரு பிரமிப்பு ஏற்பட்டு, இந்த மானியத்திலே அதற்காகவே,பேச வேண்டும் என்று விழைந்தேனேயல்லாமல் வேறு அல்ல. இந்த மானியத்திற்குப் பதில் அளித்துப் பேசுகின்றபோது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், கிருஷ்ணகிரியில் மாம்பழக் கூழ் பதப்படுத்தும் தொழிற்சாலை இந்த ஆண்டு அமைக்கப்படும் என்று மீண்டும் ஒரு முறை சொல்வார்கள் என்கின்ற ஒரு எதிர்பார்ப்பும், சுயநலம் இன்னொரு பக்கமும் எனக்கு இருக்கிறது. இன்னொன்று, எதிரே முன்வரிசையில் அமர்ந்திருக்கின்றவர்கள் 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே', 'கலைஞரே' என்றெல்லாம் அழைத்து, அழைத்து தேவையானவைகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள். உடனுக் குடனே அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன. இன்னும் சொல்லப்போனால், சில சமயத்திலே தலையை ஒரு பக்கமாக சாய்த்து ஒரு புன்னகையிலேயே அந்தக் கோரிக்கையை அவர்கள் நிறைவேற்ற வைத்து விடுகிறார்கள். விரல் அசைவில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாகக் குற்றம் சாட்டுகிறார்கள். உண்மையிலேயே எதிர்த் தரப்பில் அப்படி யார் காரியங்களை அனுகூலமாகச் சாதித்துக் கொள்கிறார்கள் என்று அவர்கள் குறிப்பிடவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கோரிக்கையிலும் சுயநலம் கிடையாது. டாக்டர் காஞ்சனா கமலநாதன், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சரியாக யாரை மனதிலே நினைத்துக் கொண்டு பேசினேனோ, அவர்களே என்னுடைய பேச்சிலே குறுக்கிட்டதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இன்றைய முரசொலியைப் பார்த்தால் ஒரு முழுப் பக்க விளம்பரம், அதிலே மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. சுப்பராயன்



அவர்களுடைய படம். பனியனுக்கு முழுவதுமாக வரி விலக்கு அளித்தமைக்காக அவர்களுக்கு நன்றி கூறியிருக்கிறார்கள். நாங்கள் எப்போது அப்படி நன்றி கூறுவது என்கிற ஆதங்கத்தில்தான் நான் பேசுகின்றேனே அல்லாமல் வேறு அல்ல. ஒரு விரல் அசைவில், விழி அசைவில் சம்மதம் அளித்து விடுகிறார்கள். நாங்கள் டாக்டர் கலைஞரின் பின்னால் இருக்கின்றோம். 'மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞரின் பின்னால் இருக்கின்றோம் எப்போதுமே'. இந்தச் சில காரணங்களுக்காகத்தான் நான் இந்த மானியத்திலே பேச வேண்டும் என்று பெருவிருப்பம் காட்டினேனே அல்லாமல் வேறு அல்ல. நான் முன்னரே குறிப்பிட்டதைப்போல தொழில் துறை என்பது பற்றி விரிவாக இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே அளிக்கப்பட்டிருக்கிறது. பெருந்தொழில்கள், செயல்திட்ட ஆய்வுரையில் ஏராளமான தொழில்கள், அவற்றிற்கான குறிப்புகள், சாத்தியக்கூறுகள், எதிர்காலத்திலே அவை எப்படியெல்லாம் நிறைவேற்றப்படவிருக்கின்றன என்பதெல்லாம் கொள்கை விளக்கக் குறிப்புகள் கூறுகின்றன. இந்தத் துறையில் ஆர்வம் மட்டும் உள்ள என் போன்ற உறுப்பினர்களுக்கு ஆழமான சில கருத்துக்களைச் சொல்வது கடினம். சில முக்கியமான கருத்துக்களை மட்டும், இந்த அவையிலே நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முதலிலே 'டிட்கோ'வினால் விரைவில் நிறைவேற்றப்படவிருக்கின்ற 'ஹெவி மினரல் செப்பரேஷன்' மற்றும் 'இல்மினேட் பெனிஃபிசிகேஷன்ஸ்' என்ற அந்தத் திட்டத்தைப் பற்றி எனக்குத் தெரிந்த ஒரு கருத்தை நான் இங்கே சொல்ல விருப்பப்படுகிறேன். ரூ. *300* கோடி மதிப்பீட்டில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு விரிந்து பரந்து கிட்டத்தட்ட *700* கி.மீ. தூரத்திற்கு நீளமான கடற்கரையைக் கொண்டது. திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கடற்கரை மண்பரப்பில் உள்ள மணலில் கார்னைட், இல்மினேட், டைட்டன் மற்றும் மோனசைட் போன்ற கிடைப்பதற்கரிய கனிமப் பொருட்கள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளார்கள். கருப்பு, சிவப்பு, மஞ்சள் ஆகிய பல வண்ணங்களில் இந்த மணல் படிவங்கள் கடற்கரைப் பகுதியில் இருப்பது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும் என்று காண்பவர்கள் வர்ணிக்கின்றார்கள்.

*முற்பகல் 11-25*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கயிறை மணலாகத் திரிப்பது, வானத்தை வில்லாக வளைப்பது என்றெல்லாம்

இயலாத காரியத்தைப் பற்றிச் சொல்வதற்காகச் சொல்லுகின்றபோது உதாரணமாகக் குறிப்பிடுவார்கள். உள்ளபடியே, கடந்த காலத்தில், 100 வருடங்கள் என்றுகூடச் சொல்லலாம். அதற்கு முன்னால் இந்த மணலை, கயிற்றில் திரித்து அனுப்புகின்ற ஒரு பணி இந்தப் பகுதியிலே நடைபெற்றிருக்கின்றது. உண்மைக்குப் புறம்பானவை எவ்வளவு கனமாக எடுத்து வைக்கப்பட்டாலும், அவை காலப்போக்கிலே உலர்ந்து, உதிர்ந்துவிடும் என்பது உண்மை.

இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்றபோது, ஜெர்மானியர்களுக்கு தேங்காய் நார்க் கயிறுகளை தூத்துக்குடியிலேயிருந்து கப்பலிலே அனுப்பப்படுகிற போது, அதிகப்படியாக வெயிட் வரவேண்டும் என்பதற்காக கயிற்றை ஈரமாக்கி, கடல் மணலில் புரட்டி எடுத்து, அதனை அனுப்பியதாக ஒரு நூலில் படித்தேன். அதனால் என்னவாயிற்று? கப்பல் குறிப்பிட்ட இலக்கைச் சென்றடைகிறபோது, கயிறு காய்ந்து — ஓப்பன் டெக்கில் போட்டுத்தான் கயிறை அனுப்புவார்கள். அப்போது அந்த வெய்யிலில் கயிற்றில் இருக்கும் மணல் காய்ந்து - உதிர்ந்து, ஜெர்மனிக்குப் போவதற்குள் கயிறு தனியாக, மணல் தனியாக இருப்பதைப் பார்த்த ஜெர்மானியர்கள், அந்த மணலை எடுத்துப் பார்த்து, இந்த மணல் இவ்வளவு உயர்வாக இருக்கிறதே, இத்தனை கனிமப் பொருட்களைத் தன்னுள்ளே அடக்கி வைத்திருக்கிறதே என்று; ஆராய்ச்சி செய்ததால், நீங்கள் இனிமேல் கயிறை அனுப்பாதீர்கள், மணலை ஏற்றுமதி செய்யுங்கள் என்று சொல்லிவிட்டதாகப் புவியியல் ஆராய்ச்சிக் குறிப்பில் படித்ததைத்தான் நான் இந்தப் பேரவையிலே பொறுப்போடு சொல்லுகின்றேன். அப்படி ஒரு நிலை ஏற்பட்ட பிறகு, ஏன் கயிறை நிறுத்திவிட்டு, மணலை அனுப்பச் சொல்லுகிறார்கள் என்று பார்த்த சர்.சி.வி. இராமன், நம்முடைய இந்திய விஞ்ஞானி, இந்தக் கடற்கரைப் பகுதிகளில், அதாவது, கன்னியாகுமரி, திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்ட கடற்கரைப் பகுதிகளில் உள்ள மணலில் என்ன சிறப்பு இருக்கிறது என்பதைக் கண்டறிந்துதான், இந்தக் கனிமப் பொருட்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. Indian Rare Earth நிறுவனத்தினுடைய குறிப்பிலிருந்துதான் நான் இந்தப் பகுதியைக் கண்டறிந்து வந்து கூறுகிறேனேயல்லாமல், வேறு அல்ல என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். நான், நம்முடைய அரசாங்கத்தைப் பணிவுடன் கேட்டுக் கொள்வதெல்லாம், My humble request to Hon. Chief Minister, இந்தக் கனிமப் பொருட்களை எடுப்பதில் லீசுக்கு விடுகின்றபோது, ரெகுலரைஸ் செய்து விட வேண்டுமென்ற கருத்தைச்



சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவு சீக்கிரம் மணியடித்து விட்டீர்களே, நான் பேசவேண்டியது இன்னும் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படியென்றால், இப்போது நீங்கள் பேசியது எல்லாம் படித்ததாக அர்த்தமா?

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டே நிமிடங்களில் பேசி முடித்து விடுகிறேன். 'டாமின்' நிறுவனம், ஏழு இடங்களிலே கார்னெட் மணலை எடுக்க விண்ணப்பித்திருப்பதாகக் குறிப்பிலே இருக்கிறது. டாமின் என்றாலே எல்லோரும் பயப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் கூடக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, லீஸ் கொடுக்கின்றபோது. அதுவும் டாமினுக்கு கொடுக்கின்றபோது, நாம் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கவேண்டும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோளாகும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கிடைத்தற்கரிய பேரடைசோ கற்கள் கிடைக்கின்றன. வைலட் வேல்ஸ் கொண்ட அந்தக் கற்கள் உலகத்திலேயே வேறு எங்குமே கிடையாது. அந்தக் கற்களுக்கு, இஸ்ரேல், இத்தாலி போன்ற நாடுகளில் எவ்வளவு கிராக்கி இருக்கிறது என்பது இந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கும், அரசுக்கும் நன்றாகத் தெரியும். அதனை வெட்டியெடுக்கின்றபோது, கடந்த காலங்களிலே ஏற்பட்ட ஊழல்களைக் களைந்து, இப்போது ஒரு நல்ல நிருவாகத்தை அந்த டாமின் நிறுவனம் நடத்திக்காட்ட வேண்டும், அரசுக்கு நல்ல பெயர் எடுத்துத்தர வேண்டும் என்ற என்னுடைய பணிவான வேண்டுகோளை வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

தருமபுரி மாவட்டம் உலக கனிம வரைபடத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தை நிச்சயமாகப் பெற்றிருக்கிறது. அதற்குச் சாட்சி, கடந்த காலத்திலே இந்தப் பேரவையிலே மாலிப்டினம் பற்றி விவாதிக்கப்பட்டபோது, அந்தக் கனிமப் பொருள் அரூருக்கு அருகிலே கிடைக்கிறது என்றும், தொழிற்சாலை நிறுவப்படும் என்றும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுமட்டுமல்ல, என்னுடைய மாவட்டத்திலே தங்கம் இருக்கிறது,—என்னுடைய பெயரிலேகூட தங்கம் இருக்கிறது. அது வேறு விஷயம்,—என்னுடைய மாவட்டத்திலலே தங்கம் இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே மகாராஜா கடை என்ற பகுதியிலே தங்கம் இருப்பதாக புவியியல்

மற்றும் சுரங்கத் துறை கூறியிருக்கிறது. We should appreciate the Mines and Geology Department. They really do good work. ஆனால், அவர்களுக்கு வசதி வாய்ப்புகள் இல்லை. பணியாளர்கள் குறைவு. எனவே, தனியாக இதற்கு ஒரு செக்ரட்டரியைக்கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் நியமிப்பார்கள் என்றால் மிகவும் உதவிகரமாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தை இந்த அவையிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் மாவட்டம் மகாராஜா கடை பகுதியில் தங்கம் இருப்பது போல, நீலகிரி மாவட்டத்திலே அட்டப்பட்டி என்ற இடத்திலே தங்கம் கிடைக்கிறது என்பதை மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆராய்ச்சி யாளர்கள் அதைக் கண்டறிந்திருக்கிறார்கள்.

களக்காடு பகுதியில் கிடைக்கின்ற மணிக்கற்களைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது 'குறைமணிக் கற்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். குறைவே இல்லாத செல்வத்தை வாரிவாரி வழங்கக் கூடிய குறையில்லாத 'Precious Stone' என்று அழைக்கப்படுகின்ற கற்கள் அவைகள். குறைமணிக் கற்கள் அல்ல அவைகள் என்பதை இந்தப் பேரவையிலே நான் சொல்ல விருப்பப்படுகின்றேன்.

*முற்பகல் 11-30*

தயவுசெய்து நீங்கள் எனக்குக் கொஞ்சம் நேரம் அதிகமாகக் கொடுத்தீர்கள் என்று சொன்னால், நான் தொழில் துறையில் இருந்த காரணத்தினாலும், இந்த மாமன்றத்திலே சொல்வதற்காகவே நிறைய கருத்துக்களை ஒழுங்காகப் பிரிப்பேர் செய்து சேகரித்து வந்து இருப்பதாலும் அவைகளைச் சொல்ல வசதியாக இருக்கும் என்பதை உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே, இத்தகைய 'மாலிப்டினம்', 'தங்கம்', 'பேரடைசோ' ஆகிய மூன்று கனிமப் பொருள்களையும் முறைப்படுத்தி அவற்றை ஆராய்ச்சி செய்து, வெட்டியெடுத்து, ஏற்றுமதி செய்து, உள்நாட்டிலும் விற்பனை செய்ய ஆவன செய்ய வேண்டும். இதற்காகத் தனியாக இரண்டு இடங்களிலே தொழிற்சாலைகளை — பர்கூரிலே ஒரு இடத்திலும், சூழா மலையிலே ஒரு இடத்திலும் — 'டாமின்' நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் அமைத்திருக்கிறார்கள். அவற்றை இன்னும் விரைவாக விரிவுபடுத்திட ஆவன செய்வார்கள் என்று சொன்னால், கிட்டத்தட்ட நம்முடைய தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தில் நூறில் ஒரு



பங்கை எங்களுடைய மாவட்டம் ஒன்று மட்டுமே நிறைவேற்றி வைக்கும் என்பதனை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

*** திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சி என்பது ஒரு மாநிலத்தினுடைய பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் மிக முக்கிய மான ஒன்றாகும். அந்த முக்கியமான ஒன்று, சமூகத்திற்கு அனுகூலத்தை யும், பிரதிகூலத்தையும் கொடுக்கிறது என்பது நடைமுறை அனுபவம். தொழில் வளர்ச்சி ஏற்படுவதால் அதிகபட்சமான வேலைவாய்ப்பும், சமூக முன்னேற்றத்திற்குமான வாய்ப்பும் கிடைக்கிறது. பிறிதொருபுறம், நீர், நிலம், காற்று ஆகியவைகள் தொழில் வளர்ச்சியினால் தவிர்க்க முடியாமல் மாசுபடுகின்றன. எனவே, தொழில் வளர்ச்சியின் அனுகூலங்களை அனுபவிக்கின்ற நாம், பிரதிகூலங்களை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்து ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும், என்று நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

குறிப்பாக, சமீபத்தில் சில வருடங்களாக சமூக விழிப்புணர்வின் காரணமாக அதனுடைய தொடர்ச்சியாக நீதிமன்றங்களின் தலையீடும் இந்தத் தொழில் துறையில் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன. நான் துவக்கத்திலேயே ஒன்றைத் தெளிவாக, உறுதிபடத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, நம்முடைய மாநிலத்தில் நீர், நிலம், காற்று ஆகியவைகள் மாசுபடாமல் தடுப்பதற்கு உறுதியான, ஒரு கொள்கை நிலையை உருவாக்க வேண்டும் என்பதில் எனக்கு இரண்டுவித கருத்துக்கள் இல்லை. ஆனால் தொழில் வளர்ச்சி என்பது முன்னரே ஏற்பட்டுவிட்டது. ஆனால் அந்தத் தொழில் வளர்ச்சியின் விளைவாக ஏற்பட்டிருக்கக்கூடிய பிரதிகூலமான 'மாசுபடுவது' என்பது பற்றிய விழிப்புணர்வு பின்னர் ஏற்பட்ட ஒன்றாகும். எனவே, தொழில் வளர்ச்சி ஏற்படுகிறபோதே அது தடுக்கப்பட்டிருக்குமானால், இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற இத்தகைய நிலைமைகள், ஏற்பட்டிருக்காமல் இருந்திருக்கும். ஆனால் இன்றைக்கு நீதிமன்றம் தலையிடுகிறது, பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர் இந்தப் பிரச்சினைகளின்பால் அக்கறை செலுத்திப் பல நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். ஆனால், இது சில விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பதைத்தான் நான் தொடக்கத்திலேயிருந்து இன்றைக்கு வரை குறிப்பிட்டு வருகிறேன்.

இந்தப் பேரவையில் நீதிமன்றத்தின் தீர்ப்பை நான் ஒருபோதும் விமர்சிக்கவில்லை. அதில் மாறுபட்ட கருத்துக்களை இங்கே வெளிப்படுத்திடவில்லை. ஆனால், அந்த நீதிமன்றத் தீர்ப்புச் சமுதாயத்தில் சில விளைவுகளை ஏற்படுத்துகிறபோது, அந்த விளைவுகள் பற்றிய விமரிசனங்களை வெளிப்படுத்துவது என்பது தவிர்க்க முடியாத ஒன்று என்ற முறையிலேதான் நான் இந்த விஷயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நீதிமன்றத்தின் தீர்ப்பு அதன் ஒரு அம்சத்தை மட்டுமே பார்க்கிறதே தவிர, பிறிதொரு அம்சத்தைப் பார்ப்பதேயில்லை. இப்படிப் பார்க்காததன் மூலம் மாநில அரசுக்கும் சில சங்கடங்களைத் தோற்றுவிக்கின்றன. மாநில அரசும் சில பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கிற இன்றைய நிலையில் இவற்றை எப்படி நாம் பார்ப்பது என்பதுதான் என்னுடைய கருத்தாகும். அதில் நான் தெரிவிக்க விரும்புவது, உச்சநீதிமன்றமோ அல்லது உயர்நீதிமன்றமோ தலையிடுவதற்கு மாநில அரசு பொறுப்பல்ல; ஆனால் அந்தத் தலையீடுகளின் மூலம் பிரச்சினைகள் ஏற்படுகிறபோது, அதன் சுமையைச் சுமக்கின்ற பொறுப்பு, நிர்வாக ரீதியிலும், அரசியல் ரீதியிலும், அது ஏற்காமலேயே மாநில அரசிற்கு வந்து விடுகிறது. அப்போது அதற்குப் பதில் அளிக்க வேண்டிய பொறுப்பும் மாநில அரசுக்கு இருக்கிறது. இதில் எப்படி பிரச்சினைகளை அணுகுவது என்பதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. ஏற்பட்டுவிட்ட அந்த விளைவுகளைத் தீர்ப்பதற்காக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். திருப்பூரிலேகூட 114 சாயத் தொழிற்சாலைகளை மூட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், அதைத் தொடர்ந்து பிற தொழிற்சாலைகளுக்கு வருகிற 30 ஆம் தேதியோடு 'டெட் லைன்' போட்டிருக்கிறார்கள். 30 ஆம் தேதிக்குமேல் எல்லா தொழிற்சாலைகளும் மூடப்பட்டுவிட்டால், எந்த அளவுக்குப் பொருளாதாரத் தேக்கம் ஏற்படும் என்பதை மாநில அரசு யோசித்துப் பார்க்க வேண்டும். அதனால் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்னவென்றால், இவர்கள் இப்படியே செய்து கொள்ளட்டும் என்று தாங்கள் அனுமதிக்கக் கூடாது.

*முற்பகல் 11-35*

ஆனால், அதேநேரத்தில் இதனுடைய விளைவைத் தீர்த்துக் கொள்வதற்கான நியாயமான குறிப்பிட்ட கால வரம்பை அவர்களுக்கு வழங்க வேண்டும். அது வழங்கப்படுவதற்குரிய ஸ்பெஷல் பெட்டிஷன் அரசாங்கத்தின் சார்பில் நீதிமன்றத்திலே போடப்பட வேண்டும் என்பது



பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். இதுபற்றிச் சொல்வதற்கு நிறைய விஷயங்கள் இருந்தாலும், அதற்குரிய காலம் இல்லை என்பதால், நான் அந்த விவரங்களுக்குள்ளே போக விரும்பவில்லை. அங்கே ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகளுக்கு முக்கியக் காரணம் பணம் இல்லை; அவர்களே சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்துக் கொள்வதற்கான பணம் அவர்களிடம் இல்லை. அது ஒரு பிரச்சினை. இன்னொரு முக்கியமான பிரச்சினையைப் பற்றித் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதே திருப்பூரில், சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. பணிகள் தொடங்கப்பட்டு நடந்து வருகின்றன. இவைகளை எல்லாம் 30 ஆம் தேதிக்குள் முடித்துவிட்டு, தொழிற்சாலைகளைத் தொடங்க வேண்டுமென்று நீதிமன்றம் சொல்கிறது. ஆனால் அவற்றை செயல்படுத்துவதற்கான மின்சார ஏற்பாடுகள் அங்கே இல்லை. அதற்குரிய சப்-ஸ்டேஷன்களே உருவாக்கப்படவில்லை. அப்படியானால் எப்படி இதை நிறைவேற்றிக் கொள்ள முடியும்? நீதிமன்றம் எந்தக் கோணத்தில் பார்க்கிறது என்றால், சமூக விழிப்பை கவனத்தில் கொண்டு தீர்ப்பை எழுதிவிடுகிறதே தவிர, தீர்ப்பு எழுதுகிறபோது அந்தப் பிரச்சினை நடைமுறையில் எப்படித் தீர்க்கப்படும் என்பது பற்றி கவனத்தில் கொள்ளவில்லை. அவர்களுக்கு, உரிய விவரங்கள் கொடுக்கப்படவில்லையோ என்று நான் கருதுகிறேன். எனவே அவற்றைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தொழில் துறையில் இந்த அரசு வந்ததற்குப் பிறகு, தொழிற்சாலைகள் மூடப்பட்டதாக நான் குறிப்பிட விரும்பமாட்டேன். ஆனால் முன்னர் மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறப்பதில் நாம் என்ன கொள்கை மேற்கொள்ள வேண்டுமென்பது பற்றித்தான் நாம் இங்கே பார்க்க வேண்டும். ஏனென்றால், மூடப்பட்ட தொழிற்சாலைகள் முழுவதும் கடந்த காலங்களில் மூடப்பட்டவையாகும். அதைத் திறப்பதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நம்முடைய பின்னி ஆலையைத் திறப்பதற்குக் கூட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏறத்தாழ 10 மணி நேரம் செலவழித்திருப்பார் என்று நான் கருதுகிறேன். அதிகபட்சமான நேரம் அதற்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், பின்னி நிறுவனம், ஹை கோர்ட்டையும் சரி, மாநில அரசையும் சரி, ஏமாற்றிக் கொண்டே, தொடர்ந்து தானே அவற்றைக் கைப்பற்ற முயற்சிக்கிறார்களே தவிர, அரசாங்கத்தோடு ஒத்துழைக்கவோ அல்லது நீதிமன்றத்தோடு ஒத்துழைக்கவோ மறுத்து, பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அக்கறை செலுத்தாமல் இருக்கிறார்கள். மாநில

முதலமைச்சர் 10 மணி நேரம் செலவழித்தும்கூட, அது ஆனர் செய்யப்படவில்லை என்றால், அந்த நிறுவனம் பற்றி வெரி சீரியசாகக் கருத வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்த பின்னி மில்லைப் பற்றி, தந்திர ரீதியாக அறிவித்தார்களோ என்று எனக்குத் தெரியாது. ஒரு பிரஷர் டாக்டிஸ் என்ற முறையில் அதை அறிவித்திருக்கலாம். அதையே கூட உண்மையாக்கி, பின்னி மில்லை அரசே டேக் ஓவர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பின்னி மில்லை டேக் ஓவர் செய்தால் நல்லதுதான். அதைச் செய்வதன் மூலம் மீண்டும் மில் மூடப்படுவது தடுக்கப்படும். எதிர்காலத்தில் மில் மூடப்படுவதைக் குறைப்பதற்குரிய வாய்ப்பு கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு விஷயம். ஒரு விதை மண்ணில் விழுகிறது என்றால், அதை வளர்ப்பதற்குரிய முறையில் மண் வளப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அதுபோல, ஒரு மாநிலத்தில் தொழில் வளர வேண்டுமானால், தொழில் வளர்வதற்குரிய சில அடிப்படை முன் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கிறபோது, இரண்டு அம்சங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். உள்ளும் புறமும் மாநில அரசு அதற்குரிய முறையில் கொள்கைகள் மற்றும் அடிக்கட்டுமானங்களை கல்டிவேட் செய்வது என்பது ஒரு அம்சம். அதில் மாநில அரசு அக்கறை செலுத்துகிறது என்பதை நடைமுறையில் நாம் உணருகிறோம். பிறிதொரு அம்சம் இருக்கிறது. அதில் நாம் அக்கறை செலுத்த வேண்டும். ஏனென்றால் வெறும் சாலை வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தாலும், அகல இருப்புப் பாதைகள் போடப்பட்டு முடித்துவிட்டாலும், தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தாலும், தொழில்கள் வளர்ந்துவிடாது. தொழிற்சாலை வளர்வதற்கு மிக முக்கியமான காரணமாக இருப்பது சமூக நல்லிணக்கம். இந்தச் சமூக நல்லிணக் கத்தைக் கெடுப்பதற்கென்றே சில தீய சக்திகள் தொடர்ந்து செயலாற்றி வருகின்றன. இந்த மிக முக்கியமான விஷயம் கவனிக்கப்படவில்லை யென்றால் தொழில் வளர்ச்சி பின்தங்கிவிடும்; பொருளாதார வளர்ச்சி பின்தங்கிவிடும். எனவே சமூக நல்லிணக்கத்தை உத்திரவாதப்படுத் தினால்தான், தொழில்கள் வளர முடியும். இதற்கு மிகச் சிறந்த உதாரணம் காஷ்மீர், பஞ்சாப். சில பகுதிகள் கலவர பூமியாக மாறி போகுமானால், ஜாதிக் கலவரம், மதக் கலவரம் ஊக்கப்படுத்தப்படு மேயானால், அதைப் பற்றிக்கொண்டு—அத்தகைய நிலைமைகளை மேற்கொள்வார்களேயானால்—அந்தச் சமூகம் பின்தங்கிப் போய்விடும். பின்தங்கி கெட்டு நாறிப்போய்விடும். அத்தகைய நிலைக்கு உட்படுத்து வதற்கு, ஜாதிகளை சமூகத்தோடு இணைப்பதுதான் பொது வாழ்வில்



ஈடுபட்டிருக்கிற ஒவ்வொருவருடைய டூட்டியாக இருக்க வேண்டும். துரதிருஷ்டவசமாக தமிழ்நாட்டில் ஒரு சில சக்திகள், ஒன்றுபட்டு இருக்கின்ற சமூகத்தை சில்லுச் சில்லாக சிதறடிக்க வைப்பதையே குறியாகக் கொண்டிருக்கிறார்கள். இப்படிச் சிதறடிப்பதன் மூலம், அவர்களின் நலன்கள் காப்பாற்றப்படுமே தவிர, நாட்டின் நலனும் அந்த ஜாதியின் நலனும் காப்பாற்றப்படாது. நாட்டின் நலன் காப்பாற்றப்படாத ஒரு வேலையை சிலர் செய்கிறார்கள் என்றால், அவற்றை நாட்டின் நலனில் அக்கறை கொண்டுள்ள ஒவ்வொருவரும் உறுதியோடு, முனை மழுங்காமல் போராட வேண்டும். அத்தகைய உத்தி முறைகள் மாநிலத்தில் உருவாக்கப்பட வேண்டும். இதற்கு அரசியல் உறுதி வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல இன்னுமொரு மிக முக்கியமான விஷயத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுதான் பொதுத் துறை. சில அங்கத்தினர்கள்கூட. குறிப்பிட்டார்கள்—தனியார் துறையை ஊக்குவிப்பதிலே பல பிரச்சினைகள் என்று. அது இப்போது விரிவாக விவாதிக்கப்படுவதான பிரச்சினை அல்ல. ஆனால் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். பொதுத்துறை என்பது, ஆசியாவின் ஜோதியான, இந்திய நாடு மதிக்கக்கூடிய மகத்தான மனிதரான ஜவஹர்லால் நேரு அவர்களால் அடிப்படையிட்ட ஒன்றாகும். அவரால் உருவாக்கப்பட்ட தொழிற் கொள்கையில் ஒரு மிக முக்கியமான அம்சம்தான் பொதுத்துறை. ஆகவே பொதுத்துறையை எதிர்ப்பது ஜவஹர்லால் நேரு அவர்களை எதிர்ப்பது போலாகும். பொதுத் துறையை நிராகரிப்பது ஜவஹர்லால் நேருவை நிராகரிப்பது போலாகும். அத்தகைய நிலைமையை சிலர் ஏன் மேற்கொள்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

*முற்பகல் 11-40*

ஒன்றை நான் இப்போது குறிப்பிட விரும்புகிறேன். இந்தியாவில் 241 பொதுத்துறை நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த 241 பொதுத்துறை நிறுவனங்களும் 1994-95-ஐக் காட்டிலும் 1995-96-ல் 58% லாபத்தை அடைந்து இருக்கின்றன. அதற்கான புள்ளி விவரங்களை ஸ்டாண்டிங் கமிட்டி தலைவர் சமீபத்திலே வெளியிட்டிருக்கிறார்கள். 1994-95-ல் 4,544 கோடி ரூபாய்தான் இலாபம், ஆனால் 1995-96-ல் 7,217 கோடி ரூபாயை பொதுத்துறை நிறுவனங்கள் இந்தியாவில் இலாபமாக அடைந்திருக்கின்றன. எனவே பொதுத்துறை என்பது வளர்க்கப்பட வேண்டிய ஒன்று.

சில தனிப்பட்ட அங்கத்தினர்கள் அல்லது தனிப்பட்ட சில அரசியல் கட்சிகள், அந்த அரசியல் கட்சிகளிலேயே அதைக் கட்டி வளர்த்த தலைவர்களின் கொள்கைகளை நிராகரிக்கின்ற, புதுப்புது கொள்கைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிற குரலுக்குச் செவி சாய்க்காமல் நாம் பொதுத்துறையை ஊட்டி வளர்க்க வேண்டும். ஊக்கப்படுத்த வேண்டும் என்பதை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இன்னொரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்தில் 13 பொதுத்துறை நிறுவனங்கள் இருக்கின்றன, 20 ஆயிரம் கோடி ரூபாய் அதில் முதலீடு செயயப்பட்டு இருக்கிறது. இது மேலும் ஊக்குவிக்கப்படும் என்றவொரு நல்ல அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. இத்தகைய அறிவிப்பு மேலும் வரவேண்டும் என்பதற்காகத்தான் நான் உரம் போடுகிற மாதிரி இந்த விஷயத்தைச் சொல்லிக் கொண்டு இருக்கிறேன். அரசு அவற்றைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து நம்முடைய பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாகத்தை நாம் அக்கறையோடு கவனிக்க வேண்டும்.

'டான்செம்' பற்றி நான் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். என்னிடம் இதுபற்றிய விவரங்கள் நிறைய இருந்தாலும், நேரம் இல்லை. டான்செம் நிறுவனம் பற்றி ஒரு வெள்ளை அறிக்கை தயார் செய்து விவாதிக்க வேண்டும் என்பது என்னுடைய தெளிவான கருத்து. முதலமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு சிந்திப்பதற்காகத்தான் நான் இக்கருத்துக்களை வைக்கின்றேன். 'டான்செம்' நிறுவனத்தின் நடவடிக்கைகளில் உள்ள முறைகேடுகள், ஊழல்கள், தவறான செலவினங்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் அடங்கிய விவரங்கள் என் கைவசம் இருக்கின்றன. அந்த விவரங்கள் அனைத்திற்குள்ளும் நான் போக விரும்பவில்லை. ஒரே வரியில் நான் தெரிவிக்க விரும்புவது, ஒரு வெள்ளை அறிக்கை இதுகுறித்து வெளியிட வேண்டும் என்பதுதான். ஒரு விஷயத்தை மட்டும் சொல்ல வேண்டுமென்றால், 'டான்செம்' நிறுவனம் கொடுக்கின்ற காசோலை வங்கியிலிருந்து 'ரிட்டர்ன்' ஆகிறது. அதுமட்டுமல்ல, அந்த நிறுவனத்தின் எம்.டி. ஹெட் ஆபீசிலே பெரும்பாலும் இருப்பதில்லை, டூரிலேயே இருக்கிறார். டூருக்கு ஆகும் செலவு என்ன? முதலமைச்சர் அவர்களின் அலுவலகம்கூட டெக்கரஷன் இல்லாமல் இருக்கிறது. ஆனால் எம்.டி. அவர்களின் அலுவலகம் 7 இலட்சம் ரூபாய் செலவில் டெக்கரேட்





செய்யப்பட்டு இருக்கிறது. என்றைக்காவது ஒரு நாள் தங்குகிற பெங்களூர் அலுவலகம்கூட டெக்கரேட் செய்யப்பட்டிருக்கிறது. இதுபோன்ற விஷயங்களை எடுத்துக் கொண்டால் நிறைய இருக்கின்றன. இவர்கள் கொடுத்திருக்கிற இலாபக் கணக்கிலேகூட ஒரு முறையான உண்மையான கணக்கு இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும் 1,000 மெட்ரிக் டன் 'கோல்' Coal மிஸ்ஸிங் என்று சொல்லி இருக்கிறார்கள். எப்படி மிஸ் ஆயிற்று என்று தெரியவில்லை. 1,000 மெட்ரிக் டன் என்றால் அதனுடைய விலை என்ன? ஒரு மெட்ரிக் டன் 1,500 ரூபாய் என்றால் 15 இலட்சம் ரூபாய் ஆகும். அவர்கள் எளிதாக மிஸ்ஸிங் என்று போட்டிருக்கிறார்கள். இதற்கு ஏதாவது உள் ஏற்பாடுகள் இருக்கிறதா என்பதை மாநில அரசு மிகுந்த கவனத்தோடு அக்கறை செலுத்தி பரிசீலிக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதில் 'டான்செம்'மின் பல்வேறு 'ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ்' வயலெட் ஆகி இருக்கிறது. இதுபற்றிய விவரங்களையும் பின்னர் எழுத்து மூலமாக முதலமைச்சர் அவர்களுக்கு நான் தர இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நிறைவாக ஒரு விஷயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

நம்முடைய மாநிலத்தில் அரசு நிறுவனமான டான்சியில் ஓய்வுபெற்ற ஊழியர்கள் கிட்டத்தட்ட 600 அல்லது 700 பேர் இருக்கிறார்கள். அவர்களில் 100 பேர் செத்துப்போய் விட்டார்கள். அவர்களுக்கு பென்ஷன் கிடைக்கவில்லை. அட்டானமஸ் நிறுவனம் என்ற முறையில் இயங்கி வந்த டான்சியில் பணியாற்றிய அவர்களுக்கு பென்ஷன் கிடைக்கவில்லையா என்பது தெரியவில்லை. இதுகுறித்து ஒரு ரிட் பெட்டிஷன் ஹைகோர்ட்டிலே இருக்கிறது. 572 பேர் என்று தோராயமாக நான் கருதுகிறேன். அவ்வளவு பேர் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; 100 பேர் செத்துப் போய்விட்டார்கள். எனவே அவர்களுக்கு பென்ஷன் வேண்டும் என்று நம்முடைய மாநில அரசுக்கு சம்பந்தப்பட்டவர்கள் அரசு நிறுவனமான டான்சியின் ஓய்வு பெற்ற ஊழியர் சங்கத்தின் சார்பிலும் மனு கொடுத்து இருக்கிறார்கள்; ஹைகோர்ட்டிலும் முறையீடு செய்து இருக்கிறார்கள். எனவே, கோர்ட்டுக்கு போய் வருவதற்கு முன்னால், மாநில அரசு கருணை கூர்ந்து, யார் யாருக்கு பென்ஷன் இல்லையோ அவர்களுக்கு பென்ஷன் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைக் கேட்டு முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செ. மதிவாணன்.

***திரு. செ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய வாழ்நாளிலே மறக்க முடியாத நாள் இந்நாளாகும். தமிழக முதல்வர் தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் எனக்கு திருமணம் செய்து வைத்த நாளாகும்; இந்நன்னாளிலே முதல்வர் அவர்களுடைய தொழில் துறை மானியத்திலே பேசுவதற்கு நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது தொகுதியான அச்சரப்பாக்கம், தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். கடந்த ஆட்சியினரால் புறக்கணிக்கப்பட்ட தொகுதியாகும். நமது கழ்க ஆட்சி மலர்ந்த இவ்வேளையிலே கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையிலே நான் பேசும்போது எனது தொகுதியில் தொழிற்சாலைகள் அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்துப் பேசினேன். அதற்கு ஏற்றார்போல, சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம் என்கின்ற தங்களது பொற்கால ஆட்சியில் எனது தொகுதியில் தொழில் வளாகம் தொடங்கும் முகமாக மேல்மருவத்தூர் பின்புறத்தில் 1,000 ஏக்கர் நிலப் பகுதியை டாசிட் நிறுவனத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக இத்துறையின் செயல்திட்ட ஆய்வுரையில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கண்டு எனது மகிழ்ச்சியையும், என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். தாயுள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள் இதைக் கருணையுடன் கவனித்து — எத்தனையோ மக்கள் நலத் திட்டங்களை ஆட்சிப் பொறுப்பேற்ற குறுகிய காலத்தில் செயல்படுத்தி வருகிறார்கள்; அதேபோன்று, எனது தொகுதியில் தொழில் வளாகம் அமைக்கும் இத்திட்டத்தினை போர்க்கால அடிப்படையில் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

எனது தொகுதியில் மேல்மருவத்தூரில் தனியார் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் இயங்கி வருகின்றன. அச்சரப்பாக்கத்தில் ஏழை எளிய மாணவ மாணவிகள் பயிலுவதற்கு ஏற்றார்போல, தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அரசு கலைக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



மேலும், எனது தொகுதியில் தண்ணீர்ப பிரச்சினை மற்றும் போக்குவரத்துப் பிரசசினை உள்ளது. நமது கழக அரசு இதைக் கருணையுடன் கவனித்து போர்க்கால அடிப்படையில் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கின்ற வகையிலே மேல்நிலைத் தொட்டிகளைக் கட்டி குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று அமைச்சர் அவர்கள்ள மெத்தப பணிவோடு கேட்டுக் கொள்கின்றேன். மாண்புமிகு போககுவரத்துத் துறை அமைச்சரிடம் கொடுத்துள்ள விண்ணப்பப்படி, கடந்த கால ஆட்சியிலே நிறுத்திவிட்ட பேருந்துகளை — குறைந்தபட்சம் 4 பேருந்துகளையாவது—இயக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கின்றேன்.

எனது தொகுதியில் பொலம்பாக்கம் என்ற கிராமத்தில் ஒரு அரசு தொழுநோய் மருத்துவமனை இயங்கி வருகின்றது. ஆனால், இங்கு தொழுநோயாளிகளின் வருகை மிகவும் குறைந்து, உள்நோயாளிகள் 7 பேர் மட்டும்தான் இருக்கிறார்கள். இந்த மருத்துவமனை 150 படுக்கை வசதிகளைக் கொண்டது; அறுவைச் சிகிச்சை அரங்கம் மற்றும் அனைத்து வசதிகளையும் கொண்டது. ஆகவே அரசு இதைக் கவனித்து, உள்நோயாளிகளாக இருக்கின்ற ஒரு பகுதியை மட்டும் ஒதுக்கிவிட்டு, மற்றப் பகுதி பொது மருத்துவமனையாக இயங்குவதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

முற்பகல் 11-50

எனது தொகுதியில் அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில் கிளியாநகர் என்கின்ற கிராமம் ஆற்றுப் பகுதியில் அமைந்துள்ளது. அதைச் சுற்றியுள்ள 15 கிராமங்களின் மக்கள் அச்சரப்பாக்கம் வரவேண்டும் என்றால், ஆற்றைக் கடந்துதான் வரவேண்டும். மழைக்காலங்களில் இந்தப் பகுதியிலுள்ள மக்கள் அச்சரப்பாக்கம் வரவேண்டுமென்றால் வந்தவாசி போய்த்தான் வரவேண்டும். அந்த ஆற்றின் அகலம் சுமார் 100 மீட்டர் இருக்கும். அந்தப் பகுதியில் உள்ள மக்கள் காலங்காலமாக கோரிக்கை வைத்து போராடிக் கொண்டு வருகிறார்கள். இதுவரையில் அந்த மேம்பாலம் அங்கே கட்டப்படாமல் இருககிறது. ஆகவே, தாயுள்ளம் கொண்ட முதல்வர் அவர்களும் அமைச்சர் அவர்களும் இந்த மேம்பாலத்தைக் கட்டுவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியில் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், கருக்கிலி பறவைகள் சரணாலயம் இருக்கின்றன. அங்கே

ஏழை மக்கள் ஏரிப் புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டுகளாகப் பயிர் செய்து வருகிறார்கள். ஆனால் நாலைந்து மாதங்களுக்கு முன்பு வனத் துறை அதிகாரிகள் வந்து அங்கே விவசாயம் செய்யப்பட்டிருந்த பயிர்களைப் பிடுங்கி எறிவதும், நாசம் செய்தும் அந்தப் பகுதி மக்களைத் துயருக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். இதனால் அப்பகுதி மக்கள் வாழவும், பிழைக்கவும் வழியின்றித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே வனத் துறை அமைச்சரும் அதிகாரிகளும் நேரில் சென்று அந்த மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியில் அச்சரப்பாக்கம், கயப்பாக்கம், கடப்பாக்கம், பொலம்பாக்கம், எலப்பாக்கம், ஒரத்தி, அனந்தமங்கலம், வேடந்தாங்கல் ஆகிய பகுதிகளில் உள்ள மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறது. மாணவர்கள் பயில கட்டிட வசதியில்லை. கழிப்பறை வசதி இல்லை. அதை நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொண்டு அச்சரப்பாக்கம் தனித் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்கக் கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் மானியக் கோரிக்கையில் என்னைப் பேச அனுமதித்ததற்கு உங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொழில் மானியக் கோரிக்கையைப் பொறுத்த வரையில், இந்த அரசு பதவியேற்று தற்போது இரண்டாவது பட்ஜெட்டை வைத்திருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கையில் மத்திய அரசாங்கத்தின் தொழில்கள் எதுவும் சேர்க்கப்படவில்லை. எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் மிகுந்த கவலையோடு பேசினார்கள். இந்தத் தொழில் கொள்கையில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மத்திய அமைச்சரவையில் அமைச்சர்களாக இருக்கிறார்கள், அவர்களும் தமிழகத்திற்கு ஏதாவது தொழிலை உருவாக்கிக் கொடுப்பார்கள், அவைகள் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்று நாங்களும் நினைத்தோம். அப்படி மத்திய அரசின் தொழில்கள் பற்றி எதுவும் இந்த பட்ஜெட்டில் காணப்படவில்லை. சரி, தமிழகத்தில் இருக்கிறவர் அங்கே பிரதமராக வந்தால் அவராவது தமிழகத்திற்கு ஏதாவது தொழில்களை உருவாக்கித் திட்டம் கொடுப்பார் என்றுகூட எல்லோரும்



நினைத்திருந்தார்கள். மாண்புமிகு திரு. அழகிரி அவர்கள்கூட டெல்லியில் முகாமிட்டிருந்தார்கள். ஏதோ சூதினால், வாதினால் அவர்கள் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படுவது தடுக்கப்பட்டது என்றுகூட கவலையாகக் கூறினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தொழில் மானியத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? மானியக் கோரிக்கையில் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் பிரதமராக வந்திருந்தால் தமிழகத்திற்குப் பல திட்டங்கள் வந்திருக்குமே என்றுதான் சொன்னேன். மானியக் கோரிக்கையில்தான் பேசுகிறேன். திரு. தேவகவுடா பிரதமராக இருந்தார். கர்நாடகத்திற்கு நிறைய செய்தார். முன்பு திரு. ஜாபர் செரீப் ரயில்வே அமைச்சராக இருந்தார். அவரும் கர்நாடகத்திற்கு நிறைய செய்தார். அதுபோல திரு. மூப்பனாரும் பிரதமராக வந்திருந்தால், மாண்புமிகு திரு. முரசொலி மாறனும் அவரும் சேர்ந்து நிறைய தொழில் திட்டங்களைத் தமிழகத்திற்குக் கொடுத்திருப்பார்களே என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். அது நடக்கவில்லை என்று திரு. அழகிரி அவர்களும் ரொம்ப வருத்தப்பட்டார்கள். அதனால், சதி, அது, இது என்று சொன்னார்கள். நான் அதற்குள் போக விரும்பவில்லை. ஆகவே தொழில் கொள்கையில் பேசுவதற்கு முன்பு முதலில் என்னுடைய தொகுதிப் பிரச்சினைக்கு வந்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தொகுதிப் பிரச்சினைக்கு சீக்கிரமாக வாருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே எஸ்.கே.எம். குரூப் நிறுவனத்துடன் இணைந்து ரூ. 40 கோடி மதிப்பீட்டில் முட்டை பதப்படுத்தும் திட்டம் ஒன்றை விரைவில் தொடங்கவுள்ளது என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப் பொறுத்தவரையில் சென்ற ஆட்சிக் காலத்திலேயே அந்த முட்டை பதப்படுத்தி பவுடர் தயாரிக்கும தொழிற்சாலையானது ராசிபுரத்தில் அமைக்கப்படும் என்று அப்போது இருந்த அமைச்சர் கூறியிருக்கிறார். ஆனால் தற்போது இந்தக் குறிப்பில் அது எந்த இடத்திலே என்று குறிப்பிடப்படவில்லை. ஏனென்றால் அது ஈரோட்டிலோ அல்லது நாமக்கல்லிலோ அமைந்துவிடுமோ என்று எங்களுக்கு ஒரு பயம் இருக்கிறது. ஏனென்றால் ராசிபுரத்தில், நாமக்கல்லில் பல இலட்சம் முட்டைகள் உற்பத்தியாகின்றன. ஆகவே அந்தத் தொழிற்சாலையை ராசிபுரத்தில் அமைக்க வேண்டுமென்று

கேட்டுக் கொள்கிறேன். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் தற்போது எந்தப் பகுதியில் அமைக்கப்படுகிறது என்று குறிப்பிடப்படவில்லை என்ற காரணத்தால் அது அங்கே அமைக்கப்படவில்லையோ, அதனுடைய நிறுவனர் மயில்சாமி கவுண்டர் ஈரோட்டை சார்ந்தவர் என்பதால் அங்கே உருவாக்கி விடுவார்களோ என்று எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு, அந்த எஸ்.கே.எம். குரூப் நிறுவனத்துடன் இணைந்து 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செய்கிற முட்டை பவுடர் தொழிற்சாலையை ராசிபுரத்தில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

அதைப்போல, மரவள்ளிக் கிழங்கிலிருந்து ஆல்கஹால் தயாரிக்கும் திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது என்று கூறியிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ஆல்கஹால் தயாரிப்பதற்கான செயல் திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை மரவள்ளிக் கிழங்கிலிருந்து தயாரிக்கிற ஸ்டார்ச்சிலிருந்து ஆல்கஹால் தயாரிக்கும் திட்டம் தான் தற்போது ஆய்வில் இருக்கிறது. இராஜாஜி, சேலம் மாவட்டங்களில் கிட்டத்தட்ட பல இலட்ச ஏக்கர் நிலங்களில் விவசாயப் பொருள்கள், குச்சிக் கிழங்குகள் தயாராகிற காரணத்தால் அந்த ஆல்கஹால் தயாரிக்கும் திட்டமானது, அதாவது அந்த ஸ்டார்ச் பொருளிலிருந்து ஆல்கஹால் தயாரிக்கும் திட்டம்தான் இருக்கிறது. அதை ராசிபுரத்தில் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஸ்டார்ச்சிலிருந்து குளுகோஸ் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை நிறுவினால் நல்லது. காரணம், குளுகோசிற்கு நல்லமுறையில் டிமாண்ட் இருக்கிறது. அதையும் ராசிபுரத்தில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குச்சிவள்ளிக் கிழங்கிலிருந்து வருகிற வேஸ்ட்டை திப்பி என்று சொல்வார்கள். அந்த திப்பி, ஸ்டார்ச் இவைகளிலிருந்து ஆல்கஹால் தயாரிப்பதற்குத் தொழில்கள் உருவாக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இருக்கிற காரணத்தால் முட்டை பவுடர் தொழிற்சாலையை அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். முட்டை பவுடர் தயாரிக்கிற தொழிற்சாலை ராசிபுரத்தில் அமைக்கப்படும் என்று சென்ற முறை அமைச்சர் அவர்கள் பேரவையில் கூறி இருக்கிறார்கள். தற்போது ராசிபுரமா, நாமக்கல்லா என்று குறிப்பிடப்படவில்லை. தயவுசெய்து நீங்கள் அதை



ராசிபுரத்தில் ஆரம்பிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ராசிபுரம் ராசியில்லாதபுரமாக மாறும் நிலை இருக்கிறது என்று நினைக்கிறேன். ஏனென்றால் சேலம் மாவட்டம் இரண்டாக பிரிந்தபோது இராஜாஜி மாவட்டத்திற்கு ராசிபுரத்தை தலைமையிடமாக ஆக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டோம். அப்போது ஆத்தூர், தலைவாசல் ஆகிய அந்தப் பகுதிகள் எல்லாம் சேர்ந்து இருந்ததில் ராசிபுரம் நடுப்பகுதியாக இருந்த காரணத்தால் ராசிபுரத்தை தலைமையிடமாக அறிவிப்பார்கள் என்று நினைத்தோம். ஆனால் ஆத்தூர், தலைவாசல் பகுதிகள் எல்லாம் சேலம் மாவட்டத்திற்குச் சென்றதால் ராசிபுரம் தனியாக இருக்கிற காரணத்தால் அது நடுப்பகுதியல்ல என்பதால் நாங்கள் ராசிபுரம் தலைமையிடமாக வேண்டும் என்ற கோரிக்கையை விட்டுவிட்டோம்.

அடுத்து ஒரு வருவாய்க் கோட்டத்தைப் வேண்டுமென்று கேட்டோம். ஆனால் வருவாய்க் கோட்டத்தை பொறுத்தவரையில் இரண்டு வட்டங்கள் வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். எனவே புதியதாக ஒரு வட்டத்தை ஏற்படுத்தி வருவாய்க் கோட்டம் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டோம். அதுவும் நிராகரிக்கப்பட்டுவிட்டது. அடுத்து இராஜாஜி மாவட்டத்திற்குப் புதியதாக கலெக்டர் அலுவலகம் அமைப்பதற்கு ஒரு இடத்தை சர்வே செய்வதற்கு ஒரு ஆய்வுக் குழு நாமக்கல் வந்தது. அந்த ஆய்வுக் குழுவில் நாங்கள் கேட்டோம். எங்களுக்கு வருவாய்க் கோட்டமும் இல்லை, தலைமையிடமும் இல்லை, அந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அமைக்கும் இடமாவது ராசிபுரம் பகுதியில் என்.எச். சாலையில் அமைக்க வேண்டுமென்று கேட்டோம். அவர்கள் அந்த இடத்தையே பார்க்கவில்லை. இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், நாங்கள் கேட்பது எதுவும் நடக்கவில்லை. மகாபாரதத்தில் ஒரு நிகழ்ச்சியை நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னைவிட அதிகமாகத் தெரியும். மகாபாரதத்தில் ஒரு நிகழ்ச்சி, பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் ஒரு நேரத்தில் உச்சக் கட்டம், அவர்கள் அனைத்தையும் இழந்துவிட்டு, பாண்டவர்கள் கௌரவர்களிடம் கேட்கிறார்கள். நாங்கள் 5 பேர் இருக்கிறோம்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. கே. வீரப்பன்.

[1997 ஏப்ரல் 23

*திரு. கே. கே. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். அதாவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சேலத்திலிருந்து நாமக்கல் வருகிற அந்த என்.எச். ரோட்டில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைய வேண்டும், அதை உயர்மட்டக் குழு பார்வையிட வேண்டுமென்று சொல்லி, குழு அதைப் பார்வையிடவில்லை என்று சொல்கிறார்கள். உயர்மட்டக் குழு அந்தச் சாலையில் அலுவலகம் அமைவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்து இருக்கிறார்கள் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் அந்தக் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். இரண்டு இடங்களைத்தான் பார்த்தார்கள், இந்த இடத்தைப் பார்க்கவில்லை என்று கூறிய காரணத்தால் கூறினேன். அந்த இடத்தைப் பார்த்து, அதுவும் ஆய்வில் இருக்கிறது என்றால் ரொம்ப சந்தோஷம். மாண்புமிகு உறுப்பினர், அவருடைய பகுதிக்கு, மோகனூருக்கோ, பரமத்திக்கோ கொண்டு செல்லாமல் என்னுடைய பகுதிக்கு வர சிபாரிசு செய்தால் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பகல் 12-00

அந்த பஞ்ச பாண்டவர்கள் அனைத்தையும் இழந்துவிட்டு கௌரவர்களிடம் கேட்கிறார்கள். நாங்கள் 5 குடும்பங்களாக இருக்கிறோம். எனவே, 5 குடும்பங்களும் குடியிருப்பதற்கு 5 ஊராவது கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அவர்கள் கொடுக்கவில்லை. உங்களுக்குக் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டார்களாம். அடுத்து, 5 ஊர்களைக் கொடுக்கவில்லை என்றாலும், 5 வீடுகளையாவது கொடுங்கள் என்று கேட்டார்களாம். அதையும் உங்களுக்குக் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டார்களாம். அடுத்து, 5 அடி நிலமாவது கொடுங்கள் என்று கேட்டபோது, ஒரு குண்டூசி குத்துவதற்குக் கூட உங்களுக்கு நிலம் கொடுக்க முடியாது என்று கூறியதற்குப் பிறகுதான் மகாபாரதப் போரே ஆரம்பித்தது என்று கூறுவார்கள். நான் இதை எதற்குச் சொல்கிறேன் என்பது முதலமைச்சர் அவர்களுக்குத தெரியும் என்று நினைக்கிறேன். ஏன் என்றால்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி. கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகாபாரதம் நடந்தபோது, குண்டூசி இருந்ததா என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.



1997 ஏப்ரல் 23]

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊசி என்று வைத்துக் கொள்ளுங்களேன். ஊசி குத்துவதற்குக் கூட நிலம் உங்களுக்குக் கொடுக்க முடியாது என்று சொன்ன காரணத்தால்தான், அவர்கள் கிருஷ்ணன் துணை கொண்டு மகாபாரதப் போர் நடத்தி, மீண்டும் அவர்கள் ஜெயித்து உரிமையைப் பெற்றார்கள் என்பது புராணம். ஆகவே, நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், நாங்கள் கேட்டது எதுவுமே நடக்கவில்லை. தற்போது கேட்கிறேன். இந்த முட்டை பவுடர் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் அந்தத் தொழிற்சாலை பற்றி இங்கே வைக்கப்பட்டு உள்ள குறிப்பிலேகூட முன்னால் இருந்த தொழில்துறை அமைச்சர் அவர்கள் கூட கூறியிருந்தார்கள். அது ராசிபுரத்திலே அமையும் என்று உறுதி கூறியிருந்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் உறுதி கூறியிருக்கிறார்கள். மயில்சாமி கவுண்டர் அவர்கள், நாங்கள் ராசிபுரத்திலே ஆரம்பிக்கப் போகிறோம் என்று கூறியிருக்கிறார்கள் என்று இந்தக் குறிப்பிலே இருக்கிறது. இதை எல்லாம் நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், நான் தற்போதுகூட 4, 5 கோரிக்கைகளை வைத்திருக்கிறேன். ஆல்கஹால் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், ராஜாஜி மாவட்டத்தில் அதிகமாக குச்சிக் கிழங்கு பயிரிடப்படுகிறது. அந்தக் கிழங்கிலுள்ள ஸ்டார்ச்சிலிருந்து 'ஆல்கஹால்' தயாரிக்க ஏதுவாக இருக்கும். அதேபோல் குளுகோஸ் தொழிற்சாலை. அந்த ஸ்டார்ச்சிலிருந்து தயாரிக்கின்ற குளுகோஸ் தொழிற்சாலையை ராசிபுரத்தில் ஆரம்பிக்க வேண்டும்.

அதேபோல் கோழியைப் பொறுத்தவரையில், கோழியைப் பதப்படுத்தும் தொழிற்சாலையை தற்போது பொள்ளாச்சியிலே ஆரம்பித்து இருக்கிறார்கள். அது தனியார் மூலமாக இருந்தாலும், அரசாங்கத்தின் சார்பிலே - கோழிகள் எல்லாம் கிட்டத்தட்ட 75 இலட்சம் அல்லது 1 கோடியாகக் கூட இருக்கலாம், அந்தக் கோழிகள் எல்லாம் தற்போது வெளி மாநிலங்களுக்குப் போகின்றன - கோழியைப் பதப்படுத்துகின்ற அந்தத் தொழிற்சாலையை ராசிபுரத்திலே அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், 4, 5 கோரிக்கைகளை வைத்துவிட்டேன். எதுவும் நடக்கவில்லை. ஏன் என்றால், ராசிபுரத்திலே கோழிகள் அதிகமாக இருக்கின்றன. நம்முடைய உறுப்பினர் வீரப்பன் அவர்கள் எதை எடுத்தாலும் ராசிபுரம் வேண்டாம், நாமக்கல் தலைநகராக இருக்கிறது என்று சொல்லி, அனைத்தையுமே அங்கே கொண்டு சென்று விடுகிறார்கள். ஆகவே, முட்டை பவுடர் தொழிற்சாலையை தயவுசெய்து

ராசிபுரம் பகுதிக்குக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் ஒன்றாவது கொடுக்கக்கூடாதா என்று கேட்கிறார். நிச்சயம் ஏதாவது ஒரு தொழிற்சாலை ராசிபுரத்திலே அமைக்கப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களுக்கு நன்றி. நான் கூறிய முட்டை பவுடர் தொழிற்சாலை, குளுகோஸ் தொழிற்சாலை, ஆகியவைகள் எல்லாம் சிறிய தொழிற்சாலைகள். ராசிபுரத்திற்கு ஒரு தொழிற்சாலை கொடுக்கிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே, பெரிய தொழிற்சாலையை, பல ஆயிரம் கோடி ரூபாய் மூலதனத்திலே அமைக்கப்படுகின்ற தொழிற்சாலையை ராசிபுரத்திலே நீங்கள் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் முன்பே கூறியிருக்கிறேன், ராசிபுரம் என்பது ராசி இல்லாத புரமாக இருக்கிறது என்று. எனவே, தொழிற்சாலை எதுவும் அமையாவிட்டால் ராசிபுரம் ராசியில்லாத புரமாக மாறிவிடும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே உள்ள த.மா.கா. கட்சியைச் சேர்ந்த அக்காள் திருமதி பொன்னம்மாள் அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் திரு. சுப்பராயன் அவர்களும், பெரியவர் திரு. லத்தீப் அவர்களும் திரு. கணேசன் போன்றவர்கள் எல்லாம் ஆளும் கட்சியை ஆதரிக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு எல்லாம் கொடுக்கிறீர்களோ, எதிர்க்கட்சியைப் புறக்கணிக்கிறீர்களோ என்றுகூட நினைத்து இருந்தோம். ஆனால், முதல்வர் அவர்கள் உறுதி கூறிவிட்டார்கள். எனவே, ஏதாவது ஒரு பெரிய தொழிற்சாலையை, ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் ராசிபுரத்தில் ஒரு பெரிய தொழிற்சாலையை நீங்கள் உருவாக்கிக் கொடுத்தீர்கள் என்று சொன்னால், அந்தத் தொகுதி மக்கள் - உங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் அங்கே இருக்கிறார்கள், அவர்களும்-நன்றி கூறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், 2, 3 தொழில்கள் எல்லாம் உருவாக்கப்போகிறோம், புதிதாக தொழில்கள் உருவாக்கப் போகிறோம் என்று நீங்கள்



சொல்லியிருக்கிறீர்கள். இதிலே கரும்பைப் பொறுத்தவரையில், தற்போது 5 புதிய தொழிற்சாலைகள் உருவாக்குவதற்கு அனுமதிக்கப்பட்டு இருப்பதாக சொல்லியிருக்கிறீர்கள். இன்னும் 2 தொழிற்சாலைகளை அமைப்பதற்கான கருத்து பரிசீலனையில் இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறீர்கள். கிட்டத்தட்ட 7 தொழிற்சாலைகள் வரும் என்று கூறியிருக்கிறீர்கள். இதைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கரும்பு உற்பத்தியைப் பொறுத்தவரையில், தற்போது அதிகமாக விவசாயிகளுக்குச் செலவாகின்ற காரணத்தால், 5 தொழிற்சாலைகளுக்கும் தேவையான மூலப் பொருளாக உள்ள கரும்பு அதிகமாக உற்பத்தியாக வேண்டும். கரும்பு அதிகமாக உற்பத்தி ஆகவேண்டும் என்றால், அதனுடைய விலையை நீங்கள் கூட்டிக் கொடுக்க வேண்டும். எனவே, விலையை அதிகமாக உயர்த்திக் கொடுத்தால்தான் கரும்பினை அவர்கள் அதிகமாகப் பயிரிடுவார்கள். அதன் பயனாக இந்த 5 தொழிற்சாலைகளுக்கும் நிறைய கரும்புகள் கிடைக்கும் என்று கூறிக் கொண்டு, பெரிய தொழிற்சாலை என்னுடைய தொகுதியிலே ஆரம்பிக்கப்படும் என்று கூறிய காரணத்தால் - இன்னும் நிறைய பிரச்சினைகள் இருந்தாலும் நான் அவற்றை எல்லாம் பிறகு பேசிக் கொள்கிறேன் என்று கூறிக்கொண்டு - நன்றி தெரிவித்து, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

***திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பை நாம் திறந்து பார்த்தால், மகிழ்ச்சிக்கு பதிலாக அதிர்ச்சிதான் ஏற்படுகிறது.

*பிற்பகல் 12-05*

எடுத்த எடுப்பிலேயே தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலுள்ள முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்ந்து வந்தது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இடையிலே வந்தவர்கள் பொருளாதாரத்தை எடைபோட்டுப் பார்க்காமல் தங்களைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருந்த காரணத்தால் தமிழ்நாடு ஒரு காலத்தில் தொழில் துறையில் முன்னணியில் இருந்தது என்ற புகழை இழந்து, இந்தக் குறிப்பில் முன்னணியில் இருந்தது, அப்படி திகழ்ந்து வந்தது என்று கடந்த கால நிகழ்ச்சியாக அது குறிக்கப்படுவது வேதனைக்குரிய ஒன்று.

பொதுவாக, தொழில் துறையை முன்னேற்றுவதற்கான வாய்ப்புகள் எல்லாம் வேறு மாநிலங்களை ஒப்பிடும்போது மிக அதிகமான வாய்ப்புகள் நம்முடைய தமிழகத்தில் இருக்கின்றன. ஆனால் கடந்த காலத்தில் இருந்தவர்கள் இத்துறையை முறையாகக் கையாளாமல், ஏன் இந்தத் துறையின் முன்னேற்றத்தைப் பற்றியும் சிந்திக்காமல், தனிப்பட்ட முன்னேற்றத்தையே சிந்தித்துக்கொண்டிருந்த காரணத்தினால், இன்றைக்கு இந்தக் குறிப்பில் திகழ்ந்து வந்தது என்ற ஒரு சொற்றொடர் வருகிறது. இருந்தாலும் அடுத்து வருகின்ற வரிகளில் நமக்கு தெம்பு ஏற்படுகிறது, மகிழ்ச்சி ஏற்படுகிறது. இந்த எட்டு மாத காலத்தில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பல்வேறு நிறுவனங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, இந்த நாட்டு நிறுவனங்கள் மட்டுமல்ல, வெளிநாட்டு நிறுவனங்களோடும் முறையாக பேச்சுவார்த்தை நடத்தி, வெளிநாட்டுக்காரர்களும் தமிழகத்திற்கு வந்தால் நாம் முன்னேற்றப் பாதையில் நடை போடமுடியும், வளம் பெறுவோம், வாழ்வு பெறுவோம் என்ற புதிய நம்பிக்கை பெற்றிடும் வகையில் இந்த எட்டு மாத காலத்தில் பல ஆயிரம் கோடி ரூபாய் மூலதனம் கொண்ட தொழிற்சாலைகள் இன்றைக்குத் தமிழகத்திலே உருவாகி வருகின்றன.

நான் சென்னையிலேயிருந்து என் தொகுதிக்கு, வாணியம்பாடிக்கு போகும்போதெல்லாம் ஒரு காலத்தில், எட்டு மாதங்களுக்கு முந்தி வெறிச்சோடிக் கிடந்த நிலங்கள் எல்லாம் இப்போது ஆக்கிரமிக்கப்பட்டு அல்ல, 'ஆக்குபை' (occupy) செய்யப்பட்டு, புதிய தொழிற்சாலைகள் வழி முழுவதும் ராஜபாட்டையைக் கடக்கும்போது கம்பீரமாக உருவாகி வருகின்றன. நான் முதலமைச்சரைப் பாராட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

*பிற்பகல் 12-10*

இங்கே நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் நேற்றையதினம் பேசும்போதுகூட தெளிவாகக் குறிப்பிட்டார்கள். இந்த மாநிலத்திற்குச் சென்றால், தமிழ் மாநிலத்திற்குச் சென்றால், தொழிற்சாலைகளை நாம் நிம்மதியாக நடத்தமுடியும், அதற்கான சாதனங்கள் மட்டுமல்ல, சாதகமான சூழ்நிலையும் இருக்கிறது, நம்முடைய பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு, நமக்கு வாய்ப்புகளையும், வசதிகளையும் செய்து தருகிற ஒரு அரசும் தமிழகத்தில் புதியதாக பொறுப்பேற்று இருக்கிறது என்ற ஒரு தைரியத்தில், நம்பிக்கையில் எதிர்பார்க்கப்படாத நாடுகளிலிருந்து எல்லாம், மாநிலங்களிலிருந்து எல்லாம் தமிழகத்திற்கு இன்றைக்குத் தொழிற்சாலைகளைப் புதியதாக உருவாக்குவதற்கு வந்து





கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர் சொல்லும்போது கேட்பதற்கு இனிமையாக இருந்தது. கேட்பதற்கு மட்டுமல்ல, தொழிற்சாலைகள் உருவாகி வருவதைப் பார்ப்பதற்கும் மகிழ்ச்சியாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் பேசும்போது, கனத்த இதயத்தோடு பேசுகிறேன் என்று குறிப்பிட்டார்கள். கனத்த இதயத்தோடு பேசுவதற்கான சூழ்நிலை நாட்டிலே உருவாக்கப்பட வேண்டும் என்று சிலபேர் கருதியிருக்கக்கூடும். ஆனால், நம்முடைய மரியாதைக்குரிய மக்கள் தலைவர் திரு. ஜி.கே.எம். அவர்களும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் டெல்லிப் பட்டினத்தில் ஒரு சுமூகமான சூழ்நிலையை உருவாக்கிவிட்டுத்தான் இங்கே வந்திருக்கிறார்கள். அனைவரும் சேர்ந்து ஒரு புதிய ஆட்சித் தலைவரை டெல்லியில் அமர்த்தி விட்டுத்தான் வந்திருக்கிறார்கள். அதிலே டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியோ, அதே அளவுக்கு மகிழ்ச்சி நம்முடைய ஐயா மூப்பனார் அவர்களுக்கும் உண்டு என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. நாட்டின் ஸ்திரத்தன்மை காப்பாற்றப்பட வேண்டும். வகுப்புவாத சக்திகள் தலையெடுத்து வரும்போது, அவர்கள் போட்ட திட்டங்களை, ஐயா மூப்பனார் போன்றவர்களும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் போன்றவர்களும் இன்றைக்கு தவிடுபொடியாக்கி, தனிப்பட்ட ஆசாபாசங்கள் எதுவும் இதிலே இல்லை என்பதை நிரூபித்திருக்கிறார்கள். எனவே, ஆசைகள், நிராசைகள் என்ற பேச்சுக்கே இடமில்லை. நம்முடைய ஆசைகள் எல்லாம் வகுப்புவாத சக்திகள், பாசிச சக்திகள், நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய மதச்சார்பற்ற சக்திகளை உடைத்து, அவர்களுக்கு இடையே இருக்கக்கூடிய ஒற்றுமையைக் குலைக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கின்ற சக்திகளுக்கு நாம் சரியான பதிலடி கொடுத்து, நமக்கும் ஒற்றுமையோடு செயல்படுகிற தன்மையுண்டு, அந்த உணர்வு உண்டு, அப்படி நடந்து கொள்கின்ற தெளிவு உண்டு, யாரும் எதிர்பார்க்கிற அளவுக்கு நம்முடைய அணியில் எந்தப் பிரிவும் இல்லை, நாம் எல்லாம் தனித்தனியாக சிந்திக்கவில்லை, ஒன்றுபட்டு சிந்திக்கின்றோம் என்பதற்கு இலக்கணம் வகுக்கக்கூடிய வகையில் ஐயா மூப்பனார் அவர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இன்றைக்கு இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய அளவிற்கு நடந்திருக்கின்றார்கள். தமிழகத்திற்குக் கிடைத்ததா, இல்லையா என்பதைப்பற்றி எல்லாம் அவர்கள் சிந்தித்துப் பார்த்திருக்கிறார்கள். ஆனால் கிடைக்கவில்லை என்பதால், ஆசைகள்,

நிராசைகளுக்கெல்லாம் ஆளாகாமல், இந்தியாவில் ஒரு ஸ்திரமான ஆட்சி ஏற்பட்டால், அது நம் அனைவருடைய வெற்றியாகும் என்ற நிலையிலேதான்—அவர்களே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தள்ளாத வயதில் என்று சொன்னார், சிரித்துக் கொண்டார், இந்த வயதிலே என்று சொன்னார், முதலமைச்சர் அவர்களுக்குத் தள்ளாத வயது என்று சொல்வதை நான் எப்போதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். எங்களைப் போன்றவர்கள் எல்லாம் இன்றைக்குத் தள்ளாதவர்களாகக் காணப்படுகின்றோம். ஆனால், முதலமைச்சர் அவர்கள் வேலை என்று வந்துவிட்டால், கடமை என்று வந்துவிட்டால், அவர் 25 வயது வாலிபராக மாறிவிடுவார் என்பதை டெல்லியிலே நாம் பார்த்தோம். (மேசையை தட்டும் ஒலி) எனவே, நான் தெளிவாகச் சொல்கிறேன். நமக்கு ஆசை இருந்தது, எனக்குக்கூட பெரிய ஆசை இருந்தது. நம்முடைய தமிழகத்தைச் சார்ந்த ஒரு தலைவர், இந்தியாவினுடைய பிரதமராக வர வேண்டும் என்பதில் எங்களுக்கு ஆசை இருந்தது. ஆனால், நிராசை எங்களை ஆட்கொள்ளவில்லை. ஏனென்றால், வென்றது, இந்தியா. மதச்சார்பற்ற தன்மை வென்று இருக்கிறது. எனவே, மதச்சார்பற்ற அரசாங்கத்தினுடைய வெற்றியிலேதான் ஐயா மூப்பனார் போன்றவர்கள் எல்லாம் அவர்களுடைய வெற்றியைக் காணக்கூடிய மனப்பக்குவத்தை பெற்றவர்கள். எனவேதான், இந்த வெற்றி தமிழகத்தினுடைய வெற்றி என்பதை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். ஒரு நிலையான ஆட்சி தொடர்வதற்கு நாம் வழிவகுத்துத் தந்திருக்கிறோம். தென்னகம் வழி வகுத்திருக்கிறது, ஆந்திராவும் முன்னணியில் இருந்திருக்கிறது. தமிழகத்தின் முதலமைச்சர்தான் இதிலே ஆர்ப்பாட்டம் இல்லாத பேச்சுக்களை நடத்தி, யாருக்கு எந்தப் பொறுப்பு கொடுக்கப்பட்டால் சிறப்பாக இருக்கும் என்பதையெல்லாம் விளக்கிச் சொன்ன பிறகும், மாறுதலான ஒரு சூழ்நிலை வந்தபோது, நாம், தமிழகம் உள்ளிட்ட இந்தியா வெல்லட்டும், மதச்சார்பற்ற தன்மை வெல்லட்டும் என்று இருபெரும் தலைவர்களும் முடிவெடுத்துக் கொண்டதன் விளைவாக இன்றைக்கு ஒரு சுமூகமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் நம்முடைய அருமை சகோதரர் மாண்புமிகு திரு. அழகிரி அவர்களுக்குக் கூறிக்கொள்வது, கனத்த இதயம் நமக்குத் தேவையில்லை. ஏனென்றால் ஆசைகளை எல்லாம் நாம் நிராசைகளாகவும் கருதவில்லை, இந்தியாவினுடைய எதிர்பார்ப்பு பொய்ப்பிக்கப்படவும் இல்லை, இன்னும் தமிழகத்தினுடைய எதிர்பார்ப்பு பொய்ப்பிக்கப்படவில்லை என்ற அளவிற்கு, நமக்கு இதிலேயும் ஒரு மகிழ்ச்சி இருக்கிறது.



பிற்பகல் 12-15

நம்முடைய தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைமை—நிச்சயமாக அவர்கள் அன்று இருந்த சூழ்நிலையிலே ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். எடுத்துவிட்டு இப்போது தமிழகத்தினுடைய மக்கள் உணர்வுகளை அறிய வேண்டும் என்று ஜனநாயக முறையிலே திரு. ஜி.கே.எம். அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். தமிழகத்தினுடைய மக்களில் ஒருவனாக நான் சொல்லிக்கொள்வது இந்த அவையிலே நம்முடைய 4 அமைச்சர்கள் - நாம் ஏற்கெனவே 8 பேராக இருந்தோம்—தமிழகத்தின் சார்பாக 4 அமைச்சர்கள் இன்றைக்கு அமைச்சரவையில் இல்லை என்பது வேண்டுமானால் எனக்குக் கொஞ்சம் கனத்த இதயத்தை ஏற்படுத்துகிறது. ஆகையினால் அந்த 4 அமைச்சர்களும் தங்களுடைய பணியைத் தொடர. அதுவும் குறிப்பாக இன்றைக்கு நாடு போற்றும் நல்ல நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து விழலுக்கு இறைத்த நீராக அது போகக்கூடாது; தமிழகத்தின் சார்பாக நிதிநிலை அறிக்கையை இந்த அவைக்குச் சமர்ப்பித்து ஒரு புதிய பொருளாதார கொள்கைக்கு, ஒரு புதிய வளமான வாழ்வுக்கு வழி வகுத்தவர்கள் தமிழர்கள்; அதை நடுவிலே விட்டுச் செல்லவில்லை என்பதை நிலைநாட்டும் வகையில் ஐயா மூப்பனார் அவர்களும் தன்னுடைய தீர்மானத்தை, முடிவை மறுபரிசீலனை செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஏற்கெனவே அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாகவும் இந்த வேண்டுகோளை நான் இந்த அவையின் உணர்வாக திரு. மூப்பனார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தொழிற்சாலைகள். பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு) ஏனென்றால், இந்த நிலை நீடித்தால்தான் தொழிற்சாலை வளரும், வாழும் என்பதற்காக இதையும் கொஞ்சம் சொல்லி வைத்துவிட்டேன். வேறு ஒன்றும் இல்லை. தொழிற்சாலைகள் பல மூடப்பட்டிருக்கின்றன. இங்கேகூட பேசப்பட்டது. 10 மணி நேரம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசினார்கள், பின்னி தொழிற்சாலையைத் திறப்பதற்காக. ஸ்டாண்டர்டு தொழிற்சாலையைப் போல பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. என்னுடைய மாவட்டத்திலே வேலூரை எடுத்துக்கொண்டால் அரியூர் பஞ்சாலை; அது பல ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கிறது. என்ன ஆனது அரியூருக்கு என்று தெரியவில்லை. அரியூரிலே அரிய காரியம் நடைபெறும் என்று நாங்கள்கூட

எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறோம். மாண்புமிகு நம்முடைய கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்கூட தன்னுடைய குறையை, தன்னுடைய துறையில் இருக்கின்ற ஆதங்கத்தை எல்லாம் எடுத்துச் சொன்னபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை கொண்டு கனிவோடு 19 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த அவையிலேயே அந்த அறிவிப்பு வந்தது. நான் தெரிந்துக்கொள்ள விரும்புவது இந்த 19 கோடி ரூபாய் முதலமைச்சர் அவர்கள் அளித்தார்களே, அதிலே எங்களுக்கு எந்தப் பங்கும் இல்லையா ? அரியூரிலே வந்து உட்காராதா ? அது எப்போது திறக்கப்படும் என்பதை தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

அதோடு, வட ஆற்காடு மாவட்டத்தில் தோல் தொழிற்சாலை தவிர பெரிய தொழிற்சாலைகள் எதுவுமே இல்லை. ராசிபுரத்தார் பேசினார். எங்கள் தொகுதியிலே ஒரு தொழிற்சாலையும் இல்லை என்றார். ஆனால் என் தொகுதியிலும் இந்த தோல் தொழிற்சாலைகளைத் தவிர வேறு எந்த தொழிற்சாலையும் இல்லை. கச்சா பொருள் எங்கே கிடைக்கின்றதோ - மூலப் பொருள் - அங்கே, அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதுதான் நலம் என்ற ஒரு அடிப்படையிலே நான் சந்தன தொழிற்சாலை கேட்டுக்கொண்டேன். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை விட்டுவிட்டு நான் கேட்ட இன்னும் 2,3 கோரிக்கைகளை அருள்கூர்ந்து ஏற்றுக் கொண்டார். சந்தன தொழிற்சாலையை ஏற்படுத்த முடியாவிட்டாலும் ராசிபுரத்தாருக்கு ராசியான ஒரு சொல்லை சொன்னதைப் போல தயவு செய்து நான் கேட்டுக்கொள்வது - ஜவ்வாது மலையிலே இருக்கக்கூடியவர்களுக்கு எந்த வேலையும் இல்லை. இப்போது சந்தன மரமும் அழிந்துவிட்டது. காடுகளும் அழிந்து விட்டன. அங்கே வாழக்கூடிய மக்களுக்கு வேறு .வேலை இல்லை. எனவே அவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் வகையில் தயவு செய்து முதலமைச்சர் அவர்கள் சந்தன தொழிற்சாலை இல்லாவிட்டாலும் வேறு தொழிற்சாலையை, அவர்களே விரும்பித் தருகிற தொழிற்சாலை ஏதாவது அங்கே வாய்ப்பு இருந்தால் அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நான் கொஞ்சம் அரசியல் பிரச்சினையைப் பேசினேன். தோல் தொழிற்சாலைகள் குறித்து முத்தரப்பு மாநாட்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்புக்கு வந்தவுடன் நடத்தினார்கள். அதிலே அவருக்கு இருக்கிற அக்கறையை நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம்; மிகவும் நன்றி செலுத்துகிறோம்.



பிற்பகல் 12-20

இன்றைக்கு அவருடைய குறுக்கீட்டின் காரணமாக மூடப்பட்ட தொழிற்சாலைகள் பல திறக்கப்பட்டு இருக்கின்றன. இருந்தாலும் பல தொழிற்சாலைகள் இன்றைக்கும் மூடப்பட்டிருக்கின்றன. எனவே, அந்தத் தொழிற்சாலைகளும் திறக்கப்பட்டால் நமக்கு வேலைவாய்ப்புப் பெருகும். இழந்த வேலை வாய்ப்புகளை மீண்டும் பெறுகின்ற வகையில் அந்த வேலை வாய்ப்புகள் நமக்கு கிடைக்கும். எனவே, அந்தத் தொழிற் சாலைகளை எல்லாம் திறக்கிற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வற்புறுத்துவார்கள். ஆனால் அவர்களுக்கு இருக்கின்ற இயலாமை காரணமாக சிறு தொழில்களை நடத்திக் கொண்டிருப்பவர்கள் அதை முறையாக ஏற்படுத்த முடியவில்லை. ஏற்கெனவே மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் சேர்ந்து இந்தக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதற்கு அவர்களுக்கு மானியம் அல்லது உதவி என்ற வகையில் வரும்போது 25 சதவீதம் அல்லது 50 லட்சம் ரூபாய் whichever is higher என்ற முறையிலே ஒரு ஜி.ஓ.வை போட்டிருந்தார்கள். அதிலே 25 சதவீதத்தை வையுங்கள். 50 லட்சம் ரூபாய் என்று தயவுசெய்து வற்புறுத்தாதீர்கள் என்று மத்திய அரசிடம் முறையிட்டுக்கொண்ட போது அவர்களும் அதைப் பரிவோடு கவனித்து புதிய ஜி.ஓ.வைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அப்படி போடும்போது 25 சதவீதத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், Provided the State Government also gives a matching grant அப்படி ஒரு கண்டிஷனை, ஒரு நிபந்தனையை அவர்கள் போட்டிருக்கிறார்கள். எனவே, அந்த நிபந்தனையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரையிலே ஜி.ஓ.வாக வெளிவரவில்லை என்று நா்ன் கருதுகிறேன். எனவே, அதுகுறித்து ஆலோசனைச் செய்து உடனடியாக அந்த ஜி.ஓ.வை, மத்திய அரசாங்கத்தினுடைய ஜி.ஓ.வை மாநில அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாகைப் பகுதியைப் பற்றி நம்முடைய நண்பர் திரு. நிஜாமுதீன் கேட்டுக்கொண்டிருக்கிறார். எவ்வளவோ தொழிற்சாலைகள் அங்கேயிருந்து திருச்சிக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. திருச்சி-பொன்மலைக்கு, நாகையில் இருந்த ரயில்வே ஸ்பேர்ஸ் உற்பத்தி தொழிற்சாலை மாற்றப்பட்டிருக்கிறது. அதைப்போலவே ஸ்டீல் ரோலிங் மில் அதுவும் இன்றைக்கு மூடப்பட்டிருக்கிறது. நாகை துறைமுகம் செயலற்று இருக்கிறது. சரக்குக் கப்பல்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

சிதம்பரம் போன்ற கப்பல்கள் எல்லாம் நின்று போயிருக்கின்றன எனவே இந்தச் சூழ்நிலையில் கடைமடைப் பகுதியில் அடிக்கடி மழை இல்லாமல் போகிறது. வீசினால் புயல் வீசுகிறது, வந்தால் அதிகமான தண்ணீர் வருகிறது, அழிவை ஏற்படுத்துகிறது, இல்லாவிட்டால் தண்ணீர் இல்லை. எனவே விவசாயமும் பாதிக்கப்படுகிறது என்பது அவருடைய ஒரு குறையாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே அங்கே பெட்ரோலியம் கிடைக்கின்ற காரணத்தால் அதை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலையை ஏற்படுத்த முடியும். இயற்கை வாயு, எரிவாயு கூட அந்தப் பகுதியில் கிடைக்கிறது. சிலிகேட் தயாரிக்க மணல் கிடைக்கிறது, உப்பு, கெமிக்கல், சால்ட் கிடைக்கிறது, வைக்கோல், தவிடு, உமி நிறைய கிடைக்கிறது. துறைமுகமும் உள்ளது. இரயில்வே வசதி உண்டு, திரண்ட நீண்ட கடற்கரை இருக்கிறது. இவைகளை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு புதிய தொழிற்சாலைகளை அங்கே உருவாக்கவேண்டுமென்று அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேச முடியாத காரணத்தால் (மணியடிக்கப் பெற்றது) என் மூலமாக இவைகளைத் தெரிவிக்கச் சொல்லியிருக்கிறார்.

எனவே, நான் கேட்டுக்கொள்ளுவது தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாணியம்பாடி தொகுதியைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கின்ற, நலிந்து போய் விட்டு இருக்கின்ற, மூடப்பட்டு இருக்கின்ற தோல் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு வழி வகுக்க வேண்டும்.

ஆம்பூர்-வாணியம்பாடி இடையே நிறைய வாய்ப்புகள் இன்றைக்கு இருக்கின்றன. இந்த இரண்டு நகரங்களையும் இணைக்கும் வகையில் தொழிற்பேட்டைகளை ஆம்பூர்-வாணியம்பாடிக்கு இடையே ஏற்படுத்தவேண்டும். அதற்கு வாய்ப்புகள், வசதிகள் நிறைய இருக்கின்றன என்பதை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பொதுவாக, நம்முடைய நாடு முன்னேற வேண்டுமானால் நல்லிணக்கம் தேவை என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் அழகாக எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு நாட்டில் நல்லிணக்கத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கக்கூடியவர்கள், நாட்டின் மீது பற்று கொண்டவர்கள் யார் என்று சொன்னால் (மணியடிக்கப்பெற்றது) தேவையில்லாத வாதங்களை வைத்துக்கொண்டு சமூகங்களுக்கு இடையே மாச்சரியத்தை உருவாக்குபவர்கள் நாட்டின் மீது பற்றுக் கொண்டவர்கள் அல்ல.



பிற்பகல் 12-25

நாட்டில் முழுமையான அமைதி நிலவி, சமூக நல்லிணக்கம் ஏற்பட்டு, தொழில் துறையிலும் அமைதி ஏற்பட்டு, தொழில் துறையில் சுமுக நிலை ஏற்பட்டால்தான் நாடு முன்னேறும். அதைக் கவனத்தில் வைத்துச் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**திரு. சி. வேலாயுதன் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதச் சார்பற்ற தன்மை என்று சொன்னால் என்ன, மதச் சார்பற்ற அரசு என்று சொன்னால் என்ன என்பதை அறிய விரும்புகின்றேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தனிப்பட்டவர்களுக்கு மதங்கள் உண்டு; அதைப் பேணுவதற்கும் உரிமை உண்டு. ஆனால் நம்முடைய அரசுக்கு, அது மாநில அரசாக இருந்தாலும், மத்திய அரசாக இருந்தாலும், அரசுக்கு மதம் இல்லை என்று பொதுவாக ஏற்றுக்கொள்வதுதான் மதச்சார்பற்ற தன்மை, செக்யூலரிசம் என்பது. (குறுக்கீடு) அரசமைப்புச் சட்டத்திலே அது இருக்கிறது என்பதை என்னுடைய நண்பர், உடன்பிறப்பு வேலாயுதன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, (குறுக்கீடு) போதும் உட்காருங்கள். திருமதி ஆன் டி' மான்டி. Five minutes only.

* **TMT. ANNE DE MONTE:** Hon'ble Deputy Speaker Sir, after nearly three decades of being in the Industrial Backwardness, Tamil Nadu has certainly emerged as one of the leading industrialised States in the country. This is of course subject to Memorandum of Understanding for a maximum amount, being implemented. We are in a business which dominated all Industrial activities, i.e., automobiles industry. We are in a very happy position of being the Auto Production Hubs not only of India but Asia as well. If we consider the investment inflows in the automobile industries of the world's best manufacturers, the Chennai Projects will produce vehicles for both domestic and export markets elsewhere. Alongside the manufacture of automobiles, we have some of the best Ancillary Units which are of world class. Thanks to the foresight of our Hon'ble Chief Minister, we have

launched Operation Rapid Industrialisation of Tamil Nadu. The best thing we have over the years is transparency in the Government dealings. There is no doubt that we are going to emerge as Detroit of Asia. To make this a reality, we have (1) infrastructure, (2) offered land (3) Uninterrupted Power supply and water supply, (4) sales tax concessions, and (5) Concessions on duty for captive Power generation. But all this is not enough. What we have to do is that we must free these projects from bureaucratic hassles. It is these bureaucratic red tapism that will make or mar our efforts. The phenomenon of the single window clearance which is mentioned for the speedy implementation of projects,—both for large and medium scale — is very much appreciated. The industrial development must spread to the other parts of the State as well. Also the automobile ancillary industries will not only support the new projects but will benefit from them. All of them augurs well for the Indian consumers and the manufacturers as well.

Apart from the automobile industries, there is the general need to encourage large and medium scale industries. So, this is an era of entre-preneurs. As many as 700 companies have been registered at the office of Registrar of Companies. Also new licences for establishments have been registered by Chennai Corporation for about 4,000 units annually. Among the new forms of business are those pertaining to Computers, Software Development, Office Equipments, Consumer durables and vide range of automobile components. In the case of Small Scale Industries, I would like to divert to some complaints. The services rendered by ESI Hospital are poor and fall short of the expectations of the average worker. Let the ESI stick to insurance only with reduced fees allowing the worker to get his medical relief from other sources.

பிற்பகல் 12-30

Another anomaly is with regard to property tax. Let the Corporation levy property tax depending on size, location of the unit. The licence based on number of employees, horse-power installed should be the concern of the factory inspectorate. This overlap should be removed.

Coming to young entrepreneurs, the glamour of securing jobs has gone. More youngsters are coming out with business ventures. This is the course for computer age. As we recently acquired knowledge that 80 computer companies have opened out in the city of Bangalore, we wish that something



like this will happen in Tamil Nadu as well. The increased rise of computer has brought a new generation of young entrepreneurs. There is a perceptible change in the thinking pattern and more people are eager to take up some enterprise. This change in attitude is very clear. (Gong was sounded) For Tamil Nadu to make the most of this 'New Thinking', what we require is—adequate infrastructure, less governmental interference and overall acceptance towards enterprise.

Last but not the least, I would like not to leave behind a woman entrepreneur who also is concluded in the 'New Wave'. We have to overcome various odds to emerge as a successful woman entrepreneur. An important hurdle to overcome is, access to institutional finance by women. In a tight money market, women applicants for bank loans are somehow considered less credit worthy than men.

**MR. DEPUTY SPEAKER :** The time allotted to you, is already over. Please finish your speech soon.

**TMT. ANNE DE MONTE :** Banks are more reluctant to lend to women and in case both the applicant and the collateral security are women, then the possibility of getting a loan is 'Nil'. These are some of the vagaries that confront the budding industrialist. It is high time these hurdles are removed once and for all. The future for industries in Tamil Nadu is excellent. Transperancy and speed should be the watchword. Thank you.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. டி. மணி.

**திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சிக்கான மானியத்தின் மீது சுருக்கமாகச் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். எனக்குக் கொடுத்திருக்கிற நேரம் என்பது மிகக் குறைந்த நேரம். அந்தக் குறைந்த நேரத்திலே சில விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்தினுடைய பிரச்சினைகள் உள்ளன. நம்முடைய இந்தியாவிலேயே மிகச் சிறந்த மாநிலமாக நம்முடைய மாநிலம் வளர வேண்டுமென்ற அரசின் நோக்கத்தை வரவேற்கிறேன். தமிழக அரசு அன்னிய முதலீட்டின் மூலமும், மத்திய அரசு தொழில்கள் ஆரம்பிப்பதன் வழியாகவும், ஆரம்பிக்கப்பட இருக்கும் தொழில்கள் மூலமாக வேலைவாய்ப்பை அதிகப்படுத்தியாக வேண்டும். தொழில் வளர்ச்சிக்குத்

தேவையான தட்டுப்பாடற்ற மின்சாரம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், அதிகமான சாலைகள், சுற்றுப்புறச் சூழல், முறையாக வடிவமைக்கப் பட்ட தொழிற்கூடங்கள், தொழில் வளாகங்கள், தொழில் நகரங்கள் இவைகளை உருவாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்வதாக கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவைகளையெல்லாம் நிறைவேற்ற போதிய நிதியாதாரம், திறமைமிக்க நிர்வாகம் தேவைப் படுகிறது. தொழில் முன்னேற்றத்திற்குப் பன்னாட்டு நிறுவனங்கள், இந்திய நிறுவனங்கள், வெளிநாட்டில் குடியிருக்கும் இந்தியர்கள், தொழில் முனைவர்கள், கூட்டுறவு நிறுவனங்கள் உட்பட அனைவரையும் கவரக்கூடிய வகையில் அரசு கவனம் செலுத்துவதாகத் தெரிகிறது. ஆனால், அரசுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் சேர்த்து அதிக தொழில்கள் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். தனியார் துறையில் அரசு உதவி பெற்று தொழில் ஆரம்பித்து, சில தொழில் நிறுவனங்கள் இடையிலே விட்டுவிட்டு அரசுப் பணத்தை சுருட்டிக்கொண்டு செல்கின்ற ஒரு போக்கு இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு நூற்பாலைகளை, சரிவர நடத்த முடியாத ஆலைகளைத் திறக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிலாளர்கள் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். தொழில் வளர்ச்சி வளாகங்களைத் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய, பகுதிகளில் அமைக்க வேண்டும். தமிழகத்தில் சுரங்கத் துறையைப் பலப்படுத்தி புதிய கனிம வளங்களைக் கண்டுபிடிக்க அதிகக் கவனம் செலுத்த வேண்டும். நவீன தொழில் நுட்பங்களையும், விஞ்ஞானத்தையும் ஏற்கெனவேயுள்ள தொழில் வளர்ச்சியில் புகுத்தவும் அதன்மூலம் தொழில் வளர அதிக கவனம் செலுத்தவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

அடுத்து, என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், குறிப்பாக இதுவரையிலும் அரசுத் துறையிலே எந்தத் தொழிற் சாலையும் இல்லாத மாவட்டமாக அது இருக்கிறது . பல ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு நூற்பாலை ஆரல்வாய்மொழியிலே இருக்கின்றதே தவிர, வேறு எந்தத் தொழிற்சாலையும் இல்லாத மாவட்டமாக இருக்கின்றது. கடந்த நிதிநிலை அறிக்கையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்



ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அந்த மாவட்டத்தில் கிடைக்கின்ற மூலப் பொருள் இரப்பர் ஆகும். ஏறத்தாழ வனத் துறையின் மூலமாக அங்கு 1.5 இலட்சம் டன் இரப்பர் பால் கிடைக்கின்றது. அதைப் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலையை உருவாக்குவதற்காக வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அதற்குத் தேவையான இடத்தைத் தேர்வு செய்வதற்கான வழிவகைகளைப் பற்றிச் சொன்னார்கள். அதன் அடிப்படையிலே அந்த மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களை அந்த நிறுவனம் அணுகி, அதற்கான இடத்தைக் கண்டு பிடிப்பதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. அதற்குப் பின்னால் வருகின்ற நிலை என்னவென்று சொன்னால், அந்த வெளிநாட்டு நிறுவனம் அதைத் துவங்குவதற்குத் தயாராக இல்லை என்பதுதான். ஆகவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு அந்த வெளிநாட்டு நிறுவனம் தயாராக இல்லையென்று சொன்னால், நம்முடைய மாநில அரசும் மத்திய அரசும் சேர்ந்து அந்தப் பகுதியிலே ஒரு இரப்பர் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படித் தொடங்கினால், அதிலே டயர் மற்றும் டியூப் போன்ற பொருட்களை உற்பத்தி செய்கின்றபோது, நம்முடைய மாநிலத்திலே ஓடுகின்ற அரசு பொது நிறுவனங்களான போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான டயர் மற்றும் டியூப் ஆகியவற்றை அளிப்பதற்கான ஒரு வாய்ப்பைக்கூட உருவாக்க முடியும். அந்த வகையிலே மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் சேர்ந்து அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலையை உருவாக்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நீண்டகாலமாக அந்தப் பகுதியிலே தொழிற்சாலை இல்லையென்ற அந்தக் குறைபாட்டைத் தவிர்க்க ஆவன செய்ய வேண்டும் என்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மணவாளக்குறிச்சியிலே (மணியடிக்கப்பெற்றது)—இரண்டு நிமிடம் கொடுங்கள்.—கிடைக்கின்ற மணலை அன்னிய நாடுகளுக்கு நாம் ஏற்றுமதி செய்கின்றோம். அங்கு கிடைக்கின்ற கழிவு மணல் என்று சொல்லப்படுகின்ற பொருளிலிருந்து பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். சாதாரணமாக Titanium product என்று சொல்கின்ற அந்தப் பொருளை வைத்துக்கொண்டு, சிறு தொழில் மாதிரி குறைந்தபட்சம் 100 தொழிலாளிகளுக்கு வேலை கிடைக்கக்கூடிய

216625

அளவிலாவது ஒரு தொழிற்சாலையை உருவாக்குவதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது போன்று, தேங்காய் மட்டை நார், கொல்லங்கோடு கடைசியிலே, அதாவது நீரோடியிலிருந்து ஈத்தாமொழி வரையிலும் தேங்காய் மட்டை நாரைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கின்றார்கள். தேங்காய் மட்டை நாரிலிருந்து அவர்கள் தரமான கயிற்றை உற்பத்தி செய்கின்றார்கள். அவர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற வாய்ப்பினைப் பெற்றவர்கள். இருந்தும், வள்ளமடை என்ற அந்த பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியிலே ஒரு சிறிய கூட்டுறவுத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஏற்கெனவே குன்னத்தூர் என்ற இடத்திலே Industrial Estate என்ற ஒரு வளாகம் இருக்கிறது. ஆனால் அங்கே என்ன உற்பத்தி செய்கின்றார்கள் என்று எனக்குத் தெரியாது. ஏற்கெனவே, 1983-ஆம் ஆண்டில் ஒரு கோரிக்கையை நான் இங்கே வைத்திருந்தேன். இரப்பரையும் தேங்காய் மட்டை நாரையும் சேர்த்து மெத்தைகளைத் தயாரித்தால், அவற்றை மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். அப்படி ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிலே தரமான பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். அந்த வகையிலே ஒரு தொழிற்சாலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி, உட்காருங்கள். அடுத்து, டாக்டர் எம். மோசஸ்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி, நான் உங்களை உட்காரச் சொல்லிவிட்டேன், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, திரு. டி. மணி பேசுங்கள்.



**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலையை அமைக்க 100 கோடி ரூபாயில் மதிப்பீடு செய்துள்ளார்கள். அதற்காக 50 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. உடனடியாக அதற்கான வேலைகளை ஆரம்பிக்கவும், அந்த வேலைகளை ஆரம்பிக்கும்போது அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பினைத் தருவதிலேயும் முன்னுரிமை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, இந்திய புவியியல் சர்வே துறையின் டைரக்டர் ஜெனரல் திரு. பி.எஸ்.ராவ் அவர்கள் நம்முடைய பெரியார் மாவட்டத் திலே பவானிசாகர் பகுதியிலேயும், குமரி மாவட்டத்திலே நாகர்கோவில் பகுதியிலேயும் தங்கப்படிவங்கள் உள்ளதாகக் கூறியிருக்கின்றார்கள். அவைகளைக் கண்டறிந்து, அவைகளை அரசுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் எம். மோசஸ்.

பிற்பகல் 12-40

**டாக்டர் எம். மோசஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியத்தைப் பற்றி நான் பேசுவதற்கு முன்பு ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில், அதிலும் குறிப்பாக என்னுடைய நாகர்கோவில் தொகுதிக்குட்பட்ட கீழ்மணல்குடிக்கும் மேல்மணல்குடிக்கும் இடையே ஒரு பாலமும், அமரர் ஜீவா அவர்களுக்கு நினைவுச் சின்னமும் அமைத்துத் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டம் நீங்கள் நினைப்பதுபோல் மிகவும் மட்டமான மாவட்டம் அல்ல, மிகவும் சிறப்பான மாவட்டம் ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'நீங்கள் நினைப்பது மாதிரி' என்று என்னைப் பார்த்துச் சொல்கிறீர்கள். (சிரிப்பு)

**டாக்டர் எம். மோசஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் கனிவளம் நிறைந்த பகுதி என்று சொல்ல வந்தேன். அந்நியச் செலாவணியை ஈட்டித் தரக்கூடிய

பொருட்களான கிராம்பு, வெள்ளை மிளகு, இரப்பர் மற்றும் தேயிலை போன்ற பல பொருட்களை நாங்கள் உற்பத்தி செய்கின்றோம். அதுமட்டுமல்ல, அப்பர்கோதையாறுலிருந்து (ஹைடிரோ எலக்ட்ரிக்) மின்சாரம் உற்பத்தி செய்கின்றோம். எல்லாவற்றுக்கும் மேலாக, எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு நாஞ்சிலார் அவர்களையும், அருமைச் சகோதரர் திரு. சுரேஷ் ராஜன் அவர்களையும் அமைச்சர்களாகத் தந்திருக்கிறோம். ஆனால், எங்கள் மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. எனவே, தயவுசெய்து எங்கள் மாவட்டத்திற்குத தொழில் நிறுவனங்களையும், தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, ஒரு இடத்தில் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு முன்னால், அந்தப் பகுதியின் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுமா, பாதிக்கப்படாதா என்பதைப் பார்த்துத் துவங்கவேண்டும். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், கடந்த ஆட்சியில் நாகர்கோவிலில் 200 ஏக்கர் நிலத்தை முந்தைய அரசு எடுத்துக் கொண்டு, தொழில் துறையில் வளர்ச்சி காணப் போகிறோம் என்று சொல்லிவிட்டு, கடைசியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் அங்கே வீடுகளைக் கட்டுவதாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்லிவிட்டு கடைசியில் கிட்டத்தட்ட பத்து கோடி ரூபாயைச் சுருட்டிவிட்டார்கள். அந்தப் பகுதியைச் சேர்ந்த கட்டாம்விளை, சரக்கல்விளை, வல்லன்குமாரவிளை போன்ற கிராமப் பகுதிகளில் தொழிற்பேட்டை துவங்குவதாகச் சொல்லிவிட்டு பின்னர் வீடு கட்டினால், அந்த வீடுகள் தாங்குமா, அந்தப் பகுதியிலுள்ள மக்கள்தான் அதற்குச் சம்மதிப்பார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எதற்குச் சொல்கிறேன் என்றால், தொழிற்பேட்டைப் பகுதி என்று அறிவித்துவிட்டு வீடுகளைக் கட்ட முடியாது. வீடு கட்டுவதற்கு அனுமதி கேட்டால், அனுமதி கிடைக்காது. எனவே, தயவுசெய்து அந்த 200 ஏக்கர் நிலத்தை மீண்டும் அந்தப் பகுதி மக்களுக்கே திருப்பி ஒப்படைக்க வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அடுத்து, இங்கே பேசிய அருமைச் சகோதரர் மணி அவர்கள் இரப்பர் தொழிற்சாலை அமைத்துத் தரவேண்டுமென்று சொன்னார்கள். நாம் Right to information Act - என்று சொல்கிறோம். நான் ஊருக்குள் போனால், இரப்பர் தொழிற்சாலை என்ன ஆயிற்று என்று மக்கள் கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் பதில் சொல்ல முடியாத நிலையில்



இருக்கிறேன். குறைந்தபட்சம் வெளிநாட்டு உதவியுடன் இல்லாவிட்டாலும், நமது மாநில அரசும், மத்திய அரசும் சேர்ந்து ஒரு இரப்பர் தொழிற்சாலையைக் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஏற்படுத்தித் தரவேண்டும். அங்கே நிறைய இரப்பர் உற்பத்தி செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பதிலைக் கேட்ட பிறகுதானே ஊருக்குப் போகப் போகிறீர்கள். பதிலைக் கேட்ட பிறகு ஊருக்குள் போய் பதில் சொல்லலாம். இப்போது பேசுங்கள். (சிரிப்பு)

**டாக்டர் எம். மோசஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் மிகவும் தாராளமாகக் கிடைக்கக்கூடிய பொருள், கார்னெட் மணல் ஆகும். எங்கு பார்த்தாலும் அது நிறைந்து காணப்படும். எனவே கார்னெட் தொழிற்சாலை ஒன்றை எங்கள் பகுதியில் கட்டாயம் அமைத்துத் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று தேங்காய் நிறைய விளைவதால், தேங்காயிலிருந்து பல பொருட்களைச் செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றையும் ஏற்படுத்தித் தருவதாகச் சொன்னீர்கள். அதையும் சீக்கிரம் ஏற்படுத்தித் தரவேண்டும்.

அதுபோன்று, பனையிலிருந்து பல பொருட்களை நாங்கள் உற்பத்தி செய்கின்றோம். அதற்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். எதற்குச் சொல்கிறேன் என்றால், சமீபத்தில் சில வெளிநாட்டுக்காரர்கள் எங்கள் பகுதிக்கு வந்திருந்தார்கள். அவர்கள் பனங்கற்கண்டை வாங்குவதற்குத் தயங்குகிறார்கள். ஏனென்று கேட்டால், நாம் பதநீரைக் காய்ச்சி பக்குவப்படுத்தும்போது அதில் நூலைக் கலந்துவிடுகிறோம். அது கிரிஸ்டிலைசேஷன் ஆகி பிறகு பனங்கற்கண்டாக வருகிறது. அப்படி வரக்கூடிய பனங்கற்கண்டுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. இருந்தாலும், அதில் நூலைக் கலப்பதால் அவர்கள் வாங்குவதற்குத் தயங்குகிறார்கள். அந்த நூல் அதில் ஒட்டிக் கொண்டுவிடுகிறது. நூல் இல்லாமல் தயாரித்துக் கொடுத்தால் அதிகமாக வாங்குகிறோம் என்று சொல்கிறார்கள். எனவே, இந்தத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் பனைத் தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுத் துறைக் கொள்கைக்கு நாங்கள் விரோதமானவர்கள் அல்ல. பொதுத் துறையும் முக்கியம்தான். ஆனால் அதே நேரத்தில் தனியார் துறையையும் நீங்கள் ஊக்குவிக்க வேண்டும்.

பிற்பகல் 12-45

மேற்கு வங்காளத்திலே மதிப்பிற்குரிய திரு. ஜோதிபாசு அவர்களே தனியார் துறையை ஊக்கப்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே தனியார் துறையை ஊக்கப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆலங்குளத்திலே உள்ள 'டேன்செம்' சிமெண்ட் பேக்டரியில் ஸ்டிரைக் நடக்கிறது. அதனால் தென்மாவட்டங்களில் எந்த வேலையும் நடக்கவில்லை. சிமெண்ட் வரவில்லை, சிமெண்ட் வரவில்லை என்று சொல்கிறார்கள். 'டேன்செம்' சிமெண்ட் பேக்டரி ஸ்டிரைக் என்று சொன்னால் வேறு இடத்திலிருந்து சிமெண்ட் பெற்றுத் தருவதற்கு ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எந்தத் தொழில் வளர வேண்டுமென்றாலும் மின்சாரம் ரொம்ப முக்கியம். இதைப்பற்றிப் பேசுவதற்கே கொஞ்சம் பயமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் தைரியமாகச் சொல்கிறேன். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்று எல்லோருக்கும் கொடுக்கிறீர்கள். அதுமாதிரி தொழிற்சாலைகளுக்கும் கொடுக்க நான் சொல்லவில்லை. டைனி செக்டார், சிறிய தொழிற்சாலைகள், யாராக இருந்தாலும் அவர்களுக்கு மின்சாரக் கட்டணம் வசூலித்துக் கொண்டு மின்சாரம் கொடுக்கலாம். கட்டணம் வாங்காமல் கொடுக்கச் சொல்லவில்லை. ஆனால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். 'டிக்' மற்றும் வேறு நிறுவனங்களிடமிருந்து அவர்கள் 50,000 ரூபாய், 1 இலட்ச ரூபாய் என்று லோன் வாங்கி 'ஜெம் கட்டிங்' அல்லது வேறு ஏதாவது சிறு தொழிற்சாலையைத் துவங்குகிறார்கள். ஆனால் அவர்களுக்கு மின் இணைப்பு கிடைப்பதற்கு 1 வருடம், 1 1/2 வருடம் ஆகிறது. இந்தக் காலத்திற்கு அவர்கள் வட்டி கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே லோன் வாங்கி ஆரம்பிக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுப்பதற்கு வசதி செய்து தர வேண்டும். எல்லா விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் தருகிறோம். எல்லா விவசாயிகளுக்கும் ஏன் இலவச மின்சாரம் தர வேண்டும்? அரசாங்கத்தினுடைய கொள்கையை எதிர்த்துப் பேசுகிறேன் என்று நினைத்துக்கொள்ள வேண்டாம். பாவப்பட்ட, ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரத்தைக் கொடுங்கள். அதற்கு மேலே உள்ள விவசாயிகளுக்கு, மின்சார உற்பத்திச் செலவு ரூ.1.90 என்றிருந்தால், அட்லீஸ்ட். 1 ரூபாயாவது மின் கட்டணமாக வையுங்கள். பெரிய விவசாயிகளிடமிருந்து உற்பத்திச் செலவு முழுவதையும் வாங்கலாம்.



எனக்கு 6 ஏக்கர் வயலும் 9 ஏக்கர் தோப்பும் இருக்கிறது. எனக்கு எதற்கு இலவச மின்சாரம்? எதற்கும் கட்டுப்பாடு வேண்டும். ரேஷன் கார்டுகள் இப்போது கொடுத்துள்ளோம். அதை மூன்று தரமாகப் பிரித்துள்ளோம். மூன்று தரமாகப் பிரித்து ரேஷன் கார்டுகளை வழங்கியுள்ளோம். அதேமாதிரி, விவசாயிகளை 3 தரமாகப் பிரியுங்கள். பெரிய விவசாயிகளிடம் 'மேனுபேக்சரிங் காஸ்ட்' ரூ. 1.90 வசூலியுங்கள். நடுத்தர விவசாயிகளிடமிருந்து ரூ. 1.00 வசூலியுங்கள். சிறு விவசாயிகளுக்கு இலவசமாகக் கொடுங்கள். எல்லோருக்கும் இலவசம் என்றால் தர்மம் செய்வதில் அர்த்தம் இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே இதை உங்கள் மேலான கவனத்திற்கு எடுத்து வருகிறேன்.

மிகவும் பின்தங்கிய மாவட்டமான குமரி மாவட்டத்திற்குக் கருணையுள்ளத்தோடு நல்ல தொழில் திட்டங்களை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே குறிப்பிட்டபடி, அந்த 200 ஏக்கரையும் ஏழையெளிய மக்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தொழில்கள் துறை மானியத்தின் அடிப்படையில், எதிர்க்கட்சியைச் சேர்ந்த, தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் நல்ல விளக்கங்களை வழங்கி, தொழில் தமிழகத்திலே மேலும் வளர, ஆக்கபூர்வமான கருத்துக்களையும் அளித்து, அவற்றைத் தொடர்ந்து இந்த அரசு தொழில் துறையிலே இதுவரை ஏற்றுள்ள, இனியும் ஏற்க இருக்கின்ற திட்டங்களைப் பற்றி எடுத்துக் கூறுகின்ற வாய்ப்பினைப் பெற்று, இந்த அவையில் இப்போது நான் நின்று கொண்டிருக்கிறேன்.

முதலில் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள், இந்த மானியத்திலே உரையாற்றத் தொடங்கியபோது, கனத்த இதயத்தோடு பேசுவதாகக் குறிப்பிட்டு, அவரைப்போலவே நானும் கனத்த இதயத்தோடுதான் இருப்பேன் என்று சொன்னார்கள். ஒருவேளை கனரகத் தொழில்களைப் பற்றியெல்லாம் நாம் பேசவிருக்கிற காரணத்தால், 'கனம்' என்ற சொல் அவருடைய உள்ளத்திலே இடம் பெற்றது போலும். என்னைப் பொறுத்தவரையில் இதயத்தை நான் எப்போதும் கனமாக்கிக்கொள்ள விரும்புபவன் அல்ல; ஆக்கிக் கொண்டவனும் அல்ல. ஏனென்றால் அண்ணா அவர்கள்

மறைந்தபோது, அவருடைய இதயத்தை இரவலாகத் தா என்று கேட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த எதையும் தாங்கும் இதயத்தோடுதான் நான் என்னுடைய பொது வாழ்க்கையை, குறிப்பாக அரசியல் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-50*

"மனச்சாட்சி உறங்கும்போதுதான் மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்பி விடும்" என்ற உரையாடலைப் பூம்புகார் படத்திலே நான் எழுதியிருக்கிறேன். அதை நான் மாத்திரம் அல்ல; எல்லோரும் எண்ணிப் பார்க்கத் தலைப்பட்டால், உண்மை பலகாலம் இருட்டிலே இருக்காது, வெளிச்சத்திற்கு வந்துவிடும். இருள் எப்படிச் சூரியனைத் தொடர்ந்து மூடிக்கொண்டிருக்க முடியாதோ, எப்படியாவது விடியல் வந்தே தீரும் என்ற நிலை இருக்கிறதோ, அதைப்போல, உண்மை வெளிவந்தே தீரும்.

இந்த மானியக் கோரிக்கையிலே, திரு. அழகிரி அவர்களும், இந்திய தேசிய லீக் கட்சியினுடைய தலைவர் திரு. அப்துல் லத்தீப் அவர்களும் எடுத்துரைத்த இரண்டு கருத்துக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்துக்கள்தான். திரு. அப்துல் லத்தீப் அவர்கள், தொழில் துறையைப் பற்றி எடுத்து வைத்த கருத்துக்களைவிட, அரசியல் துறைக் கருத்துக்களையே அதிகமாக இங்கே எடுத்து வைத்தபோதிலும், நாம் எப்படியிருந்தாலும், எந்த நிலையில் இருந்தாலும், இந்தியாவிலே மதச் சார்பற்ற ஒரு அரசு அமைந்திடவும் ஜனநாயக ஆட்சி தொடர்ந்து நடந்திடவும் பாடுபடக்கூடிய அந்தப் பாசறையில்தான் நாம் இருக்கிறோம் என்பதைக் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டியிருக்கிறார். எனவே, விவாதத்தைத் தொடங்கி வைத்த அன்பிற்குரிய திரு. அழகிரி அவர்களுக்கும், தொடர்ந்து சில கருத்துக்களைச் சொன்ன அருமை நண்பர், திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தொழில் துறையைப் பற்றிப் பேசும்போது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உரையாற்றிய திரு. மணி அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உரையாற்றிய திரு. சுப்பராயன் அவர்களும், தமிழகத்திலே பொதுத் துறை நிறுவனங்கள் மேலும் ஊக்கப்படுத்தப்பட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி, அதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள். இந்த மானியக் கோரிக்கைக்கான கொள்கை விளக்கக் குறிப்பிலேயே,



தமிழகத்தில் தற்போது 20,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீட்டுடன் 13 பொதுத் துறை நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும், மேலும், நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம். சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிறுவனம், சேலம் உருக்காலை, இந்தியன் ரேர் எர்த் நிறுவனம் போன்ற பல்வேறு பொதுத் துறை நிறுவனங்களில் சுமார் 16,000 கோடி ரூபாய் மதிப்பில், விரிவாக்கல், உற்பத்தித் திறன் அதிகரித்தல் ஆகிய பணிகளை உடனடியாக மேற்கொள்ள தமிழ்நாடு அரசு மத்திய அரசை வலியுறுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளதை மறந்துவிடக்கூடாது. எனவே, இன்றுள்ள நிலையில், நாம் ஏற்றுக் கொண்டுள்ள புதிய பொருளாதாரக் கொள்கையின்படி தனியார் தொழில்களை ஊக்கப்படுத்துகின்ற அதேநேரத்தில், ஏற்கெனவே கழக அரசு உருவாக்கிய கூட்டுத் துறை, இணைத் துறை போன்ற துறைகளோடு, பொதுத் துறைக்கும் நிச்சயமாக நல்ல இடத்தைத் தரும் என்ற நம்பிக்கையை அனைவரும் பெறலாம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. அழகிரி அவர்கள், ஏற்றுமதிப் பிரச்சினையில் நாம் மிக அடுத்த நிலையிலே இருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். அதிலும் குறிப்பாக, நியூஸ் பிரிண்ட் ஏற்றுமதியை அவர்கள் எடுத்துக்காட்டி, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அது உண்மைதான். ஏனென்றால், நியூஸ் பிரிண்டினுடைய விலை வெளிநாடுகளில் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தால், ஏற்றுமதியிலே அக்கறை குறைந்திருக்கிறது. அதுமாத்திரமல்ல, இந்த ஏற்றுமதி குறித்து 19-4-1997 'இந்து' பத்திரிகையிலே தலையங்கம் வந்திருக்கிறது. அதில், "1996-97-ஆம் ஆண்டில் உலக ஏற்றுமதி-இறக்குமதி சந்தையில் கையாளப்பட்ட அளவு 6 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இந்த புள்ளிவிவரத்தை World Trade Organisation (W.T.O.) தெரிவித்துள்ளது. 1995-96-ஆம் ஆண்டு வியாபாரப் பொருட்களின் மதிப்பு 5,100 பில்லியன் டாலர் ஆகும். அந்த ஏற்றுமதி வியாபாரத்தின் அளவு 14 சதவிகித வளர்ச்சியிலிருந்து 5 சதவிகிதம் என்ற அளவிற்கு வீழ்ச்சியை இந்த ஆண்டு சந்தித்துள்ளது. குறிப்பாக ஆசியாவில் ஏற்றுமதி குறைந்துள்ளது. தொழிலில் வளர்ச்சி அடைந்த நாடுகளான ஜப்பான், தைவான், தென்கொரியா ஆகிய நாடுகளின் ஏற்றுமதியும் கணிசமாகக் குறைந்துள்ளது. மேலும் குறிப்பாக, இந்தியாவின் குறியீடான 7 சதவிகிதம் ஏற்றுமதியை அடைய முயற்சிகள் எடுக்கப்பட்டு, 6 சதவிகிதம் அடையப்பட்டுள்ளன என்று புள்ளிவிவரங்கள் தெரிவித்துள்ளன.

பிற்பகல் 12-55

தமிழகத்தின் ஏற்றுமதியும் இந்த அளவிலேயே உள்ளது; உலகச் சந்தையின் ஏற்றுமதியும், இறக்குமதியும் வெகுவாகக் குறைந்துள்ளது; இந்தியாவின் ஏற்றுமதியும் குறிப்பிடத்தக்க வகையில் உயரவில்லை; இருப்பினும், தமிழகத்திலே இருந்து செய்யப்படும் ஏற்றுமதி, உலக அளவிலான விழுக்காடு வீழ்ச்சி இல்லை; இருந்தாலும், ஏற்றுமதியை அதிகப்படுத்த, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை நான், திரு. அழகிரி போன்றவர்களுடைய அந்தக் கருத்துக்குப் பதிலாகத் தர கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தியாவினுடைய மொத்த ஏற்றுமதியிலே, 16 சதவீதம், தமிழ்நாட்டிலே இருந்துதான் செய்யப்படுகிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. இந்தியாவினுடைய மொத்த மக்கள் தொகையிலே, தமிழ்நாட்டு மக்கள் தொகை 6 சதவீதம்தான். ஆனால், இந்தியாவினுடைய மொத்த ஏற்றுமதியிலே, 16 சதவீதம், தமிழ்நாட்டிலே இருந்து செய்யப்படுகிறது. அதிலும், முக்கியமாக, 'காட்டன் யார்ன்', 'டெக்ஸ்டைல்ஸ்', தோல் பொருள்கள், பனியன்கள் ஆகியவை, அந்த ஏற்றுமதியாகின்ற பொருள்கள் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. அழகிரி, இன்னொரு குற்றச்சாட்டையும் சொன்னார், 'சிப்காட்' நிறுவனத்தைப் பற்றி. அது ரொம்பக் கஞ்சத்தனமாக, 'ஷைலக்' போல நடந்து கொள்கிறது என்று குறிப்பிட்டு, 'கொரமாண்டல் பாலி பேக்ஸ்' என்ற கடலூரிலுள்ள நிறுவனத்திற்குக் கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்டதிலே, ரொம்பக் கஞ்சத்தனமாக நடந்து கொண்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதைப்பற்றிய விவரத்தை நான் கேட்டபோது, "சிப்காட்" நிறுவனம், 45.50 இலட்சம் ரூபாய், கொரமாண்டல் நிறுவனத்திற்குக் கடன் கொடுத்திருந்தது. அந்த 45 இலட்சம் ரூபாய்க்கு, வட்டியையும் சேர்த்து, மொத்தம் 117 இலட்சம் ரூபாய் ஆகியிருக்கிறது. இதுவரையில், அது பணம் கட்டாததால், 'சிப்காட்' நிறுவனம், சட்டரீதியான நடவடிக்கை எடுத்து, ஏலம் நடத்தப்பட்டு, 'சிப்காட்'டினுடைய பணத்தைத் திரும்பப்பெற நடவடிக்கை எடுக்க நேர்ந்தது என்றுதான் குறிப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. எனவே, இதிலே வேண்டுமென்று கஞ்சத்தனமாக, 'சிப்காட்' நிறுவனம் நடந்து கொள்ளவில்லை என்பதையும், கொடுத்த பணத்தைத் திருப்பித் தரவில்லை; வட்டியையும் செலுத்தவில்லை; சமரசப் பேச்சில் ஒத்துக்கொண்ட தொகையும் கட்டப்படவில்லை. எனவே, அந்தப்



பணம் கட்டாத சூழ்நிலையிலேதான், சட்டரீதியான நடவடிக்கையை இந்த நிறுவனம் எடுக்க நேர்ந்தது என்பதையும் நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, தொழில் துறை வளர்ந்ததா என்பதை ஒரு கேள்விக்குறியாக்கி, வளரவில்லை என்ற ஒரு தவறான பிரச்சாரம், நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நான் அதற்குச் சொல்லக்கூடிய சில விளக்கங்கள், யாரையும் புண்படுத்தாது என்று கருதுகிறேன். ஏனென்றால், 1967 ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த நேரத்தில், தமிழகத்திலே இயங்கிவந்த, தூத்துக்குடி துறைமுகத் திட்டம், நெய்வேலி நிலக்கரி நிறுவனம் முதலிய பொதுத் துறை நிறுவனங்கள் விரிவாக ஆக்கப்படவும், உற்பத்தியை அதிகரிக்கவும், வேலைவாய்ப்புக்களைப் பெருக்கவும், தக்க வகையில் மத்திய அரசை வற்புறுத்தியதோடு, மாநில அரசின் சார்பில் அத்தகைய ஏற்பாடுகளுக்கான, தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறோம். நெய்வேலியிலே, இரண்டாவது சுரங்கம் வெட்டப்படவும், சேலம் இரும்பாலை அமைக்கப்படவும், மத்திய அரசோடு தொடர்ந்து போராடி, அவை நிறைவேற்றப்படுவதற்கு வழிவகுத்தது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை நாடு மிக நன்றாக அறியும்.

தூத்துக்குடியிலே, இன்றைக்கு உலக நாடுகளெல்லாம் பாராட்டக்கூடிய அளவுக்கு வளர்ந்திருக்கின்ற, ஆயிரம் அல்லது இரண்டாயிரம் கோடி ரூபாய் அளவுக்கு மதிப்பீடு என்று சொல்லத்தக்க அளவுக்குள்ள 'ஸ்பிக்' உரத் தொழிற்சாலை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் நிறுவப்பட்டது என்பதையும் யாரும் மறந்துவிட இயலாது.

அதைப்போல, கழக ஆட்சிக் காலத்திலேதான், பொதுத் துறையின் மூலம் உருவாக்கப்படும் தொழிற்சாலைகள் மாத்திரம், தமிழகத்திலே தொழில் வளர்ச்சியை விரிவுபடுத்த முடியாது என்ற எண்ணத்தோடு, ஆர்வமிக்க தொழில் முனைவர்களை உற்சாகப்படுத்த, ஊக்கப்படுத்த, தொழில் வளாகங்களை அமைத்து, குறைந்த விலையிலே இடங்களை ஒதுக்கீடு செய்திட, தொழில் திட்டங்களுக்குத் தேவையான கடன் உதவியை, மூலதன மானியத்தோடு — 'Capital Subsidy' — வழங்கிட ஒரு முடிவெடுத்து, — State Industries Promotion Corporation of Tamil Nadu — 'சிப்காட்' என்ற புதிய நிறுவனத்தைக் கழக அரசுதான்,

1971 ஆம் ஆண்டு தோற்றுவித்தது என்பதையும் யாரும் மறந்திட இயலாது. அதைத் தொடர்ந்து 'சிப்காட்' நிறுவனம், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான, அடிப்படை வசதிகள் அனைத்தையும், ஒரே இடத்தில் வழங்கக்கூடிய தொழில் வளாகங்களை அமைத்தது. அப்படி அமைக்கப்பட்ட இடங்களில் ஒன்றுதான், இராணிப்பேட்டை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

பிற்பகல் 1-00

1973 ஆம் ஆண்டு 729.78 ஏக்கர் நிலப்பரப்பில் 168 கோடி ரூபாய் முதலீட்டில் 107 தொழில் நிறுவனங்கள் கழக ஆட்சிக் காலத்தில் அங்கே உருவாக்கப்பட்டன. கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது இராணிப்பேட்டையிலே உள்ள அந்த இடத்தைப் பற்றிக் கேள்விப்பட்டோம். அப்போது தொழில் அமைச்சராக நண்பர் திரு. மாதவன் இருந்தார். இந்தச் செய்தியை என்னிடத்திலே அறிவித்தார். என்ன செய்தி என்றால் ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்காக அந்த இடம் வாங்கப் பட்டிருப்பதாகவும், அந்த இடத்தில் தொழிற்பேட்டை அமையாத காரணத்தால் அதை விற்றுவிட அல்லது அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட அதற்கு முன்பிருந்த காங்கிரஸ் அரசு எண்ணியிருந்ததாகவும் அதன் தொடர்பாக நாம் அந்த இடத்தைப் போய்க் காணவேண்டும் என்று எடுத்துச்சொல்லி, நானும், தொழில் அமைச்சரும் — அன்றையத் தொழில் அமைச்சரும் — மற்ற அதிகாரிகளும் சென்று இராணிப்பேட்டையிலே அந்த இடத்தைப் பார்வையிட்டு இதை விற்கவோ, யாருக்கும் கொடுக்கவோ தேவையில்லை, இங்கேயே 'சிப்காட்டின்' சார்பாக ஒரு தொழில் நிறுவனத்தை அமைக்கலாம் என்று முடிவெடுத்ததினுடைய விளைவுதான் அந்த 730 ஏக்கர் பரப்பில் 168 கோடி ரூபாய் முதலீட்டில் 107 தொழில் நிறுவனங்கள் அன்றைக்கே அமைந்தன.

அதேபோல, ஓசூரிலே 1974 ஆம் ஆண்டு கழக ஆட்சிக் காலத்திலேதான் 500 கோடி ரூபாய்க்கு மேலான முதலீட்டில் 20,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெறக்கூடிய அளவுக்கு 186 தொழில் நிறுவனங்களை உருவாக்கினோம். இதுவும் கழக ஆட்சிக் காலத்திலேதான். தமிழகத்திலே பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளத்தைப் பெருக்கிடத் திட்டமிட்டு மானாமதுரையில் 225 ஏக்கரிலும், புதுக்கோட்டையிலே 110 ஏக்கரிலும் தொழில் வளாகங்கள் உருவாக்கப்பட்டன. இவை தவிர, இராமநாதபுரம் மாவட்டத்திலே உள்ள



ஆணைக்காரன்பட்டி போன்ற பின்தங்கிய பகுதிகளில் தனியார் முயற்சி யிலே தொழில் வளாகங்கள் அமைக்கும் முயற்சிகளுக்கும் 'சிப்காட்' மூலம் அன்றிருந்த கழக அரசு ஊக்கமளித்தது என்பது நிதர்சனமான உண்மைகள் ஆகும்.

இதைத் தொடர்ந்து சிறு தொழில்களுக்கு உறுதுணையாக இருந்து உதவுவதற்காக 'சிட்கோ' நிறுவனத்தையும் கழக அரசுதான் 1971 ஆம் ஆண்டு தொடங்கியது.

தமிழ்நாட்டிலே சிறுதொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத் தோடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் Small Industries Development Corporation 'சிட்கோ' என்ற நிறுவனம் உருவாக்கப்பட்டது. அதைப்போல 'டிட்கோ' ஏற்கெனவே 1965 ஆம் ஆண்டிலேயே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே உருவான ஒரு நிறுவனம். அந்த நிறுவனத்தின் சார்பில் கழக ஆட்சிக் காலத்திலே ஒரு மாறுதல் செய்யப்பட்டு கூட்டுத் துறையிலே Joint Sector-லே தொழில்கள் அமைக்கவும், அதைப்போலவே கூட்டுத் துறை என்றால் 26% அரசின் பங்கு, இணைத் துறை என்றால் அதாவது Associate Sector என்றால் 11% அரசின் பங்கு என்ற அளவில் இந்த இரண்டு செக்டார்களையும் 'டிட்கோ'-வுடன் இணைந்து செயல்படுத்தத் தொடங்கிப் பல தொழில்கள் தமிழகத்திலே அமைக்கப்பட்டன.

அதேபோல, 1972 ஆம் ஆண்டில்தான் தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் 'எல்காட்', மின்னணுத் தொழில்கள் தமிழகத்திலே வளம்பெற வேண்டுமென்பதற்காக ஒரு தொலை நோக்கான திட்டத்தோடு 1972-லே தொழில் வணிக இயக்குநர் அலுவலகத்தில் மின்னணுப் பிரிவு ஒன்றை உருவாக்கி அதன் தொடர்பாக பல்வேறு தொழில் பிரிவுகளை ஏற்படுத்தியது. Electronic Corporation of Tamil Nadu தான் 1975 ஆம் ஆண்டு 'எல்காட்' என்று சுருக்கமான பெயரோடு அமைந்தது என்பதையும் அவை உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு 'எல்காட்' நிறுவனம் வளர்ந்து ஏறத்தாழ 200 கோடி ரூபாய் அளவுக்குத் தமிழகம் முழுவதும் மின்னணுத் தொழில் பிரிவுகள் வளர்ச்சி பெற்றுள்ளன என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி 'சிப்காட்', 'சிட்கோ', 'எல்காட்' போன்ற நிறுவனங்களைத் தோற்றுவித்ததன் மூலம் தொழில் பெருவாரியாகத் தமிழ்நாட்டிலே வளருவதற்குக் கழக அரசு வழி வகுத்தது. தொழில்

முனைவோரை ஊக்கப்படுத்தவும், கடன் வசதிகளை அவர்கள் தாராளமாகப் பெறவும் கழக அரசு உதவிடத் தொடங்கியது. மேலும் வரி விலக்கு அளித்தல், விற்பனை வரி வசூலைத் தள்ளி வைத்தல், மின்கட்டணச் சலுகை அளித்தல் போன்ற பல்வேறு உதவிகளை வழங்கி புதிய தொழில்கள் தமிழகத்திலே உருவாகக் கழக அரசு காரணமாக இருந்தது. 1975 ஆம் ஆண்டு மேற்கு ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு சட்டமன்ற உறுப்பினர் திரு. வில்லியம் வித்தர்ஸ் என்பவர் தமிழ்நாட்டுக்கு வந்து திரும்பிச் சென்றார். அவர் தாயகம் திரும்பியவுடன் மேற்கு ஆஸ்திரேலியா சட்டமன்றத்திலே பேசினார்.

பிற்பகல் 1-05

தமிழகத் தொழில் வளத்தைப் பற்றி அங்கே பேசினார். என்ன பேசினார் என்றால், 'தமிழ்நாடு அரசு தொழிற்சாலைகளுக்கு உதவுவதற்கான பல கவர்ச்சிகரமான கருத்துக்களைக் கொண்டுள்ளது, தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்கிட பெரு முயற்சி செய்வதோடு, பல்வேறு சலுகைகளையும் அளிக்கிறது. அச்சலுகைகளில், தமிழ்நாட்டில் தொடங்கப்படும் எந்த ஒரு வெளிநாட்டு தொழிற்சாலைக்கும் இரண்டு ஆண்டு காலத்திற்கு வரி கிடையாது என்பதும், புதிய தொழிற்சாலைகளின் வளர்ச்சி காலத்தில் மின் கட்டணச் சலுகை அளிக்கப்படும் என்பதும் அடங்கியுள்ளன. இவற்றைச் சிறந்த பணிகள் என்று நான் கருதுகிறேன். நம் நாட்டில் தொழில் வளர்ச்சிக்காகத் திட்டமிடும்போது, அதாவது மேற்கு ஆஸ்திரேலியாவினுடைய தொழில் வளர்ச்சிக்காகத் திட்டமிடும்போது இவற்றை எல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்' என்று அவர்கள் மனம் திறந்து பாராட்டியது அப்போதே ஏடுகளில் வெளிவந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இப்படி இந்தியாவிலே மாத்திரம் அல்லாமல், வெளிநாட்டுக்காரர்களும் பாராட்டக்கூடிய அளவுக்கு நாம் தொழில் வளத்தைப் பெருக்கி யிருக்கிறோம். குறிப்பாக நான் முதலிலே குறிப்பிட்டதுபோல, கூட்டுத் துறை மூலமாக மாத்திரம் நம்முடைய அரசு உருவாக்கிய தொழிற்சாலைகளை எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்.

1. தூத்துக்குடியிலே ஸ்பிக்-சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்.

2. ஸ்பிக் நிறுவனத்தில் உபரியாகக் கிடைக்கும் அமோனியத்தைப் பயன்படுத்தி 'சோடா ஆஷ்' அமோனியம் குளோரைடு தயாரிக்கும் தூத்துக்குடி அல்கலி கெமிக்கல்ஸ் தொழிற்சாலை.



3. பஞ்சாலைத் தொழிலுக்குத் தேவைப்படும் பாக்ஸ் சாயங்களில் பயன்படுத்தப்படும் சோடியம் ஹைட்ரோ சல்பைட் தயாரிக்கும், தமிழ்நாடு கெமிக்கல் பிராசஸ் லிமிடெட் தொழிற்சாலை, காரைக்குடி.

4. இராணிப்பேட்டை தொழிற்பேட்டையில் தென் இந்தியாவிலுள்ள சாயத் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் குரோமியம் சல்பேட், சோடியம் டைக்ரோமேட், சோடியம் சல்பேட் ஆகிய பொருட்களை தயாரிக்கும் தமிழ்நாடு குரோமேட்ஸ் மற்றும் கெமிக்கல் லிமிடெட் தொழிற்சாலை.

5. மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் நரசிங்கம்பட்டியில் பொட்டாசியம் குளோரைட் உற்பத்தி செய்யும் பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

6. பழைய இராமநாதபுரம் மாவட்டம், மணலூரில் அலுமினிய குளோரைடு தயாரிக்கும் தமிழ்நாடு குளோரின் அலைட் கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

7. பல்லாவரத்தில் மருந்துகள் தயாரிக்கும் தமிழ்நாடு தாதா பார்மசூட்டிகல்ஸ் தொழிற்சாலை.

8. அடையாரில் டெலிவிஷன் பெட்டிகள் தயாரிக்கும் டைனவிஷன் லிமிடெட் தொழிற்சாலை.

9. கோவளம் பகுதியில் தொழில் உப்பு தயாரிக்கும் மார்த்திக் கிறிஸ்டல் சால்ட் தொழிற்சாலை.

10. ஓசூருக்கு அருகில் ஆசியா புகையிலை நிறுவனம்.

11. மீன்பிடி படகுகள் கட்ட மண்டபம் பகுதியில் கடல்சார்ந்த பெரும் இழுவைப் படகு கட்டும் தொழிற்சாலை.

12. அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தமிழ்நாடு ஆல்கலைன் பேட்டரீஸ் லிமிடெட் தொழிற்சாலை.

13. ஓசூருக்கு அருகில் ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

14. அரக்கோணத்தில் வார்ப்படம் கொல்லுலை தொழிற்சாலை.

15. கையுறைத் தோல், ஆடைகள், தோல், மேல் தோல் முதலியவற்றை தயாரிப்பதற்காக இண்டர் காண்டினென்டல் லெதர்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

ஆகியவை கூட்டுத் தொழிற்சாலைகளாக வடிவம் பெற்றன என்பதையும் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு ஆட்சி கலைக்கப்பட்டு, 13 ஆண்டுகளுக்குப் பிறகு 1989-90-ல் கழக ஆட்சியிலே தொழில் வளம் சிறக்க என்னென்ன ஏற்பாடுகள் நடைபெற்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

வட சென்னை அனல் மின் நிலையத்தை உங்களுக்குத் தெரியும். அந்த நிலையத்திற்கு இடமெல்லாம் பார்க்கப்பட்டு, முதலிலே 500 கோடி ரூபாய் என்று திட்டமிடப்பட்டு, அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்ய யாரும் இணங்காத காரணத்தால், உச்சநீதிமன்றம் வரையிலே சென்று வழக்காடிய காரணத்தால், அந்த இடம் அரசால் கையகப் படுத்தப்படாத சூழ்நிலையில், திராவிட முன்னேற்றக் கழக அரசு 1989 ஆம் ஆண்டு பொறுப்பேற்றது. பொறுப்பேற்றவுடன் அந்த இடத்திற்கு உடையவர்களை அழைத்துப் பேசி, அவர்களை இணங்க வைத்து, அந்த இடத்தில் வட சென்னை அனல் மின் நிலையத் தொடக்க விழாவை அன்றிருந்த குடியரசுத் தலைவரை அழைத்து நடத்தியதையும் யாரும் மறந்திருக்க இயலாது. ஆனால் 500 கோடி ரூபாய்த் திட்டம், இரண்டு ஆண்டு காலதாமதத்தின் காரணமாக 700 கோடியாக ஆகி இப்போது 1,000 அல்லது 1,200 கோடி ரூபாய் அளவுக்கு வளர்ந்துவிட்டிருக்கிறது. எனவே, வடசென்னை அனல் மின் நிலையத்தை கழக ஆட்சியிலேதான், மீண்டும் பொறுப்புக்கு வந்த உடனே தொடங்கினோம். இன்றைக்கு அது இயங்கிக் கொண்டிருக்கிறது.

இராணிப்பேட்டையில் ஏற்கெனவே இருந்த வளாகத்தில், இரண்டாம் பிரிவு தொழில் வளாகத்தை 113 ஏக்கர் கொண்ட நிலப்பரப்பில் — மேலும் 113 ஏக்கர் கொண்ட நிலப்பரப்பில் — அமைத்து அதன் மூலம் 3,400 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அங்கே வழங்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-10

அதேபோல, ஓசூர் இரண்டாம் பிரிவு தொழில் வளாகம் 457 ஏக்கர் பரப்பளவில், ஏறத்தாழ 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டது. இதில் 6 ஆயிரம் இளைஞர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். தொடர்ந்து கும்மிடிப்பூண்டியில் 800 ஏக்கர் நிலப்பரப்பில் விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டது. பெரியார் மாவட்டம், பெருந்துறையிலே, இதைப்போல ஒரு வளாகம் அமைக்கும் திட்டம். நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில் கங்கைகொண்டானிலே



2,000 ஏக்கர் பரப்பில் இதைப்போல பொறியியலுக்காக ஒரு வளாகம் அமைக்கும் திட்டம், இந்தத் திட்டங்கள் எல்லாம் செயல்படவிருந்த நேரத்தில் கழக ஆட்சி இரண்டாவது முறையாகக் கலைக்கப்பட்டது. இப்படி கலைக்கப்பட்டவுடன் கடந்த ஐந்தாண்டுகளில் இப்படி அறிவிக்கப்பட்ட திட்டங்கள் — பெருந்துறை, கங்கைகொண்டான் போன்ற இந்த வளாகத் திட்டங்கள், நிறைவேற்றப்படுவதற்கு ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதா என்றால் இல்லையென்பதை தொடர்புடையவர்கள் மாத்திரமல்ல, தமிழகத்திலுள்ள அனைவரும் அறிவார்கள். 1989-90-ல் தான் கழக அரசு பொறுப்பில் இருந்த போதுதான், 22 கோடி ரூபாய் முதலீட்டில், 'ஏஷியன் பெயிண்ட்ஸ்' என்ற தொழில் நிறுவனம்; 29 கோடி ரூபாய் முதலீட்டில் 'டெலிகம்யூனிகேஷன்ஸ் கன்சல்டன்ட் இண்டியா லிமிடெட்' என்ற நிறுவனம்; 10 கோடி ரூபாய் முதலீட்டில், திருச்சி 'எஸ்.எஸ். சங்கர ரெட்டி அசோசியேட்ஸ்' என்ற நிறுவனங்கள் கூட்டுத் துறையிலே உருவாக்கப்பட்டு அவை உற்பத்திகளைத் தொடங்கிவிட்டன. மேலும் 140 கோடி ரூபாயில் 'டைட்டானியம் டை-ஆக்ஸைடு' தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் 'டிட்கோ' மூலம் அமைத்திட கழக அரசு திட்டமிட்டது. இப்படி தமிழக தொழில் வளர்ச்சிக்கு முறையாக திட்டமிட்டு ஊக்கமுடன் மீண்டும் பாடுபடத் தொடங்கிய வேளையில்தான், நான் முன்பு கூறியபடி, கழக அரசு கலைக்கப்பட்டது. அதனால், தொழில் வளத்தைப் பெருக்குவதற்காக திட்டங்களைத் தீட்டவே பயமாக இருக்கின்றது. ஏனென்றால், இப்படி திட்டங்களைத் தீட்டுகின்ற நேரத்திலே எல்லாம், கழக அரசைக் கலைப்பதற்கு அவர்கள் கத்தியைத் தீட்டி விடுவார்களே என்ற அந்தக் காரணமும் கூட. கழக அரசில் நலிவு நீங்கி நலம் பெற்ற தொழில்களையும் நான் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். நிர்வாகச் சீர்கேடுகளால் நலிவடைந்த, தமிழ்நாடு கனிம வளர்ச்சி நிறுவனம் 1989-90-ல் கழக ஆட்சி மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளால், 4 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியது. தமிழ்நாடு பத்திரிகை அச்சுத்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் 1989 வரையில் தொடர்ந்து ஏற்பட்டு வந்த இழப்பு, 49 முதல் 50 கோடி ரூபாய் வரையில் இழப்பு, ஆனால் கழக அரசு நிறுவனத்தை சீரமைத்து, ஒரு ஆண்டிலேயே 28 கோடி ரூபாய் நிகர இலாபம் பெறுகின்ற அளவிற்கு உயர்த்தியது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் பெருமகிழ்ச்சியோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் முதலிலேயே குறிப்பிட்டேன் கிரானைட் கொள்கை பற்றி. இந்த கிரானைட் கொள்கை ஏற்கெனவே கன்னாபின்னா என இருந்தது.

யார் வேண்டுமானாலும் ஆதிக்கம் செலுத்தலாம், யார் வேண்டுமானாலும் கொள்ளையடிக்கலாம் என்ற சூழ்நிலையில் இருந்தது கிரானைட் கொள்கை. கழக ஆட்சிக் காலத்தில் 1989-90-ல் முயற்சியெடுத்து கனிமங்கள் வெட்டியெடுக்கும் உரிமங்கள் வழங்குவதற்கான கொள்கையை ஒழுங்குப்படுத்தி, டெண்டர் முறை ஏற்படுத்தப்பட்டது. டெண்டர் முறை 1989-90 ஆகிய இரண்டு ஆண்டுகளில் 272 ஹெக்டேர் மொத்த நிலப்பரப்புடைய 103 இடங்களில் குவாரிகள் டெண்டர் விட்டதால், கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் கிடைத்தது. ஆனால் கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு வந்த கடந்த கால ஆட்சியில் என்ன நடைபெற்றது என்பதை நான் பலமுறை இந்த அவையிலே விளக்கி இருக்கிறேன். எனவே, விரிவாக அதற்குள் செல்ல நான் விரும்பவில்லை. டெண்டர் முறை மாற்றப்பட்டது. டெண்டர் முறைதான் நியாயமாக, நேர்மையாக நடைபெற கூடிய ஒரு முறை. அனைவரும் போற்றுகின்ற, பாராட்டுகின்ற ஒரு முறை. கடந்த காலத்திலே ஜெயலலிதா அவர்கள் முதல்வர் பொறுப்பை ஏற்று, அவர்கள் தலைமையிலே ஆட்சி அமைந்தவுடன், இந்த டெண்டர் முறையையே மாற்றி, விதி 39 என்ற ஒரு நடைமுறையைப் புகுத்தி, அதன் பலனாக, 1993-லிருந்து 1996 ஏப்ரல் வரையில் மூன்று ஆண்டு காலத்தில் குவாரி குத்தகை மூலம் அரசுக்குக் கிட்டிய வருவாய் 5.12 கோடிதான். ஏற்கெனவே 20 கோடி ரூபாய் வருமானம் வந்தது இந்த அரசுக்கு கழக ஆட்சியில் 1989-90-ல். ஆனால் 1993 முதல் 1996 வரை மூன்று ஆண்டு காலத்திலே 5.12 கோடி ரூபாய்தான் வருமானம் வந்தது, அந்த முறை மாற்றப்பட்ட காரணத்தினால். இதன் தொடர்பாக விழிப்புப் பணிக்குழு செய்த, 'விஜிலென்ஸ் கமிஷன்' செய்த ஆய்வு ஒன்றில் முந்தைய ஆட்சி காலத்தில் குத்தகை விடுவதில் சரியான நடைமுறை பின்பற்றப்படாததாலும், குத்தகைத் தொகை வசூலிக்கப்படாததாலும், அரசுக்கு 70 கோடி ரூபாயிலிருந்து 95 கோடி ரூபாய் வரை வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மீண்டும் கழக அரசு, 1996-ஆம் ஆண்டு பொறுப்பு ஏற்ற பிறகு, அந்த 39 விதியை நீக்கிவிட்டு மறுபடியும் ஒப்பந்தப்புள்ளி, டெண்டர்முறை கடைப்பிடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இன்றைக்கு இலாபகரமாக, அந்தத் தொழில் நடந்து கொண்டிருக்கின்றது என்பதையும், அதிலே எவ்வளவு இலாபம் என்பதை அடுத்து அறிவிக்கின்ற ஒரு கட்டத்திலே அறிவிப்பேன் என்பதையும் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



பிற்பகல் 1-15

இதேபோல், ஜல்லி, சிறு கனிமங்கள் என்று சொல்லப்படுகின்ற மணல் போன்ற சிறு கனிமங்கள் சம்பந்தப்பட்ட விதிகள் 8, 8-எ, இவைகளுக்கு இந்த அரசு திருத்தம் கொண்டுவந்து டெண்டர் முறையை மீண்டும் அறிமுகப்படுத்தியிருக்கிறது.

இந்த நடைமுறை மாற்றத்தின் காரணமாக, உதாரணமாக கோவை மாவட்டத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு சொல்லுகிறேன். ஏனென்றால், எல்லா மாவட்டக் கணக்குகளும் எனக்கு வரவில்லை. கோவை மாவட்டத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு சொன்னால், சென்ற ஆண்டு கிடைத்த வருமானம், அந்த ஆட்சியில் கிடைத்த வருமானம் ரூ. 2.88 இலட்சம். அதாவது, ஜல்லி, மணல் போன்ற சிறு கனிமங்கள் மூலம் கிடைத்தது ரூ. 2.88 இலட்சம். அதாவது, கோவை மாவட்டத்தில் மாத்திரம் கிடைத்த வருமான்ம். இந்த ஆண்டு ரூ. 26.17 இலட்சம் கோவை மாவட்டத்திலே மாத்திரம் கிடைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு கொள்ளை போயிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன். இது, பழைய முறைப்படியே, அவர்கள் வைத்திருந்தார்களே டெண்டர் இல்லாத பழைய முறைப்படி அவர்கள் வசூலித்தது ரூ. 2.88 இலட்சம், அதே முறைப்படி நாம் வசூலித்தது ரூ. 26.17 இலட்சம். அதையும் மாற்றி, இன்றைக்கு நாம் புதியதாக ஆக்கியிருக்கிற காரணத்தால் நமக்குக் கிடைக்க இருப்பது ரூ. 67.32 இலட்சம், கோவை மாவட்டத்திலே மாத்திரம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது, இந்தப் புதிய மாற்றத்தின் அடிப்படையிலே என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எப்படி, பொறுப்பற்ற தன்மையில தொழில் துறை கவனிக்கப்படாமல் இருந்தது என்பது மாத்திரமல்ல, தொழில் முனைவோர்கள் யாரைக் கவனிக்க வேண்டும் என்ற ஒரு கொள்கை வகுக்கப்பட்டு, தொழில் துறை அடியோடு நாசமாகிப் போனதை, நானல்ல, ``Economist Intelligence Unit" என்ற ஒரு ரிசர்ச் யூனிட்டினுடைய ரிப்போர்ட் ``India uncaged" என்ற தலைப்பில் ``Seeking opportunities in the South" — தெற்கே உள்ள வாய்ப்புகள் ``India uncaged" என்ற தலைப்பில், நவம்பர் 1995-ல் வந்த கட்டுரை. அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ``The Report says — "If there is any State....`` கவனமாகப் பார்க்க வேண்டும், "If there is any State with a reputation for corruption, it is Tamil Nadu". 'ஏதாவது ஒரு மாநிலம் கரப்ஷனிலே சிறந்து விளங்குகிறது என்று சொல்ல வேண்டுமானால், அந்த ரெபுடேஷன் உள்ள மாநிலம் எது

என்றால், அது தமிழ்நாடுதான்'. எப்போது, 1995-ஆம் ஆண்டு, சொல்வது யார்? கருணாநிதி அல்ல, ரிசர்ச் ரிப்போர்ட். Economist Intelligence Unit—னுடைய ரிசர்ச் ரிப்போர்ட் குறிப்பிட்டிருக்கிறது. "The going rate for back handers in the form of commission is said to be about 10 to 15 percent of even the project cost". ஒவ்வொரு திட்டத்தினுடைய மதிப்பீட்டில், அதனுடைய காஸ்ட்டில், அதனுடைய மதிப்பீட்டில் 10 முதல் 15 சதவிகிதம் வரையில் கமிஷன் கொடுக்க வேண்டும், இடையிலேயிருந்து அந்த நிகழ்வுகளை நடத்திக் கொடுப்பவர்களுக்கு என்று ரிசர்ச் செய்து, ஒரு பெரிய கட்டுரையே வெளியாகி இருக்கிற அளவுக்கு தமிழ்நாட்டினுடைய புகழ் 1995-ஆம் ஆண்டில் ஓங்கி, வளர்ந்து, உயர்ந்து நின்றிருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு எந்த எடுத்துக்காட்டும் தேவையில்லை. எனவேதான், அத்தகைய எந்தக் குந்தகங்களும், ஊனங்களும், இந்த அரசுக்கு, தமிழகத்திற்கு வரக்கூடாது என்பதற்குத்தான், நம்முடைய ஒப்பந்தப்புள்ளிகள் திறந்த அளவில் இருக்க வேண்டும் என்ற வகையில், யாரும் அதைபபற்றித் தகவல்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்ற அந்தச் சூழ்நிலையையும் உருவாக்கி, அந்த வாய்ப்பையும் அவர்களுக்குத் தருகின்ற அளவில் தொழில் துறை இன்றைக்கு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்குக்கூட ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அதிலே அனுபவம் வாய்ந்த தொழில் அதிபர்களும், அரசு அதிகாரிகளும், இளம் தொழில் முனைவோர்களும் இடம்பெற்று, அடிக்கடி அந்தக் குழு கூடி, அரசுக்குத் தேவையான ஆலோசனைகளை அது வழங்கி வருகிறது.

இந்த அரசின் தொழில் நேயம் கொண்ட கொள்கைகள் `Industry-Friendly Policies' மற்றும் ஒளிவு மறைவற்ற, வெளிப்படையான—'transparent approach' அணுகுமுறைகள் காரணமாகப் பல புதிய தொழில்கள் தமிழகத்திலே உருவாகிக் கொண்டிருக்கின்றன. 10 மாத காலத்தில் பல தொழில்கள் தொடங்கப்பட வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றை மாத்திரம் இங்கே உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன். ஏற்கெனவே, அவ்வப்போது கேள்விப்பட்டவைகள் என்றாலும், தொகுத்துத் தருவது என்னுடைய கடமை என்பதால் தொகுத்துத் தருகிறேன்.

பிற்பகல் 1-20

100 விழுக்காடு ஏற்றுமதியுடன் கூடிய புளூமிங் மீடோவஸ் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் மலர் வளர்ப்பு (Flori-Culture) திட்டம் 33 கோடி



ரூபாய் மதிப்பீட்டில் ஓசூரில் அமைக்கப்படுகிறது. 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எரி சாம்பலைப் பயன்படுத்தி பொருள்கள் தயாரிக்கும் திட்டம் "ப்ளை ஆஷ்பேஸ்ட் பிளக்ஸ் கோல்ஸ்" நிறுவனத்தின் மூலம் எண்ணூரில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. பொள்ளாச்சிக்கு அருகில் 100 விழுக்காடு ஏற்றுமதியுடன் கூடிய இறைச்சிப் பதப்படுத்தும் திட்டம் ரூ. 169 கோடியில் தொடங்கப்படுகிறது. 38.42 கோடி ரூபாய் செலவில் நவீன ஒருங்கிணைந்த தேங்காய்ப் பொருள்கள் உற்பத்தித் திட்டம் பொள்ளாச்சிக்கு அருகில் தொடங்கப்பட உள்ளது.

இங்கிலாந்து நாட்டு பில்கிங்டன் நிறுவனத்தின் சார்பில் 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிங்கபெருமாள்கோவிலில் கண்ணாடித் தொழிற்சாலை அமைக்கப்பட உள்ளது. 40 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு டெலிகாம் நிறுவனத்தின் கண்ணாடித் தொழிற்சாலை மறைமலை நகரில் அமைக்கப்பட இருக்கிறது.

அசோக் லேலண்டு நிறுவனம் ஓசூரில் உள்ள தனது பிரிவை 630 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவுபடுத்தி ஆண்டுக்கு 10,000 லாரிகளை உற்பத்தி செய்யும் திட்டத்தை தொடங்கியுள்ளது. சென்னை விமான நிலையத்திற்கு அருகில் 35 ஏக்கர் நிலத்தில் ஒரு நிரந்தர வர்த்தக மையம் அமைக்கப்பட உள்ளது. ரூபாய் 350 கோடி மதிப்பீட்டில் தென்கொரியா நாட்டின் கும்ஹோ டயர்ஸ் நிறுவனம் டயர் தொழிற்சாலை ஒன்றை நிறுவுகிறது. தென்கொரியா நாட்டின் ஹூண்டாய் மோட்டார் நிறுவனம் இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் 2450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கார் தொழிற்சாலை ஒன்றை அமைத்து வருகிறது.

கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழில் வளாகத்தில் 115 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கார்பன் பிளாக் தொழிற்சாலை ஒன்று ஹிடெக் நிறுவனத்தினால் அமைக்கப்பட இருக்கிறது.

ஜப்பான் நாட்டு மிச்சுபிஷி கம்பெனியுடன் இணைந்து இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம் 300 கோடி ரூபாய் மதிப்பில் லேன்சர் கார் தயாரிக்கும் தொழிற்சாலையைத் திருவள்ளூரில் அமைத்து வருகிறது.

இப்படி பெருந்தொழில்களை அமைப்பதைப் பற்றி ஒரு குறிப்பு. மார்க் நிக்கல்சன் என்கிற தலைச் சிறந்த பத்திரிகை நிருபர், Financial Times 10, ஏப்ரல் 1997, பத்திரிகையில் ஒரு பெரிய கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் குறிப்பிடுகிறார், "Tamil Nadu car industry is

perhaps the most spectacular result of the race between States to attract foreign investment and develop new industries". — தமிழ்நாடு கார் தொழிற்சாலை மிக உயர்ந்த அளவிற்கு ரிசல்டைத் தருகின்ற அளவிற்கு மற்ற மாநிலங்களோடு போட்டியிடுகின்ற அளவிற்கு வளர்ந்து வருகிறது என்று குறிப்பிட்டுவிட்டு மேலும் சொல்கிறார், "Tamil Nadu does not yet produce one finished car". இன்னும் ஃபினிஸ்டு கார் ஒன்றும் தரவில்லை. ஆனால், "But within three years new production lines near Madras will roll out 2,44,000 a year". 2,44,000 கார்களை வருடத்திற்கு தரக்கூடிய அளவிற்கு அது வளரும் என்று குறிப்பிட்டுவிட்டு சொல்கிறார்கள்'. "I don't think anywhere else in the world at this point offers this level of opportunities to the British component industry", says Mr. Bernard Fintlay, International Trade Manager for the British Society of Motor Manufacturers and Traders, recently on reconnaissance in Madras". இப்படிப்பட்ட பாராட்டுகள் தமிழகத்திலே இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்ற கார் தொழிற்சாலைகளைப் பற்றி பத்திரிகையிலே வெளியிடப்பட்டு, மிகச் சிறந்த ஒரு நிருபர் — "Madras revs up to achieve car ambitions" — "Tamil Nadu State is profiting from India's liberalised Industry policy, writes Mark Nicholson", என்ற தலைப்பிலே எழுதப்பட்ட கட்டுரையிலே சில குறிப்புகளைத்தான் இங்கே நான் படித்துக் காட்டினேன்.

மேலும் தமிழ்நாடு கிராஃபைட் லிமிடெட். இந்த கிராஃபைட் தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்காக நம்முடைய திரு. தா. கிருட்டிணன் அவர்கள் அடிக்கடி இங்கே பேசியிருக்கிறார்கள். இதிலே மிகுந்த அக்கறை கொண்டவராக மத்தியிலே நிதியமைச்சராக இருந்த, இருக்கப் போகிற திரு. சிதம்பரம் அவர்கள் மிகுந்த அக்கறைகொண்டு, அதற்கான பணிகளில் அவரும் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

சிவகங்கை பகுதியிலே கிடைக்கிற கிராஃபைட் தாதுவைக் கண்டறிந்து ஒரு தொழிற்கூடத்தை உருவாக்குவதற்கு அனுபவமிக்க ஆலோசகர்களோடு (Consultants) கலந்து பேசுவதற்காக ஒரு கம்பெனி இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது அதுதான் தமிழ்நாடு கிராஃபைட் லிமிடெட் என்று பெயர் கொண்டு அந்தக் கம்பெனி உருவாக்கப் பட்டிருக்கிறது. அது அந்த ஆய்வுகளிலே ஈடுபட்டிருக்கிறது. இருக்கிற பிரச்சினை என்னவென்றால், அந்தப் பகுதியில் 35.41 இலட்சம் டன் கிராஃபைட் கனிமம் மொத்த இருப்பு இருப்பதாக சிவகங்கை பகுதியிலே மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பகுதியிலே இருக்கும் கிராஃபைட் 14 சதவீதம் சுத்தமாக உள்ளது. இதை 96 சதவீதம் சுத்தமாக ஆக்கும்



பொருட்டு ஒரு திட்டம் தீட்டப்பட்டு ஆலோசகர்களோடு கலந்து பேசப்பட்டு வருகின்றது. எனவே, அந்தக் கிராஃபைட் தொழிற்சாலை வருவதற்கான முன் ஏற்பாடுகளை அரசு முனைந்து நிறைவேற்றும் என்பதை இந்த அவைக்கு உறுதியாக நான் தெரிவித்துக் கொண்டு, சில அறிவிப்புக்களை இந்த அவைமுன் வைக்க நான் விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-25

தொழில்கள் தொடங்கப்படுவதற்குத் தேவையான உரிமங்கள் அனைத்தையும் ஒரே இடததிலே வழங்கிட வகை செயயும் ஒற்றை சாளரம் - Single Window Clearance குறித்து மசோதா ஒன்று ஏற்கெனவே சட்டப்பேரவையிலே வைக்கப்பட்டுள்ளது. இந்த மசோதா சட்டம் ஆன பின், தொழில் மையங்கள் அனைத்திலும் தொழில் நகரியங்கள் - Industrial Township ஏற்படுத்தப்படும். அந்தத் தொழில் நகரியங்களை நிர்வகிக்க நிர்வாக ஆணையகங்கள்- Executive Authority ஏற்படுத்தப்படும். நிர்வாக ஆணையகங்கள் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா உரிமங்களையும் உடனுக்குடன் வழங்குவதற்கு அதிகாரம் உள்ள ஓர் அமைப்பாகச் செயல்படும்.

மணல், ஜல்லி, களிமண் குவாரிகள் மாவட்ட ஆட்சியர், புவியியல் துறை அலுவலர்களால் முறைப்படி குத்தகைக்குவிடப்பட்ட பின், குவாரிகளிலே இருந்து கனிமங்களை எடுத்துச் செல்வதில் எவ்வித முறைகேடுகளும் இல்லாமல், உள்ளாட்சிக்கு வரவேண்டிய முழு வருவாயும் வந்துசேர ஏதுவாக குவாரி நடவடிக்கைகளை கவனிக்கும் பொறுப்பு உள்ளாட்சி மன்றங்களுக்கே இனிமேல் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி குவாரியிலிருந்து Load - சரக்கு ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு முறையும் அதற்குரிய காணிக் கட்டணத்தை (Seigniorage fee) உள்ளாட்சி அமைப்பின் கணக்கில் வங்கியில் செலுத்திவிட்டு, அதனபின், உள்ளாட்சி அமைப்பு வழங்கும் வாகன அனுமதியைக் (Transport Permit) கொண்டுதான் லாரி சரக்குடன் செல்ல அனுமதிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அனுமதி வழங்கும் பொறுப்பை ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவருடனோ அல்லது வேறொரு உறுப்பினருடனோ இணைந்து கவனிக்க வேண்டும். ஊராட்சி மன்றத்திற்கு இப்பொறுப்பு வழங்கப்படுவதால், தவறான வழிகளில் மணல், ஜல்லி முதலியன கடத்தப்படுவது தடுக்கப்படுவதோடு, ஊராட்சி மன்றத்திற்கு வருவாயும் பெருக வழியேற்படும்.

புதிதாக உருவாகும் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் அளவில் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் கிடைப்பதில் சிரமம் உள்ளது. எனவே, பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், நிறைய எண்ணிக்கையில் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் (ஐ.டி.ஐ.) தொடங்கிட இந்த அரசு ஆவன செய்யும். இதன் விளைவாக ஏராளமான இளைஞர்கள் பல்வேறு தொழிற்பயிற்சிப் பிரிவுகளில் முறையான பயிற்சி பெற்று, உருவாகி வரும் புதிய தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பைப் பெறுவார்கள். இந்த அரசு பொறுப்பேற்றவுடன் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு ஐ.டி.ஐ. அமைக்க முடிவெடுத்து அத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கிரானைட் கற்களைப் பயன்படுத்தி கூட்டுத் துறையில் 4 புதிய திட்டங்கள் — ஒவ்வொன்றும் 50 ஹெக்டேர் பரப்பளவில், இந்த நான்கும் சேர்ந்து 200 ஹெக்டேர் பரப்பளவில் கிரானைட் கற்களைப் பயன்படுத்தி நடத்துகின்ற தொழில்களைத் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்குரிய விலைப்புள்ளிகள் விரைவில் முறைப்படி கோரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சுப்பராயன் பேசும்போது குறிப்பிட்டார்கள், ஒவ்வொரு தொழிலும் தொடங்கும்போது சுற்றுப்புறச் சூழல் எப்படி அமையும் என்பதைக் கருத்தில் கொண்டு தொடங்க வேண்டும்; இல்லாவிட்டால், தொடங்கிய பிறகு பிரச்சினைகள் உருவாகும் என்பதை இங்கே எடுத்துக்காட்டினார். அதற்கு ஏற்ப தோல் பதனிடும் தொழில், சாயத் தொழில், உருக்குத் தொழில், கல் உடைக்கும் தொழில் முதலிய பல தொழில்கள் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு குறித்த கவலையின்றி, கழிவுப் பொருள்களைத் தாறுமாறாகத் தொடர்ந்து வெளியேற்றி வந்தன. இதனால் ஏற்பட்ட சுற்றுப்புறச் சூழல் கேடுகள் தொடர்பாக அண்மையில் நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பையொட்டி, இத்தொழில்களைத் தொடர்ந்து நடத்துவதில் சில சிரமங்கள் தோன்றியுள்ளன. இச்சிரமங்களைக் களைந்து மீண்டும் இவ்வகைத் தொழிற்சாலைகள் திறம்படச் செயல்பட உதவும் வகையில் புறநகர்ப் பகுதிகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய தொழில் வளாகங்கள் அமைத்திட அம்மையங்களில் தோல் பதனிடும் பூங்கா வளாகம், சாயத் தொழில் பூங்கா வளாகம், தோல் பொருள் தொழில் பூங்கா வளாகம், உருக்குத் தொழில் பூங்கா (பவுண்டரி) வளாகம் எனத் தனித்தனிப் பிரிவுகளை அமைத்திடவும், அந்தந்தத் தொழில்களுக்கு



ஏற்ப கழிவுப் பொருள் சுத்திகரிப்பு வசதிகளைச் செய்து கொடுத்திடவும் இந்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்னணுப் பூங்காக்கள். மின்னணுப் பூங்காக்கள் என்று சொல்லும் போது, நந்தவனம் என்று கருதிக்கொள்ளக் கூடாது. அதைத் தொழில் பார்க் என்றும் அழைப்பது உண்டு. அந்த அளவிலே மின்னணுப் பார்க். மின்னணுத் துறையிலே ஏற்பட்டு வரும் தீவிர வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் வகையில் சென்னையில் கேளம்பாக்கத்திலும், கோவையிலும் தொழில்நுட்பப் பூங்காக்களை (Technology Parks) நிறுவிட விலைப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. அதேபோல சென்னைக்கு அருகில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாக இரண்டு இடங்களில் மென்பொருள் நுட்பவியல் பூங்காக்களை (Software Techno Parks) நிறுவுவதற்கும் இந்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** புதிய தொழில் மையங்கள். வளர்ந்து வரும் தொழில் வாய்ப்புக்களைக் கருதி இளைஞர் சமுதாயத்திற்கு முறையான வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டுமென்ற நிலையில், சென்னைப் புறநகர்ப் பகுதியிலும், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியும், கோவை மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத்திலும், புதிய தொழில் மையங்களைத் தொடங்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழ்நாட்டின் எதிர்கால மின்சாரக் கனவுகள் அனைத்தும் பெரிய அளவிலே நம்பியிருப்பது, L.N.G. (Liquified Natural Gas) என்ற எரிவாயுத் திட்டம். அந்த எல்.என்.ஜி. திட்டத்திற்கு, எண்ணூரில் ஒரு எல்.என்.ஜி. டெர்மினல் அமைக்கப்பட்டு, கப்பலில் கொண்டுவரப்படும் 2 மில்லியன் டன் திரவமயமாக்கப்பட்ட எரிவாயு அங்கே சேமித்து வைக்கப்படும். அதன் அருகிலே, முதல் கட்டமாக 2,500 மெகாவாட் திறனுள்ள ஒரு மின் நிலையம் அமைக்கப்பட்டு, திரவ நிலையிலே உள்ள எரிவாயுவை மீண்டும் வாயு நிலைக்கு மாற்றி, குழாய்கள் மூலம் அதனை மின்

[கலைஞர் மு. கருணாநிதி] [1997 ஏப்ரல் 23

உற்பத்தி நிலையத்திற்கு அனுப்பி, அதன்மூலம் மின்சாரம் தயாரிக்கப்படும்.

இந்தப் பிரமாண்டமான திட்டத்திற்கான முதல்கட்ட செலவு ரூ. 12,000 கோடி ஆகும். இந்தப் 12,000 கோடி ரூபாய்க்கு பொதுத் துறையிலே எங்கே போக முடியும்? எனவேதான், அதற்காக விடப்பட்ட டெண்டர்களை ஏற்றுக்கொண்டு செயல்படுத்த, அந்த ஒப்பந்தங்களுக்குத் தயார் என்று முன்வந்திருக்கிறவர்கள் எத்தனை பேர் என்றால், --

1. மோபில் எல்.என்.ஜி., அமெரிக்கா.
2. ஷெல் இண்டர்நேஷனல் காஸ், இங்கிலாந்து.
3. கோஸ்டல் காஸ் கார்ப்பரேஷன், அமெரிக்கா.
4. அமோகா பவர் ரிசோர்சஸ் கார்ப்பரேஷன், அமெரிக்கா.
5. பிலிப்ஸ் பெட்ரோலியம் கம்பெனி, அமெரிக்கா.
6. ஒக்ஸிடண்டல் நிறுவனம், அமெரிக்கா.
7. காஸ் டி'பிரான்ஸ், பிரான்ஸ்.
8. டோடல், பிரான்ஸ்.
9. நிசோ இவாய், ஜப்பான்.
10. மருபேனி கார்ப்பரேஷன், ஜப்பான்.
11. க்ளௌக் இஞ்சினியரிங் குரூப், ஆஸ்திரேலியா.
12. இம்ப்ரெப் எஸ்டிஎன் பிஹெச்டி, மலேசியா.
13. ரிலையன்ஸ் பவர் லிமிடெட், மும்பை.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே, ஒப்பந்தத்தில் கலந்து கொள்வதிலே, ஆர்வத்தோடு அவர்கள் முன்வந்திருக்கின்றார்கள். அவர்களில் யாருக்காவது ஒருவருக்கு இந்தத் திட்டம் கிடைக்கும். ஒரு பிரமாண்டமான திட்டத்தைத் தமிழ்நாடு விரைவிலே அடைய இருக்கின்றது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையைச் சுற்றியே பல பெருந்தொழில் திட்டங்கள் உருவாகி வருகின்றன என்று ஒரு குறைபாடு இருந்து வருகின்றது. இட நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, தொழில் துறையின் சார்பில், ஹூண்டாய் கார் தொழிற்சாலை அமையும் திருப்பெரும்புதூருக்கு



1997 ஏப்ரல் 23] [கலைஞர் மு. கருணாநிதி]

அருகில் 2,000 ஏக்கா பரப்பில் ஒரு துணை நகரமும், போர்டு கார் தொழிற்சாலை அமையும் சிங்கப்பெருமாள்கோவில் பகுதியில் 500 ஏக்கர் பரப்பில் ஒரு துணை நகரமும் அமைக்கப்படும். சென்னையிலேயே தொழில்கள் உருவாகின்றன என்பதை ஓரளவுக்கு மாற்றுவதற்காக இந்த இரண்டு துணை நகரங்களும் பயன்படுத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஏற்கெனவே, 1989-90-91-ல் கழக அரசு பொறுப்பில் இருந்தபொழுது, தனியார் பின்னலாடைத் தொழில் வளாகம் ஒன்றை (பனியன் தொழில் வளாகம்) திருப்பூரை ஒட்டியுள்ள முதலிப் பாளையத்தில் அமைக்கத் திட்டம் வகுத்து, குறுகிய காலத்திலேயே அப்பணியும் முடிக்கப்பட்டது என்பதை அனைவரும் அறிவார்கள். அதேபோல, அனைத்து வசதிகளும் கொண்ட தொழில் மையங்களைத் தனியார் சேர்ந்து உருவாக்க முயன்றால், அதற்கு அரசு நிறுவும் தொழில் வளாகங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தையும் வழங்கிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எண்ணூர், தூத்துக்குடி, மேட்டூர், நெய்வேலி, வடசென்னை ஆகிய இடங்களில் அமைந்த அனல் மின் நிலையங்களில் இருந்து வெளியாகும் எரிசாம்பலைப் பயன்படுத்தி, செங்கல் போன்ற கட்டுமானப் பொருள் (Construction Blocks) தயாரிக்க முன்வரும் தொழில் முனைவோருக்குத் தக்க உதவிகள் செய்திட அரசு முடிவு செய்துள்ளது.

ஜெயங்கொண்டத்திலே நிலக்கரி நிறுவனம். இது நீண்டகாலமாக தீர்க்கப்படாதப் பெரிய பிரச்சினை. 1991-ல் பதிவு செய்யப்பட்ட ஜெயங்கொண்டம் நிலக்கரி நிறுவனம் முந்தைய அரசினுடைய அணுகு முறை காரணமாகத் தொடங்கப்படாமல் அறிவிப்பு நிலையிலேயே இருக்கின்றது. ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படாமலேயே நிலக்கரியைத் தோண்டி எடுப்பதற்கும், தேவைப்படும் இயந்திரங்களை வழங்குவதற்கும் முந்தைய அரசில் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் இந்த அரசினால் ரத்து செய்யப்பட்டுவிட்டன. டெண்டர் கோராமல் அந்த அரசு ஜெயங் கொண்டம் நிலக்கரி நிறுவனத்துக்கான பணிகளை ஒப்படைக்க முன்வந்தபோது, இந்த அரசு பொறுப்பேற்றது. பின்னர் அந்த ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டன. ஆண்டொன்றுக்கு 4 மில்லியன் டன் நிலக்கரியையும், 500 மெகாவாட் மின்சாரத்தையும் குறைந்த விலைக்கு வழங்க விரும்பும் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் இந்தத் திட்டத்திற்கு விடிவு

காலம் ஏற்படும் என்பது உறுதி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1.35

சிங்கப்பூரிலே இருக்கிற சிங்கப்பூர் இந்திய வர்த்தகக் கழகம் - Singapore Indian Chamber of Commerce-என்கின்ற அமைப்பு, தமிழ்நாட்டில், முதலீடு செய்வதைப்பற்றி சிங்கப்பூரில் இருக்கும் தொழில் முனைவோருக்குத் தகவல்கள் கொடுக்கும் ஒரு சாளரமாகச் (Window) செயல்பட ஒத்துக் கொண்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய அரசு அதிகாரிகள், தொழில் முனைவோர்கள் கொண்ட ஒரு குழு சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கே உள்ளவர்களோடு கலந்து பேசி அவர்கள் இதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். இதற்காக இந்த அமைப்புடன் ஓர் ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட இருக்கிறது என்பதையும், இந்த முயற்சிகள் தமிழகத்திலே சிங்கப்பூர் நிறுவனங்களின் முதலீடுகள் வந்தடைவதற்குத் தூண்டுகோலாக அமையும் என்பதையும் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டிட்கோவின் புதிய திட்டங்கள்: புதிய எண்ணூர் துறைமுகத்தின் சுற்றுப்புறங்களில் சுமார் 7,000 ஏக்கர் நிலப்பரப்பில் பெட்ரோகெமிக்கல் பூங்கா ஒன்று நிறுவப்படும். கழிவுநீரைச் சுத்தப்படுத்தி மீண்டும் பயன்படுத்தும் வகையில் நல்ல நீராக மாற்ற சுத்திகரிக்கும் நிலையங்கள் அங்கு அமைக்கப்படும்.

எஸ்.கே.எம். குரூப் நிறுவனத்துடன் இணைந்து 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முட்டைப் பதப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.

நேஷனல் பிளைவுட் லிமிடெட் நிறுவனம் மற்றும் ஜெர்மனியைச் சார்ந்த சையம்பெல்கெம்ப் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து 150 கோடி ரூபாய்ச் செலவில் கரும்புச் சக்கையிலிருந்து சிறு பலகைகள் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

ஆல்கஹாலை அடிப்படையாகக் கொண்டு இரசாயனப் பொருள்களைத் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

நார்வே நாட்டைச் சார்ந்த நார்ஸ்கே ஹைட்ரோ நிறுவனத்துடன் இணைந்து பி.வி.சி. குழாய்க்குத் தேவையான மூலப்பொருட்கள்



தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கான ஒப்பந்தம் கடந்த மாதம் கையெழுத்தாகிவிட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

7,500 கோடி ரூபாய் முதலீட்டில், நாப்தா கிராக்கர்ஸ் மற்றும் ஒலிபின்ஸ் (Naphtha Crackers & Olefins) வளாகம் ஒன்று அமைக்கப்படும்.

சென்னை ஏற்றுமதி வளாகத்தில் 27 கோடி ரூபாய்ச் செலவில் 100 சதவீத ஏற்றுமதியுடன் இணைத் துறையில் செயல்படுத்தக்கூடிய உலோகக் குழல் விளக்கு (ஹேலைடு லாம்ப்) தயாரிக்கும் திட்டம் தொடங்கப்படவிருக்கிறது.

ஓசூர் பகுதியில் மலர் வளர்ப்புத் திட்டம் பல நிறைவேற்றப்பட்டு வருவதால், அத்திட்டங்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அங்கு 75 கோடி ரூபாய்ச் செலவில் குளிரூட்டு வசதி, குளிரூட்டப்பட்ட வாகன வசதி முதலியவைகளைக் கொண்ட மையம் ஒன்று அமைக்கப்படும்.

டிட்கோவுடன் இணைந்து ஈஸ்ட் பாலி புரொபிலின் - Biaxially oriented poly-propylene - (Bopp) பிஸ்பினால்-ஏ (Bisphenol-A) - மற்றும் சக்தியூட்டப்பட்ட கரி ஆகியவற்றைத் தயாரிக்க 325 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிற்சாலை அமைக்கப்படும்.

பெயர்பெற்ற லக்ஷ்மி மெஷின் ஒர்க்ஸ் நிறுவனம் மற்றும் டிட்கோவின் இணை நிறுவனமான சிஸ்கால் (Siscol) மூலமாக 450 கோடி ரூபாய் முதலீட்டில் தேனிரும்புத் தொழிற்சாலை தொடங்கப்பட்டுள்ளது. 210 கோடி ரூபாய் மதிப்பில், இரும்புத் தொழிற் சாலை அடுத்த ஆண்டு சனவரித் திங்கள் வாக்கில் உற்பத்தியைத் தொடங்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1,000 கோடி ரூபாய் முதலீட்டில் ஸ்டெர்லைட் நிறுவனம் தூத்துக்குடியில் தாமிரத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. அந்தத் தொழிற்சாலைக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள், அந்த எதிர்ப்பின் காரணமாக அரசு எடுத்த முயற்சிகள்-தொழிற்சாலையும் நடக்க வேண்டும், தொழிற்சாலையிலிருந்து வருகிற கழிவுப் பொருள்கள் காரணமாக மக்களும் பாதிக்கப்படக்கூடாது, மீனவர்களும் பாதிக்கப் படக் கூடாது என்று எடுத்த முயற்சியின் அடிப்படையில், அந்தத் தொல்லைகள் எல்லாம் தீர்க்கப்பட்டு, தொழிற்சாலை தொடங்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மணலியில் கூட்டுத் துறையில் ரூ. 50 கோடியில் பல்க்டிரக் இண்டர்மீடியட்ஸ் தொழிற்சாலை அமைக்கப்படும்.

70 கோடி ரூபாய் முதலீட்டில் இண்டஸ்ட்ரியல் என்சைம் தொழிற்சாலை தொடங்கப்படும்.

'டான்சம்' நிறுவனம் மூலம் விருத்தாசலத்தில் 1.4 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டு ஒன்றுக்கு 1,920 டன் உயர்தர அலுமினிய கற்கள தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நடப்பாண்டில் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரியில் ரப்பர் தொழிலைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மோசஸ் அவர்களும் எடுத்துச்சொல்லி, எப்படி ஊருக்குப் போவோம் என்றெல்லாம் கேட்டார்கள். தைரியமாக நீங்கள் ஊருக்குச் செல்லலாம், நானும் பல ஆண்டு காலமாக அங்கே எப்படியும் ரப்பர் தொழிற்சாலை வந்தே தீர வேண்டுமென்று முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். ரப்பர் தொழிற்சாலை என்ற காரணத்தால் அது நீண்டு கொண்டே போகிறது. (சிரிப்பு) எனவே, இந்த ஆண்டில் எப்படியும் தொழிற்சாலை வர நான் விடேன் தொடேன் என்று முயற்சி மேற்கொள்வேன், அதுதான் எனக்கு முதல் வேலை என்பதை கன்னியாகுமரியில் உள்ள மக்களுக்கும், உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போலவே திருமதி காஞ்சனா கமலநாதன் அவர்கள் முன்வரிசையில் உள்ளவர்களுக்குத்தான் எல்லாவற்றையும் வழங்குகிறீர்கள், நான் பின்னால் இருக்கிறேன் என்று சொன்னார். நீங்கள் பின்னால் இருங்கள், பின்னாக இருக்காதீர்கள் என்று மட்டும் அவர்களையெல்லாம் கேட்டுக்கொண்டு, இனிமேல் பின்னாக இருக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கையோடு, மாம்பழத் தொழிற்சாலை நிச்சயமாக கிருஷ்ணகிரியில் அமையும் என்ற வாக்குறுதியைத் தந்து, இந்த அளவில், இந்த மானியத்தில் உரையாற்றிய, கருத்துக்களைத் தந்த அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொண்டு, வெட்டுப் பிரேரணைகளை எல்லாம் திரும்பப் பெற்று இந்த மானியத்தில் கோரப்பட்டுள்ள தொகையை அனுமதிக்குமாறு அனைவரையும் கேட்டுக் கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.



**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பனியன் தொழிலுக்கு வரி விலக்கு அளித்து, தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற அத்துணை பனியன் தொழிற்சாலை அதிபர்களும் பாராட்டும் வண்ணம் எங்களுடைய தொழிலை இன்றைக்குக் காப்பாற்றிய முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக 130 ஆண்டு வயது பெற்றது இந்த பனியன் தொழில். கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் நான் அந்தத் தொழிலினுடைய தலைவனாக இருந்து போராடி, இந்த வரி விலக்கு கிடைக்கவில்லை. ஆனால் கலைஞர் அவர்கள் இந்த சிறுதொழில்கள் பால் அக்கறை கொண்டு, வரி விலக்கு அளித்தார்கள். அப்போது நான் சொன்னேன், 1 பர்செண்ட் கொடுத்து இருக்கிறீர்களே, அது ஊமைக் குழந்தையைக் கொடுத்தது போல் இருக்கிறது என்று சொன்னேன். ஆனால் இன்றைக்கு முழுமையாக வரி விலக்கு அளித்து, அந்தக் குழந்தை முருகா முருகா என்று கத்தியதைப் போல, ஞானக் குழந்தையாக, இந்த பனியன் தொழிலுக்குக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கும் அதேபோல் எல்லாத் துறைகளிலேயும் எங்களுக்கு உதவி புரிகின்ற எங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு. பொங்கலூர் பழனிச்சாமி அவர்களுக்கும், இந்த பனியனுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று ஓங்கிக் குரல் கொடுத்த என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுக்கும், என்னுடைய நன்றியைச் சொல்வதோடு, இந்த அற்புதமான மாமன்றத்திலே என்னை உங்கள் முன்னால் பேசப் பணித்த எங்களுடைய அன்புத் தலைவர், அருமைத் தலைவர் திரு. மூப்பனார் அவர்களுக்கும் நன்றி சொல்லி, அமர்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சியின் சார்பில் ஒருவர் பேசியாகிவிட்டதே, பிறகு என்ன? திரு. சி. ஞானசேகரன், ஒரே நிமிடம்தான்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் இருக்கக்கூடிய அரசு எஃகு ஆலையை தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதற்காக கடந்த கால ஆட்சியிலே முயற்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டு, உயர்நீதிமன்றத்திலே இப்போது வழக்கு தொடுக்கப்பட்டு ஏற்கெனவே நிறுத்தப்பட்டு இருக்கிறது. (குறுக்கீடு) அரக்கோணம் ஸ்டீல் பிளான்ட். அந்த அரக்கோணம் ஸ்டீல் பிளான்டை - அதிலே ஏதாவது கொஞ்சம் நஷ்டம் இருந்தாலும்கூட - அரசே மானியம் தந்து அதை நிச்சயமாக

[ திரு. சி. ஞானசேகரன் ] [1997 ஏப்ரல் 23

ஏற்று நடத்தவேண்டும். அதேபோல் வெடி மருந்துத் தொழிற்சாலையும் நஷ்டத்திலே இயங்குவதையும் கவனித்து, கொஞ்சம் மானியம் அளித்து, அதுவும் தொடர்ந்து இலாபத்திலே இயங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலாபத்தில் நடக்கவேண்டும் என்று உத்தரவிட முடியாது; இலாபத்தில் நடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 24 - தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 24 - தொழில்கள், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.



1997 ஏப்ரல் 23]

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தொழில்கள் பற்றிய 24-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 17,15,93,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

[1997 ஏப்ரல் 23

**(ஆ) கோரிக்கை எண் 54—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 54 - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 43,40,82,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



1997 ஏப்ரல் 23] [பேரவைத் தலைவர் ]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24-4-1997) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை, பிற்பகல் 1-44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

- ஏதுமில்லை -

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

152. மானியக் கோரிக்கை எண்கள் 24 மற்றும் 54 பெருந் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98 (தமிழ், ஆங்கிலம்).

153. தொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 1997-98 (தமிழ், ஆங்கிலம்).

154. பெருந் தொழில்கள் பற்றிய செயல்திட்ட ஆய்வுரை, 1996-97 (தமிழ், ஆங்கிலம்).

155. புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1997-98 (தமிழ், ஆங்கிலம்).

156. சர்க்கரைத் தொழில் பற்றிய செயல்முறைத் திட்டம், 1997-98 (தமிழ், ஆங்கிலம்).

157. பொது நிறுவனங்கள் குழுவின் பதினேழாவது அறிக்கை, 1996-97.

158. பொது நிறுவனங்கள் குழுவின் பதினெட்டாவது அறிக்கை, 1996-97.

[1997 ஏப்ரல் 23

159. பொது நிறுவனங்கள் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை, 1996-97.

160. பொது நிறுவனங்கள் குழுவின் இருபதாவது அறிக்கை, 1996-97.

161. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதிமூன்றாவது அறிக்கை, 1996-97.

162. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினான்காவது அறிக்கை, 1996-97.

163. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினைந்தாவது அறிக்கை, 1996-97.

164. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினாறாவது அறிக்கை, 1996-97.

—0—



1997 ஏப்ரல் 23]

# இணைப்பு

*(57 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## தமிழ்நாடு அரசின் தொழில் கொள்கையும் திட்டங்களும்—1997-98

1. தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலுள்ள முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்ந்து வந்தது. தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் தன்னகத்தே பெற்று பல்வகைத் தொழில்களும் பெருகி வளர்வதற்கேற்ற மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கியது. ஆனால், முந்தைய அரசின் தவறான அணுகுமுறை, தொலை நோக்குடன் கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்துச் செயல்படாமை முதலிய காரணங்களால் கடந்த சில ஆண்டுகளாக நமது மாநிலத்தில் தொழில் வளர்ச்சி விகிதம் மிகவும் குறைந்துவிட்டது.

2. எனவேதான், இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே, தொழில் வளர்ச்சியில் தமிழகத்தை மீண்டும் முன்னணிக்குக் கொண்டுவர உறுதிபூண்டு, அதற்குத் தேவையான வழிமுறைகளை ஆராய்ந்து ஆலோசனைகள் வழங்கிட உயர்மட்டக்குழு ஒன்றை அமைத்தது. அனுபவம் வாய்ந்த தொழிலதிபர்களும், இளம் தொழில் முனைவோர்களும், அரசு அதிகாரிகளும் அடங்கிய இக்குழு அவ்வப்போது கூடி நல்ல பல கருத்துகளை வழங்கி வருகிறது.

3. இவ்வரசு வெளிப்படையான அணுகுமுறைகளைக் கொண்ட புதிய தொழிலுறவுக் கொள்கைகளை உருவாக்கியுள்ளது; தொழில் வளர்ச்சிக்குரிய அடிப்படைத் தேவைகளைப் பெருக்குவதற்கு முன்னுரிமை அளித்து வருகிறது. தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம்தான் தொழில்துறையின் முதுகெலும்பை வலுவடையச் செய்யமுடியும் என்று, கடந்த ஆகஸ்டு மாதத்தில் தொழில் துறைக்கான மானியக் கோரிக்கையை இந்த அவையின் முன்பு வைத்தபோது குறிப்பிட்டிருந்தேன். நிறைய தொழில்களை ஈர்ப்பதற்காக-திறமையாகச் செயல்படும் அடிப்படை வசதிகளுடன்-தொழில் நேயம் கொண்ட கொள்கைகளையும் (Industry Friendly Policies) அறிமுகம் செய்திட கடந்த சில மாதங்களில் இந்த அரசினால் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

[1997 ஏப்ரல் 23

## புதிய மின் திட்டங்கள்

4. 1996-97-ஆம் ஆண்டு (ஆகஸ்டு) கொள்கைக் குறிப்பில், மின்சார வசதி, தொழில் வளர்ச்சிக்குரிய இன்றியமையாத அடிப்படைத் தேவைகளில் ஒன்றெனக் குறிப்பிடப்பட்டு, அதை நிறைவு செய்ய இந்த அரசு தீவிரமான முயற்சிகளில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி அடுத்த சில ஆண்டுகளில் கூடுதலாகத் தேவைப்படும் மின்சாரத் தேவைகளை உருவாக்கிட, 20 புதிய சிறு மின் திட்டங்களைத் தொடங்கிட முடிவெடுத்து, கடந்த செப்டம்பர் மாதத்தில் டிட்கோ நிறுவனம் மூலமாக உலகளவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. புதிய தொழில் நுட்ப நுணுக்கங்களுடன், ஒவ்வொரு இடத்திலும் குறைந்த விலையில் மின்சாரத்தை உற்பத்தி செய்து தமிழ்நாடு மின் வாரியத்திற்கு வழங்க முன்வந்த நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் வெளிப்படையான, ஒளிவு மறைவற்ற நடைமுறைகள் (Transparent Procedure) மூலம் தேர்தெடுக்கப்பட்டு, 11 இடங்களில் புதிய மின் திட்டங்களை அமைக்க முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

5. அவ்வாறே, சாலைகள், ரெயில் வசதிகள், துறைமுக வசதிகள், தொலைத் தொடர்பு வசதிகள் போன்ற இதர வசதிகளைப் பெருக்குவதிலும் இதே நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

## புதிய தொழில் நிறுவனங்களுக்கு ஒரே இடத்தில் அனுமதி (Single Window Clearance)

6. புதிய தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான அனைத்து முன் அனுமதிகளையும் (ஒரே இடத்திலே அதிவிரைவாக வழங்குதல்) ஒரே இடத்தில் வழங்குவதற்கு வகைசெய்யும் சட்ட முன்வடிவு நடப்புச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்பட்டுள்ளது.

7. தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மூலப் பொருள்களுக்கும், இயந்திர உறுப்புகளுக்கும், செய் பொருள்களுக்கும், அதேபோல் அவர்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் பொருள்களுக்கும் விற்பனைவரி விகிதங்கள் குறைக்கப்பட்டுள்ளன. இது தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் உற்பத்திச் செலவைக் கணிசமாகக் குறைப்பதற்கு உதவிபுரியும். மேலும், இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், சந்தையில் வெளிமாநிலப் பொருள்களுடன் போட்டியிட்டு, அதிக அளவு விற்பனையைப்



1997 ஏப்ரல் 23]

பெருக்கவும் வழிசெய்யும். விரைவாகவும், பொருத்தமாகவும் உடனுக்குடன் முடிவுகள் எடுக்கப்படுவதற்கு உதவும் வகையில் ஒவ்வொரு மட்டத்திலும் பொறுப்புகள் பகிர்ந்து அளிக்கப்படுகின்றன. தொழிலமைதியும் நன்கு பராமரிக்கப்படுகிறது. வலுவான அடிப்படை வசதிகளும், தொழில் முனைவோரின் பிரச்சினைகளைப் பரிவுடனும், தொலைநோக்குடனும் அணுகும் மனப்பான்மை கொண்ட அரசும், கட்டுப்பாட்டுடன் கடமையைச் செய்யும் திறமை வாய்ந்த தொழிலாளர்களும், பொறுப்புணர்ச்சியுள்ள தொழிற்சங்கத் தலைவர்களும் ஒளிவு மறைவில்லாமல் முடிவுகள் எடுக்க உதவும் விதிமுறைகளும் உள்ளமையால் தமிழ்நாடு, இன்றைய தினம் தொழில் துறையில் முதலீடு செய்ய விரும்புவோரைக் கவர்ந்திடும் மாநிலமாகத் திகழ்கிறது.

8. கடந்த 10 மாதங்களில், இந்த அரசின் முயற்சிகளால் பல பெரும் திட்டங்கள் இங்கே தொடங்கப்பட்டுள்ளன.

- தென்கொரியா நாட்டைச் சார்ந்த ஹூண்டாய் மோட்டார் நிறுவனம் ஆண்டொன்றுக்கு, தொடக்கத்தில் 1,25,000 கார்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை அமைத்து வருகிறது.
- இங்கிலாந்து நாட்டின் பில்கிங்டன் நிறுவனமும், பிரெஞ்சு நாட்டின் செயின்ட் கோபைன் நிறுவனமும் இரண்டு மிதவைக் கண்ணாடித் தொழிற்சாலைகளை அமைக்க முன் வந்துள்ளன.
- கும்ஹோ டயர்ஸ் நிறுவனம் டயர் தொழிற்சாலை ஒன்றையும், மிட்சுபிஷி நிறுவனம் ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் நிறுவனத்துடன் இணைந்து லான்சர் கார் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் தமிழகத்தில் அமைக்கின்றன.
- போர்டு மோட்டார் நிறுவனம் கார் தொழிற்சாலையை அமைத்து வருகிறது. அசோக் லேலண்டு நிறுவனமும், டாபே நிறுவனமும் பலநூறு கோடி ரூபாய் செலவில் தங்கள் தொழிற்சாலைகளை விரிவுபடுத்தி வருகின்றன.

## தமிழகத்தில் மத்திய அரசின் முதலீடு

9. தமிழகத்தில் தற்போது ரூ.20,000 கோடிக்கும் அதிகமான முதலீட்டுடன் 13 பொதுத்துறை நிறுவனங்கள் செயல்பட்டுவருகின்றன. மேலும், நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம், சேலம் உருக்காலை, இந்தியன் ரேர் எர்த்ஸ்

நிறுவனம் (Indian Rare Earths Ltd.,) போன்ற பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களில் சுமார் ரூ.16,300 கோடி மதிப்பில், விரிவாக்குதல், உற்பத்தித்திறனை அதிகரித்தல் ஆகிய பணிகளை உடனடியாக மேற்கொள்வதற்கு தமிழ்நாடு அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

## தமிழ்நாட்டை நோக்கி வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்கள்

10. நமது அரசு, சிங்கப்பூர், மலேசியா ஆகிய வெளிநாடுகளிலிருந்து முதலீடுகளைப் பெற முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்த இரு நாடுகளும், இந்தியாவைவிட மிகச் சிறியவை. ஆனால், அண்மைக்காலத்தில் தொழில் வளர்ச்சி, செல்வச் செழிப்பு, தனிநபர் வருமானம் ஆகியவற்றில் மிக உயர்ந்த நிலையை அந்நாடுகள் அடைந்துள்ளன. மேலும், அந்நாடுகள் பண்டைக்காலத்திலிருந்து இந்தியாவுடன், குறிப்பாகத் தமிழ்நாட்டுடன் பல்வேறு பண்பாட்டு, இன உறவுத் தொடர்புகளைக் கொண்டுள்ளன. அவர்கள் இந்தியாவில் எத்தகைய முதலீட்டைச் செய்ய விரும்பினாலும், இயற்கையாகவே சென்னை அதற்கு உகந்த இடமாக உள்ளது. உண்மையில் அவர்களைப் பொறுத்தவரையில், இந்தியாவில் உள்ள பரந்த சந்தைக்குச் சென்னையே நுழைவு வாயிலாக விளங்குகிறது. ஆனால், 'சிங்கப்பூர் நடைக்கூடம்' (Singapore Corridor) என்ற மந்திரச் சொற்களால் விவரிக்கப்பட்ட 'சாப்ட்வேர் சிட்டி' (Software city) ஒன்றைத் தமிழ்நாட்டில் அமைப்பதற்கான செயற்குறிப்புடன் சிங்கப்பூர் அரசும் தொழிலதிபர்களும் அணுகியபோது, தமிழ்நாட்டின் முந்தைய ஆட்சியாளர்கள், அவர்களைப் பெங்களூர் நோக்கிச் செல்ல வழிவகுத்துவிட்டனர். இந்த அரசு சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து முதலீடுகளைப் பெறுவதற்கு உரிய சூழ்நிலைகளை இங்கு உருவாக்குவதிலும் வெற்றி கண்டுள்ளது. நாம் எடுக்கும் முடிவுகள் வெளிப்படையானவையாக இருக்கும் என்று அவர்கள் உணர்ந்தமையால் சூழ்நிலை முற்றிலுமாக மாறிவிட்டது. இதனையடுத்து, சிங்கப்பூரிலும் மலேசியாவிலுமுள்ள தனியார் தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில், தொழில் பூங்காக்கள், தொழில் நகரங்கள், உயர்தர நெடுஞ்சாலைகள், மின்திட்டங்கள், இணைப்புச் சாலைகள் போன்ற புதிய திட்டங்களில் முதலீடுகள் செய்வதற்கு ஒப்புக் கொண்டுள்ளனர்.

11. இந்த அனைத்து முதலீடுகளும் தொழில் துறையில் உறுதியான அடிப்படை வசதிகளை ஏற்படுத்த உதவும். இந்த வலுவான





அடித்தளத்தில் எழுப்பப்படும் நமது தொழில்துறை, வளர்ந்து மேலோங்கி நின்று, நமது இளைஞர்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகளை வழங்கி, நவீன தொழில்களின் உலகமாகத் தமிழகம் திகழும்.

12. இந்தச் சாதனைகளையும் முன்னேற்றங்களையும் பற்றி மகிழ்ச்சியுடன் குறிப்பிடும் அதே நேரத்தில், ஒருசில பகுதிகளில் நிலவும் சில பிரச்சினைகளைப் பற்றியும் இங்கே சுட்டிக்காட்டுவது நல்லது. தோல் பதப்படுத்தல், கல் உடைத்தல், சாயமிடுதல், சுரங்கம் வெட்டுதல், உணவு பதப்படுத்துதல் முதலிய மரபுமுறைத் தொழில்கள் நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் இருக்கின்றன. காலங்காலமாக நடைபெற்றுவரும் மரபுமுறையிலான இத்தொழில்களில் ஈடுபட்டுள்ள பல நிறுவனங்கள், அவற்றின் செய்முறையினால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுதல் மற்றும் தூய்மைக்கேடு ஏற்படுதல் குறித்துக் கவனிக்கத் தவறிவிட்டன. இதனால், உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் இந்நிறுவனங்களுக்குத் தடை விதிக்கும் நிலைமை உருவாகிவிட்டது. அதனால், அவற்றின் உற்பத்தி பாதிக்கப்பட்டதோடு ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் தங்கள் வேலையை இழக்க நேர்ந்துள்ளது. இந்த நிலையை அறிந்த அரசு முத்தரப்புக் கூட்டங்களை, முதலமைச்சர் முன்னிலையிலும் தொடர்புடைய துறை அமைச்சர் முன்னிலையிலும் பலமுறை நடத்தி, விரைவில் தொழில் நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கவும், தொழிலாளர் தொடர்ந்து வேலைவாய்ப்பினைப் பெறவும் ஆக்கபூர்வமான சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தூய்மைக் கேட்டைக் குறைத்து, உற்பத்தியாகும் கழிவுகளைத் திறம்படச் சுத்திகரித்துத் தங்கள் செய்முறையை மேம்படுத்திக் கொள்ள முன்வரும் தொழில் பிரிவுகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்து தர அரசு கருதியுள்ளது. தேவைப்படின், இது போன்ற தொழிற்சாலைகளை வேறு இடங்களில் மாற்றியமைப்பதற்குக்கூட அரசு துணைபுரியும்.

13. சுருங்கக் கூறின் அடிப்படை வசதிகளை உலகத்தரத்திற்கு நிகராக மேம்படுத்துவதற்கும், தொழிலில் சுமூகமான அணுகுமுறையை உருவாக்கி வளர்ப்பதற்கும் அனைத்து நிலைகளிலும் முடிவுகள் எடுப்பதில் ஒளிவு மறைவற்ற தன்மைகளை உறுதி செய்வதற்கும் முக்கியத்துவம் அளித்து, அவற்றின் மூலம் தமிழகத்தை இந்தியாவின் மிகச்சிறந்த தொழில்வளம் மிக்க மாநிலங்களில் ஒன்றாக ஆக்குவதே இந்த அரசின் நோக்கமாய் உள்ளது.

14. இந்த அரசின் நல்ல அணுகுமுறைகளும் செயல் திட்டங்களும் நமது மாநிலம், தொழில் வளர்ச்சியில் சிறந்து ஓங்குவதற்கு உண்மையான

[1997 ஏப்ரல் 23

தூண்டுகோலாக இருந்து வருகிறது என்பதை, மிகுந்த பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். நாட்டை உருவாக்கும், வருங்கால இளைஞர் சமுதாயத்திற்கு மிகச் சிறந்த தொழிற் கல்வியை வழங்கியும், பயிற்சிபெற்ற இளைஞர்களுக்கு மனநிறைவு தரக்கூடிய வேலை வாய்ப்புகளை உருவாக்க புது தொழில் மையங்களை அமைத்தும், இவ்வரசு தொழில்துறையில் புதியதோர் சகாப்தத்தை ஏற்படுத்த விழைகிறது.

*15.* இதனை எய்துவதற்காக தரமான சாலைகள், தட்டுப்பாடற்ற மின்சாரம், பாதுகாப்பான குடிநீர், மாசற்ற சுற்றுச் சூழல், முறையாக வடிவமைக்கப்பட்ட தொழில் கூடங்கள், தொழில் வளாகங்கள், துணை நகரங்கள் முதலியவற்றை உருவாக்குவதற்கு, இவ்வரசு முழுமையாக ஈடுபட்டுச் செயலாற்றி வருகின்றது. கடந்த சில மாதங்களில் தொழில் முன்னேற்றத்திற்குப் பன்னாட்டு நிறுவனங்கள், இந்திய நிறுவனங்கள், இந்தியாவில் குடியிரா இந்தியர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தொழில் முனைவோர் முதலிய அனைத்துத் தரப்பினரையும் கவரும் வகையில் விதிகளையும் நடைமுறைகளையும் எளிமைப்படுத்தி ஒரு வெளிப்படையான ஒளிவு மறைவற்ற அணுகுமுறையை மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு கடைப்பிடித்து வருகிறது.

*16.* உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் மூலாதாரமாகக் கொண்டு, உண்மையான கொள்கைப்பிடிப்புடன் எடுத்துக்கொள்ளும் எங்கள் முயற்சிகள் முழுவதும் வெற்றி வாகை சூடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

*17.* இந்த அரசின் நல்ல அணுகுமுறைகளையும் செயல் திட்டங்களையும் புரிந்துகொண்டு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் சிறந்தோங்குவதற்குத் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு நல்கிடுவர் என்று நம்பலாம்.



1997 ஏப்ரல் 23]

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ)

தனியார் துறை தொழில் முனைவோருடன் கூட்டு சேர்ந்து சாத்தியமான இணைத் துறைத் திட்டங்களைக் கண்டறிந்து அவற்றைச் செயல்படுத்துவதே, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும். தொழில் துறையில் முதலீடு செய்ய முன்வரும் தனியார் நிறுவனங்களுக்குத் துணைபுரியும் நிறுவனமாக டிட்கோ தன்னை மாற்றிக்கொண்டுள்ளது.

புதிய எண்ணூர் துறைமுகத்தின் சுற்றுப்புறங்களில் சுமார் *7,000* ஏக்கர் நிலப்பரப்பில் பெட்ரோகெமிக்கல் பூங்கா ஒன்றை நிறுவிட டிட்கோ நிறுவனம் உத்தேசித்துள்ளது. இதனை நிறுவ, இரசாயன மற்றும் பெட்ரோகெமிக்கல் சம்பந்தப்பட்ட பிரபல நிறுவனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

*1996-97* தொழில் மானியக் கோரிக்கையின் போது ஆகஸ்டு *1996*-ல் குறிப்பிட்டபடி, ஒரு திரவ எரிவாயு சேமிப்புக் கிடங்கும், ஓர் இணைமின் நிலையமும் இங்கு அமைக்கப்படும்.

பெட்ரோகெமிக்கல் தொழிலுக்குத் தண்ணீர் ஒரு முக்கியமான அடிப்படைத் தேவை என்பதால் கழிவு நீரைச் சுத்தப்படுத்தி மீண்டும் பயன்படுத்தும் வகையில் நல்ல நீராக மாற்ற சுத்திகரிக்கும் நிலையங்கள் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. இந்த சுத்திகரிக்கப்பட்ட நல்ல நீர் இங்கு அமைக்கப்படும் புதிய பெட்ரோகெமிக்கல் தொழில்களுக்கும் இதர தொழில் மையங்களுக்கும் வழங்கப்படும்.

தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களில் மோட்டார் வாகனத் தயாரிப்பாளர்கள் அதிகரித்துள்ளதால் உலக தரத்திற்கீடான வாகன பாகங்கள் அதிக அளவில் கிடைக்கும் பொருட்டுச் சென்னைக்கருகில் மோட்டார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்திப் பூங்கா ஒன்றை டிட்கோ நிறுவனம் அமைக்க உள்ளது. ஆட்டோ உதிரி உறுப்புகளின் உற்பத்தியில் நாம் பாரம்பரியமாக முன்னணியில் உள்ளோம். இந்தத் தொழில் மேலும் அதிக அளவு வளர்ச்சியடையவும் வாய்ப்புகள் வளமாக உள்ளன.

கடலூர், குளச்சல், நாகப்பட்டினம் முதலிய இடங்களில் நவீன துறைமுகங்களை அமைப்பதற்குரிய பணிகளில் தனியார் துறைகள் பங்கு பெற வேண்டும் என இந்த அரசு விரும்புகிறது. சென்னைத் துறைமுகத்திலிருந்து எண்ணூருக்கும், தாம்பரத்திற்கும் புதிய விரைவுப்

பாதைகள் அமைக்கப்படும். இவற்றைத் தனியார் துறையே முதலீடு செய்து, கட்டுமானப் பணிகளை முடித்து, சாலையைப் பயன்படுத்தும் வாகனங்களிடம் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் முறையில் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்திட அரசு கருதியுள்ளது.

வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள், மலர் வளர்ப்பு மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள் தயாரிக்கும் தொழில்கள் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய தொழில் துறைகளாகும். இத்தொழில்களுக்கான புதிய திட்டங்களை அமைக்க டிட்கோ நிறுவனம் தீவிர முயற்சி செய்து வருகிறது.

* 'எஸ்.கே.எம்.' குருப் நிறுவனத்துடன் இணைந்து ரூ.40 கோடி மதிப்பீட்டில் முட்டைப் பதப்படுத்தும் திட்டம் ஒன்றை விரைவில் தொடங்கவுள்ளது.

* மலர் வளர்ப்புத் திட்டங்களும் டிட்கோவின் திட்டங்களில் சேர்கின்றன.

* பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்டு ஒருங்கிணைந்த கனிமத் தொழிலையும் 500 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டம் ஒன்றையும் ஜெயங்கொண்டத்தில் நிறுவிட டிட்கோ நிறுவனம், பன்னாட்டளவில் போட்டி ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரி நடவடிக்கையெடுத்துள்ளது.

* நேஷனல் பிளைவுட் லிமிடெட் நிறுவனம் மற்றும் ஜெர்மனி நிறுவனமான சையம்பெல்கெம்ப் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து ரூ.150 கோடி செலவில் கரும்புச் சக்கையிலிருந்து சிறு பலகைகள் தயாரிக்கும் திட்டம் ஒன்றை அமுல்படுத்த 'டிட்கோ' திட்டமிட்டுள்ளது.

* தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, கடலூருக்கருகில் கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு காகிதம் மற்றும் பத்திரிகைக் காகிதம் தயாரிக்கும் ஒரு திட்டமும் ஆய்விலுள்ளது.

* ரூ.40 கோடி முதலீட்டில் உயர்ரக ஆணுறை தயாரிக்கும் திட்டத்தை டிட்கோ விரைவில் அமைக்க உள்ளது.





* சென்னை ஏற்றுமதி வளாகத்தில் ரூ.27 கோடி செலவில் 100 சதவீத ஏற்றுமதியுடன் இணைத் துறையில் செயல்படுத்தக்கூடிய உலோகக் குழல் விளக்கு (ஹேலைடு லாம்ப்) தயாரிக்கும் திட்டத்திற்கு அமெரிக்க நாட்டைச் சேர்ந்த அட்வான்ஸ்டு லைட்டிங் ரிசோர்சஸ் நிறுவனத்துடன் டிட்கோ நிறுவனம் கூட்டு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கட்டுமானப்பணி விரைவில் தொடங்கப்படும்.

* இரசாயனத் தொழில்களைப் பொறுத்தவரை, பெரிய அளவிலான பல திட்டங்கள் பரிசீலனையிலுள்ளன.

* டிட்கோ நிறுவனத்தின் கூட்டு நிறுவனமான தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்ட்ஸ் நிறுவனம், ஹிந்துஸ்தான் சிபா கெய்ஸி (Hindustan Ciba Geizy) நிறுவனத்துடன் இணைந்து எபிக்ளோரோ ஹைட்ரின் உற்பத்தியளவை அதிகரித்து எபோக்கிரெசின் தயாரிக்கும் தொழில் பிரிவு ஒன்றை ரூ.90 கோடி முதலீட்டில் நிறுவவுள்ளது.

* ரூ. 47 கோடி முதலீட்டில் 'நாட்கோ' குருப் நிறுவனங்களுடன் இணைந்து பெருமளவிலான மருந்துப்பொருள்கள் தயாரிக்கும் திட்டத்தில் 'டிட்கோ' ஈடுபட்டுள்ளது.

* மரவள்ளிக்கிழங்கிலிருந்து ஆல்கஹால் தயாரிக்கும் திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது.

* ஆல்கஹாலை அடிப்படையாகக் கொண்டு இரசாயனப் பொருள் களைத் தயாரிக்கும் திட்டங்களை அமைப்பதில் டிட்கோவும் திட்டமிட்டு வருகிறது.

* பென்சைல் இரசாயனப் பொருள்கள் (Benzy Chemicals) தயாரிப் பதற்கான ஒரு திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

* தாபர் குருப் நிறுவனத்துடன் இணைந்து எரி சாம்பலை (Fly Ash) அடிப்படையாகக் கொண்டு கட்டுமானப் பொருள்களைத் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்திட டிட்கோ தீர்மானித் துள்ளது.

* நார்வே நாட்டைச் சார்ந்த நார்ஸ்கே ஹைட்ரோ மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த W.S. குருப் நிறுவனங்களுடன் இணைந்து பி.வி.சி. தயாரிக்கும் திட்டத்தைத் தொடங்கிட டிட்கோ நிறுவனம் கூட்டு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 23

* நாப்தா க்ராக்கர்ஸ் ஒலிபின்ஸ் (Naphtha Crackers and Olefins) வளாகம் அமைக்க டிட்கோவிற்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான பூர்வாங்கப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.
* டிட்கோவுடன் இணைந்து ஈஸ்ட்., பாலி புரோபிலின் (Biaxially Oriented Poly-propylene) (Bopp) பிஸ்பினால்-ஏ (Bisphenol-A) மற்றும் சக்தியூட்டப்பட்ட கரி ஆகியவற்றைத் தயாரிக்க புகழ்பெற்ற பல நிறுவனங்களிடமிருந்து செயற்குறிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன.
* பெயர் பெற்ற லஷ்மி மெஷின் ஒர்க்ஸ் (LMW) நிறுவனம் மற்றும் 'டிட்கோ'வின் இணை நிறுவனமான 'சிஸ்கால்' (Siscol) மூலமாக ரூ.450 கோடி திட்ட முதலீட்டில் தேனிரும்புத் தொழிற்சாலையைச் சில மாதங்களுக்கு முன்பு தொடங்கியுள்ளது.
* அலுமினியம் சம்பந்தப்பட்ட மதிப்பு வாய்ந்த பொருட்களைத் தயாரிக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.
* ரூ. 1,000 கோடி முதலீட்டில் ஸ்டெர்லைட் நிறுவனம் தூத்துக்குடியில் தாமிரத் தொழிற்சாலை (Copper Smelter) உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.
* இராமநாதபுரத்திற்கு அருகில் வாலிநோக்கம் என்ற இடத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய கப்பல் உடைக்கும் (Ship-breaking) வசதி கொண்ட பணிமனை, நடப்பு ஆண்டில் தனது முழுத் திறனுடன் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு தனியார் நிறுவனத்துடன் சேர்ந்து ஒரு பெரிய அளவிலான கப்பல் பழுதுபார்த்தல், உடைத்தல் தொழிலுக்குரிய பணி மனையைப் புதிய எண்ணூர் துறைமுகத்திலோ, தகுந்த வேறு இடத்திலோ தொடங்கிட டிட்கோ முயற்சி செய்து வருகிறது. இம்முயற்சி எண்ணற்ற பல எஃகு ஆலைகளுக்கும், ரோலிங் மில்களுக்கும் வரப்பிரசாதமாக அமையும்.

## டிட்கோவினால் விரைவில் நிறைவேற்றப்பட இருக்கின்ற வேறு பல திட்டங்கள்

* ரூ. 45 கோடி செலவில் பல்க்டிரக் இன்டர்மீடியட்ஸ் தொழிற்சாலை.
* ரூ. 60 கோடி செலவில் பிளட்பேக்ஸ் மற்றும் லார்ஜ் வால்யூம் ஆஃப் ஐ.வி. ப்ளுயிட்ஸ் தொழிற்சாலை



1997 ஏப்ரல் 23]

* ரூ. 70 கோடி முதலீட்டில் இன்டஸ்ட்ரியல் என்சைம் தயாரிக்கும் தொழிற்சாலை.
* 40 கோடி முதலீட்டில் பென்சைல் கெமிக்கல்ஸ் தயாரிப்புத் தொழிற்சாலை.
* ரூ. 1,200 கோடி செலவில் எல்.என்.ஜி. ரிசிவிங் டெர்மினல் அமைத்தல்.
* ரூ. 300 கோடி மதிப்பீட்டில் ஹெவி மினரல் செபரேஷன் மற்றும் இல்மினேட் பெனிபிசிகேஷன்ஸ்.
* 41.5 கோடி மூதலீட்டில், 10.25 ஏக்கர் நிலப்பரப்பில் மறைமலைநகர் தொழில் வளாகத்தில் ஜப்பானைச் சேர்ந்த 'பியுஜிகுரா' நிறுவனத்தின் உதவியுடன் டெலிபோன் • பைபர் கேபிள் தயாரிக்கும் தொழிற்சாலை.
* ரூ. 38 கோடி மதிப்பீட்டில் பொள்ளாச்சியில் கல்கத்தாவைச் சேர்ந்த ராய் சுரானா நிறுவனம் தொடங்கும் தேங்காயை மூலப்பொருளாகக் கொண்ட தொழிற்சாலை.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்)

ஆலங்குளத்தில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (டிட்கோ) 1970-ல் ஏற்படுத்தப்பட்ட சிமெண்ட் தொழிற்சாலை நிர்வாகத்தைப் பின்னர் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (டான்செம்) ஏற்றுக் கொண்டது. அதனையடுத்து தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அரியலூரில் மேலுமொரு சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்தி, 1979 ஆம் ஆண்டு சிமெண்ட் உற்பத்தியைத் தொடங்கியது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் 1981 ஆம் ஆண்டில் காமராசர் மாவட்டத்திலுள்ள ஆலங்குளத்தில் கல்நார் சிமெண்ட் தகடு (ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்) தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றையும், மாயனூரில் 1984-ல் கல்நார் சிமெண்ட் அழுத்தக் குழாய் தயாரிப்புத் தொழிற்சாலை (ஆஸ்பெஸ் டாஸ் பிரஷர் பைப்ஸ்) ஒன்றையும், தொடங்கியது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், 1989-ல் தென்னார்காடு வள்ளலார் மாவட்டத்திலுள்ள விருத்தாசலத்தில், இயங்காமலிருந்த கற்குழாய்த் தயாரிப்புத் தொழிற் சாலையை, தமிழ்நாடு பீங்கான் தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து (TACEL) எடுத்துக் கொண்டது.

### ஆலங்குளம் சிமெண்டு தொழிற்சாலையில் சிமெண்டு தயாரிப்பு செய்முறையை ஈரத்தன்மை செய்முறையிலிருந்து உலர்தன்மை செய்முறைக்கு மாற்றுதல்

சுமார் ரூ. 155 கோடி மதிப்பீட்டுத் திட்டச் செலவில் ஆண்டொன்றுக்கு, தற்போதைய உற்பத்தித் திறனான 4 இலட்சம் டன்னிலிருந்து 5 இலட்சம் டன்னாக அதிகரிக்கும் நோக்குடன் இத்தொழிற்சாலையின் சிமெண்டு தயாரிப்புச் செய்முறையை ஈரத்தன்மை செய்முறையிலிருந்து உலர்தன்மை செய்முறைக்கு மாற்ற தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் கருதியுள்ளது. நிருவாளர்கள் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூபாய் 100 கோடி குறித்த காலக்கடன் வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. கம்பெனியின் இலாபத்திலிருந்து ரூ. 20 கோடியை இத்திட்டத்திற்காகப் பயன்படுத்த முடியும். மேலும் தேவைப்படும் தொகையை, பங்குச் சந்தையிலிருந்து திரட்ட வேண்டும்.

### அரியலூர் சிமெண்ட் தயாரிப்புத் தொழிற்சாலை

ரூ. 150 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஆண்டொன்றுக்கு தற்போதைய உற்பத்தித் திறனான 5 இலட்சம் டன்னிலிருந்து 10 இலட்சம் டன்னாக





உயர்த்தி, இத்தொழிற்சாலையை விரிவுபடுத்துவது குறித்துப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ஆதாயம் தரத்தக்க திட்ட அறிக்கையைத் தயாரிக்க புதுடில்லியிலுள்ள திருவாளர்கள் ஹோல்டெக் கன்சல்டென்ட்ஸ் நிறுவனத்துடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்டுள்ள திட்ட அறிக்கையின் குறிப்பினை ஆலங்குளம் ஆலையின் விரிவாக்கத் திட்டத்திற்கும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

### விருத்தாசலம் கற்குழாய் தயாரிப்புத் தொழிற்சாலை

தற்போது கற்குழாய்களுக்கு போதிய அளவு வழங்கல் ஆணைகள் பெறப்பட்டிருக்கின்றன. விற்பனையாகாதிருந்த இருப்புகள் விற்பனை செய்யப்பட்டு, இத்தொழில் பிரிவு, வரும் ஆண்டில் ஆதாயம் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு எஃகு நிறுவனம், அரக்கோணம்

தமிழக அரசின் பல்வேறு துறைகள் மற்றும் அரசுத் திட்டங்களுக்குத் தேவையான எஃகுப் பொருள்களை உற்பத்தி செய்யும் நோக்குடன் தமிழ்நாடு எஃகு நிறுவனம் 1972 ஆம் ஆண்டில் அரக்கோணத்தில் நிறுவப்பட்டது.

நடப்பு நிதி ஆண்டில் 34,518 டன்கள் எஃகு உருக்குப் பாளங்கள் மற்றும் உருக்கிய உருளைகளை இந்நிறுவனம் உற்பத்தி செய்துள்ளது.

மீள் உருளை ஆலையில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்கள், ஆண்டிற்கு 45,000 டன்கள் உற்பத்தித் திறன் கொண்டவை. 1996-97 ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 34,750 டன்களுக்குப் பதிலாக 31-3-97-ன்படி 27,742 டன்கள் மீள் உருளைக் கம்பிகளை இந்நிறுவனம் உற்பத்தி செய்துள்ளது. வரும் நிதி ஆண்டில் (1997-98) இந்நிறுவனம் 40,000 டன்கள் உற்பத்தி அளவினை அடைய உத்தேசித்துள்ளது.

அனைத்து அரசுத் துறைகளும் அரசு தொடர்புடைய நிறுவனங்களும் தேவையான எஃகுப் பொருள்களைச் சந்தை விலையைவிட அதிகமாக இருப்பினும் தமிழ்நாடு எஃகு நிறுவனத்திடமிருந்து மட்டுமே வாங்க வேண்டும் என்று இந்நிறுவனத்திற்குப் பிராணவாயு செலுத்துவது போல் தமிழக அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது. இருப்பினும் அரசின் ஆதரவு மட்டுமே ஒரு தொழில் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உற்ற துணையாக ஆகிவிடாது. தமிழ்நாடு எஃகு நிறுவனத்திற்கு உதவி செய்யும் பொருட்டு, ஏனைய திட்டங்களின் மதிப்பீட்டை அரசால் உயர்த்த முடியாது. ரூ. 300 கோடி அளவில் ஒரு சிறிய ஊதுலை நிறுவி, (Mini blast furnace) பெரிய அளவில் நவீனப்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டால் மட்டுமே இந்நிறுவனம் இலாபகரமாகச் செயல்பட வாய்ப்புள்ளது என்று நிபுணர்கள் கருதுகிறார்கள். இன்றைய சூழ்நிலையில் இப்படியோர் பெரிய திட்டத்தை நிதி உதவியளித்துச் செயல்படுத்திட அரசால் முடியாது என்பதால் தனியார் துறை ஈடுபாட்டுடன் இதைச் செயல்படுத்த முடியுமா என்பது ஆராயப்பட்டு வருகிறது.



## தமிழ்நாடு மக்னீசியம் மற்றும் மரைன் கெமிக்கல்ஸ் நிறுவனம்

இந்தத் தொழில் நிறுவனம், தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகத்தின் (NRDC) தொழில்நுட்ப உதவியுடன் தொடங்கப்பட்டது. ஆனால், இத்தொழில் நுட்பம் பலனளிக்காததால், இத்தொழில் நிறுவனம் கடந்த 4 ஆண்டுகளாக இயங்கவில்லை மத்திய அரசின் நிதியுதவியைப் பெற்று, தற்போது ஐதராபாத்திலுள்ள பாதுகாப்பு உலோகவியல் ஆராய்ச்சி ஆய்வுக்கூடத்தின் உதவியுடன் புதிய தொழில்நுட்பம் ஒன்றை உருவாக்க முன்னோடித் திட்ட ஆய்வுகளின் மூலம், இத்தொழிற் சாலைக்குப் புத்துயிரளிக்க முயற்சிகள் மேறகொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு மகனீசியம் மற்றும் மரைன் கெமிக்கல்ஸ் நிறுவனம் ஒரு நலிவுற்ற தொழில் நிறுவனம் என்று, தொழில் மற்றும் நிதிச்சீரமைப்பு நிறுவனம் அறிவித்து, தமிழ்நாடு மக்னீசியம் மற்றும் மரைன் கெமிக்கல்ஸ் நிறுவனத்திறகுப் புத்துயிரளிக்கும்/சீரமைக்கும் திட்டத்திற்காக செயல்முறை முகமையாக, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியை நியமித்துள்ளது.

## தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் (டெல்)

1986-ல் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) துணை நிறுவனமாகத் தொடங்கப்பட்ட தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் (டெல்) ஆரம்பத்திலிருந்தே நட்டத்தில்தான் நடந்து வந்தது. இந்நிறுவனத்தை இலாபகரமாக நடத்த இயலாது என்று கூறி, முந்தைய அரசு இதை மிகச்சிறிய தொகைக்குத் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு விற்றுவிட முயற்சி செய்தது. ஆனால் இந்நிறுவனம் 1995-96-ல் உற்பத்தி மற்றும் விற்பனையை வெகுவாக உயர்த்தி சாதனை படைத்து, முதன் முறையாக இலாபமும் ஈட்டத் தொடங்கியதால், முந்தைய அரசின் முயற்சி தோல்வியடைந்தது. 1995-96-ல் ரூ. 50 கோடியைத் தாண்டி விற்பனை நடத்திய இந்நிறுவனம், 1996-97-லும் இதே சாதனை புரிந்து மிகுந்த அளவில் இலாபத்தை ஈட்டியிருக்கிறது.

[1997 ஏப்ரல் 23

## தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்)

தமிழ்நாட்டில் புதிய தொழில்கள் உருவாவதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதற்காக அரசின் முகவராக இயங்கச் செய்யும் நோக்குடன் 1971 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தொடங்கப்பட்டது.

புதிய தொழில்களுக்குக் காலக்கடன் (Term Loan) வழங்குவது, தேவையான அடிப்படை வசதிகளுடன் புதிய தொழில் வளாகங்களை (Industrial Estates) அமைத்துத் தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்வது போன்ற முக்கிய பணிகளை இந்நிறுவனம் கவனித்து வருகிறது. இவை தவிர கீழ்க்கண்ட, பணிகளையும் 'சிப்காட்' நிறுவனம் ஆற்றி வருகிறது:—

(1) தொழிற்சாலைகளுக்கான விற்பனை வரி வசூல் தள்ளிவைப்பு/ தள்ளுபடி திட்டத்தின்கீழ் தகுதிச் சான்றிதழ் வழங்குதல்.

(2) சென்னை ஏற்றுமதி செயல்முறை மண்டல தொழிற்சாலை களுக்கும் 100 சதவிகிதம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் விற்பனை வரி (TNGST) ஈடு செய்யும் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

(3) குறிப்பிடப்பட்ட பகுதி மற்றும் குறிப்பிடப்பட்ட தொழிற் பிரிவுகளுக்காக மாநில மூலதன மானியம் தவிர மின் உற்பத்தி சாதனங்கள் மற்றும் மகளிருக்கான வேலைவாய்ப்பு போன்றவற்றிற்குக் கூடுதல் மானியம் அளித்தல்.

(4) பெருந்தொழில் மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு வழிகாட்டும் சேவைப்பணி.

### 2. வளாகங்களின் வளர்ச்சி :

### (அ) தற்போதுள்ள வளாகங்களும், வளர்ச்சித் திட்டங்களும் :

(1) சிப்காட் நிறுவனம் இராணிப்பேட்டை, ஒசூர், கும்மிடிப்பூண்டி, கடலூர், மானாமதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் தொழில்பேட்டைகளை உருவாக்கி மேம்பாடு செய்துள்ளது.



1997 ஏப்ரல் 23]

(2) கும்மிடிப்பூண்டி தொழிற்பேட்டையில் 645 ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டாவது திட்டம் மேம்படுத்தப்படுகிறது. இதில் சுமார் 211 ஏக்கர் நிலத்தில் ஏற்றுமதி வளர்ச்சித் தொழில் பூங்கா ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. மேலும் 246 ஏக்கர் நிலங்கள் இந்த இரண்டாவது திட்ட விரிவாக்கத்திற்காக சிப்காட் நிறுவனத்தின ரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

(3) சுமார் 220 ஏக்கரில் கடலூரில் இரண்டாவது திட்டப் பணிக்காக நிலம் கையகப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

(4) ஒசூர் இரண்டாவது திட்டத்தை விரிவாக்குவதற்காக 128 ஏக்கர் பட்டா நிலமும் 56 ஏக்கர் அரசு நிலமும் எடுக்கப்படுகின்றது.

(5) இராணிப்பேட்டையில் தொழில் வளாகங்களின் விரிவாக்கத்திற் காகச் சுமார் 798 ஏக்கர் நிலம், நில எடுப்புச் சட்டத்தின் அவசரப் பிரிவின் கீழ் கையகப்படுத்தப்பட்டுவருகிறது.

(6) தூத்துக்குடிக்கு அருகில் மீளவிட்டான், தெற்கு வீரபாண்டியபுரம் ஆகிய கிராமங்களில் விரிவாக்கத்திட்டற்காக, ரூபாய் 35 கோடி மதிப்பீட்டில் 650 ஹெக்டேர் நிலங்கள் கையகப் படுத்தப்படுகின்றன.

### (ஆ) புதிய வளாகங்கள்:

(i) தொழில் துறையில் பின்தங்கிய திருவண்ணாமலை— சம்புவராயர் மாவட்டம், செய்யாறு வட்டத்தில், ஒரு புதிய தொழில் வளாகம் சிப்காட் நிறுவனத்தால் உருவாக்கப்பட உள்ளது. இதற்காக 1,350 ஏக்கர் நிலத்தை சிப்காட் நிறுவனம் கையகப்படுத்துகின்றது.

(ii) அண்ணா மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், இருங்காட்டுக்கோட்டையில் ஒரு புதிய தொழில் வளாகம் அமைக்கப்படுகிறது. இதற்காக 1,829 ஏக்கர் நிலம் சிப்காட் நிறுவனத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீபெரும்புதூருக்கு அருகில் மற்ற மூன்று பகுதிகளில் தொழில் வளாகங்களும் நகரியங்களும் அமைப்பதற்கான இடங்கள் தேர்வு செய்யப்படுள்ளன.

(iii) கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோயம்புத்தூர் (தெற்கு) வட்டத்தில் புதிய தொழில் வளாகம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(iv) எம்.ஜி.ஆர். மாவட்டம், பொன்னேரி வட்டம், எண்ணூரில் சுமார் 7,000 ஏக்கர் நிலத்தில் பெட்ரோ கெமிக்கல் பூங்கா அமைய இருக்கிறது.

**(இ) திட்ட நிதி :**

1996-97-ஆம் ஆண்டில் ரூ.81.31 கோடி குறித்த காலக் கடனாக வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ.300 கோடி மூலதன மதிப்பீட்டுடன், சுமார் 7,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 1997-98-ஆம் ஆண்டிற்கு ரூ.120 கோடி வரை குறித்த காலக் கடன் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கிடக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



## தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்)

தொழில் வளர்ச்சி மையங்களையும், தொழில் வளாகங்களையும் அமைப்பதற்காகவும், தொழிற்சாலைப் பகுதிகளில் இதர அடிப்படை வசதிகளின் பற்றாக்குறையை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காகவும் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிறுவனம், பெரியார் மாவட்டம் பெருந்துறையிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் கங்கைகொண்டானிலும் தொழில் வளர்ச்சி மையங்களை அமைத்து வருகிறது. ரூ. 110 கோடி மதிப்பிலான பெரியார் மாவட்டம் பெருந்துறை-தொழில் வளர்ச்சி மையம் 2,800 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படுகிறது. இங்கு டெக்ஸ்டைல், இரசாயனம், பொறியியல் தொடர்புடைய தொழில்கள் தொடங்கப்படவிருக்கின்றன. இதுவரை 2,400 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுத் தொழில் முனைவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

ரூ. 39.68 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் கங்கைகொண்டானில் 2,020 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படவிருக்கும் தொழில் வளர்ச்சி மையத்தில் பொறியியல் தொடர்புடைய தொழில்கள் தொடங்கப்படவிருக்கின்றன. இதுவரை 1,947 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு தொழில் முனைவர்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அவ்வாறே தர்மபுரி மாவட்டம் பருகூரிலும், திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டம் நிலக்கோட்டையிலும் மேம்படுத்தப்பட்ட மனைகளை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### திருப்பூர் பகுதி வளர்ச்சித் திட்டம்

தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கம் மற்றும் அடிப்படை வசதி குத்தகை நிதியுதவிப் பணிகள் நிறுவனத்துடன் (ஐஎல்எப்எஸ்) சேர்ந்து திருப்பூர் பகுதி வளர்ச்சித் திட்டம் என்கிற பெரும் அளவிலான அடிப்படை வசதித் திட்டம் ஒன்றையும் திருப்பூரில் செயலாக்கி வருகின்றது. இத்தொழில் வளர்ச்சியின் முதற்கட்டப்பணியில், குடிநீர் வழங்கும் பெருந்திட்டம் (காவிரி ஆற்றிலிருந்து நாள் ஒன்றுக்கு 185 மில்லியன்

விட்டர் தண்ணீரை எடுத்தல், சுத்திகரித்தல், அனுப்புதல், சேமித்து வைத்தல், வழங்குதல்) கழிவு நீரகற்று திட்டம் (வீட்டுக் கழிவு நீரையும், தொழிற்சாலைக் கழிவுகளையும் எடுத்துச் செல்லல், சுத்திகரித்தல், அகற்றுதல்) ஆகியவற்றைச் செயலாக்குவது அடங்கும். தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தால் தொடங்கப்பட்டு, தமிழ்நாடு அரசு, மைய அரசு, அடிப்படை வசதிக் குத்தகை நிதியுதவிப் பணிகள் நிறுவனம், திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் போன்றவற்றின் ஆதரவுடன் செயல்படுகின்ற புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு நிறுவனத்தால், தனியார் துறையே முதலீடு செய்து திட்டத்தை அமைத்து தாங்கள் போட்ட பணம், கட்டண வசூல் மூலமாகத் திரும்பப் பெறும் வரைக்கும் அவர்களே அத்திட்டத்தை மேற்பார்வை செய்து, பிறகு செயல்பட்டுக் கொண்டிருக்கும் திட்டத்தை அரசுக்கு இலவசமாகவே ஒப்படைப்பார்கள். இத்திட்டத்தின் முதற்கட்டப் பணிக்கு ரூ. 569.20 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. முதற்கட்டப் பணியைச் செயலாக்கிய பின்னர், சாலைகள், தொலைத் தொடர்பு போன்ற ஏனைய அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்கான பணிகள் இரண்டாம் கட்டத்தில் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தை இயக்கும் தனியார் துறை நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்க, உலக அளவில் ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்படவுள்ளது. இத்திட்டப்பணி 1997-98-ல் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் மணலி தொழிற்சாலைகள் சங்கத்தின் ஒத்துழைப்புடன், மணலி தொழிற் பகுதியில் 4 சாலைகளை மேம்படுத்த/வலுப்படுத்தக் கருதியுள்ளது. முதல் கட்டப்பணியாக 2.8 கிலோ மீட்டர் தொலைவிற்கு மணலி மாத்தூர் சாலையை வலுப்படுத்தும் பணி ரூ.49 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணிக்காகும் செலவில் 50 சதவீதத்தை மணலி தொழிற்சாலைகள் சங்கம் ஏற்கிறது.

நந்தம்பாக்கத்தில் சுமார் 35 ஏக்கர் பரப்பில் நிலையாக தொழில் பொருட்காட்சி மையம் ஒன்றை அமைக்க, உலக அளவில் தொழில் பொருட்காட்சிகளைச் சொந்தமாக வைத்து நடத்தி மற்றும் விற்பனை செய்வதில் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து உலக அளவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. ஒன்பது ஒப்பந்தப்புள்ளிகள் கிடைக்கப்பெற்றும் யாருமே தகுதி நெறிமுறைகளைப் பூர்த்தி செய்யவில்லை. எனவே, மறு ஒப்பந்தப்புள்ளி கோருவது அவசியமாகிறது.



தமிழ்நாட்டில் பெருந்துறைமுகங்களில் தற்போதுள்ள நெருக்கடியைக் குறைக்க சிறிய துறைமுகங்களான கடலூர் மற்றும் குளச்சல் துறைமுகங்களைப் பன்னாட்டுத் தரத்திற்கு மேம்படுத்திடத் தேவையான நடவடிக்கைகளை "டாசிட்" எடுத்து வருகிறது. அதன்படி 'டாசிட்' மேற்படி இரண்டு துறைமுகங்களுக்கும் தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கைகளைத் தயாரித்திட புகழ்பெற்ற ஆலோசனை நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரியுள்ளது.

**புதிய தொழில் வளாகங்கள்**

* அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், மாமண்டூர், பழமந்தூர் ஆகிய கிராமங்களில் 313.75.0 எக்டேர் நிலத்தில் புதிய தொழில் வளாகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

* அண்ணா மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், சுங்குவார்சத்திரம் அருகே 999.42.5 எக்டேர் நிலத்தில் புதிய தொழில் வளாகம் ஒன்று உருவாக இருக்கிறது.

* திருப்பெரும்புதூர் அருகே 983.21.5 எக்டேர் நிலத்தில் மற்றொரு தொழில் வளாகம் அமையவிருக்கிறது.

[1997 ஏப்ரல் 23

## தமிழ்நாடு மின்னணு நிறுவனம்

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) முழுவதும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாகும். மின்னணு மற்றும் அதன் தொடர்பான தொழிற்சாலைகளை உருவாக்குவது இதன் நோக்கமாகும். இந்நிறுவனம் தற்பொழுது ஒரு பொதுத்துறை நிறுவனத்தையும் 27 கூட்டு/இணை/ வழிகாட்டுத்துறை நிறுவனங்களையும் உருவாக்கி உள்ளது. தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட தெரிந்தெடுக்கப்பட்ட சில மின்னணுப் பொருட்களுக்கு விற்பனை உதவிகளை எல்காட் நிறுவனம் நல்கி வருகின்றது.

எல்காட் நிறுவனம் 1996-97-ல் ரூ. 88·15 கோடி மதிப்புள்ள பொருட்களை விற்பனை செய்துள்ளது.

1997-98ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய தொழில் திட்டங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1. | சாட்டர்ன் இன்ஃபர்மேஷன்ஸ் சிஸ்டம். .. | கணினி மென்பொருள் மேம்பாடு |
| 2. | கோவை டூல் ரூம் .. | சிறப்புக் கருவிகள்/ மோல்டு மற்றும் பொது இயந்திரவியல் வேலைகள் |
| 3. | எல்காட் அட்வான்ஸ்டு சென்சார் டெக்னாலஜி லிட். .. | லோட் செல் |

எல்காட் நிறுவனம் கடந்த 8 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக நிகர இலாபம் ஈட்டி வருகின்றது.

சென்னைக்குத் தெற்கில், கேளம்பாக்கம் அருகில் ஒரு கணினி தொழில் நகரம் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் உதவியுடன் 200 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படும். இது தனியார் துறையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி தனியார் துறை பங்குதாரரைத் தேர்ந்தெடுக்க உலக அளவிலான டெண்டர் ஏற்கெனவே கோரப்பட்டுள்ளது. மேலும் ஒரு கணினி மெல்லினத் தொழில் மையத்தை கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக் கழக உதவியுடன் அமைக்க எல்காட் உத்தேசித்துள்ளது.



1997 ஏப்ரல் 23]

எல்காட் நிறுவனம் தமிழ்நாட்டிலுள்ள பல்வகை அரசு மருத்துவ மனைகளில் நோய் அறியும் மையங்களை நிறுவத் திட்டமிட்டு, முன்மாதிரியாக ஒரு மையத்தை அரசு இராயப்பேட்டை மருத்துவ மனையில் அமைத்து இயக்கி வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 4·25 கோடி வாக்காளர்களுக்கு அடையாள அட்டை தயாரித்து வழங்கும் பணியை அரசு எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. வாக்காளர் விவரப்பதிவுப் பணிகள் முழுவதும் முடிவடைந்து விட்டன. முதல் கட்டப் புகைப்படம் எடுக்கும் பணி அண்ணா, எம்.ஜி.ஆர். சென்னை மாவட்டங்கள் நீங்கலாக எல்லா மாவட்டங்களிலும் முடிந்துள்ளது. மீதி உள்ள மாவட்டங்களில் புகைப் படம் எடுக்கும் பணி பிப்ரவரித் திங்கள் 1997-ல் முடிந்து விட்டது. வாக்காளர் அடையாள அட்டை தயாரித்தலில் இறுதிப் பணியான, படம் பிடித்தல், இணைத்தல், பதிவு செய்தல் மற்றும் லேமினேஷன் செய்தல் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. விரைவில் வாக்காளர் அடையாள அட்டை வழங்கும் பணி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**1997-98 ஆம் ஆண்டில் நிறைவேற்றிடத் திட்டமிடப்பட்டுள்ள புதிய திட்டங்கள்:**

1. ஹூண்டாய் எலெக்ட்ரானிக்ஸ் இண்டஸ்ரீஸ் கோ. லிட் உடன் ஆட்டோமோடிவ் எலக்ட்ரானிக் நிறுவனம்.
2. இன்டகிரேடட் இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி பார்க்.
3. பாரதியார் தொழில் நுட்ப வளாகம்.
4. சென்னை, கோவை மற்றும் ஓசூரில் கணினி மென்பொருள் மேம்பாட்டு வளாகங்கள்.
5. பள்ளிகளில் கணினி மென்பொருள் கல்வித் திட்டம்.
6. ஓட்டுநர் உரிம அட்டைத் திட்டம்.
7. குடும்பப் பொருள்கள் வழங்கு அட்டையில் மேல் அட்டை அச்சிடுதல் மற்றும் லேமினேஷன் வேலை.

[1997 ஏப்ரல் 23

## புவியியல் மற்றும் சுரங்கத்துறை

புவியியல் மற்றும் சுரங்கத்துறை கீழ்க்காணும் முக்கிய பணிகளைத் தொடர்ந்து செயலாற்றி வருகின்றது:

(1) கனிம ஆய்வும் மதிப்பீடும்.

(2) மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புவி தொழில் நுட்ப ஆய்வுகள்

(3) கனிம நிர்வாகம்.

1. முந்தைய அரசு 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளில் விதி 39-ஐப் புகுத்தி பெருத்த ஒழுங்கீனச் செயல்களுக்கு வழி வகுத்தது. மேலும், எந்தவிதமான விதியையோ மற்றும் கோட்பாட்டையோ பின்பற்றாமலும் மற்றும் குத்தகைத்தொகை கூட வசூலிக்காமலும் மணல், ஜல்லி, களிமண், கற்கள், கருங்கற்கள் (Granites) போன்ற கனிமங்களுக்குக் குத்தகை வழங்கும் அதிகாரத்தை அரசிடம் குவித்து வைத்திருந்தது. இதன் விளைவாக அரசுக்கு 100 கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டது. தற்போதைய அரசு, விதி 39-ஐத் தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளிலிருந்து நீக்கியேவிட்டது. மேலும், அரசு நிலங்களில் குத்தகை வழங்க ஒப்பந்தப் புள்ளி மற்றும் ஏல முறையை வலியுறுத்தியுள்ளது.

2. 14-7-1996 முதல் மணல், கல், ஜல்லி, கிராவல் போன்ற சிறு கனிமங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி முறை, ஏல முறை ஆகியன வாயிலாகக் குத்தகைகள் வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரையில் 280 கல் குவாரிகள், 149 மணல் குவாரிகள் மற்றும் 11 இதர சிறுகனிம குவாரிகளின் குத்தகைத் தொகை உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி/ஏல முறைப்படித் தீர்மானிக்கப்பட்டது. இதன் மூலம் ரூ. 5 95 கோடி குத்தகைத் தொகையாகச் செலுத்தப் பட்டது. விதி 39-ஐ நீக்காமல் பழைய நிலையை நீடிக்க விட்டிருந்தால் இந்த வருவாயை அரசு இழந்திருக்கும்.

3. 1996-97 இல் புவியியல் மற்றும் சுரங்கத்துறை, புவியியல் ஆய்வுகளைத் தொடர்ந்து விரிவாக மேற்கொண்டுள்ளது. களிமண், சிலிகா, மணல் கிராபைட், பிளாட்டின வகைக் கனிமங்கள், மாலிப்டினம் ஆகிய வளங்களைக் கண்டறியும் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றம் கண்டுள்ளன.



1997 ஏப்ரல் 23]

**II. 1997-98-ம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களின்படி கீழ்க்கண்ட புவியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்:**

| | | |
|---|---|---|
| (அ) | தமிழ்நாட்டில் களிமண் படிவ மறு மதிப்பீடு ஆய்வு | |
| (ஆ) | தமிழ்நாட்டில் கடற்கரையோர பகுதிகளில் சிலிக்கா மணலுக்கான ஆய்வு | திட்டச் செலவு ரூ. 2.29 இலட்சங்கள் |
| (இ) | திருநெல்வேலி - கட்டபொம்மன், ராஜாஜி, கன்யாகுமரி மாவட்டங்களில் குறை மணிக்கற்களுக்கான ஆய்வு | |
| (ஈ) | தமிழ்நாட்டில் கிரானைட் கற்களுக்கான ஆய்வு | |
| (உ) | திருநெல்வேலி-கட்டபொம்மன், திண்டுக்கல் மன்னர் திருமலை மற்றும் திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த புவி இயற்பியல் மற்றும் புவி வேதியியல் ஆய்வு | 1997-98 ஆம் ஆண்டில் திட்டச் செலவு ரூ. 0.18 இலட்சம் |
| (ஊ) | கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டங்களில் கிராபைட்டுக்கான ஆய்வு | 1997-98 ஆம் ஆண்டில் திட்டச் செலவு ரூ. 0.19 இலட்சம் |
| (எ) | திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டத்தில் ஆலம்பட்டி பகுதிகளில் காணப்படும் சுண்ணாம்புக்கல் சுரங்கங்களில் கழிவுகளில் மாலிப்டினம் படிவங்களைக் கண்டறியும் ஆய்வு | 1997-98ஆம் ஆண்டில் திட்டச் செலவு ரூ. 4.81 இலட்சங்கள் |
| (ஏ) | நாமக்கல் ராஜாஜி மாவட்டத்தில் பிளாட்டினம் வகையைச் சார்ந்த கனிமங்களுக்கான ஆய்வு | |
| (ஐ) | மலைமேம்பாட்டு அபிவிருத்தித் திட்டம் புவி தொழில் நுட்பப் பிரிவு, குன்னூர் | 1997-98 ஆம் ஆண்டில் திட்டச் செலவு ரூ. 8.43 இலட்சங்கள் |

[1997 ஏப்ரல் 23

4. கீழ்க்கண்ட புதிய திட்டங்கள் மாநில திட்டக் குழுவினரால் ஒப்புதல் அளிக்கப்பெற்று நிலைநிதிக் குழுவினரால் (Standing Finance Committee) அங்கீகரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| (1) திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம், கொடைக்கானலில் புவி தொழில் நுட்பப் பிரிவு அமைக்கும் திட்டம். | மொத்தச் செலவு ரூ. 15.00 இலட்சங்கள் |
| (2) புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் பூகோள அமைப்பியல் விவர முறை தொகுப்பு அமைக்கும் திட்டம். | மொத்தச் செலவு ரூ. 8.00 இலட்சங்கள் |
| (3) புதிதாகக் கட்டப்பட்டுள்ள இரண்டாவது தளம்' அலுவலர்கள் அறைக்னை மேம்படுத்துதல் | மொத்தச் செலவு ரூ. 1.50 இலட்சங்கள் |



## தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்)

தமிழ்நாடு கனிம நிறுவனம், தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய கருப்பு, சாம்பல், வெள்ளை நிறப் பாறைகளையும் பல வண்ணப்பாறைகளையும் குவார்ட்ஸ், பெல்ஸ்பார், வெர்மிகுலைட், சுண்ணாம்புக்கல், சுண்ணாம்புச்சிப்பி, சிலிக்கா மணல், கிராபைட் போன்ற கனிமங்களையும் வெட்டியெடுத்து விற்பனை செய்து வருகிறது. இந்நிறுவனம் 31-3-1997 வரை 10,791 கனமீட்டர் கருப்புக் கற்களையும் பல வண்ணக் கற்களையும் 60,833 மெட்ரிக்டன் உயர் கனிமங்களையும் உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. தமிழ்நாடு கனிம நிறுவனம், 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 49 கோடி அளவிற்கு விற்பனை செய்யும் என்றும், இதன் மூலமாக அந்நியச் செலவாணியாக ரூ. 35 கோடி ஈட்டும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

### புதிய தொழில் கொள்கையின் விளைவுகள்

வெட்டியெடுக்கப்பட்ட கல்லை அப்படியே ஏற்றுமதி செய்யாமல் அதை நேர்த்தி (Polish) செய்தும், அதிகவிலை பெறக்கூடிய இதர பொருட்களாக உருவாக்கி விற்பனை செய்தும், நிறுவனத்தின் வருமானத்தையும், இலாபத்தையும் பெருக்கலாம். இந்த அடிப்படையில் அறிமுகம் செய்யப்படும் புதிய திட்டங்கள் :-

### (1) மாலிப்டினம் திட்டம்

மாலிப்டினத்தின் தாதுப் பொருளான மாலிப்டினைட் ஏறக்குறைய 1.60 மில்லியன் டன்கள் தமிழ்நாட்டில் அரூர் தாலுக்காவில் உள்ள வேலம்பட்டி கிராமத்திலும், தருமபுரிக்கு அருகிலுள்ள ஆலங்காயத்திலும் உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனம் ரூ.5.32 கோடி செலவில் இத்திட்டத்தை நிறைவேற்ற முயற்சி மேற்கொண்டுள்ளது.

### (2) எண்ணூர் மணல் ஆலையை நவீன மயமாக்குதல்

ரூபாய் 35.00 இலட்சம் செலவில் எண்ணூர் சிலிக்கா மணல் பதனிடும் ஆலை, சிலிக்கா மணலை ஐ.எஸ்.ஐ. தரத்திற்கேற்பப் பிரித்தெடுப்பதற்காக நவீனமயமாக்கப்படுகிறது. கட்டுமானப் பணிகள்

தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இயந்திரத்தை நிறுவுதல் உட்பட எல்லாப் பணிகளும் விரைவில் முடிவடைந்து, நவீனமயமாக்கப்பட்ட தொழிற்சாலை மே 1997 முதல் செயல்பட்த் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**(3) சிலிக்கா மணல் சுத்திகரிப்புக்கான கூட்டு முயற்சித் திட்டம்:**

உலகத்தின் முன்னணி ஃபிளோட் (Float) கண்ணாடித் தயாரிப்பாளர்களான திருவாளர்கள் செயின்ட் கோபெயின் என்ற நிறுவனத்துடன் சேர்ந்து ரூபாய் 19.20 கோடி செலவில் ஆண்டுக்கு 1,50,000 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட சிலிக்கா மணல் சுத்திகரிப்பு ஆலையைக் கூட்டு முயற்சியில் உருவாக்க டாமின் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

**(4) கார்னெட் மணல்:**

தமிழகத்தில் உள்ள ஏழு இடங்களில் கார்னெட் மணலையெடுக்கத் தேவையான குத்தகை உரிமம் பெறுவதற்காக டாமின் விண்ணப்பித்துள்ளது. மெருகூட்டும் பொருளை (Abrasive) உருவாக்குவதற்காக கார்னெட் மணல் உபயோகிக்கப்படுகிறது. உள்நாட்டு அபரேசிவ் தயாரிப்பாளர்கள் தேவைக்காகவும், ஏற்றுமதி செய்யவும் கார்னெட் மணல் எடுக்க டாமின் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.



## தமிழ்நாடு கிராபைட் நிறுவனம் (டான்கிராப்)

ரூபாய் ஒரு கோடி அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் கிராபைட், கிராபைட் அடிப்படையிலான உற்பத்திகள் ஆகியவற்றை ஊக்குவித்திட, தமிழ்நாடு கிராபைட் லிட் என்ற தனி நிறுவனம், கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 19-3-97 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அரசும் தனது தகைமை முறை (Equity) பங்காக ரூ. 10 லட்சம் அளித்துள்ளது. கிராபைட் கனிமத்தைக் கொண்டு என்னென்ன பொருள்கள் உற்பத்தி செய்ய இயலும் என்று கண்டறியும் ஆய்வுப் பணி, வல்லுநர்களின் துணையுடன் நடைபெற்று வருகிறது. ஆய்வறிக்கை கிடைக்கப் பெற்றவுடன், சிவகங்கைச் சீமையில் கிடைக்கும் கிராபைட்டை வைத்து பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்வதற்கான திட்ட அறிக்கைகளைத் தயாரித்து அந்தத் திட்டங்களில் முதலீடு செய்து, திட்டங்களை அமுல்படுத்தத் தகுதியுள்ள தொழில் முனைவோர்களைக் கொண்டு அந்தப் பகுதியில் பல்வேறு தனியார் தொழிற்சாலைகளை உருவாக்க முயற்சி எடுக்கப்படும். பின்தங்கிய அந்தப் பகுதியில் புதிய வேலைவாய்ப்பு உருவாக இது உதவும்.

[1997 ஏப்ரல் 23

## தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டான்மாக்)

தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டான்மாக்), சேலத்தில் உள்ள 'மேக்னசைட்' கனிமத்தை வெட்டியெடுக்கும் நோக்கத்துடன் 1979-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் 1985 டிசம்பர் மாதம் சுழலும் சூளை ஒன்றினை, ரூ. 8.57 கோடி செலவில் முழு எரியூட்டப்பட்ட விலை உயர்வுள்ள மேக்னசைட்டை ஆண்டிற்கு 30,000 டன் உற்பத்தி செய்யும் திறனுடன் தொடங்கியுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் 30,000 டன் எரியூட்டப்பட்ட மேக்னசைட் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் மற்றுமொரு பிரிவான நிலை சூளைப் பிரிவு, மிதமாகச் சூடேற்றிய மேக்னசைட், ரேமிங் மாஸ் ஆகியவற்றை உற்பத்தி செய்கிறது.

## தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் (டி.என்.பி.எல்)

தமிழக அரசால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாகப் பயன்படுத்தி செய்தித்தாள் காகிதமும் அச்சு, எழுது காகிதங்களும் தயாரிப்பதற்காகக் கரூர்-தீரன் சின்னமலை மாவட்டம், புகளூரில் ஒருங்கிணைந்த காகித ஆலை ஒன்றை நிறுவியுள்ளது. இலாபகரமாக இயங்கும் இந்நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு 1,80,000 டன் செய்தித்தாள் அச்சுக் காகிதங்கள் உற்பத்தி செய்யும திறன் கொண்டது. ரூ. 585 கோடி மொத்த மூலதனச் செலவில், இந்த ஆலையின் உற்பத்தித் திறனை ஆண்டொன்றுக்கு 90,000 மெட்ரிக் டன் என்ற அளவிலிருந்து 1,80,000 டன்னாக அதிகரிப்பதற்கான இந்நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டம் சில மாத கால தாமதத்திற்குப் பின் 1996 ஜனவரியில் முடிக்கப்பட்டுள்ளது. ஆலை விரிவாக்கத்திற்குப் பின் நாட்டிலேயே, ஒரே இடத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த காகிதக்கூழ்-காகித ஆலைகளில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை மிகப்பெரிய ஆலையாக விளங்குகிறது.

1996-97 நடப்பு நிதியாண்டில் இந்த ஆலை 1,49,690 மெட்ரிக் டன் செய்தித்தாள் காகிதத்தையும் அச்சு, எழுது காகிதத்தையும் உற்பத்தி செய்து, 83 விழுக்காடு பயன்பாட்டுத் திறனை எய்தியுள்ளது. உற்பத்தி மதிப்பு ரூ. 408.00 கோடியாகும்.



1997 ஏப்ரல் 23]

விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதி நிதிக்கு, 10 ரூபாய் முகமதிப்பு கொண்ட ஒரு பங்கிற்கு ரூ. 100 கூடுதல் விலை சேர்த்து மூலதனப் பங்குகளை வெளியிட்டு பொது மக்களிடம் விற்பனை செய்து, இந்நிறுவனம் ரூ. 217 கோடி திரட்டியது. இத்திட்டத்திற்குத் தேவைப் பட்ட எஞ்சிய தொகை, உலகவங்கி, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து தவணைக்கடன் பெற்றும், துறையில் சேர்ந்துவந்த தொகையைக் கொண்டும் திரட்டப்பட்டது.

**ஏற்றுமதி :**

1995-96 ஆம் ஆண்டில், இந்நிறுவனம், ரூ.21.62 கோடி மதிப்புள்ள அச்சு எழுது காகிதம் 8,152 மெட்ரிக் டன்கள் ஏற்றுமதி செய்துள்ளது. 1996-97 ஆம் ஆண்டில் ரூ.11.82 கோடி மதிப்புள்ள அச்சு எழுது காகிதம் 5,151 மெட்ரிக் டன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

**காற்றாலை :**

இந்நிறுவனம், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தேவர் குளத்திலும், பெருங்குடியிலும், இந்திய மாற்றத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகவரமைப்பிடமிருந்து (IREDA) நிதியுதவி பெற்று ரூ. 47.69 கோடி மூலதனச் செலவில், நவீன மாசற்ற காற்று சக்தி ஆதாரத்திலிருந்து 15 மெகா வாட் திறனுள்ள காற்றாலைத் திட்டம் ஒன்றை நிறுவியுள்ளது. இதன் மூலம் 1996-97 ஆம் ஆண்டு 196.14 இலட்சம் யூனிட் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காகித ஆலையை அடுத்துள்ள சுமார் 1440 ஏக்கர் புன்செய் நிலத்திற்குப் பாசனமளிக்க, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைப் பயன்படுத்தி ரூ. 2.86 கோடி செலவில், இறவைப் பாசனத் திட்டம் ஒன்றை இந்நிறுவனம் செயல்படுத்தியுள்ளது.

**வேலை வாய்ப்பு :**

இந்நிறுவனம் 1,602 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு அளித்துள்ளது. 5,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பு அளித்துள்ளது.

**வருங்காலத் திட்டங்கள் :**

மதிப்புமிக்க பொருள்களைத் தயாரிப்பதற்காக, இந்நிறுவனம் காகித இயந்திரம் 1-ன் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தை மேற்கொள்ளக் கருதியுள்ளது.

[1997 ஏப்ரல் 23

## சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் நிறுவனம்

சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் நிறுவனம் 1956 ஆம் ஆண்டு தனியார் துறையில் சரக்கு ரெயில் பெட்டிகள், இரும்புக் கட்டுமானங்கள் தயாரிப்பதற்காக தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் நலிவடைந்ததால் 1969-70-ல் மூடப்பட்டது. எனவே அதில் பணிபுரியும் சுமார் 1,200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு தமிழக அரசு இந்நிறுவனத்தை 1971 ஆம் ஆண்டு தன்பொறுப்பில் ஏற்றுக் கொண்டது.

அரசு இந்நிறுவனத்தை ஏற்ற பிறகு மின்சார பளுதூக்கிகள், நவீன சுரங்கக் கருவிகள் போன்றவற்றைத் தயாரிக்க வேண்டி இந்நிறுவனத்தின் பணிகள் பலதிறப்படுத்தப்பட்டன. 1978-ல் இந்நிறுவனம் நல்ல முறையில் ஆதாயம் கொடுக்கும் அளவுக்கு புத்துயிரூட்டப்பட்டது. சில வருடங்களுக்குப் பிறகு மீண்டும் நிலைமை மோசமானது. மேலாண்மை இயக்குநர் அடிக்கடி மாற்றப்பட்டதாலும், நிர்வாகத் திறமையின்மை காரணமாகவும் இந்நிறுவனம் மீண்டும் தொடர்ந்து நலிந்த நிலையில் இருந்து வருகிறது. இதனைச் சீரமைக்க தக்க மாற்று ஏற்பாடுகளை அரசு ஆய்வு செய்து வருகிறது.



1997 ஏப்ரல் 23]

## தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் தற்பொழுது சாதாரண உப்பு, அயோடின் உப்பு, இரும்பு ஊட்டச்சத்து உப்பு, இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு, நலஉப்பு இவைகளைத் தயாரித்து வருகிறது. இந்நிறுவனத்தின் உற்பத்திப் பொருள்களைப் பலதிறப்படுத்த வேண்டியதைக் கருத்திற்கொண்டு உப்பின் கழிவுப் பொருளான எண்ணெய்ப் பற்றுள்ள நீர்மத்தைக் (Bittern) கொண்டு புரோமின் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளனவா என்பதைக் கண்டறிய ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் புரோமின் தொழிற்சாலை அமைப்பதற்கான தொழில் நுட்ப சாத்தியக் கூறுகள் பற்றிக் கண்டறிய பவநகரிலுள்ள மத்திய கடல்வள, இரசாயன ஆராய்ச்சி மையத்தை அணுகியுள்ளது. இதன் திட்ட மதிப்பீடு ரூ.1 50 கோடியாகும். இந்நிறுவனம் சென்ற வருடம் ரூ.77.66 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது. இந்த வருடம் சுமார் ரூ. 85 இலட்சம் நிகர இலாபம் அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இந்நிறுவனத்தில் சேர்ந்து வந்த இழப்பு முற்றிலுமாக இந்த வருடத்திலேயே சரிக்கட்டப்படும்.

[1997 ஏப்ரல் 23

## சர்க்கரைத் தொழில்

தமிழ்நாட்டிலுள்ள 34 சர்க்கரை ஆலைகளில் கூட்டுறவுத் துறையில் 15-ம், பொதுத்துறையில் 3-ம், தனியார் துறையில் 16-ம் இயங்கி வருகின்றன. இவ்வாலைகளின் மொத்த அரைவைத் திறன் நாளொன்றுக்கு 90,300 டன்களாகும். நடப்பு அரைவைப் பருவத்தில், 31-12-96 நிலவரப்படி, இதுவரை 11.34 லட்சம் டன் கரும்பை அரைவை செய்து 0.97 இலட்சம் டன் சர்க்கரையை உற்பத்தி செய்துள்ளது.

### புதிய சர்க்கரை ஆலைகள்

**(அ) கள்ளக்குறிச்சி இரண்டாவது கூட்டுறவு சர்க்கரை ஆலை**

இவ்வாலையை நிர்மாணிக்க 101 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு உள்ளது. இயந்திர தளவாடங்கள் வழங்குவதற்காக திருவாளர்கள் பின்னி நிறுவனத்திடம் குறிப்பிட்ட சில இனங்களில் விலை உயர்வுடன் ரூ. 18.28 கோடி மதிப்பிற்கு ஆர்டர்கள் வழங்கப்பட்டுவிட்டன. இந்நிறுவனம் இதுகாறும் ரூ.15.39 கோடி மதிப்புள்ள பொருள்களை வழங்கியுள்ளது. கட்டுமானப் பணி 1995 நவம்பர் மாதம் துவங்கப்பட்டு தற்போது 75 விழுக்காட்டுப் பணி நிறைவு பெற்றுள்ளது. அரசாங்கம் தனது பங்கு மூலதனமாக ரூ. 12.30 கோடி அளித்துள்ளது. கரும்பு விவசாயிகளிடமிருந்து, பங்கு மூலதனம் ரூ. 3.99 கோடி இவ்வாலைக்கு முதலீடாகப் பெறப்பட்டுள்ளது. இவ்வாலை 1997-98-ம் ஆண்டில் அரைவையைத்தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(ஆ) கும்மிடிப்பூண்டி கூட்டுறவு சர்க்கரை ஆலை :**

இவ்வாலை எம்.ஜி.ஆர். மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், மதுரவாயல் கிராமத்தில் நிறுவ திட்டமிடப்பட்டது. இதன் நிர்மாணப் பணிக்காக 80.22 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. இவ்வாலைக்கு அரசின் பங்கு மூலதனமாக ரூ. 7 கோடி அளிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் பங்கு மூலதனமாக இவ்வாலைக்கு ரூ.1.45 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையில் ஏற்பட்டுள்ள நிதிப்பற்றாக் குறை மற்றும் நிதி நெருக்கடி காரணமாக இச்சர்க்கரை ஆலையைத் தனியார் துறைக்குக் கொடுப்பது பற்றிப் பரிசீலிக்கப்பட்டது. ஆனால், அப்பகுதியைச் சார்ந்த விவசாயிகளின் கருத்தை வைத்து கூட்டுறவுத் துறையிலே இந்த ஆலையை உருவாக்கலாமா என்று அரசு யோசித்து வருகிறது.



1997 ஏப்ரல் 23]

## தமிழ்நாட்டில் புதிய சர்க்கரை ஆலைகள்

ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்ட 7 விண்ணப்பங்களில் இதுவரை கீழ்க்கண்ட 5 இடங்களுக்கு புதிய சர்க்கரை ஆலை அமைப்பதற்கான உரிமம் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன :—

| இடம். | மாவட்டம். |
|---|---|
| திருவிடைமருதூர் | தஞ்சாவூர் |
| திருவண்ணாமலை | திருவண்ணாமலை - சம்புவராயர் |
| திருக்கோவிலூர் | விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் |
| ஆத்தூர் | சேலம் |
| அறந்தாங்கி | புதுக்கோட்டை |

மீதமுள்ள கீழ்க்கண்ட இரண்டு விண்ணப்பங்கள் மீதும் மத்திய அரசு முடிவெடுக்க வேண்டியுள்ளது :

| வரிசை எண். | வட்டம். | மாவட்டம். | துறை. |
|---|---|---|---|
| 1. | சங்கராபுரம் | விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் | தனியார் |
| 2. | வலங்கைமான் | திருவாரூர் ஏ.டி. பன்னீர் செல்வம் | தனியார் |

### சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கம்

கூட்டுறவுத் துறையில் ஐந்து கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கப் பணிகள் முடிவடைந்துள்ளன.

மேலும் அமராவதி, ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைச் சர்க்கரைத் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் உதவியுடன் நவீன மயமாக்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது.

[1997 ஏப்ரல்

## இணை மின் உற்பத்தி

தற்போது செய்யாறு, எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கை ஆலை ஆகிய இரண்டு இடங்களிலும் இரு இணை மின் உற்பத்தி திட்டம் செயல்பட்டு வருகிறது.

சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இணை மின் திட்டத்தை நிறுவுவது தொடர்பான பணி முடிவுற்று விரைவி செயல்பட உள்ளது. மேலும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தி நிதி உதவியுடன் மூன்று இணை மின் உற்பத்தித் திட்டங்கள் ( நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆ (2) கள்ளக்குறிச்சி - 1 கூட்டுறவு சர்க்கரை ஆலை, (3) செங்கல்ரா கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகிய இடங்களில் நிறுவப்பட உள்ள அடுத்த மூன்று ஆண்டுகளில் சர்க்கரைத் துறை மூலம் 300 மெகாவா மின்சாரம் இணை மின் உற்பத்தித் திட்டத்தின் மூலம் உற்பத் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## வடிப்பகங்கள்

சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளி இரண்டு வடிப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன.

## கேஷ்ஹால்

தென் அமெரிக்காவில் உள்ள பிரேசில் நாடு உலகிலேயே மி அதிக அளவில் கரும்பு உற்பத்தி செய்யும் நாடு. அங்கே கரும் அரைத்து சாறை நேரடியாக ஆல்கஹால் உற்பத்தி செய் பெட்ரோலுக்குப் பதிலாக வண்டிகள் ஓட்டப் பயன்படுத்துகிறார்க இந்தத் திட்டத்தை முன்மாதிரியாக வைத்து, ஐந்து சதவீதமா பெட்ரோலுடன் ஆல்கஹாலைக் கலப்பதன் மூலம் மதிப்புமி பெட்ரோலிய எரிபொருளைச் சேமிக்கமுடியுமெனக் கருதி அ இதனை ஊக்குவிக்க முடிவெடுக்கிறது. இது பெட்ரோலின் தரத் உயர்த்துவதோடு வெளியே செல்லும் அந்நியச் செலாவணியை குறைக்கும். இது வடிப்பகத் துறையில் நிலையான தன்மையை ஏற்படு அத்துறையின் ஆல்கஹாலின் தேவையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வினை நீக்கும்.

216655